ஜாதக கணிதம்

C.G.ராஜன் B.A (MATHS)

GITAA

முதற்பாகம் என்னும்
ஜோதிஷ கிரகஷட்பலம்.
ஆயுள் கணிதம்.

உ

கடவுள் துணை

ஜாதக கணிதம்

ஓராம் பாகம் என்னும்

ஜோதிட கிரக சட்பலம், ஆயுள் கணிதம்

இது

வராஹமிகிராச்சாரியசர் அருளிச்செய்த ''பிருஹத் ஜாதகம்'' அதற்கு வியாக்கியானமாக ஸ்ரீபதி அருளிச் செய்த ஜோதிட கணித மாகிய ''ஸ்ரீபதிபத்ததி'' என்ற இந்த இரண்டு கிரந்தங்களுக்குங் கூட வியாக்கியானமாகும்.

இதில்

கிரக சட்பலம், துவாதசபாவ பலம், தசவர்க்கம், பாவச்சக்கிரம், ஆயுள் கணிதம், குளிகாதி ஐவர், தூமாதி பஞ்ச கிரகம், ஜீவன் தேகம், மிருத்யூஸ்புடங்கள் ஆகிய இவைகளை வெகுசுலபமாகப்போட வாக்கியங்களும், சேஷ்டாபலங் கணிக்கத் தேவையான புதிய விஷயங்களும், கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இது ''பல தீபிகை' என்ற கிரந்தப்பிரகாரம் பலன் அறிவதற்கு மிகவும் அவசியமானது.

மற்றும் இதில்

சட்பலத்தைக் கணிக்கும் விதத்தையும், தசவர்க்கம், பாவச்சக்கிரம், ஆயுள் கணிதம் ஆகிய இவைகளைப் போடும் வழியையும், கிரகஸ்புடம், லக்கினஸ்புடம், ஜாதகம் இவைகளைக் கணிக்க வேண்டிய முறையையும் ஒரு ஜாதகத்தை உதாரணமாக வைத்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

இது

சென்னை முத்தியாலுப் பேட்டை ஹைஸ்கூலில் ஸையன்ஸ் உபாத்தியாயராயிருந்தவரும், கணித சாஸ்திரத்தில், பி. ஏ. பட்டம் வகித்தவரும், திருச்சித்த ஆரிய சூரிய சித்தாந்த வாக்கிய கணிதப் பயிற்சியுள்ளவரும், சி. ஜி. ராஜன் சுத்த திருக்கணித பஞ்சாங்கக் கணிதரும், பிருஹத் ஜாதகத்தின் பதிப்பாசிரியருமாகிய.

C. G. ராஜன், B. A., (Mathematics)

அவர்களால் எழுதப்பட்டது.

முன்னுரை

ஜ்யோதிஷம் என்பது ஆகாயத்தில் ஜோதியாய் நமக்குப் புலப்படுகின்ற அண்டங்களால் உண்டாகின்ற நன்மை துன்பங்களைப் பற்றி முந்தியாகவே தெரிவிக்கின்ற ஒரு சாஸ்திரமாகும். இது ஒரு புராதீனமான சாஸ்திரம். துன்பங்களை நீக்கி நன்மையைக் கோருவது மனிதருடைய இயல்பாதலாலும், மனிதருடைய வாழ் நாளில் இனிமேல் வரப்போகின்ற நன்மை துன்பங்களைப் பற்றி முன்னமே அறிவது அவசியமாதலாலும், இயற்கையாதலாலும், இந்த சாஸ்திரம் எக்காலத்திலும் எல்லோராலும் நன்கு மதிக்கப்படும் சாஸ்திரமாகும். இந்த சாஸ்திரம் இந்தியர்களால் மிகவும் பெருமையாகப் பாராட்டப்பட்டு வருகின்ற வேதத்தில் ஒரு அங்கமாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்த சாஸ்திரம் மிகவும் பெருமை வாய்ந்தது என்று கருதுவதற்கு யாதொரு ஐயமுமில்லை. இதை அனேக நிபுண இந்திய வான சாஸ்திரிகளும், ஜோதிடர்களும் படித்து கையாண்டு கொண்டு வந்திருப்பதாக நம்முடைய தேசத்து வானசாஸ்திர நூல்களாலும், ஜோதிட நூல்களாலும், இன்னும் இதர சாஸ்திரங்களாலும் புலப்படுகின்றது.

இந்த சாஸ்திரம் இரண்டு பெரிய வகுப்புகளாகப் பிரிக்கப்படும். அவை (1) வானசாஸ்திரம், (2) மானிட ஜென்மம் முதலாயுள்ள ஜீவராசிகளுக்கு நேரிடும் நன்மை துன்பங்களைத் தெரிவிக்கின்ற ஜோதிடம் என்பனவாம். வான சாஸ்திரம் என்பது ஆகாயத்திலுள்ள, அனேக வருடங்கள் சென்றாலுங் கூட அசைவற்றிருப்பது போலத் தோன்றுகின்ற நட்சத்திரங்களைப் பற்றியும், ஒரே யிடத்தில் தங்கி இராமல் அடிக்கடி நகர்ந்து கொண்டேயிருக்கின்ற அண்டங்கள் என்று சொல்லப்படுகின்ற கிரகங்களைப் பற்றியும், தூமகேது முதலியவைகளைப்பற்றியும், நமக்குத் தெரிவிக்கும். அதாவது நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியவைகளின் உருவத்தையும், அளவையும், அவைகள் எந்த உலோகங்களால் உண்டாக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும் தெரிவிப்பதுடன், கிரகங்கள் எவ்விதமாக அமைகின்றன என்பதையும், அப்படி அசைவதற்குக்

காரணத்தையும், அந்தக் காரணத்தைக் கொண்டு நமக்குத் தேவையான ஒரு காலத்தில் கிரகங்கள் ஆகாயத்தில் எவ்விடத்தில் இருக்கும் என்பதை அறியும் மார்க்கத்தையும் கிரஹணங்கள் சம்பவிக்கும் காலத்தையும் தெரிவிக்கும். ஆனல் இந்த சாஸ்திரம், நட்சத்திரம், கிரகங்கள், தூமகேதுக்கள் முதலியவைகளால் இந்தப் பூ மண்டலத்திலுள்ள ஜீவ பிராணிகளுக்குச் சம்பவிக்கும் நன்மை துன்பங்களைப் பற்றி ஒன்றுந் தெரிவிக்கின்றதில்லை. ஜோதிட சாஸ்திரமோ இப் பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகள், தாவர வர்க்கங்கள் முதலியவைகளுக்கும் ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலிய அண்டங்களுக்குமுள்ள ஒரு வித சம்பந்தத்தை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் ஜீவ ராசி முதலியவைகளுக்கு உண்டாகின்ற நன்மை, துன்பங்கள் கிரகங்கள் ஆகாயத்திலிருக்கும் இடத்திற்குத் தக்கவாறு மாறுபடுகின்றனவென்றும் ஜோதிடந் தெரிவிக்கும். ஆகையால் ஆகாயத்தில் கிரகங்கள் இருக்குமிடங்களை மிகவும் துல்லிபமாக அறியவேண்டியதவசியமென்று புலப்படுகின்றது. ஆகாயத்தில் கிரகங்கள் இருக்கின்ற இடங்கள் ஜோதிடத்திற்கு முக்கியமானதால், இந்த இடங்களைப் பற்றித் தெரிவிக்கின்ற வான சாஸ்திரம் ஜோதிடத்திற்கு முதற்கருவியாகவும், துணைக் கருவியாகவுமிருக்கின்றது என்பது எடுத்துக் காட்டாமலே நன்ருய்ப் புலப்படுகின்றது. ஆகையால் ஜோதிட சாஸ்திரத்தைக் கையாளுகின்றவர்களுக்கு வான சாஸ்திரந் தெரிந்திருப்பது மிகவும் நன்மையை விளைவிக்கும்.

ஜோதிட சாஸ்திரத்தைக் கொண்டு சொல்லப்படும் பலாபலன்கள் தவறிப் போகாமல் சரியாக இருக்க வேண்டுமானல் மேலே சொல்லிய காரணத்தினல் வானசாஸ்திரமும் தவறுதலாயில்லாமல் சரியாகவிருக்க வேண்டுமென்பது அவசியமாகின்றது. நமது இந்து தேச வானசாஸ்திரம் அனேக வருஷங்களாகக் கையாளப்பட்டு வந்திருந்தும் சுமார் முன்னூறு, நானூறு வருடங்களாக விருத்தியில்லாமலிருந்து கொண்டிருக்கின்றது. இது இப்படி இருப்பதற்குப் பல காரணங்களுண்டு. அவைகளைப்பற்றி இங்கு விவரமாகச் சொல்லுவது அனுவசியமானது. வானசாஸ்திரம் அனேக காலமாக நாளுக்கு நாள் விருத்தி செய்யப்பட்டு அப்போதைக்கப்போது கூடியமட்டும் துல்லிபமாக இருக்கும்படியாக நமது முன்னேர்கள் வானசாஸ்திரப் புத்தகங்களை எழுதியிருக்கிருர்கள். இப்படி எழுதப்பட்ட புத்தகங்கள் அநேகமாயும், ஒன்றுக்கொன்று வித்தி

யாசமாயுமிருக்கின்றன. இப்புத்தகங்களுக்குச் சித்தாந்தமென்றும், கரணக் கிரந்தங்கள் என்றும், வாக்கிய கணிதங்கள் என்றும் பல வாருகப் பெயரிடப்பட்டிருக்கின்றது. ஜோதிடத்திற்கு வேண்டிய கிரகங்களிருக்கின்ற ஸ்தானங்களைப் பெரும்பான்மையோர் பஞ்சாங் கங்கள் மூலமாய் அறிவதாலும், ஜோதிடத்திற்குப் பஞ்சாங்கங்கள் சரியாக இருக்கவேண்டுமென்பது அவசியமாகின்றது. பஞ்சாங்கங் கள் வானசாஸ்திரப் புத்தகங்களினுதவியால் கணிக்கப்படுவதாலும், இந்துதேசத்து வான சாஸ்திர புத்தகங்கள் கிரகங்களினுடைய நிலை யில் ஒன்றுக்கொன்று வித்தியாசம் விளைவிக்கக் கூடியனவாயிருப்ப தாலும் பஞ்சாங்கங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருக்கின் றன. இவ்வித வித்தியாசமாகயிருக்கின்ற பல பஞ்சாங்கங்களைப் பலர் உபயோகப்படுத்துவதால் ஒரே ஜாதகம் பலரால் பலவித வித்தியா சத்துடன் எழுதப்பட்டு வருகிறது சகஜமாக இருக்கின்றது. இவ் விதமாக இருப்பதற்கு இந்துதேச வானசாஸ்திரப் புத்தகங்கள் எவ்வளவு வரையிலும் சரியானதாக இருக்கின்றனவென்றும், இந் தியர்களால் செய்யப்பட்ட சரியான வானசாஸ்திரப் புத்தகம் ஒன்று மில்லாமலிருந்தால் சரியான வான சாஸ்திரப் புத்தகங்கள் எந்த தேசத்தாரால் எழுதப்பட்டு வருகின்றன என்றும் அறிந்து அந்த புத்தகங்களைக் கையாளாமலிருப்பதே முக்கிய காரணமாகும். தற் காலத்தில் சரியான வான சாஸ்திர புத்தகங்களைக் கொண்டு திருக் கணித பஞ்சாங்கங்கள் என்று பெயரிட்டுச் சிலர் பஞ்சாங்கங்களைக் கணித்து வருகின்ருர்கள். இப்பஞ்சாங்கங்களினுதவியால் அல்லது சரியான வான சாஸ்திர புத்தகங்களினுதவியால் கிரகங்களின் ஸ்பு டத்தைக் கணித்தல் மிகவும் அவசியமானது.

மேலும் ஜாதக பலாபலன்களை அறிவதற்குக் கிரகங்களிருக் கும் நிலையையும், அவைகளினுடைய வலிவையும் அறிய வேண்டும். உதாரணமாக ஒரு ஜாதகருக்கு ஆயுள், அல்லது ஜீவன யோகம் அல்லது களத்திர யோகம், அல்லது புத்திரயோகம் அறியவேண்டு மாஞல் அந்தந்த பாவங்களை எந்தக்கிரகங்கள் பார்க்கின்றனவென் றும், பார்க்கிற கிரகங்களின் பலாபலத்தையும், அந்தந்த பாவங்க ளுக்கு அதிபதியா யிருக்கின்ற கிரகங்களினுடைய பலத்தையும் அவைகளுடன் சம்மந்தப்பட்ட அல்லது அவைகளைப் பார்க்குங் கிரகங்களின் பலத்தையும் அந்தந்த பாவங்களிலிருக்கின்ற கிரகங்க ளின் பலத்தையும் அறியவேண்டியது மிகவும் அவசியமாக இருக்

கிறது. ஆகையால் எவ்விதப் பலாபலன்களைச் சொல்லுவதற்குக் கிரகங்களின் பலாபலத்தை முதலில் அறியவேண்டுமென்று ஏற்படுகின்றது. கிரகங்களின் பலத்தை அறிய வேண்டுமானால்; கணிதம் செய்து அறிய வேண்டுமேயல்லாமல் ஜாதகத்தை அவசரமாய்ப் பார்த்துவிட்டுக் கணிதம் செய்யாமல் சொல்ல முடியாது; ஒரு சமயம் சொன்னாலும், அது தோராயமானதே தவிர; துல்லியமானதல்ல. ஏனென்றால்; கிரகங்களின் பலத்தை அறிவதற்கு அநேக அம்சங்களைக் கொண்டு பலம் ஆராய வேண்டுமாதலால் ஜாதகத்தைப் பார்த்த மாத்திரத்தில் கிரக பலத்தை நிர்ணயிப்பது அசாத்தியமாகும். ஆகையால்தான், உதாரணமாக: ஒரு இராசியில் குரு, சனி என்ற இரண்டு கிரகங்களும் சம்பந்தப்பட்டிருந்தால் இரண்டு ஜோதிடர்களில் ஒருவர் சனியைவிடக் குரு வலுவாயிருக்கின்றார் என்றும், மற்றொருவர் அப்படித் தோன்றவில்லை என்றும், குருவை விடச் சனிதான் வலுவாயிருக்கின்றதாகத் தோன்றுகின்றதென்றும், சொல்லுவது மிகவும் சகஜமாகவிருக்கின்றது. இப்படிச் சொல்லுவதற்கு, இவ்விரண்டு கிரகங்களின் வலிவைக் கணித ரீதியாய் இவ்விரண்டு ஜோதிடர்களும் கணித்துப் பார்க்காமல் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு அவர்களுடைய மனதிற்குத் தோன்றியபடிச் சொல்லுவதுதான் காரணமாகும். இப்படிச் செய்யாமல் கணித ரீதியாய்க் கணித்துப் பார்த்தால் இரண்டு ஜோதிடர்களும் வித்தியாசமாய் அபிப்பிராயப்படுவதற்குக் காரணமிராது. ஒரு கிரகத்தினுடைய பலம் 6 வகைப்படும். அவை (1) ஸ்தானபலம், கிரகதிருஷ்டி பலம், (2) காலபலம், (3) அயனபலம், கிரகயுத்தப்லம், (4) நைசர்க்கிகபலம், (5) திக்குப்பலம், (6) சேஷ்டாபலம் என அறுவகைப்படும். இந்த 6 விதப்பலங்களும் ஷட்பலம் என்று சொல்லப்படும். இந்த 6 வித பலங்களில் சில அநேக அம்சங்களுடையனவாகும். உதாரணமாக: ஸ்தானபலம் என்பது (1) உச்சபலம், (2)கேந்திராதி பலம், (3)திரேஷ்காணபலம், (4)யுக்மாயுக்மபலம், (5) சப்தவர்க்கஜ பலம் என 5 வகைப்படும். இந்த சப்தவர்க்கஜபலம் என்பது (1) இராசிவர்க்கபலம், (2) நவாம்சைவர்க்கபலம், (3) திரேஷ்காண வர்க்க பலம், (4) துவாதசாம்ச வர்க்கபலம், (5) சப்தமாம்ச வர்க்கபலம், (6) ஓராவர்க்கபலம், (7) திரிம்சாம்ச வர்க்கபலம் என 7 வகைப்படும். ஆகையால்; ஸ்தானபலம் என்பது மொத்தத்தில் 11 அம்சங்களுடையது. மேலும், காலபலம் என்பது (1)நத உன்னதபலம், (2) தினராத்திரி திரிபாகபலம், (3) தினபலம் (4) மாதபலம்,

(5) வருஷபலம், (6) ஓராபலம், (7) பட்சபலம் என 7 வகைப்படும். ஆகையால்; கிரகங்களினுடைய ஷட்பலம் என்று சொல்லப்பட்டது அடியிற்கண்ட பலங்கள் அடங்கியுள்ளதென்று அறியவேண்டியது.

1.	கிரகதிருஷ்டிபலம்	13.	நத உன்னதபலம்
2.	உச்சபலம்	14.	தினராத்திரி திரிபாகபலம்
3.	கேந்திராதிபலம்	15.	தினபலம்
4.	திரேஷ்காணபலம்	16.	மாதபலம்
5.	யுக்மாயுக்மபலம்	17.	வருஷபலம்
6.	இராசி வர்க்கபலம்	18.	ஓராபலம்
7.	நவாம்ச வர்க்கபலம்	19.	பட்சபலம்
8.	திரேஷ்காண வர்க்கபலம்	20.	அயனபலம்
9.	துவாதசாம்ச வர்க்கபலம்	21.	கிரகயுத்தபலம்
10.	சப்தமாம்ச வர்க்கபலம்	22.	நைசர்க்கிகபலம்
11.	ஓராவர்க்கபலம்	23	திக்குப்பலம்
12.	திரிம்சாம்ச வர்க்கபலம்	24	சேஷ்டாபலம்

ஆகையால்; ஒரு கிரகத்தினுடைய பலம் 24 அம்சங்களால் ஏற்பட்டதாகும். ஒரு கிரகத்தின் பலத்தை அறிய வேண்டுமானுல், மேலே சொல்லிய 24 வித அம்சங்களையும், இந்த அம்சங்களை அறிவதற்காகத் தேவையான கணிதங்களையும், அறியவேண்டியது அவசியம். இவைகளெல்லாம் பெரும்பாலும் கணித்துப் பார்க்கவேண்டியனவாயிருப்பனவே தவிர;மனதிலேயே அறியக்கூடியனவாகவில்லை. ஆகையால்; ஒரு ஜாதகத்தைப் பார்த்தவுடனே கிரகங்களின் வலிவைப்பற்றிக் கணித்துப் பார்க்காமல் மனதிலேயே அபிப்பிராயப்படுவது பிசகாகும்; அல்லது, தோராயமாகும் என்பது எடுத்துக் காட்டாமலே தெரியவரும். ஆகையால்; அநேக ஜோதிடர்கள் சொல்லும் பலாபலன்கள் தவறிப் போகின்றமை மிகவும் சகஜமாக இருக்கின்றது. மேலும், மேலே சொல்லியபடி கிரகங்களின் பலத்தைக் கணித்துத் தெரிந்துகொள்ளுவது சிரமமானதாலும், சிரமத்திற்குத் தக்கபடி ஜோதிடர்களுக்கு வெகுமானம் கிடைக்காததாலும் பெரும்பான்மையோர் ஷட்பலத்தைக் கணித்துப் பார்க்காமலே பலாபலன்களைச் சொல்லிவிடுகின்ருர்கள். இப்படிச் செய்வதால் பலாபலன்கள் பெரும்பான்மையும் தவறிப்போகின்றன. பலாபலன்கள் தவறிப்போவதால்; ஜோதிட சாஸ்திரம் பொய்யான சாஸ்திரம் என்று சிலர் அபிப்பிராயப்படுவதற்கு முகாந்தரம் ஏற்படுகின்றது. மேலே

சொல்லிய ஷட்பலத்தை ஜோதிடர்கள் கணித்துப் பார்த்துப் பலா பலன்களைச் சொல்லத் துணிவார்களேயானால்; ஜோதிட சாஸ்திரத் திற்குத் தற்காலம் உண்டாயிருக்கும் அபகீர்த்தி நீங்கி, அதனுடைய பெருமை நாளுக்கு நாள் விருத்தியடையும் என்பதற்குச் சந்தே கமே இராது.

மேலும், மேலே சொல்லிய ஒவ்வொரு பலத்தையும் கணிக்க வேண்டுமானால்; கணித வித்தை தெரிந்திருக்க வேண்டியது அவசிய மாகும். கணிப்பதற்கு வேண்டிய சிரமத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதவசியமாக இருக்கின்றது. முக்கியமாக இவ்விரண்டு கார ணங்களைப்பற்றியே அநேக ஜோதிடர்கள் கிரகங்களின் ஷட்பலத் தைக் கணித்துப் பார்க்கின்றதில்லை. கணிப்பதினாலுண்டாகும் சிரமத் தையும், கணிதவித்தை தெரியாமலிருப்பதனாலுண்டாகும் கஷ்டத் தையும் நிவர்த்தி செய்யும் பொருட்டே இந்தப் புத்தகத்தில் அநேக வாக்கியங்கள் கணிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாக்கியங்களினுதவியால் யாதொரு சிரமமுமில்லாமல் வெகு சுலப மாகக் கிரக திருக்பலம், உச்சபலம், திக்குப்பலம், பட்சபலம், கால பலம், அய்னபலம், வருஷபலம். மாதபலம், தினபலம், ஓராபலம், தசமலக்கினம் என்ற மத்திய லக்கினம் ஜெனனகாலத்தில் கர்பச் செல்லுபோய் நின்ற கிரகதிசையின் அளவு, கேந்திரபலம், திரேஷ் காணபலம், சதவர்க்கம் ஆகிய முதலியவைகளைப் போடலாம். மேலும், கணிக்கும் போது அநேக சந்தேகங்களுண்டாவது சகஜமான தால்; அவைகளை நிவர்த்திசெய்யும் பொருட்டும் கணிக்கும் முறையை நன்றாய் விளக்கிக் காட்டும் பொருட்டும் அநேக உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கணிக்கும் முறையை நன்றாய் விளங் கும்படியாய் விவரித்துச் சொல்லியிருப்பதில் கூறுவதையே கூறு வது என்ற குற்றம் ஒரு சமயமிருந்தபோதிலுங்கூட அதைக் கவனி யாமல் நன்றாய் விளங்கும்படிச் சொல்லுவது விசேஷ மென்றே கருதி, ஒவ்வொன்றையும் விபரமாகச் சொல்லியிருக்கின்றது. ஆகையால்; ஒருவர் இந்தப் புத்தகத்தைப் பிறருடைய உதவி யில்லாமலே தானே படித்துத் தெரிந்து கொள்ளலாம். மேலும், ஜாதகத்தைச் சரியாய்க் கணிக்கத் தெரியாதவர்களுக்கு ஜாகத்தைச் சரியாய்க் கணிக்க வேண்டிய முறையையும், கிரகங் களின் ஷட்பலத்தைக் கணிக்கும் வழியையும், இராசிச் சக்கிரம், நவாம்சச் சக்கிரம், திரேஷ்கானச் சக்கிரம், துவாதசாம்சச்சக்கிரம்,

சப்தமாம்சச் சக்கிரம், ஓரை, திரிம்சாம்சம் என்று சொல்லப்பட்ட 7 விதவர்க்கங்கவென்ற சப்தவர்க்கங்களையும், பாவச் சக்கிரத்தைப் போடும் வழியையும், பாவபலம் முதலியவைகளைக் கணிக்கும் வழியையும் ஒரு ஜாதகத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு அந்த ஜாதகத்திற்குக், கணித்துப்போட்டும் காட்டியிருக்கின்றது. இந்த உதாரண ஜாதக கணிதத்தில் ஏதாகிலும் கைப்பிசகு, எழுத்துப் பிசகு இருந்தால் கணிக்கும் முறைகளின் விதிகளை நன்ருய் வாசித்து அவைகளை அனுசரித்து அவைகள் பிரகாரம் தாங்கள் கோரிய ஜாதகத்திற்குக் கணிதம் செய்துகொள்ளவும்.

இந்தப் புத்தகம் ஜோதிடசாஸ்திரமும், வானசாஸ்திரமும் நன்ருய் அறிந்த சுமார் தொள்ளாயிரம் வருஷங்களுக்குமுந்தி இந்தியாவில் ஜீவித்திருந்த ஸ்ரீபதி பட்டாச்சாரியார் எழுதிய ஸ்ரீபதி ஜோதிட சாஸ்திர கணிதம், அல்லது; ஸ்ரீபதிபத்ததி என்று சொல்லப்பட்ட ஜாதக கர்மபத்ததியில் கொடுத்துள்ள விதிகளைப் பெரும்பாலுமனுசரித்து எழுதப்பட்டது. இந்த ஸ்ரீபதிபத்ததி என்ற கிரந்தம், உலகப்பிரசித்திபெற்ற வராஹமிகிராச்சாரியாரவர்களால் செய்யப்பட்ட பிருஹத்ஜாதகத்திற்கு ஒரு வியாக்கியானமாகும். ஆகையால்; இந்தப் புத்தகம் பிருஹத்ஜாதகம், ஸ்ரீபதிபத்ததி என்ற இவ்விரண்டு கிரந்தங்களுக்குங்கூட ஒரு வியாக்கியானமென்றறிய வேண்டியது. வராஹமிகிரர் ஸ்ரீபதி இவர்கள் சொல்லியப் பிரகாரம் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு கிரகத்திற்கும் முதலிலிருந்து ஷட்பலத்தைக் கணிப்பது மிகவும் சிரமமானதால்; இந்தச் சிரமத்தை நீக்கும் பொருட்டே இந்தப் புத்தகத்தில் அநேக வாக்கியங்கள் கணிக்கப்பட்டு வேண்டியபோது தயாராய் உபயோகப்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் புத்தகம் மூன்று பிரிவுகளாக எழுதப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பிரிவிற்கும் அத்தியாயம் என்று பெயரிட்டிருக்கின்றது. முதல் அத்தியாயத்தில் ஜாதகமென்பது என்ன என்பதையும், ஜாதகத்தைச் சரியாய்க் கணிக்கவேண்டிய முறையையுஞ் சொல்லியிருப்பதுந்தவிர ஒரு ஜாதகத்திற்கு உதாரனமாக ஷட்வர்க்கமும், ஷட்பலமும், பாவச்சக்கிரமும், பாவபலமுங் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. நாம்கொடுத்துள்ள உதாரணகணிதத்தில் கைப்பிழை, அச்சுப் பிழை இவைகள் இருந்தபோதிலும் இவைகளைப் பாராமல் விதிகளில் சொல்லியுள்ள பிரகாரங் கணிக்கவேண்டியது. மூன்ருவது

அத்தியாயத்தில் ஷட்வர்க்கம், ஷட்பலம், பாவசக்கிரம், பாவபலம் முதலியவைகளைச் சுலபமாகக் கணிக்கும் பொருட்டுத் தேவையான வாக்கியங்களைக் கணித்துக் கொடுத்திருக்கின்றது. இரண்டாவது அத்தியாயத்தில், மூன்றாவது அத்தியாயத்தில் கொடுத்துள்ள வாக்கியங்களை உபயோகப்படுத்தும் வழிகளைக் கொடுத்திருக்கின்றது.

தமிழ் வசன நடையில் என்னால் எழுதப்பட்டு அச்சிட்டிருக்கின்ற பிருஹத்ஜாதகத்திற்குங்கூட இந்தப் புத்தகத்தை வியாக்கியானமாக விருக்கும்படி எண்ணி, இதை நான் எழுத ஆரம்பித்தேன். என்னுடைய பிருஹத் ஜாதகத்திற்கும், வேறு எவராலும் அச்சிடப்பட்ட பிருஹத் ஜாதகத்திற்கும், ஸ்ரீபதி ஜோதிஷம் என்று சொல்லப்பட்ட ஸ்ரீபதி பத்ததிக்கும், பலதீபிகை, ஜாதக பாரிஜாதம் என்ற கிரந்தங்களுக்குங்கூட மிகவும் அவசியமான வியாக்கியானமாகும். இந்தப் புத்தகத்தை அச்சிடும்போது புருப் முதலியவைகளைப் பார்த்து எனக்கு உதவி செய்த ஜோதிட சாஸ்திரம் தெரிந்த என்னுடைய மூத்த தமையனாருக்கு என்னுடைய அன்பார்ந்த வந்தனத்தை நான் அளிக்கின்றேன்.

இந்தப் புத்தகம் இப்போது மூன்றாவது பதிப்பாக அச்சிட்டிருக்கிறது. 2-வது பதிப்பிலுள்ள பிழைகள் திருத்தப்பட்டுள்ளன. 2-வது பதிப்பை விட 3-வது பதிப்பில் சில விஷயங்கள் புதியதாய் சேர்க்கப்பட்டுள்ளன. (சேஷ்டா பலம் கணிக்கத் தேவையான உவா, உவாந்தம், வக்கிர ஆரம்பம், வக்கிர நிவர்த்தியும் அக்காலங்களின் கிரகங்களின் ஸ்புடமும் சென்ற ஐம்பது வருஷங்களுக்குப் புதியதாய் இந்த மூன்றாவது பதிப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.)

இந்தப் புத்தகத்தில் எழுத்துப் பிழை, சொற்பிழை முதலியவைகளிருந்தால்; அவைகளை மன்னித்து இதிலுள்ள சாராம்சத்தை ஏற்றுக்கொண்டு இந்தப் புத்தகத்தை ஆமோதிக்கும்படியாய் இதை வாசிக்கும் பெரியோர்களையும், சிறியோர்களையும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், இந்தப் புத்தகத்தை இன்னும் விருத்தி செய்வதற்காக யாராகிலும் தெரியப்படுத்தும் அபிப்பிராயங்களை வந்தனத்துடன் அங்கீகாரஞ் செய்வதுடன், அந்த அபிப்பிராயங்களுக்கிணங்க விருத்திகளை அடுத்த பதிப்பில் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

6—10—1940 C. G. ராஜன் B. A.,

நெ. 7, வெங்கடேச மேஸ்திரி தெருவு, சௌகார்ப்பேட்டை போஸ்டு, சென்னை.

ஐந்தாவது பதிப்பின் முன்னுரை :

ஜாதக கணிதம் ஓராம்பாகம் என்னும் ஜோதிடக் கிரக ஷட்பலம ஆயுள் கணிதம் காலம்சென்ற ப்ரபல ஜோதிட பூஷண ஸி. ஜி. ராஜன் அவர்களால் மூன்று பதிப்புகள் பிரசுரிக்கப்பட்டன. அதன் பிறகு அவர் மனைவி திருமதி C. கனகம்மாள் அவர்களிடமிருந்து காலம் சென்ற ஸி. ஜி. ராஜன் அவர்களுடைய எல்லாப்புத்தகங்களின் எல்லா வித பதிப்புரிமைகளையும் பெற்று நான்காவது பதிப்பாக இந்தப் புத்தகத்தை 1981 ஆம் வருடம் வெளியிட்டோம். அதன் பிரதிகள் யாவும் விற்பனையானபடியால்; இதனை ஐந்தாம் பதிப்பாக ஜோதிட நண்பர்களுக்கு மிகவும் பயன்படக் கூடிய வகையில் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி; அடைகிறோம்.

எங்களிடம் முதலில் 1928-ல் வெளியிட்ட பதிப்பு மட்டுந்தான் இருந்தது. அதை வைத்து முதல் இரண்டு பாரம்(32பக்கம் வரையிலும்) அச்சடிக்கப்பட்டது. தற்செயலாக 1941-ல் வெளியிட்ட பதிப்பு எங்களுக்குத் திரு. எம்.பி.சத்தியவேல்முருகன் என்ற நண்பர் தந்ததாலும், அதுவே கடைசிப் பதிப்பு ஆனதாலும், அதைப் பார்த்து மற்ற பாரங்கள் அதாவது 3-வது பாரத்திலிருந்து (33-வது பக்கத்திலிருந்து) அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகம் வெளிவர அதிகக்கால தாமதம் ஆகிவிட்டது. இருந்தும் நவக்கிரகங்களின் அனுக்கிரஹத்தால் இதை எல்லோருக்கும் பயன்படும்படி வெளியிடுகின்றோம். இப்புத்தகத்தில் முக்கியமான பிழைகளைக் கூடுமானவரையில் திருத்தியுள்ளோம். ஆயினும்; பிழைகள், குற்றங்கள் ஏதாவது இருப்பின், அவைகளைப் பெரியமனதுடன் நண்பர்கள் தெரியப்படுத்தினால் அதை அடுத்த பதிப்பில் திருத்தி இன்னும் சிறப்பாக வெளியிடுகிறோம்.

காலம் சென்ற ஸி. ஜி. ராஜன் அவர்கள் எப்படி இந்தப் புத்தகம் ஜோதிட உலகத்திற்குப் பயன்படவேண்டும் என்ற எண்ணத்துடன் மூன்று முறை வெளியிட்டாரோ; அதே குறிக்கோளில்தான் இப்பொழுதும் இப்புத்தகம் வெளியிடப்படுகிறது. இது எல்லோருக்கும் நல்லபடியாகப் பயன்படும் என்று நம்புகிறோம்.

மயிலாப்பூர் — பதிப்பகத்தார்

7-3-88

விஷய அட்டவணை

1—வது அத்தியாயம்

2-வது அத்தியாயம்

வாக்கியங்களை உபயோகப்படுத்தும் விதம்.

3-வது அத்தியாயம்

எம்மிடம் சக்தி வாய்ந்த எல்லா விதமான சக்ரங்களும், மெல்லிய தகட்டிலும் கெட்டி செப்புத் தகட்டிலும், தாழ்த்தில் போடக்கூடியதாயும், டாலர்களாயும் கிடைக்கும்.

''ஜாதக கணித மதிப்புரை''

'ஜாதக கணிதம்' —பஞ்சாங்க கணித ஆசிரியர் ஸ்ரீமான். சி.ஜி. ராஜன், B.A., இயற்றிய ''ஜாதக கணிதம்'' என்ற புத்தகத்தைக் கண்ணுற்று களித்தோம். 'கணிதக் கடலில் ஆழ்ந்து அகம் சோர்ந்து முகம் வியர்த்துச் செய்யக் கூடிய ஸ்ரீபதி பத்ததி கணிதத்திற்காவது ஜந்திரிகள் இயற்றவாவது; இஃதோரியலாத செயல்' என்றே கருதி யாம்வாளா விருந்தனம். தற்போது இனிய நடையில் புதிய வழியில் சுளுவான முறையில் எழுதப்பட்டுள்ள இந்த ''ஜாதக கணிதம்'' சற்றும் குற்றமின்றி ஜாதகம் கணிக்கவும், ஸ்ரீபதியால் மிக்க சிரமத்துடனும் கேசவரால் சற்று சிரமம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருக்கின்ற ஜாதக கர்ம பத்ததியை மிக்க அவாவுடன் செய்து முடிக்கவும் ஒரின்றியமையாத கருவியாகி நிற்கின்றது. இப்புத்தகத்திற் பற்பல பகுதிகளைப் படித்தும் சிற்சில பகுதிகளைக் கணித்தும் நோக்குகையில் ஒப்பிலா வியப்பும் உவகையும் எம்மனத்திடமுதித்தன. வாய்ப்பாடமாகத் தெரியவேண்டிய சில வாய்ப்பாடுகளும், கொஞ்சமும் சஞ்சலமின்றிக் கையாளக் கூடிய பல ஜந்திரிகளும் இப்புத்தகத்திற் பொதிந்து கிடக்கின்றன. திரைராசிக் கணித வாக்கியங்கள் தசாம்ச பின்னமறியாதோரும் எளிதிலுபயோகிக்கும் முறையிலியற்றப்பட்டிருப்பது மிகக் கொண்டாடற்பாலது. ராசி, ஹோரை, திரேஷ்காணம், சப்தமாம்சம் முதலிய சப்த வர்க்கங்களையும் சந்தேகமற எளிதிலியற்றும் வண்ணம் இயற்றப்பட்ட ஜந்திரிகள் மிக உதவுகின்றன. சப்த வர்க்கத்தை யொட்டிப் பற்பல ஆசிரியர் ஒருவரையொருவர் வெட்டிப் பேசி படிப்போருக்கு மனக்கலக்கமுண்டாகக்கூடிய வெவ்வேறு கோட்பாடுகளை யொழித்து, சோதிடக் கடல் கடந்த வராஹ மிஹிரரின் வண்மையுற்ற வழியைக் கைப்பற்றியது புகழத்தகும். திருக்பல ஜந்திரிகள் சிந்தையை மகிழச்செய்கின்றன. உச்சபல ஜந்திரி மெச்சத் தக்கது. காலபல ஜந்திரிகள் மேலான முறையில் இயற்றப் பட்டன. உப அஹர்கண வாக்கியங்களின் உதவி ஒப்பற்றது. சேஷ்டா பலம் கணிக்க இவர் வரைந்ததினும் குறைந்த சிரமமுள்ள முறையொன்று உண்டென்றுயாம் கருதிலம். இந்த 'ஜாதக கணிதத்தில்' பலவித ஆயுர்தாய அத்தியாயத்தில் சட்

முறைகளை எளிதில் கணக்கிட்டறியுமாறு அமைக்கப்பெற்ற ஜந்திரிகளைப் பார்த்து மனமகிழ்கின்ரேம்: ஸ்ரீபதி முதலிய பத்ததிகளில் ஆயுர்தாய கணனமே மிகக் கடினமானது. கோட்கள் தரா நின்ற ஆயுட்களில், அவைகளின் நீச்சம், உச்சம், அதிர்சயம், வக்ரம், யுத்தம் முதலிய பற்பல முகாந்தரங்களால் கழித்தலும் பெருக்கலும் பலவுள. இந்த ''ஜாதக கணிதத்தில்'' ஒழுங்கான வழியைக் கைக்கொண்டு ஒவ்வொன்றுக்கும் உதாரணமியற்றிச் செய் முறையைச் செவ்வனே விளக்கியது மிக்க பயனைத் தந்துதவுகின்றது. லக்கினமும், தசமலக்கினமும், கணிப்பதற்குதவுமாறு நிரயன, சாயன ராசிமான ஜந்திரி மிகவும் பயனைத் தருகின்றது. கணிதத்திலுள்ள கஷ்டங்களைக் கணப்பொழுதிற் காணுமற் செய்கின்ற இந்த 'ஜாதக கணிதம்'' கற்போரையும் கணக்காயர்களையும் களிக்கச் செய்கின்ற ஓர் அரிய கருவியென்பது எமது கருத்து.

அரசாங்கக் கல்லூரி,
கோவை
19-1-1929

இங்ஙனம்
ஏ. குப்புசாமி சாஸ்திரி,
வடமொழி கணக்காயர்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	24	2	2¦
45	5	ஓராதி	ஓராதிபதி
52	16	வரிசை என் 11ல் கடைசியில் 11	—11
59	2	கிரகங்களும்	கிரகங்களுக்கும்
75	7	பாகை 0 கலை	பாகை 0 கலை 4
75	23	ஸ்புகிமாகிய	ஸ்புடமாகிய
76	29	பாகை 1 கலை 18	பாகை 1 கலை 13
77	33	மணி 1 நிமிஷம் 36	மணி 4 நிமிஷம் 30
79	20	என்ற கழித்தல் குறி	—என்ற கழித்தல் குறி
87	11	11வது	11வது வாக்கியம்
87	20	என்னும்	என்றும்
87	32	போடப்பட்டிருக்கிறது	போடப்பட்டிருக்கின்றது
88	15	சொல்லி	சொல்லிய
89	18	பாவத்தின்	பாதத்தின்
95	2		10வது வீடு ஆரம்பிக்கும் இடம்
96	12	பாகம் ஏற்படும்	பாகம் என்றும் ஏற்படும்
102	26	அந்த	இந்த
103	25	கலத்திலும்	காலத்திலும்
106	7	வாரரதிபதி	வாராதிபதி
106	9	குரியனும்	சூரியனும்
106	10	செவ்வாய்	செவ்வாயும்
106	28	அகஹர்கணம்	அஹர்கணம்
108	29	தேதிக்	தேதியைக்
106	29	கண்டதினம் அல்லது ஆரம்ப தின மாக வைத்துக்கொண்டு இந்த தினம்	
112	17	1291	1295
118	10	13-21	13-20
122	5	2-25	2-24
122	5	39-28	39-24
122	12	4-1	4-4

107	20	வகிக்க	வகுக்க
129	5	291-1	291-17
134	31 கடைசி	33	30
137	27	தமஷம்	மேஷம்
139	14	Capricorn	Capricornus
142	11	மிதுன	மிதுனம்
144	32	205-0	305-0
144	33	207-30	307-30
144	35	205	305
144	36	207	307
147	26	சிம்மம்	கடகம்
147	27	கடகம்	சிம்மம்
151	37	61,0	61, 1
156	37 கடைசி	83	82
158		குரு என்ற கலத்தில் 9-வது வரியில் 95 என்பதை எடுத்துவிட்டு 25-வது வரியில் 86 என்பதின் கீழ் இன்னொரு 86 சேர்த்து மேலே இருக்கும் வரிகளைத் தூக்கவும்.	
165	36	82	81
195	18	4,37,70	4,37,700
206	10	144	1441
206	1	மற்ற 5	மற்ற 6
217	13	4(செ)	(செ)40
233	23	கபக்	சுபக்
239	5	00	002
240	9	3	0
261	14	446	346
265	2	கொள்காரமுள்ள	கொள்கைபிரகாரமுள்ள
265	3	கொள்	கொள்கை
266	13	22-58	22-56
266	14	22-56	22-57
266	15	22-57	22-58
269	4	--	4-53
269	5	—5	5-15
269	5	---	51
269	6	---	49

உ

கடவுள் துணை

'ஜாதக கணிதம்'

என்னும்

ஜோதிட கிரக சட்பலம்-ஆயுள் கணிதம்.

(*Hindu Calculations etc.*)

அத்தியாயம் 1

ஜாதகம் என்பதின் விவரம்.

ஜாதகம் என்பது ஏதாகிலும் ஒரு குறித்த காலத்தில் ஆகாயத்தில் அல்லது பாதாளத்தில் கிரகங்கள் இருக்கும் நிலையையும், பாதாளத்தை விட்டு பூமட்டத்திற்கு மேலே கிளம்பும் இராசியையும் காட்டும் ஒரு முகாந்தரம் என்பதாம். கிரகங்கள் வானத்தில் சஞ்சரிக்கும் பாகத்திற்கு இராசிமண்டலம் என்று பெயர். இந்த இராசி மண்டலத்தை 12 சமபாகங்களாகப் பங்கிட வரும் ஒவ்வொரு பாகத்திற்கும் இராசி என்று பெயர். மேற்சொல்லிய 12 சமபாகங்கள் அல்லது இராசிகள் முறையே வரிசையாக மேஷராசி, ரிஷபராசி, மிதுனராசி, கடகராசி, சிம்மராசி, கன்னியாராசி, துலாராசி, விருச்சிக ராசி, தனுசுராசி, மகரராசி, கும்பராசி, மீனராசி, என்று சொல்லப்படும். மேற்குத் திக்கிலிருந்து கிழக்குத் திக்காக 23 மணி-56 நிமிஷத்திற்கு ஒரு தரம் பூமி தன்னைத்தானே சுற்றுவதால் வானத்தி

இந்த புத்தகம் பிறருடைய உதவியின்றி தானாகவே ஜோதிடங் கற்றுக் கொள்வதற்கும், முந்தியே ஜோதிடம் தெரிந்த ஜோதிடர்களுக்கும், பிருஹத் ஜாதகம், ஸ்ரீபதி ஜாதக கர்மபத்ததி பலதீபிகை, என்ற இந்த புத்தகங்களைச் சுலபமாயும் நன்ருயும் அறிந்து இவைகளில் சொல்லியபடி பலன்கள் அறிவதற்கும் மிகவும்உபயோகப்படும்.

லுள்ள நட்சத்திரங்களும் சூரியனும் மற்ற கிரகங்களும், கிழக்குத் திக்கிலிருந்து மேற்குத்திக்கில் செல்லுவதாக நமது கண்களுக்குப் புலப்படுகின்றன. இராசி மண்டலமும், வானத்திலிருப்பதால் அதுவும் கிழக்கு திக்கிலிருந்து மேற்கு திக்காகச் செல்லுவதாகத் தோற்றுகிறது. பாதாளத்திலிருக்கும் இராசிமண்டலத்தின் பாகம் கொஞ்சங் கொஞ்சமாகக் கிழக்கில் உதயமாகி மேற்குத்திக்காக நோக்கிச்சென்று கடைசியாக மேற்கில் அஸ்தமனமாகும். ஒரு குறித்த காலத்தில் இராசிமண்டலத்தில் எந்த பாகம் கிழக்கில் உதய மாகுமோ அந்த பாகத்திற்கு உதயலக்கினமென்றுபெயர். உதாரண மாக இராசிமண்டலத்தின் முதல் பாகமாகிய மேஷராசி ஒரு குறித்த காலத்தில் உதயமாகுமானல் அந்த மேஷராசியே அந்த குறித்த காலத்தில் உதயலக்கினம் என்பதாம். அதாவது அந்த குறித்த காலத்தில் லக்கினம் என்னவென்று யாராகிலும் கேட்டால் மேஷ ராசிதான் லக்கினம் என்று சொல்லவேண்டும். அந்த குறித்த காலம் ஒரு குழந்தை பிறந்த காலமானல் அந்த குழந்தை பிறந்த ஜென் மலக்கினம் மேஷம் என்று சொல்லவேண்டும். அந்த குறித்த காலம் ஒரு பெண் ருதுவான காலமானல், அந்த பெண் ருதுவான ருதுலக் கினம் மேஷம் என்று சொல்லவேண்டும். இவ்விதமாக ஜென்மலக் கினம் அல்லது ருதுலக்கினம் அல்லது பலவிதமான முகூர்த்தங் களின் லக்கினம் அறியவேண்டும். உதய லக்கினம் என்று விவரமாக சொல்லாமல் லக்கினம் என்று சொன்னலுங்கூட உதயலக்கினம் என்று அர்த்தமாகும்.

கிரகங்கள் வானத்தில் சஞ்சரிக்கின்றனவென்று சொன்னோம். அவைகளில் முக்கியமானவை ஒன்பது. அவை சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது எனப்படும் இந்த ஒன்பது கிரகங்களுக்கும் நவக்கிரகங்கள் என்று பெயர். இவை களில் இராகு, கேது தவிர மற்றவைகள் உருவமும் அளவும் பிரகாச முடையன. ஆகையால் நாம் இவைகளைப் பார்க்கின்றோம். இராகு கேது என்ற இவ்விரண்டு கிரகங்களுக்கு அளவும் உருவமும் பிரகா சமும் இல்லை. ஆகையால் இவைகளை நாம் பார்க்கமுடியாது. இவை களுக்கு இக்காரணத்தினலேயே ''சாயாக்கிரகம்'' என்று பெயர். மேற் சொல்லிய இந்த 9-கிரகங்களும் நமது ஜோதிட சாஸ்திர

புத்தகங்களில் சொல்லப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மேல்நாட்டு சோதிட சாஸ்திரங்களில் மேற்சொல்லிய நவக்கிரகங் களும் இன்னும் யுரேனஸ், நெப்தியூன் என்று சொல்லப்பட்ட இரண்டு புதிய கிரகங்களும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு புதிய கிரகங்கள் சொற்ப காலத்திற்கு முந்தி கண்டு பிடிக்கப்பட்டதாலும், நமது வெறுங்கண்களுக்குப் புலப்படக் கூடியவைகளாயில்லாததாலும் நமது ஜோதிட சாஸ்திரங்களில் சொல்லப்படாமலிருப்பதாலும் இவைகளைப்பற்றி நாம் கவனிக்க வேண்டிய கவலை இல்லை. மேலும் மேற்சொல்லிய நவக்கிரங்கள் தவிர, குளிகன் என்ற ஒரு உபக்கிரகத்தையும் தென் இந்தியாவிற் சில ஜோதிட வகுப்பார் உபயோகப்படுத்துகிறார்கள்.

நாம் முந்தி இராசி மண்டலத்தை 12 சமபாகமாகப் பங்கிட வரும் ஒவ்வொரு பாகத்திற்குப் பெயர் இராசி என்று சொன்னோம். இந்த இராசிமண்டலத்தை 27சமபாகமாகப்பங்கிட வரும் ஒவ்வொரு பாகத்திற்கும் கூடிய மட்டும் அதன் அருகில் இருக்கும் நட்சத்திரத் தின் பெயரைக் கொடுத்திருக்கின்றார்கள். உதாரணமாக அஸ்வனி நட்சத்திரத்திற்கு அருகிலிருக்கும் பாகத்திற்குப்பரணி என்றும் சொல்லப்படும். இராசி மண்டலத்தில் 12 இராசிகளிருப்ப தாலும், 27 நட்சத்திரங்கள் இருப்பதாலும், 12 இராசி களுள் 27 நட்சத்திரங்களும், அல்லது 27 நட்சத்திரங்களுள் 12 இராசிகளும் அடங்கும் என்று ஏற்படுகின்றது. 27ஐ 12ஆல் வகுக்க 2¼ வரும். ஆகையால் ஒரு இராசியில் 2¼நட்சத்திரங்கள் அடங்கி இருக்கின்றனவென்றும், அல்லது 2¼ நட்சத்திரங்களில் ஒரு இராசி அடங்கி இருக்கின்றதென்றும் ஏற்படும். இராசி மண்டலத்தை 360 சமபாகங்களாகப் பங்கிட வரும்ஒவ்வொரு பாகத் திற்கும் பாகை என்று பெயர். ஒரு பாகையை 60 சமபாகமாகப் பங்கிட வரும் ஒவ்வொரு பாகத்திற்கும் கலை என்று பெயர். இராசி மண்டலத்தில் 12 இராசிகளும் அல்லது 360 பாகைகளும் இருப்ப தால் ஒரு இராசியில் 360யை 12ஆல் வகுக்க வருகின்ற 30 பாகை கள் இருக்கின்றன. மறுபடியும் இராசி மண்டலத்தில் 360 பாகை களும் அல்லது 27 நட்சத்திரங்களும் இருப்பதால், ஒரு நட்சத்திரத் தில் 360ஐ 27ஆல் வகுக்க வருகின்ற 13 பாகையும் 20 கலையும்

இருக்கின்றன. ஒவ்வொரு நட்சத்திரத்தையும் 4 சமபாகமாகப் பங்கிட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு பாகத்திற்கும் நட்சத்திரப் பாதம் என்று பெயர். ஒரு இராசிமண்டலத்தில் 27 நட்சத்திரங்கள் இருப்பதாலும் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் 4-பாதங்களிருப்ப தாலும், இராசிமண்டலத்தில் மொத்தத்தில் 27யை 4ஆல் பெருக்க வருகின்ற 108 நட்சத்திரப்பாதங்கள் இருக்கின்றன. 4-பாதங்கள் கொண்ட ஒரு நட்சத்திரத்தில் 13 பாகை 20 கலை இருப்பதால், ஒரு பாதத்தில் 13 பாகை-20 கலையை 4-ஆல் வகுக்க வருகின்ற 3 பாகை -20கலை இருக்கின்றன என்று ஏற்படும். மேற்சொல்லிய இராசிகளும், நட்சத்திரங்களும், நட்சத்திரப்பாதங்களும், அவை களுள் ஒன்றுக்கொன்றுள்ள சம்மந்தங்களும் 11-வது வாக்கியத்தில் (டேபிலில்) காட்டப்பட்டுள்ளன. இந்த வாக்கியம் ஜாதகம் கணிப் பதற்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

ஜாதகம் எழுதவேண்டிய முறை

இனிமேல் ஜாதகம் கணிக்க வேண்டிய வழியைப்பற்றி பேசு வோம். ஜாதகம் எவ்வளவு துல்லியமாகக் கணிக்கிறோமோ அவ்வள வும் நல்லது. இப்படியிருக்க அனேக ஜோதிடர்கள் தாங்கள் கணிக் கும் ஜாதகத்தில் பல பிழைகளைச் செய்கின்றார்கள். இப்பிழைகள் கீழே சொல்லியனவாகும்: (1) குழந்தை ஜெனனமாகுந்தினத்தில் சூரிய உதயம் அல்லது அஸ்தமனம் எப்போது நேரிட்ட தென்பதைக் கவனிக்கின்றதேயில்லை. சூரியன் எப்போதும் எல்லாவிடங்களிலும் காலை 6-மணிக்கு உதயமாகின்றான் அல்லது மாலை 6-மணிக்கு அஸ்தமனமாகின்றான் என்று எண்ணி காலை அல்லது மாலை 6-மணி யிலிருந்து ஜெனன நாழிகையைக் கணக்கிட ஆரம்பிக்கின்றார்கள். சூரிய உதய காலமும், அஸ்தமன காலமும் நாளுக்கு நாள் வித்தி யாசப்படுவதாலும், இடத்துக்கு இடம் வித்தியாசப்படுவதாலும் குழந்தை ஜெனனமான இடத்தில் ஜெனனதினத்தில் சூரிய உதய காலத்தை அல்லது அஸ்தமன காலத்தை முதலில் அறிய வேண்டியது.

(2) இலக்கினம் கணிப்பதில் மேஷாதி இராசிமான சங்கியையை எல்லாவிடங்களுக்கும் ஒரேவிதமான தென்று கருதி அதை உபயோ

கப்படுத்துகின்றுர்கள். உதாரணமாக மேஷம், மீனம் 4¼ நாழிகை, ரிஷபம், கும்பம் 4¾ நாழிகை, மிதுனம், மகரம் 5¼ நாழிகை, கடகம், தனுசு 5½ நாழிகை, சிம்மம், விருச்சிகம் 5½ நாழிகை, கன்னி துலாம் 5 நாழிகை என்று எண்ணி அனேக ஜோதிடர்கள் இந்த நாழிகைகளை உபயோகப்படுத்துகின்றுர்கள். இது சுத்த பிசகு. இப்போது சொல்லியநாழிகைகளெல்லாம் தோராயமானவைகளே தவிர துல்லியமானவைகள் அல்ல. மேலும் ஒரே இராசிமான சங்கியை எல்லாவிடங்களுக்கும் பொருந்தாது. அதாவது மேஷம் ஒரு இடத்திற்கு 4¼ நாழிகையானுல் அது அந்த இடத்திற்கு வடக்கு தெற்குகளிலுள்ள எல்லாவிடங்களுக்கும் பொருந்தாது. நமது ''ஆனந்த போதினி பஞ்சாங்கத்தில்'' கொடுத்துள்ள நிராயண இராசிமான சங்கியைப்பார்த்தால் இராசிமான சங்கியை இடத்திற்குத் தகுந்தவாறு வித்தியாசப்படுகின்றதென்று புலப்படும். மேலும் மேஷம், மீனம் 4¼, ரிஷபம், கும்பம் 4¾ என்று வலது பக்கமாக மேஷம் முதல் 6 இராசிகளுக்கும், இடது பக்கமாக மீனம் முதல் 6 இராசிகளுக்கும் ஒரே நாழிகையைக்கொடுத்துள்ள இராசிமான சங்கியைசாயன இராசிமானசங்கியை ஆகும். சாயனம் என்பது அயனும்சம் சேர்த்து கணித்த சங்கியை என்பதாம். நமது பஞ்சாங்கங்கள் எல்லாம் நிராயன பஞ்சாங்கங்களாகும். ஜோதிடமும் நிராயனம் பிரகாரம் பார்த்து வருகிருர்கள். நிராயனம் என்பது அயனும்சம் இல்லாமல் என்பதாம். அப்படியிருக்க நமது ஜோதிடத்திற்குச் சாயன இராசிமான சங்கியை உபயோகித்து அதற்கு வேண்டிய கிரியைகளைச் செய்யாமல் சும்மா விட்டுவிடுவது பிசகு. நிராயன இராசிமான சங்கியைக்கொண்டு உதய லக்கினம் கணிப்பதைவிட சாயன இராசிமான சங்கியைக்கொண்டு உதயலக்கினம் கணித்து அதற்கு வேண்டிய அயனும்ச கிரியை செய்வது மிகவும் துல்லியம் என்று அனேகருடைய கொள்கை. இந்தக் காரணத்தைக்கொண்டுதான் நமது ''ஆனந்த போதினி பஞ்சாங்கத்தில்'' சாயன இராசிமான சங்கியையும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

(3) சரியான பஞ்சாங்கங்களை உபயோகப்படுத்துகிறதில்லை. வானசாஸ்திரம் மற்ற எல்லா சாஸ்திரங்களைப்போலவே நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டு வரப்பட்ட சாஸ்திரம். அப்படியிருக்க அனேக வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட வான சாஸ்திரப்புத்த

கங்களை அனுசரித்து கணிக்கப்படும் பஞ்சாங்கங்களைக்கொண்டு ஜாதகம் கணிப்பதால் கிரக சாரங்களில் பிழைகள் ஏற்படுகின்றன. ஏனென்றால் அந்த வான சாஸ்திரங்கள் தற்காலத்திற்குச் சரியாக இல்லை.

ஜாதகம் கணிக்க ஒரு உதாரணம்

மேற்சொல்லிய பிழைகளில்லாமல் ஜாதகம் கணிக்கும் முறையை ஒருஉதாரணத்தால் விளக்கிக்காட்டுவது விசேஷமென்று தோற்றுவதால், உதாரணமாக ஒரு ஜெனன ஜாதகத்தைக் கணிப்போம்.

வர்த்தமான சாலிவாகன சகாப்தம் 1792-வது வருஷம் கலியுகாதி 4971-வது வருஷமாகிய சுக்கிலஸ்ரீ புரட்டாசிமீ 18உக்குச் சரியான இங்கிலீஷ் 1869-வது வருஷம் அக்டோபர்மீ 2உ சனிக்கிழமை பம்பாய்இராஜதானியிலுள்ள கத்தியவார் என்ற நகரத்திற்கு அடுத்த போர்பந்தர் என்ற ஊரில் காலை சூரிய உதயாதி நாழிகை 3 விநாடி 12½க்குக் கெடியாரரீதியாய் காலை மணி 7 நிமிஷம் 13க்கு ஜெனித்த ஜெயசீலர் என்ற ஒரு புண்ணியமகாத்மாவின் ஜாதகத்தை கணிப்போம்.

(1) *ஜெனன நாழிகை கணிக்க:*—ஜெனனமான தினத்தில் சூரிய உதயம், காலை மணி 5-நமிஷம் 56க்கும், அஸ்தமனம் மாலை 5 மணி 44 நிமிஷத்திற்கும் நேர்ந்தது. ஜெனனம் காலை 7 மணி-13 நிமிஷத்திற்கு நேர்ந்ததால் 5வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியிற் சொல்லிய பிரகாரம் கணிக்க ஜெனனம் சூரிய உதயத்திலிருந்து நாழிகை 3-விநாடி 2½ என்று ஏற்படுகின்றது.

(2) *நவக்கிரகங்களின் ஸ்புடம் கணிக்க:*— பஞ்சாங்கங்களில் அல்லது புத்தகங்களில் கிரகஸ்புடம் 10 நாளுக்கு ஒருதரம் அல்லது, இரண்டு தினங்களுக்கொருதரம் அல்லது தினந்தோறும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதன் உதவியால் நமக்குத்தேவையான காலத்திற்குக் கிரகஸ்புடஞ்செய்யவேண்டியது. (ஆனந்த போதினி பஞ்சாங்கத்தில் கிரகஸ்புடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை கவனிக்கவும்). 1869வது வருஷம் அக்டோபர்மீ 1உ பகல் 4 மணி-36 நிமிஷத்திற்கும், 2உ பகல் 4 மணி 36 நிமிஷத்திற்கும் அடியிற் கண்டபடி கிரங்களின் ஸ்புடங்கள் கொடுக்கப்பட்டிடிருப்பதாக வைத்துக்கொண்டு நமக்கு வேண்டிய காலமாகிய

1869-வது வருஷம் அக்டோபர்மீ 2உ. காலை 7 மணி-13 நிமிஷத்திற்குக் கிரக ஸ்புடங்களைக் கணிப்போம்.

கிரகங்களின் பெயர்	[1உ. பகல் 4 மணி 36 நிமிஷத்திற்கு ஸ்புடம்]	[2உ. பகல் 4 மணி 36 நிமிஷத்திற்கு ஸ்புடம்]
	பாகை - கலை	பாகை - கலை
சூரியன்	166 - 26	167 - 25
சந்திரன்	109 - 24	123 - 47
செவ்வாய்	206 - 4	206 - 46
புதன்	191 - 29	192 - 7
குரு	28 - 19	28 - 15
சுக்கிரன்	203 - 47	205 - 0
சனி	230 - 25	230 - 29
இராகு	102 - 19	102 - 16
கேது	282 - 19	282 - 16

இவ்விதமாகக் கிரகங்களின் ஸ்புடங்கள் இருந்தால் சேவது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியிற் சொல்லியபடி கணிக்க, 2உ. காலை 7 மணி 13 நிமிஷத்திற்குக் கிரகஸ்புடங்கள் அடியிற் கண்டபடி ஆகும்.

	பாகை - கலை		பாகை - கலை
சூரியன்	167 - 2	சுக்கிரன்	204 - 32
சந்திரன்	118 - 10	சனி	230 - 27
செவ்வாய்	206 - 30	இராகு	102 - 17
புதன்	191 - 52	கேது .	282 - 17
குரு	28 - 17 (வக்ரி)		

(3) *ஜெனன காலத்தில் திதி அறிய:*—பஞ்சாங்கத்தைப் பார்த்து நமக்குதேவையான ஜெனன காலத்திலுள்ள திதியை அறியலாம், இது ஒருவழி, இன்னம் ஒருவழியுண்டு. அதாவது சூரிய சந்திராளுடைய ஸ்புடத்திலிருந்தும் அறியலாம். ஜெனன காலத்தில் சந்திர ஸ்புடம் பாகை 118-கலை 10 என்றும் சூரியனுடைய ஸ்புடம் பாகை 167-கலை 2 என்றும் முன்னமே 2-வது

அயிட்டத்தில் கணித்திருப்பதால் 8-வது வாக்கியத்தை உபயோகப் படுத்தும் வழியிற் சொல்லியபடி கணிக்க ஜெனனகாலத்தில் தேய் பிறை ஏகாதசி திதி என்று ஏற்படும்.

(4) *ஜெனன காலத்தில் நட்சத்திரம் அறிய:*—ஜெனன காலத்தில் சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118-கலை 10 என்று முன்னமே 2-வது அயிட்டத்தில் கணித்திருக்கின்றது. பிறகு 11-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தில் 2-வது அயிட்டம் முதல் 6-வது அயிட்டம் வரையிலும் சொல்லியுள்ளதைப் படிக்க சந்திரன் ஆயில்ய நட்சத்திரம் 4-வது பாகையில் இருப்பதாக ஏற்படும்.

(5) *ஜெனன கால தெசையும் அதன் இருப்பும் கணிக்க:*- ஜெனன காலத்தில் சந்திரன் ஸ்புடம் பாகை 118-கலை 10 என்றும், சந்திரன் ஆயில்யம் 4-ம் பாதத்தில் இருக்கின்ற தென்றும் முன்னமே அறிந்தோம். பிறகு 10-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியிற் சொல்லியபடி கணிக்க ஜெனன காலத்தில் புதன் தெசையில் கெற்பச் செல்லுபோய் இருப்பு நின்றது வருஷம் 2-மீ 4-நாள் 1 நாழிகை 30 என்று ஆகும்.

(6) *ஜெனன காலத்தில் உதய இலக்கினம் (அதாவது இலக்கினம் கணிக்க):*-முதலில் ஜெனனமான தினத்தில் சூரிய உதய காலத்தில் சூரியனுடைய ஸ்புடத்தைக் கணிக்க வேண்டியது. இதைக் கணித்தால் ஜெனன தினத்தில் சூரிய உதயவேளையில் உதய இலக்கினமும் அந்த இலக்கினத்தில் எவ்வளவு பாகை கலை உதயமாகி இருக்கின்றதென்றும் இன்னம் எவ்வளவு பாகை கலை உதயமாக வேண்டும் என்றும் .இன்னம் உதயமாகவேண்டிய பாகை-கலை உதயமாவதற்கு எவ்வளவு நாழி விநாடி செல்லவேண்டுமென்றும் ஏற்படும். இந்த நாழிகை விநாடியைத்தான் சில பஞ்சாங்கங்களில் ஒவ்வொரு தினமும் இராசி இருப்பு நாழிகை என்று போடுகின்றார் கள். ஆனந்த போதினி பஞ்சாங்கம் 32-வது காலத்தைப் பார்த்தால் இராசி இருப்பு என்று ஒவ்வொரு தேதிக்கும் எதிரில் போட்டிருப் பதைக் கவனிக்கலாம். ஜெனனதினத்தில் சூரிய உதயகாலமாகிய மணி 5-நிமிஷம் 56க்குச் சூரிய ஸ்புடம் கணிக்க :-1869வதுவருஷம் அக்டோபர் மீ 1உ பகல் 4 மணி 36 நிஷத்திற்குச் சூரிய ஸ்புடம் பாகை 156-கலை 26 ஆகும். 1869வதுவருஷம் அக்டோபர் மீ

2உ பகல் 4 மணி-36 நிமிஷத்திற்குச் சூரிய ஸ்புடம் பாகை 167-கலை 25 ஆகும். ஆகையால் சூரியனுடைய தினகதி, பாகை 167-கலை25ல் இருந்து பாகை 166-கலை 26ஐக் கழிக்க வருகின்ற பாகை 0-கலை 59 ஆகும். சூரிய ஸ்புடம் கொடுத்துள்ள 1உ பகல் 4 மணி-36 நிமிஷத்திலிருந்து சூரிய உதய காலமாகிய காலைமணி 5-நிமிஷம் 56 வரையிலுல் இடையில் செல்லான காலம் 13 மணி-20 நிமிஷம்ஆகும்.

இப்போது நமக்குத் தினகதியும், 1உ, 2உ இவைகளில் சூரிய ஸ்புடமும், சூரிய ஸ்புடம் கொடுத்துள்ள காலத்திலிருந்து சூரிய உதயம் வரையிலுமுள்ள காலமாகிய 13 மணி-20 நிமிஷமும் கொடுத்திருப்பதால் 6-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தில் சொல்லிய பிரகாரம் கணிக்க சூரிய உதய வேளையில் சூரியனுடைய ஸ்புடம் பாகை 166-கலை 59 என்று ஏற்படும். 12வது வாக்கியத்தைப் பார்த்தால் சூரிய கன்னியாராசியில் இருப்பதாகவும் இன்னம் கன்னியராசியில் பாகை 180-கலை 0-விலிருந்து பாகை 166-கலை 59ஐக் கழிக்க வருகின்ற 13 பாகை-1 கலை செல்ல வேண்டும் என்றும் ஏற்படும். அதாவது சூரிய உதய காலத்தில் கன்னியா ராசி உதயம் என்றும் இன்னம் கன்னியாராசியில் உதயமான பாகம் போக உதயமாக வேண்டியது பாகை 13-கலை 1 என்று ஏற்படும். இதை ஒருஇடத்தில் எழுதிவைத்துக் கொள்ளவும். பஞ்சாங்கங்களில் நிராயன இராசிமான சங்கியைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதாவது ஒவ்வொரு ஊரிலும் மேஷாதி முதலிய 12 இராசிகளும் உதயமாகும் காலத்தைக் கொடுக்கப்பட்டிருக்கும். உதாரணமாக எடுத்துக் கொள்ளப்பட்ட ஜெபசீலர் பிறந்த ஊர் போர்பந்தர் ஆனதாலும், அந்த ஊரின் அட்சாம்சம் 21½ பாகையானதாலும் அந்த ஊரில் மேஷாதி முதலிய 12 இராசிகளும் உதயமாகும் காலம் அடியிற் கண்டபடி ஆகும்.

இராசி யின் பெயர்	நிராயன இராசி மானம் நாழிகை - விநாடி	இராசி யின் பெயர்	நிராயன இராசி மானம் நாழிகை - விநாடி
மேஷம் ...	4 - 12	துலாம் ...	5 - 32
ரிஷபம் ...	4 - 54	விருச்சிகம் ...	5 - 39
மிதுனம் ...	5 - 32	தனுசு ...	5 - 16
கடகம் ...	5 - 37	மகரம் ...	4 - 31
சிம்மம் ...	5 - 27	கும்பம் ...	3 - 57
கன்னி ...	5 - 23	மீனம் ...	3 - 50

மொத்தம் நாழி 59-விநாடி 50. மேலே கொடுத்துள்ள 12 இராசிமான சங்கியையில் பார்த்தால் சூரியன் இருக்கின்ற கன்னியா ராசி முழுதும் உதயமாக நாழி 5-விநாடி 23 ஆகின்றது. சூரிய உதய காலத்தில் கன்னியில் இன்னம் உதயமாக வேண்டியது பாகை 13-கலை 1 முன்னமே கணித்து வைத்திருக்கின்றோம். 30 பாகைகள் அடங்கிய கன்னியாராசி உதயமாக நாழிகை 5-விநாடி 23ஆகு மென்றால் பாகை 13-கலை 1 உதயமாக எவ்வளவு நாழிகை விநாடி செல்லும் என்பதை அறிய வேண்டியது இதைப்பின் வருமாறு அறியவும். கன்னியாராசியின் சங்கியையாகிய நாழிகை 5-விநாடி 23ஐ விநாடியாக மாற்ற 323 விநாடி வரும். பாகை 13-கலை 1ஐ கலையாக மாற்ற 781 கலைவரும். ஒரு ராசியின் பிரமாணமாகிய 30 பாகையைக் கலையாக மாற்ற 1800 கலைவரும். இன்னம் கன்னியா ராசியில் உதயமாக வேண்டிய பாகமாகிய 781ஐ இராசிமானமாகிய 323ஆல் பெருக்கி ஒரு இராசியின் பிரமாணமாகிய 1800 ஆல் வகுக்க வருகின்ற ஈவு விநாடி ஆகும். இப்படிப்பெருக்கி வகுக்க ஈவு 140 விநாடிவரும். இதை நாழிகையாக மாற்ற 2 நாழிகை 20 விநாடி ஆகும். ஆகையால் சூரிய உதய காலத்தில் கன்னியாராசியில் இன்னம் உதயமாக வேண்டிய பாகமாகிய பாகை 13-கலை1 உதயமாக நாழிகை 2-விநாடி 20 ஆகும். இந்த 2 நாழிகை - 20 விநாடியைத்தான் ஜெனனமான தினத்தில் கன்னியாராசி இருப்பு என்று சொல்லுகிறது வழக்கம். கன்னியாராசி இருப்பு நாழிகை 2-விநாடி 20 ஆகும். அதாவது கன்னியா ராசி முடியுங்காலம் சூரிய உதயத்திலிருந்து நாழிகை 2-விநாடி 20 ஆகும். உடனே அடுத்த இராசியாகிய துலாராசி உதயமாகி அதற்குரிய இராசிமானமாகிய நாழிகை 5-விநாடி 32 வரையிலும் இருக்கின்றது. அதாவது சூரிய உதயாதி நாழிகை 2-விநாடி 20க்கு துலாலக்கினம் ஆரம்பித்து இந்த 2நாழி-20விநாடியுடன் துலாராசியின் இராசிமான மாகிய நாழிகை 5-விநாடி 32ஐக் கூட்ட வருகின்ற 7 நாழிகை-52 விநாடியில் முடிவு பெருகின்றது, நமக்கு வேண்டிய ஜெனனகாலமாகிய நாழிகை 3-விநாடி 12½. நாழிகை 2-விநாடி 20க்கு மேற்பட்டு நாழிகை 7-விநாடி 52க்குள் இருப்பதால் ஜெனன காலத்தில் துலா லக்கினம் என்று ஏற்படுகின்றது. மேலும் துலாலக்கினம் 2 நாழிகை-20 விநாடிக்கு ஆரம்பிப்பதால் ஜெனன காலமாகிய

நாழிகை 3-விநாடி 12½யில் இருந்து நாழிகை 2-விநாடி 20யைக் கழிக்க வருகின்ற 0 நாழிகை-52½ விநாடிதான் துலாலக்கினத்தில் செல்லான நாழிகை விநாடியாகும். இப்போது துலாலக்கினத்தில் எவ்வளவு பாகம் அதாவது எவ்வளவு பாகை கலை செல்லானது என்பதைக் கணிப்போம். துலாலக்கினத்தில் செல்லான நாழிகை 0-விநாடி 52½யை விநாடியாக மாற்ற 52½ விநாடி வரும். துலா ராசியின் இராசிமானமாகிய நாழிகை 5-விநாடி 32யை விநாடியாக மாற்ற 332 விநாடி வரும். துலாராசியின் பிரமாணமாகிய 30 பாகையைக் கலையாக மாற்ற 1800 கலை வரும். இந்த இராசி பிரமாணமாகிய 1800யை, இராசியில் செல்லான விநாடியாகிய 52½ஆல் பெருக்கி துலாராசியின் இராசிமானமாகிய332ஆல் வகுக்க வருகின்ற ஈவு கலை ஆகும். இப்படிப்பெருக்கி வகுக்க ஈவு285கலை வரும். இதைப் பாகையாக்க 4பாகை-45 கலை வரும். ஆகையால் ஜெனன காலத்தில் துலா ராசியில் செல்லானது பாகை 4-கலை 45 ஆகும். 12வது வாக்கியத்தைப் பார்த்தால் துலாராசியின் ஆரம்ப ஸ்புடம் பாகை 180-கலை 0-ஆகும். இத்துடன் மேலே வந்த பாகை 4-45 கலையைக் கூட்ட வருகின்ற 184 பாகை-45 கலையே ஜெனன காலத்தில் உதய லக்கினத்தின் ஸ்புடமாகும். இதைத்தான் இலக்கின ஸ்புடம் என்று சொல்லுகிறது வழக்கம். ஆகையால் இலக்கின ஸ்புடம் பாகை 184-கலை 45 என்பதாம்.

மேலே சொல்லிய பிரகாரம் இலக்கினஸ்புடங்கணிப்பது ஒருவழியாகும். இன்னொருவழி இருக்கின்றது. அது மேலே சொல்லிய வழியைவிட கொஞ்சந்துல்லியமானது. இந்த வழியில் சாயன இராசிமான சங்கியை உபயோகித்து இலக்கின ஸ்புடத்தைச் சாயன ரீதியாய்க் கணித்து அதிலிருந்து அயனும்ச ஸ்புடத்தைக் கழித்து நமக்குத் தேவையான நிராயனலக்கின ஸ்புடத்தை அடைவது. (முந்தி சொல்லிய ''ஜாதகம் எழுதவேண்டியமுறை என்பதை'' இங்கு ஒரு முறை வாசிக்கவும்.)

இப்போது சாயனரீதியாய் இலக்கின ஸ்புடங்கணிப்போம். ஜெனனதினத்தில் சூரிய உதய வேளையில் சூரியனுடைய ஸ்புடம் 166 பாகை-59 கலை என்று முந்தி கணித்தோம். இந்த ஸ்புடம் நிராயன ஸ்புடமாகும். இத்துடன் 43வது வாக்கியத்தில் 1869ம் வருஷத்

திற்குக் கொடுத்துள்ள அயனும்ச ஸ்புடமாகிய 21 பாகை 54 கலை யைக்கூட்ட 188 பாகை-53-கலைவரும். இது சாயன ஸ்புடமாகும். அதாவது சூரிய உதய வேளையில் சூரியனுடைய சாயனஸ்புடம் 188 பாகை-53 கலை ஆகும். ஆகையால் 12வது வாக்கியத்தைப் பார்த் தால் சூரியன் சாயன துலாராசியில் 8 பாகை-53 கலையில் இருப்ப தாக ஏற்படும். ஆகையால் சூரிய உதய வேளையில் சாயன துலா ராசியில் 8 பாகை-53 கலை உதயமாகி இன்னம் அதில் 21 பாகை-7 கலை உதயமாக வேண்டியதாக இருக்கின்றது. ஜெயசீலர் பிறந்த விடம் போர்பந்தர் ஆனபடியால் அவ்வூருக்குச் சாயன இராசிமான சங்கியை அடியிற்கண்டபடி ஆகும்.

இராசியின் பெயர்	சாயன இராசி மானம். நாழி - விநாடி	இராசியின் பெயர்	சாயன இராசி மானம். நாழி - விநாடி
மேஷம்	3 - 50	துலாம்	5 - 24
ரிஷபம்	4 - 18	விருச்சிகம்	5 - 37
மிதுனம்	5 - 7	தனுசு	5 - 39
கடகம்	5 - 39	மகரம்	5 - 7
சிம்மம்	5 - 37	கும்பம்	4 - 18
கன்னி	5 - 24	மீனம்	3 - 50

மொத்த நாழிகை 59-50 விநாடி

மேலே கொடுத்துள்ள 12 இராசிமான சங்கியையில் பார்த்தால் சூரியன் இருக்கின்ற சாயன துலாராசி முழுவதும் உதயமாக நாழிகை 5-24 விநாடி ஆகின்றது. சூரிய உதய காலத்தில் சாயன துலாராசி யில் இன்னம் உதயமாக வேண்டியது 21 பாகை-7 கலை ஆகும். 30 பாகைகள் அடங்கிய சாயன துலாராசி உதயமாக 5 நாழிகை-24 விநாடி ஆகும் என்றால் 21 பாகை-7 கலை உதயமாக இன்னும் எவ் வளவு நாழி விநாடி செல்லும் என்பதை அறியவேண்டியது. இதைப் பின் வருமாறு அறியவும். சாயன துலாராசியின் சங்கியையாகிய 5 நாழி-24 விநாடியை விநாடியாக மாற்ற 324 விநாடி வரும். 21 பாகை-7 கலையைக் கலையாகமாற்ற 1267 கலைவரும். ஒரு ராசியின் பிரமாணமாகிய 30 பாகையைக் கலையாக மாற்ற 1800 கலைவரும்.

இன்னம் சாயன துலாராசியில் உதயமாக வேண்டிய பாகமாகிய 1267ஐ இராசிமான மாகிய 324ஆல் பெருக்கி இராசிபிரமாண மாகிய 1800ஆல் வகுக்க வருகின்ற ஈவு விநாடியாகும். இப்படிப் பெருக்கி வகுக்க ஈவு 228 ஆகும். இதை நாழிகையாக்க 3 நாழிகை 48 விநாடி வரும். ஆகையால் சாயன துலாராசி முழுவதும் உதய மாக இன்னம் நாழி 3-48 விநாடி செல்லவேண்டும் என்பதாம். அதாவது, சாயன துலாராசி சூரிய உதயத்திலிருந்து 3 நாழிகை-48 விநாடியில் முடிகிறது என்பதாம். ஆகையால் ஜெயசீலரின் ஜெனன நாழிகை 3-12½ விநாடியானதால், ஜெனனமாகும் போது ஜெனன லக்கினம் சாயன துலாராசி என்று அறியவும். இப்போது ஜெனன மான தினத்தில் சூரிய உதயத்திலிருந்து ஜெனன நாழிகை 3-12½ விநாடியில் சாயன துலாராசியில் எவ்வளவு உதயம் என்பதை அறியலாம் 3 நாழிகை-12½ விநாடியை விநாடியாக மாற்ற 192½ விநாடி வரும். இராசிமானமாகிய நாழிகை 5-24 விநாடியை விநாடியாக மாற்ற 324 விநாடிவரும். இராசிப்பிரமாணமாகிய 30 பாகையை கலையாக்க 1800 கலை வரும். நமக்குத் தேவையான விநாடியான 192½யை இராசிப்பிரமாணமாகிய 1800 ஆல் பெருக்கி இராசிமானமாகிய 324 ஆல் வகுக்க வருகின்ற ஈவு கலையாகும். இப்படிப் பெருக்கி வகுக்க ஈவு 1069 வரும். இதைப்பாகையாக்க 17 பாகை-49 கலைவரும். ஆகையால் சூரிய உதயத்திலிருந்து ஜெனனகாலம் வரையில் சாயன துலாராசியில் 17 பாகை-49 கலை உதயம் என்று ஏற்படும். சூரிய உதயவேளையில் சாயன சூரிய ஸ்புடம் 188 பாகை-53 கலை என்று கணித்து வைத்திருக்கின்றோம். இந்த 188 பாகை-53 கலையுடன் 17 பாகை-49 கலையைக்கூட்ட 206 பாகை-42 கலை ஆகும். இந்த 206 பாகை-42 கலைதான் சாயனஜென்மலக்கினம் அல்லது,சாயன இலக்கினமாகும். ஆகையால்,சாயன ரீதியாய் இலக்கினஸ்புடம் பாகை 206-42 கலை ஆகும். இதிலிருந்து அவ் வருஷத்திற்குரிய அயனம்சமாகிய 21 பாகை-54 கலையைக் கழிக்க வருகின்ற 184 பாகை-48 கலையே நிராயனலக்கின ஸ்புடமாகும். ஆகையால், நமக்குக் கடைசியாய்த் தேவையான இலக்கினஸ்புடம் 184 பாகை-48 கலை ஆகும். 12 வது வாக்கியத்தைப் பார்த்தால் ஜென்ம லக்கினம் கன்னியாராசி என்றும் அதில் 4 பாகை-48 கலை சென்லானது என்றும் ஏற்படும்.

இலக்கினம் கணிக்கவேண்டிய முறையை ஜெயசீலரின் ஜெனன வேளையில் நேரிட்ட இலக்கினத்தைக் கணிக்கும் உதாரணத்தால் இதுவரையிலும் விளக்கிக் காட்டினோம். இந்த முறையை இன்னொரு உதாரணத்தால்விளக்கிக்காட்டுவோம். வர்த்தமான கலியுகாதி5029 பிரபவ ஸு சித்திரைமீ" 2ந் தேதிக்குச் சரியான இங்கிலீஷ் 1927ஸு ஏப்ரல்மீ" 14ந்தேதி வியாழக்கிழமை சூரிய உதயாதி நாழிகை 37-விநாடி 19க்கு ஒரு குழந்தை சென்னையில் ஜெனனமானால் அதனுடைய ஜென்ம இலக்கினம் கணிப்போம். 2ந்தேதி சூரிய உதயங் கணிக்க பிரபவஸுத்திய ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கத்தில் 10வது பக்கத்தைப் பார்த்தால் சித்திரைமீ" 1ந்தேதியில் சூரிய உதயம் காலை 6 மணி-1 நிமிஷத்தில் நேரிட்டது என்றும் 11ந்தேதி காலை 5 மணி-56 நிமிஷத்தில் நேரிட்டதென்றும் ஏற்படும். ஆகையால், சூரிய உதயத்தில் வித்தியாசம் 6-1ல் 5-56ஐக் கழிக்க 5 நிமிஷம் வரும். இந்த 5 நிமிஷ வித்தியாசம் 10 தினத்தில் நேரிடுகின்றது. ஆகையால், தினம் 1-க்கு வித்தியாசம் ½ நிமிஷம் ஆகும். நமக்கு வேண்டிய தினமாகிய 2-தேதி 1ந்தேதியிலிருந்து ஒரு தினமானதால் இந்த ஒரு தினத்திற்குச் சூரிய உதயத்தில் வித்தியாசம் ½ நிமிஷம் ஆகும். சூரிய உதயம் 1ந்தேதிக்குமேல் 11-ந்தேதி வரையிலும் பார்த்தால் நாளுக்கு நாள் முந்தியாக நிகழ்வதால் சூரிய உதயம் 2ந்தேதியில் 1-தேதியைவிட ½ நிமிஷம் முந்தி நேரிட வேண்டும். அதாவது 2-ந்தேதி சூரிய உதயம் 6மணி ½ நிமிஷத்தில் நேரிட்டது என்று ஏற்படும்.

(2) பிறகு சூரிய உதய வேளையில் சூரியனுடைய சாயன ஸ்புடம் கணிக்க வேண்டியது. இதைப் பின்வருமாறு கணிக்கவும், பிரபவஸுத்திய ஆனந்த போதினி பஞ்சாங்கத்தில் 42வது பக்கத்தில் நவக்கிரக ஸ்புடத்தில் சித்திரைமீ" 1ந்தேதிக்கு எதிரில் சூரியனுடைய காலத்தில் பாகை 0-21 கலை போட்டிருக்கின்றது. அதாவது 1ந்தேதி விடியற்காலை (அதாவது பொழுது விடிந்தால் 2ந்தேதி) 5 மணி-30 நிமிஷத்தில் சூரியனுடைய ஸ்புடம் பாகை 0-21 கலை ஆகும் என்பதாம். இந்த மணி5-நிமிஷம் 30ல் இருந்து கணக்கிட சூரிய உதய வேளையாகியமணி 6-½ நிமிஷம் என்பதுமணி5-நிமிஷம் 30ல்இருந்து 30½ நிமிஷ நேரமாகும். மேலும் 2-ந் தேதியின் ஸ்புடமாகிய

1 பாகை-20 கலையிலிருந்து 1ந்தேதியின் ஸ்புடமாகிய பாகை 0-21 கலையைக் கழிக்க வருகின்ற பாகை 0-59 கலையே சூரியனுடைய தின கதியாகும். (தினகதி என்ருல் என்ன என்பதைப்பற்றி 6-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தைப்படித்தால் தெரிய வரும்). இப்போது நமக்கு 1-ந்தேதியும் 2-ந்தேதியும் காலை 5மணி-30 நிமிஷத்திற்குச் சூரிய ஸ்புடமும், சூரியனுடைய தினகதி யும், தெரிந்திருப்பதால் சூரிய உதய வேளையாகிய 6மணி 1 நிமிஷத் தில் சூரியனுடைய ஸ்புடத்தை 6 வது வாக்கியத்தை உபயோகிக் கும் விதத்தில் சொல்லிய பிரகாரம் கணிக்க வேண்டியது இப்படிக் கணிக்க சூரிய உதய வேளையில் சூரிய ஸ்புடம் 0 பாகை-22 கலை ஆகும். இது நிராயன ஸ்புடமாகும். பிரபவஹுத்திய ஆனந்த போதினி பஞ்சாங்கம் 15-வது பக்கத்தின் தலைப்பில் அயனஸ்புடம் பாகை 22-42-23 என்று போட்டிருக்கின்றது. அதாவது இவ் வருஷத்தில் அயன ஸ்புடம் பாகை 22-கலை 42-விகலை 23 அல்லது பாகை 22-கலை 42 ஆகும். (43வது வாக்கியம் பார்க்கவும்.) இந்த அயனும்சமாகிய 22 பாகை-42 கலையை முந்தி கணித்து வந்த நிராயன சூரிய ஸ்புடமாகிய பாகை 0-22 கலையுடன் கூட்ட வரு கின்ற 23 பாகை-4 கலையே சாயன ஸ்புடமாகும். ஆகையால் சூரிய உதய வேளையில் சூரியனுடைய சாயனஸ்புடம் பாகை 23-4 கலை ஆகும்.

(3) சூரிய உதய வேளையில் உதய லக்கினமும் இந்த உதய லக்கினத்தில் இருப்புங் கணிக்க:—சாயன சூரிய ஸ்புடம் 23 பாகை-4 கலை என்று மேலே கணித்தோம். 12வது வாக்கியத்தைப் பார்த் தால் சூரியன் சாயன மேஷ ராசியில் இருப்பதாகவும், அந்த ராசி யில் 23 பாகை-4 கலை சென்றிருப்பதாகவும் ஏற்படும். அதாவது சூரிய உதய வேளையில் சாயன மேஷராசி உதயமாகி அதில் 23 பாகை-4 கலை செல்லான தென்றும், 30 பாகையில் 23 பாகை-4 கலையைக் கழிக்க வருகின்ற 6 பாகை-34 கலை இன்னம் செல்லாக வேண்டியதென்றும் ஏற்படும். இந்த 6 பாகை-34 கலை செல்ல எவ் வளவு நேரம் ஆகுமென்பதைக்கணிப்போம். இந்த 6 பாகை-34 கலை யைக் கலையாக மாற்ற 394 கலைவரும் மேலும் பிரபவஹுத்திய ஆனந்தபோதினி பஞ்சாங்கம் 45 வது பக்கத்தில் சாயன இராசிமான சங்கியையில் ஜெனனவிடமாகிய சென்னைக்குரிய 13வது அட்சாம்சத்

திற்கு நேராய் மேஷாதி 12 இராசிகளுக்கும் அடியிற் கண்டபடி இராசிமானம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இராசிகளின் பெயர்	சாயன இராசி மான சங்கியை நாழி - விநாடி	இராசிகளின் பெயர்	சாயன இராசி மான சங்கியை நாழி - விநாடி
மேஷம்	4 - 11	துலாம்	5 - 3
ரிஷபம்	4 - 36	விருச்சிகம்	5 - 20
மிதுனம்	5 - 13	தனுசு	5 - 32
கடகம்	5 - 32	மகரம்	5 - 13
சிம்மம்	5 - 20	கும்பம்	4 - 36
கன்னி	5 - 3	மீனம்	4 - 11

ஆக மொத்தம் நாழிகை 59 — 50 விநாடி ஆகும்.

சாயன மேஷராசிக்கு மேலே கொடுத்துள்ள 4 நாழிகை-11 விநாடியை விநாடியாக மாற்ற 251 விநாடி வரும். ஆகையால் சாயன மேஷராசியிலுள்ள 30 பாகை அல்லது 1800 கலை முழுவதும் உதயமாக 251 விநாடி ஆகும் என்றால் அந்த சாயன மேஷராசியில் 6 பாகை 34 கலை அல்லது 394 கலை உதயமாக எவ்வளவு விநாடியாகும் என்பதை இப்போது கணிக்கவேண்டியது. உதயமாக வேண்டிய பாகமாகிய 394ஐ இராசிமானமாகிய 251ஆல் பெருக்கி இராசி பிரமாணமாகிய 1800 ஆல் வகுக்க வருகின்ற ஈவு விநாடியாகும். இப்படி வகுக்க 55 விநாடி வரும். ஆகையால் சாயன மேஷராசியில் இன்னம் உதயமாக வேண்டிய பாகமாகிய 6 பாகை-34 கலை உதயமாக சூரிய உதயத்திலிருந்து 55 விநாடி செல்லும் என்பதாம். இந்த 55 விநாடியைத்தான் ஜெனன தேதியில் இராசி யிருப்பு என்று சொல்லுவது வழக்கம்.

பிறகு நமக்குச் சூரிய உதயாதி நாழிகை 37-19 விநாடிக்கு ஜென்மலக்கினம் தேவையானதால் மேலே வந்த 0 நாழிகை-55 விநாடியுடன் சூரிய உதயவேளையில் எந்த இராசி உதயமோ அந்த இராசிக்கு அடுத்தாற்போல் வருகின்ற இராசிகளின் இராசிமான சங்கியை 37 நாழிகை-19 விநாடி வருகின்ற வரையிலும் அடியிற் கண்டபடி கூட்டவும்.

ஜெனன தேதியில் சாயன மேஷராசி இருப்பு நாழி 0-55 விநாடி.

சாயன ரிஷபராசி முழுவதும் உதயமாக (மேலே கொடுத்துள்ள ராசிமானம் பார்க்கவும்)	4 - 36	,,
சாயன மிதுனம்	5 - 13	,,
சாயன கடகம்	5 - 32	,,
சாயன சிம்மம்	5 - 20	,,
சாயன கன்னி	5 - 3	,,
சாயன துலரம்	5 - 3	,,
சாயன விருச்சிகம்	5 - 20	,,

இதுவரையிலும் கூட்ட நா. 37 - 2 விநாடி வரும்.

இதனுல் சூரிய உதயத்திலிருந்து 37 நாழிகை 2 விநாடியில் சாயன மேஷம் முதல் சாயன விருச்சிகம் வரையிலுமுள்ள ராசிகள் உதயமாகி விடுகின்றன என்றும் இதற்குமேல் அடுத்த இராசியாகிய சாயன தனுசு ராசி உதயமாகின்றது என்றும் ஏற்படுகின்றது. மேலே கொடுத்துள்ள12இராசிகளின் சாயன இராசிமான சங்கியைப் பார்த்தால் சாயன தனுசு ராசியின் சங்கியை 5 நாழிகை 32 விநாடியாகும். அதாவது சாயன தனுசு ராசி ஜெனனதினத்தில் சூரிய உதயாதி நாழிகை 37-2 விநாடிக்கு உதயமாக ஆரம்பித்து அதற்கு மேல் 5 நாழிகை 32 விநாடியில் முழுவதும் உதயமாகிவிடுகின்றது. அதாவது 37 நாழிகை-2 விநாடியில் உதயமாக ஆரம்பித்து அத்துடன் 5 நாழிகை-32 விநாடி கூட்ட வருகின்ற 42 நாழிகை-34 விநாடியில் முழுவதும் உதயமாகிவிடுகின்றது. இதையே சாயன தனுசுராசி ஜெனன தினத்தில் சூரிய உதயாதி 37 நாழிகை-2 விநாடி முதல் சூரிய உதயாதி நாழிகை 42-34 விநாடி வரையிலும் உதயமாகின்றதென்று இன்னெரு விதமாகச் சொல்வது வழக்கம். ஆகையால் நமக்குத் தேவையான ஜெனன காலமாகிய 37 நாழிகை 19 விநாடிக்கு சாயன தனுசு ராசி உதயமாகின்றதென்று ஏற்படுகின்றது. பிறகு ஜெனன காலமாகிய 37 நாழிகை-19 விநாடியில் சாயன தனுசு ராசியில் எவ்வளவு உதயமானது என்பதைக் கணிக்க வேண்டியது. சாயன தனுசு ராசி 37 நாழிகை-2 விநாடியில் உதயமாவதால், 37 நாழிகை 19 விநாடி வரையில் அந்த சாயன தனுசு ராசி உதயமாகி 0 நாழிகை-17 விநாடி ஆகின்றது. இந்த 0நாழிகை 17 விநாடியைத் தான் ஜெனன காலத்தில் சாயன தனுசு ராசியில் செல்லான நாழிகை விநாடி என்று சொல்லுவது வழக்கம். சாயன

தனுசு ராசியின் சங்கியையாகிய 5 நாழிகை-32 விநாடியை விநாடி யாக்க 332 விநாடி வரும். இராசியின் பிரமாணமாகிய 30 பாகை யைக் கலையாக்க 1800 கலைவரும் சாயன தனுசுராசியில் செல்லான 0 நாழிகை-17 விநாடியை விநாடியாக மாற்ற 17 விநாடி வரும். இராசிப்பிரமாணமாகிய 1800யைச் செல்லான விநாடியாகிய 17 ஆல் பெருக்கி இராசியின் சங்கியையாகிய 332 ஆல் வகுக்க வரு கின்ற ஈவு கலை ஆகும். இப்படி வகுக்க 92 கலை வரும். இந்தப் பாகையைக் கலையாக மாற்ற 1 பாகை-32 கலைவரும். இந்த 1 பாகை 32 கலைதான் ஜெனன காலத்தில் சாயன தனுசு ராசியில் உதய மான அல்லது செல்லான பாகம் ஆகும். பிறகு 12வது வாக்கியத் தைப் பார்த்தால் தனுசு இராசி ஆரம்பத்திற்கு ஸ்புடம் 240 பாகை0 கலை என்று ஏற்படும். இத்துடன் அந்த ராசியில் செல்லான 1 பாகை 32 கலையைக் கூட்ட 241 பாகை-32 கலைவரும், ஆகையால் ஜெனன காலத்தில் சாயன தனுசு ராசியில் செல்லான பாகத்தின் ஸ்புடம் 241 பாகை-32 கலை ஆகும். இதிலிருந்து ஜெனன காலத்தில் அயனும்சமாகிய 22 பாகை-42 கலையைக் கழிக்க 218 பாகை-50 கலை வரும். இந்த 218 பாகை-50 கலைதான் ஜெனன காலத்தில் ஜென்ம லக்கினத்தின் நிராயன ஸ்புடம் ஆகும்.

மறுபடியும் 12வது வாக்கியத்தைப் பார்த்தால் 218 பாகை-50 கலைக்கு விருச்சிக ராசி என்று ஏற்படுவது மன்றி 218 பாகை-50 கலையிலிருந்து விருச்சிகராசி ஆரம்பமாகிய 210 பாகை-0 கலையைக் கழிக்க வருகின்ற 18 பாகை 50 கலை இந்த விருச்சிக ராசியில் செல் லானது என்றும் ஏற்படும். ஆகையால் ஜெனன காலத்தில் ஜென்ம உதய லக்கினம் அல்லது இலக்கினம் விருச்சிகம் என்றும். அதில் 18 பாகை50கலை செல்லான தென்றும், ஜென்ம உதய லக்கினத்தின் அல் லது ஜென்ம லக்கினத்தின் ஸ்புடம் 218 பாகை-50 கலை என்றும் ஏற் படும். இந்தவழி பொதுவழி. இந்த வழியை எப்போதும் உபயோகிக்க வும். இலக்கினம் முக்கியமானதாலும் அதைச் சரியாய்க்கணிப்பது அவ சியமானதாலும் அதைக்கணிக்கும் விதத்தைப்பற்றி இங்கு விவரமா கச் சொல்ல வேண்டியது அவசியம் என்று ஏற்பட்டதாலும் கூடிய

மட்டும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு விவரமாக இலக்கினம் கணிக்கும் வழி சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் கூறியதே அடிக்கடி கூறப்படுகின்ற குற்றம் இருந்தால் அது மன்னிக்கத்தக்கதாகும். இன்னம் அதிக துல்லியமாக லக்கினம் கணிக்க ஒரு வழி உண்டு. அதற்கு வான சாஸ்திரம் தெரியவேண்டி இருக்கின்றது. ஆனல் நாம் மேலே உபயோகித்த வழியால் நமக்குத் தேவையான வரையில் துல்லியமாக கணிக்கக்கூடுமாதலால் அந்த வழியே நமக்கு போதுமானது என்று அறியவும்.

7. *ஜெனன காலத்தில் ஓரை கணிக்க:-* ஜென்ம வாரம் சனிக்கிழமை, ஜெனன நாழிகை 3-விநாடி 12½க்குக் கணிக்க:-32(4) வது வாக்கியத்தில் 2வது வரிசை எண்ணிற்கு நேராய் 2½ நாழிகை முதல் 5 நாழிகை வரையிலும் சனிக்கிழமை காலத்தில் குரு ஓராதிபதி என்று போட்டிருக்கின்றது. ஆகையால் ஜெனனதினத்தில் 3 நாழிகை 12½ விநாடிக்கு குரு ஓராதிபதி ஆகின்றர். ஆகையால் ஜெனனம் குரு ஓரையில் நேர்ந்தது என்று அறியவும்.

சப்த வர்க்கச் சக்கிரங்கள்

பிறகு நாம் சப்தவர்க்கம் என்கிற 1 இராசி, 2 நவாம்சம், 3 திரேகாணம், 4 துவாதசாம்சம், 5 ஓரை, 6 திரிம்சாம்சம், 7 சப்தமாம்சம் ஆகிய இவைகளைப் போடுவோம், இதற்கு ஜெனன காலத்தில் நவக்கிரக ஸ்புடங்களும் ஜென்ம லக்கின ஸ்புடமும் தெரிய வேண்டும். இவைகளை நாம் முந்தியே கணித்து வைத்திருப்பதால் இவைகளை இங்கு அடியிற்கண்டபடி எடுத்து எழுதுவோம்.

ஜெனன காலத்தில் கிரகநிலை

கிரகத்தின் பெயர்	ஸ்புடம் பாகை - கலை	கிரகத்தின் பெயர்	ஸ்புடம் பாகை - கலை
சூரியன்	167 - 2	சுக்கிரன்	204 - 32
சந்திரன்	118 - 10	சனி	230 - 27
செவ்வாய்	206 - 30	இராகு	102 - 17
புதன்	191 - 52	கேது	282 - 17
குரு	28 - 17 வக்ரி	இலக்கினம்	184 - 48

(1) *இராசி அல்லது இராசிச் சக்கிரம் போட :-* சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2 கலை ஆகும். 12-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒரு முறை படித்துவிட்டு 12-வது வாக்கியத்தைப் பார்த்தால், சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2 கலையானல் சூரியன் கன்னியில் இருப்பதாக ஏற்படும். ஆகையால் சூரியனைக் கன்னியாராசியில் போடவேண்டியது. இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தையும் இராசிகளில் அமைக்க இங்கு காட்டியபடி இராசிச்சக்கிரம் ஏற்படும்.

	குரு		
	இராசி சக்கிரம்		ரா. சங்.
கே			
	சனி	அ.சு.பு.ல.	சூ

1-வது கட்டம்

குறிப்பு :– இந்த கட்டத்தில் கிரகங்கள் இராசிகளில் இருக்கும் வரிசைக் கிரமமாகப் போடப்பட்டிருக்கின்றன. அதாவது கடக ராசியில் முதலில் இராகுவும் அதற்குப் பின் சந்திரனும் இருப்பதால் இராகுவை முதலில் போட்டு அதன்பின் சந்திரனைப் போட்டிருக்கின்றது. இவ்விதமாகவே துலாராசியில் முதலில் இலக்கினமும், அதற்கு பின் புதனும், அதற்குப்பின் சுக்கிரனும், அதற்குப்பின் அங்காரகனும் இருப்பதாக அவைகளின் ஸ்புடத்தைப் பார்த்தால் தெரிவதால் அந்த வரிசையாக அவைகள் துலாராசியில் போடப்பட்டிருக்கின்றன. இவ்விதமாகக் கிரகங்களை இராசிச்சக்கரத்தில் போடுவோமானல் இராசிச்சக்கரத்தைப் பார்த்தவுடனே கிரக வரிசை நன்ருய்ப் புலப்படும் என்ற அபிப்பிராயம்.

சந்	கே	சு.அ.	
	நவாம்சை சக்கிரம்		
சனி, பு			
குரு	ல	ரா	சூ

2-வது கட்டம்

(2) *நவாம்சம் அல்லது நவாம்சை சக்கிரம் போட:-* சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2 கலை ஆகும். 13-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒரு முறை படித்துவிட்டு 13-வது வாக்கியத்தைப்பார்த்தால் சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2கலை ஆனல் சூரியன் மிதுன நவாம் சையில் இருப்பதாக ஏற்படும். ஆகையால் சூரியனை நவாம்சை சக்கிரத்தில் மிதுனத்தில் போட வேண்டியது. இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தையும் நவாம்சை சக்கிரத்தில் அடைக்க இங்கு காட்டியபடி நவாம்சை சக்கிரம் ஏற்படும்.

சந்		கே	சு-அ
பு	திரேகாண சக்கிரம்		சனி
சூ			
குரு	ரா	ல	

3-வது கட்டம்

(3) திரேகாணம் அல்லது திரேகாணச் சக்கிரம் போட:- சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2கலை ஆகும். 14-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒரு முறை வாசித்து விட்டு 14-வது வாக்கியத்தைப் பார்த்தால் சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2 கலை ஆனால் சூரியன் மகரத்திரேகாணத்தில் இருப்பதாக ஏற்படும். ஆகையால் சூரியனைத் திரேகாணச் சக்கிரத்தில் மகரத்தில் போடவேண்டியது. இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தையும் திரேகாணச் சக்கிரத்தில் அடைக்க இங்கு காட்டிய படித் திரே காணச் சக்கிரம் ஏற்படும்.

குரு-சு		கே	சந்
பு	துவாதசாம்ச சக்கிரம்		சு-சனி
			அ
	ல-ரா		

4-வது கட்டம்

(4) துவாதசாம்சம் அல்லது துவாதசாம்ச சக்கிரம் போட: சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2 கலை ஆகும். 15-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒருமுறை வாசித்து விட்டு 15-வது வாக்கியத்தைப் பார்த்தால் சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2 கலை ஆனால் சூரியன் மீனத்துவாதசாம்சத்தில் இருப்பதாக ஏற்படும். ஆகையால் சூரியனைத் துவாதசாம்சச் சக்கரத்தில் மீனத்தில் போடவேண்டியது. 'இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தையும் துவாதசாம்சச் சக்கிரத்தில் அடைக்க இங்கு காட்டியபடி துவாதசாம்சச் சக்கிரம் ஏற்படும்.

(5) ஓரை அல்லது ஓராதிபதி அறிய :-சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2 கலை ஆகும். 16-வது வாக்கியத்தை உபயோகப்

படுத்தும் வழியை இங்கு ஒரு முறை வாசித்துவிட்டு 16-வது வாக்கியத்தைப் பார்த்தால் சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2 கலை ஆனால் சூரியனுக்குச் சூரியனே ஓராதிபதியாக வருகின்றார் என்று ஏற்படும். இவ்விதமே ஒவ்வொரு கிரகத்திற்கும் ஓராதிபதி பார்க்க அடியிற்கண்டபடி ஓராதிபதி வருவார்கள்.

ஓரை

கிரகங்கள்	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி	ரா	கே	லக்கினம்
ஓராதிபதி	சூ	சூ	சந்	சூ	சந்	சந்	சூ	சந்	சந்	சூ

5-வது கட்டம்

இந்த 5வது கட்டத்தால் சூரியனுக்கு சூரியனும், சந்திரனுக்குச் சூரியனும், செவ்வாய்க்குச் சந்திரனும், புதனுக்குச் சூரியனும், குருவிற்குச் சந்திரனும், சுக்கிரனுக்குச் சந்திரனும், சனிக்குச் சூரியனும், ராகு கேதுகளுக்குச் சந்திரனும், லக்கினத்திற்குச் சூரியனும், ஓராதிபதி என்று அறியவும். குருவிற்குச் சந்திரன் ஓராதிபதி என்று சொல்வதற்குப்பதிலாக குரு சந்திரனுடைய ஓரையில் இருக்கின்றதென்று சொல்லலாம். எல்லாக் கிரகங்களுக்கும் சூரியன் அல்லது சந்திரன் ஓராதிபதியாக வருவார்கள் என்று அறியவும்.

6. திரிம்சாம்சம் அல்லது திரிம்சாம்சாதிபதி அறிய:-

சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2கலை ஆகும் 17வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒரு முறை வாசித்துவிட்டு 17வது வாக்கியத்தைப் பார்த்தால் சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2கலை ஆனால் சூரியனுக்குக் குரு திரிம்சாம் சாதிபதியாக வருகின்றார் என்று ஏற்படும். இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்திற்கும் திரிம்சாம்சாதிபதி பார்க்க அடியிற்கண்டபடி திரிம்சாம்சாதிபதிகள் வருவரர்கள்.

திரிம்சாம்சம்

கிரகங்கள்	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி	ரா	கே	லக்கினம்
திரிம்சாம் சாதிபதி	குரு	அ	சு	குரு	சு	பு	சனி	குரு	குரு	அ

6-வது கட்டம்

ரா-சு	அ		சூ
	சப்தமாம்சச் சக்கிரம்		சந்
பு	ல	குரு	சனி-கே

7வது கட்டம்

7. *சப்தமாம்சம் அல்லது சப்தமாம்சச் சக்கிரம் போட:-* சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2கலை ஆகும். 18வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒருமுறை வாசித்து விட்டு 18வது வாக்கியத்தைப் பார்த்தால் சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை-2கலை ஆனால் சூரியன் மிதுன சப்தமாம்சத்தில் இருப்பதாக ஏற்படும். ஆகையால் சூரியனை சப்தமாம்சச் சக்கிரத்தில் மிதுனத்தில் போட வேண்டியது. இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தையும் சப்தமாம்சச் சக்கிரத்தில் அடைக்க இங்கு காட்டிய சப்தமாம்சச் சக்கிரம் ஏற்படும்.

8. *பாவச் சக்கிரம் போட:-* பாவச் சக்கிரம் என்றால் என்னவென்பதைப்பற்றியும் அதைப்போடும் வழியையும் 9வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதை இங்கு ஒருமுறை படிக்கவும். இந்த ஜாதகருடைய பாவச் சக்கிரத்தைப் போடும் வழியை உதாரணமாக 9வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தில் கணித்துக் காட்டியிருப்பதால் அதன் பிரகாரம் இந்த ஜாதகருடைய பாவ ஸ்புடங்கள் அடியிற்கண்டபடி ஆகும்.

பாவஸ்புடம்

பாவம்	ஸ்புடம் பாகை-கலை	பாவம்	ஸ்புடம் பாகை-கலை
1-வது பாவம்	184-48	7-வது பாவம்	4-48
2-வது பாவம்	214-58	8-வது பாவம்	34-58
3-வது பாவம்	245-8	9-வது பாவம்	65-8
4-வது பாவம்	275-18	10-வது பாவம்	95-18
5-வது பாவம்	305-8	11-வது பாவம்	125-8
6-வது பாவம்	334-58	12-வது பாவம்	154-58

யாதாயினுமொரு பாவஸ்புடத்திற்கும் அதற்கு அடுத்த பாவஸ்புடத்திற்கும், மத்தியைத் தெரிவிக்கின்ற ஸ்புடமே அடுத்த பாவத்தின் ஆரம்பமும், முந்தின பாவத்தின் முடிவும் ஆகும். உதாரணமாக 2வது பாவத்தின் ஸ்புடம் 214 பாகை-58 கலையும், 3-வது பாவத்தின் ஸ்புடம் 245 பாகை-8 கலையும் ஆகும். இவ்விரண்டு ஸ்புடத்திற்கும் மத்தியைத் தெரிவிக்கின்ற ஸ்புடம் பாகை 230-3 கலை ஆகும். (230 பாகை-3 கலை என்பது 214 பாகை – 5 கலையையும் 245 பாகை-8 கலையையுங்கூட்டி இரண்டால் வகுக்க வரும். அல்லது 245 பாகை-8 கலையிலிருந்து 214 பாகை-5 கலையைக் கழிக்க வருகின்ற 30 பாகை – 10 கலையை இரண்டால் வகுக்க வருகின்ற 15 பாகை-5 கலையை முந்திவந்த 214 பாகை 58 கலையுடன் கூட்ட 230 பாகை – 3 கலைவரும்). இந்த 230 பாகை —3 கலை என்பது 2-வது பாவத்தின் முடிவும் 3-வது பாவத்தின் ஆரம்பமுமாகும். இந்த மத்தியாகிய 230 பாகை-3 கலை ''பாவசந்தி'' என்று சொல்லப்படும். மேற்சொல்லியபடி 3-வது பாவமாகிய 245 பாகை-8கலைக்கும் 4-வதுபாவமாகிய 275 பாகை-18 கலைக்கும், மத்தியாகிய 260 பாகை-13-கலை 3-வது பாவத்தின் முடிவும் 4-வது பாவத்தின் ஆரம்பமும் ஆகும். ஆகையால் 3-வது பாவத்தின் ஆரம்ப ஸ்பு

டம் பாகை 230 — 3 கலையும், 3-வது பாவத்தின் முடிவு ஸ்புடம் பாகை 260 — 13 கலையும், 3-வது பாவத்தின் ஸ்புடம் பாகை 245 — 8 கலையும் ஆகும். ஒரு பாவஸ்புடத்திற்கு முந்தி இருக்கின்ற சந்ததிக்கு அந்த பாவத்தின் ''ஆரம்பசந்தி'' என்றும், ஒரு பாவஸ்புடத்தின் பிந்தி இருக்கின்ற சந்திக்கு அந்த பாவத்தின் ''முடிவு சந்தி'' என்றும் பெயர். உதாரணமாக 3-வது பாவமாகிய245பாகை-8 கலைக்குமுந்தி இருக்கின்ற சந்தியாகிய பாகை 230 — 3 கலைக்கு 3-வது பாவத்தின் ஆரம்பசந்தி என்று பெயர். பிந்திமிருக்கின்ற சந்தியாகிய பாகை 260 - 13 கலைக்கு 3-வது பாவத்தின் முடிவு சந்தி என்று பெயர். சந்தி அல்லது பாவசந்தி என்பது ஒரு பாவமும், மற்றொரு பாவமும் சந்திக்கின்ற இடமாகும். இது இரண்டு பாவமும், சந்திக்குமிடமாதலால் இந்தவிடத்தில் எந்த பாவத்தினுடைய பலன்களும் கிடையாது. அதாவது இந்த இடத்தில் எந்த பாவத்தினுடைய பலமும் பூஜ்ஜியமாகும். ஆகையால் ''பாவசந்தி'' என்றால் பாவபலம் பூஜ்ஜியமாகவிருக்கும் இடம் என்பதாம். ஒரு பாவ ஸ்புடத்திற்கு முந்தி ஆரம்பசந்தி என்கிற முந்திசந்தியும், பிந்தி முடிவு சந்தி என்கிற பிந்தி சந்தியும் இருப்பதால், ஆரம்ப சந்தியிலிருந்து அந்த பாவத்தின் பலம் அதிகப்பட்டுக்கொண்டேவந்து கடைசியாக பாவ ஸ்புடத்தண்டை முழுபலம் அடைந்து, பிறகு பாவ ஸ்புடத்தண்டையிருந்து குறைந்து கொண்டே வந்து கடைசியாக முடிவு சந்தி என்ற பின் சந்தியில் பூஜ்ஜியத்தை அடையும். ஆகையால் ஒரு பாவ ஸ்புடம் என்பது அந்த பாவத்தின் முழுபலம் உள்ள இடம் என்பதாம். இதை நன்றாய்க் கவனிக்கவேண்டியது. இது பின்னால் இன்னம் விவரமாகச் சொல்லப்படும். (34-வது வாக்கியம் பார்க்கவும்)

இந்த ஜாதகருக்குப் பாவச்சக்கிரம் கீழே போட்டிருப்பதை நன்றாய்க்கவனிக்கவும். லக்கின ஸ்புடமே 1-வது பாவ ஸ்புடமாகும். இந்த சக்கிரத்தில் 1-வது பாவத்தை முதலில் போட்டு இருக்கின்றது. இந்த பாவசக்கிரத்தில் கண்ட வீடுகளை இராசிச்சக்கிரத்தினுடைய இராசிகள் என்று கருதக்கூடாது. முதலில் ஒராவது பாவத்தைச்சக்கிர ஆரம்பத்தில் போட்டிருப்பதால் 1-வது பாவம் இருக்கின்ற இடம் மேஷராசி என்று கருதக்கூடாது. உண்மையிலே 1-வது பாவத்தின் ஆரம்ப ஸ்புடத்தையும், முடிவு ஸ்புடத்தையுங் கவனிக்

கும்போது 1-வது பாவம் என்பது கன்னியா ராசியிலும், துலா ராசியிலும் இருப்பதாக ஏற்படும். ஆகையால் கன்னி, துலாராசியாதிபதிகளாகிய புதன் சுக்கிரன் ஆகிய இவ்விரண்டு கிரகங்களும், 1-வது பாவத்திற்குடைய அதிபதிகள் அல்லது 1-வது பாவாதிபதிகள் ஆவார்கள். ஒரு பாவம் ஒரு இராசியிலும், இரண்டு இராசியிலும், அல்லது மூன்று இராசியிலும் இருக்ககூடுமாதலால் ஒருபாவத்திற்கு ஒரு கிரகம், அல்லது இரண்டு கிரகம், அல்லது மூன்று கிரகம், பாவாதிபதிகளாக இருக்கக்கூடும் என்று அறிய வேண்டியது. 1 முதல் 12 பாவங்களுக்கும் வரிசையாக ஒன்று முதல் 12 எண்கள் வரிசையாக பிராக்கட்டில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கிரகத்தின் ஸ்புடம் எந்த பாவத்தில் இருக்கின்றதோ அந்தபாவத்தில் அதாவது அந்த பாவ வீட்டில் அந்த கிரகத்தைப் போடவேண்டியது. உதாரணமாக சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை—2 கலையானதாலும், 12 வது பாவம் 140 பாகை-3 கலை முதல் 169 பாகை—53 கலை வரையிலும் இருப்பதாலும் சூரியனை 12-வது பாவத்தில் போட்டிருக்கிறது. இராசிச்சக்கிரத்தில் சூரியன் லக்கினத்தில் இருந்தபோதிலும் பாவச்சக்கிரத்தில் 12-வது பாவத்தில் இருப்பதாலும், பலன் சொல்வதற்குக் கிரகங்களின் நிலைமையைக் கவனிக்கும்போது பாவச்சக்கிர நிலையைக்கவனிப்பது அவசியமாதலாலும், சூரியன் லக்கினத்தில் இருப்பதாகக் கருதாமல் 12-வது பாவத்தில் இருப்பதாகக் கருதி 12-வது பாவ பலனைச்சொல்லவேண்டும். பாவச்சக்கிரம் போடாவிட்டால், சூரியன் லக்கின பாவத்தின் பலனைப் பார்க்க வேண்டியதாகும். அப்படிப் பார்ப்பதால் பலன் முழுவதும் தவறிப்போவதற்குச் சந்தேகமே கிடையாது. தற்கால ஜோதிடர்களில் பெரும் பான்மையோர் பாவச்சக்கிரம் போடாமல் பலனைச்சொல்வதால் ஜாதக பலர பலன்கள் தவறிப்போகின்றன.

மேலும் சூரியனுக்குச் சொன்ன பிரகாரம் மற்ற கிரகங்களையும் பாவங்களில் போட அவைகள் இந்த பாவச்சக்கிரத்தில் கண்டபடி இருப்பதாகத் தெரியவரும்.

சூ (36) 154-58 (12) (13) 169-53	ல (14) 184-48 பு (1) (15) 199-53	க (16) 214-58 அ (2) (17) 230-3	சனி (3) (18) 245-8 (19) 260-13
(35) 140-3 சந் (34) 125 8 (11)			கே (4) (20) 275-18 (21) 290-13
(33) 110-13 ராகு (32) 95-18 (10)	பாவச் சக்கிரம்		(5) (22) 305-8 (23) 320-3
(31) 80-13 (30) 65-8 (9)	(29) 50-3 கு (28) 34-58 (8)	(27) 19-53 (26) 4-48 (7)	(25) 349-53 (6) (24) 334-58

குறிப்பு :—இந்த பாவச்சக்கிரத்தின் விவரம் அடியிற் கண்டபடி ஆகும்.

(1) 1வது பாவம் பாகை 169—53 கலை முதல் பாகை 199—53 கலை வரையிலும்.

(2)	2-வது	199 - 53	230 - 3
(3)	3-வது	230 - 3	260 - 13
(4)	4-வது	260 - 13	290 - 13
(5)	5-வது	290 - 13	320 - 3
(6)	6-வது	320 - 3	349 - 53
(7)	7-வது	349 - 53	19 - 58
(8)	8-வது	19 - 58	50 - 3
(9)	9-வது	50 - 3	80 - 13

(10)	10-வது	80 - 13	110 - 13
(11)	11-வது	110 - 13	140 - 3
(12)	12-வது	140 - 3	169 - 53

(14), (16), (18), (20), (22), (24), (26), (28), (30), (32), (34), (36), இந்த நெம்பர்களுடைய பாகை - கலைகள் 25வது பக்கத்தில் கட்டமாகக் காட்டியுள்ள பாவஸ்புடத்தில் கண்டிவிளபடி அந்தந்த பாவத்தின் ஸ்புடமாகும். இந்த இடத்தில்தான் அந்தந்த பாவத்தின் பலம் முழு பலமாகும்.

(13), (15), (17), (19), (21), (23), (25), (27), (29), (31), (33), (35) இந்த நெம்பர்களுடைய பாகை - கலைகள் மேலே (1) முதல் (12) நெம்பர்களில் சொல்லியபடி முந்திய பாவத்தின் முடிவு ஸ்புடத்தையும் பிந்திய பாவத்தின் ஆரம்ப ஸ்புடத்தையும் தெரிவிக்கும். இந்த இடங்களில் எந்த பாவத்தின் பலமும் பூஜ்ஜிய மாகும். இவ்விடங்களுக்குப் பாவசந்தி என்று பெயர்.

கிரகங்களின் ஷட்வர்க்கப்பலம் அறிய

இது வரையிலும் ஜாதகம் சரியாய்க் கணிக்கவேண்டிய விதி யைப்பற்றியும் வழியைப்பற்றியும், சப்தவர்க்கங்கள்போடும் வழி யைப் பற்றியும் கவனித்தோம். ஜாதகபலாபலன்களை அறியவேண்டு மானால் கிரகங்களுடைய பலத்தை முதலில் அறியவேண்டியது அவசியமானதால், இனிமேல் கிரகங்களின் பலத்தை அல்லது வலிவைக் கவனிக்க வேண்டிய முறைகளைப்பற்றி பேசுவோம்.

(1) கிரகங்களின் திருக்பலம் அல்லது பார்வையின் அளவு அறிய :—

19-வது வாக்கியத்தையும் 20-வது வாக்கியத்தையும் உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒருமுறை நன்றாய் வாசிக்க வேண்டியது. சூரியன் குருவைப்பார்க்கும் பார்வையின் அளவை யும், குரு சூரியனைப்பார்க்கும் பார்வையின் அளவையும், உதாரண மாகக் கணித்து காட்டி இருக்கின்றது. இவ்விதமாகவே எல்லாக் கிரகங்களுக்கும் ஒன்றுக்கொன்றைப் பார்த்துக்கொள்ளும் பார்வையின் அளவைக் கணிக்க வேண்டியது. இவ்விதமாகக் கிரகங்களின் பார்வையின் அளவை அல்லது திருக்பலத்தைக் கணிக்க அடியிற்கண்டபடி திருக்பலம் வரும் (குறிப்பு :-இராகு கேது ஆகிய இவ்விரண்டு கிரகங்களும் நீக்கி விடப்பட்டிருக்கின்றன).

கிரகதிருக்பலம் 8-வது கட்டம்

வரிசை எண்	பார்க்கும் கிரகம்	பார்க்கப்படும் கிரகங்கள்						
		குரு	சுக்கிரன்	புதன்	சந்திரன்	சூரியன்	செவ்வாய்	சனி
1	குரு	0	87	47	75	36	93	82
2	சுக்கிரன்	97	0	0	22	0	0	0
3	புதன்	87	0	0	12	0	0	7
4	சந்திரன்	25	68	48	0	16	72	57
5	கூட்ட சுபபலம்	209	155	95	109	52	165	146
6	சூரியன்	66	7	0	0	0	7	30
7	செவ்வாய்	100	0	0	23	0	0	0
8	சனி	27	0	0	63	10	0	0
9	கூட்ட பாபபலம்	193	7	0	86	10	7	30
10	நிகர சுபா அசுப பலம்	+16	+148	+95	+23	+42	+158	+116
11	சுபா அசுப பலம் 4ல்1 பங்கு	+4	+37	+24	+6	+11	+40	+29

மேலே காட்டியுள்ள கிரகதிருக்பலத்தைக் காட்டும் 8வது கட்டத்தை இங்கு விவரித்துச் சொல்லுவோம். வரிசை எண் 1க்கு நேராய் குரு விற்கு அடியில் பூஜ்யமும், சுக்கிரனுக்கு அடியிற் 87ம், புதனுக்கு அடியில் 47ம், சந்திரனுக்கு அடியில் 75ம், சூரியனுக்கு அடியில் 36ம் செவ்வாயிற்கு அடியில் 93ம், சனிக்கு அடியில் 82ம், போடப்பட்டி ருக்கின்றன. அதாவது குரு என்கிற கிரகம் தன்னை 100ல் பூஜ்ஜிய பங்கு பார்வையுடனும், சுக்கிரனை 100ல்87 பங்கு பார்வையுடனும், புதனை 100ல் 47 பங்கு பார்வையுடனும், சந்திரனை 100ல் 75 பங்கு பார்வையுடனும், சூரியனை 100ல்36 பங்கு பார்வையுடனும், செவ் வாயை 100ல்93 பங்கு பார்வையுடனும், சனியை 100ல்82 பங்கு பார்வையுடனும், பார்க்கின்றது என்று அர்த்தமாம். இப்படியே மற்ற வரிசை எண்களாகிய (2), (3), (4), (6), (7), (8) இவைகளுக்கு, எதிரில் உள்ள எண்களின் அர்த்தத்தை அறியவும் வரிசை எண் (5)க்கு நேராயுள்ள எண்கள் வரிசை எண்களாகிய (1), (2), (3), (4) இவைகளுக்கு எதிரிலுள்ள எண்களைக்கூட்ட வருகின்றஎண்களாகும் இந்த எண்களெல்லாம் மொத்த சுபபார்வையின் அளவைக் காட்டும் எண்களாகும். உதாரணமாக (5)வது வரிசை எண்ணிற்கு நேராய் குருவிற்கு அடியில் 209 என்று இருப்பதால் குருவிற்குச் சுபநடைய பார்வையின் அளவு 209 பங்கு என்று அர்த்தமாம். (100 பங்கு கொண்டது முழுபார்வையாகுமாதலால் 209 பங்கு என்றால் இரண்டு முழு பார்வையுடன் 100ல் 9 பங்கு பார்வை என்று அர்த்தங் கொள்ள வேண்டும்.) மேலும் (9)வது வரிசை எண்ணிற்கு நேரா யுள்ள எண்கள் வரிசை எண்களாகிய (6), (7), (8) இவைகளுக்கு எதிரிலுள்ள எண்களைக் கூட்ட வருகின்ற எண்களாகும். (9)வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள் எண்களெல்லாம் மொத்த அசுப பார்வையின் அளவைக்காட்டும் எண்களாகும் (10)வது வரிசை எண் ணிற்கு நேராயுள்ள எண்களெல்லாம் அந்தந்தகிரகத்தின் சுபபலத்தி லிருந்து பாவபலத்தைக் கழிக்க அல்லது பாபபலத்திலிருந்து சுப பலத்தைக் கழிக்கவருகின்ற நிகர சுபபலத்தை அல்லது பாபபலத் தைக் காட்டும் எண்களாகும். பாபபலத்தைவிட சுபபலம் அதிகமாய் இருந்தால் நிகரம்சுபபலமாகும். சுபபலத்தைவிடபாபபலம் அதிகமா யிருந்தால் நிகரம் பாபபலமாகும். நிகர சுபபலத்திற்கு + என்ற குறி

போடப்பட்டிருக்கின்றது. நிகர அசுபபலத்திற்கு-என்ற குறிபோடப் படும். உதாரணமாக (10)வது வரிசை எண்ணிற்குநேராய் குருவிற்கு அடியில் +16 என்று போடப்பட்டிருக்கின்றது. அதாவது குருவிற்கு மொத்த சுபபார்வையின் அளவாகிய209ல் இருந்து அதற்கு மொத்த அசுபபார்வையாகிய193யைக் கழிக்க நிகர சுபபார்வை100ல்16பங்கு ஆகும் என்பதாம். (11)வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்கள் (10)வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்களின் 4ல் ஒரு பங்கு ஆகும். உதாரணமாக (11)வது வரிசை எண்ணிற்கு நேராய் குருவிற்கு அடியில் +4 என்று போட்டிருக்கின்றது. அதாவது +4 என்பது(10)வது வரிசை எண்ணிற்கு நேராய் குருவிற்கு அடியிலுள்ள +16 என்ற எண்ணில் 4ல் ஒருபங்கு ஆகும். (10)வது வரிசை எண்ணிற்கு நேராய் சூரியனுக்கு அடியில் +42 என்ற எண் இருக்கின்றது. இந்த எண்ணில் 4ல் ஒருபங்கு +10½ ஆகும். கணிதத்தில் பாதியும் பாதிக்கு மேற்பட்டதையும் ஒன்ருக பாவிப்பதும், பாதிக்குட்பட்டதைத் தள்ளிவிடுவதும் சகஜமானதால் இந்த புத்தகத்தில் எவ்விடத்திலும் பாதியும் பாதிக்கு மேற்பட்டதையும் ஒன்ருக பாவித்தும், பாதிக்குட்பட்டதைத் தள்ளிவிடப்பட்டும் இருக்கின்றது. ஆகையால் மேலே சொல்லிய 10½யை 11ஆகப் பாவித்து +11 என்ற எண்ணை (11)வது வரிசை எண்ணிற்கு நேராய் சூரியனுக்கு அடியிற் போடப்பட்டிருக்கின்றது.

(2) *உச்சபலம் அறிய*:—21-வது வாக்கியத்தை உபயோகப் படுத்தும் வழியை இங்கு ஒருமுறை வாசித்து அதன் பிரகாரம் கிரகங்களின் உச்சபலத்தைக் கணிக்க கிரகங்களின் உச்சபலம் அடியிற் கண்டபடி ஆகும்.

கிரக உச்சபலம் 9-வது கட்டம்

கிரகம்	உச்சபலம்	கிரகம்	உச்சபலம்	கிரகம்	உச்சபலம்
சூரியன்	13	புதன்	85	சனி	83
சந்திரன்	53	குரு	63		
செவ்வாய்	49	சுக்கிரன்	15		

இந்த 9-வது கட்டத்தில் சூரியனுக்கு எதிரில் 13 என்று போட்டிருக்கின்றது. ஆகையால் சூரியனுக்கு உச்சபலம் 100-ல் 13 பங்கு என்பதாம். சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை 2 கலே. இதை முழு பாகையாக மாற்ற 167 பாகை ஆகும். 21-வது வாக்கியத்தில் 167 பாகைக்கு எதிரில் சூரியனுக்கு அடியில் 13 என்று போட்டிருப்பதால் சூரியனுடைய உச்ச பலம் 100-ல் 13 பங்கு ஆகுமென்று அறிய வேண்டியது. இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் உச்ச பலம் அறியவும்.

கேந்திராதி பலம் 10-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	கு.	சு.	ச.
கேந்திர பலம்	25	100	100	100	100	100	50

3. கேந்திராதி பலம் அறிய: 24-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒருமுறை வாசித்து அதன் பிரகாரம் கிரகங்களின் கேந்திர பலத்தைக் கணிக்க கிரகங்களின் கேந்திர பலமிங்கு கண்டபடி ஆகும். இந்த கட்டத்தில் சூரியனுக்கு எதிரில் 25 போட்டிருப்பதால் சூரியனுக்குக் கேந்திர பலம் 100-ல் 25 பங்கு என்பதாம். இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்குமறியவும்.

திரேகாண பலம். 11-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	கு.	சு.	ச.
திரேகாண பலம்	0	25	0	25	0	25	0

4. திரேஷ்காண அல்லது திரேகாண பலம் அறிய : 25-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒரு முறை வாசித்து அதன் பிரகாரம் கிரகங்களின் திரேகாண பலத்தைக் கணிக்க கிரகங்களின் திரேகாண பலமிங்கு கண்டபடி ஆகும்.

யுக்மாயுக்ம பலம் 12-வது கட்டம்

கிரகங்கள்	இராசி யுக்மா யுக்ம பலம்	நவாம்சை யுக்மாயுக்ம பலம்	கூட்டினால் மொத்த யுக்மா யுக்ம பலம்
சூரியன் —	0	25	25
சந்திரன் —	25	25	50
செவ்வாய் —	25	0	25
புதன் —	25	0	25
குரு —	25	25	50
சுக்கிரன் —	0	25	25
சனி —	0	0	0

5. *யுக்மாயுக்ம பலம் கணிக்க :-* 23-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை இங்கு ஒரு முறை படித்து விட்டு அதன் பிரகாரம் 1-வது, 2-வது கட்டங்களையும் பார்த்துவிட்டு யுக்மாயுக்ம பலம் கணிக்கக் கிரகங்களின் யுக்மாயுக்ம பலம் இங்கு கண்டபடி ஆகும்.

6. *சப்தவர்க்கஜ பலம் கணிக்க :-*22-வது வாக்கியத்திலும் 22-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்திலும் சொல்லியதை இங்கு ஒருமுறை முதலில் வாசிக்கவும். இவைகளை வாசித்தால் கிரகங்களின் தற்கால மித்துரு, சத்துரு, என்பதையும், நைசர்க்கிக மித்துரு, சத்துரு, சமம் என்பதையும் அவசியமாக முதலில் அறியவேண்டும் என்று ஏற்படும்.

*தற்கால மித்துரு, சத்துரு அறிய :-*22-வது வாக்கியத்தின் கீழ் 2-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள விதிப் பிரகாரம் இராசிச்

சக்கிரத்தில் கிரகங்களின் நிலையைக் கவனிக்க தற்கால மித்துரு, சத்துரு என்பது அடியிற்கண்ட கட்டத்தில்காட்டியதுபோல ஆகும்.

கிரகங்களின் தற்கால மித்துரு சத்துருவைக் காட்டும்

13-வது கட்டம்

வரிசை எண்	கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சுக்.	சனி
1	சூரியனுக்கு	—	மித்	மித்	மித்	சத்	மித்	மித்
2	சந்திரனுக்கு	மித்	—	மித்	மித்	மித்	மித்	சத்
3	செவ்வாய்க்கு	மித்	மித்	—	சத்	சத்	சத்	மித்
4	புதனுக்கு	மித்	மித்	சத்	—	சத்	சத்	மித்
5	குருவுக்கு	சத்	மித்	சத்	சத்	—	சத்	சத்
6	சுக்கிரனுக்கு	மித்	மித்	சத்	சத்	சத்	—	மித்
7	சனிக்கு	மித்	சத்	மித்	மித்	சத்	மித்	—

இந்த கட்டத்தில் 1-வது வரிசை எண்ணிற்கு நேராய் சூரியனுக்கு எதிரில் சந்திரனுக்கு அடியில் "மித்" என்று போட்டிருப்பதால் சூரியனுக்குச் சந்திரன் தற்கால மித்துரு என்று அறியவும். இவ் விதமாகவே மற்றவையும் அறியவும்.

கிரகங்களின் நைசர்க்கிக மித்துரு, சத்துரு, சமம் என்பதை 22-வது வாக்கியத்தின் கீழே (3)-வது அயிட்டத்தில் கொடுத்திருக்கின்றது. இது நிலையானது. இதை இங்கு எடுத்து எழுத அடியிற் கண்டபடி ஆகும்

கிரகங்களுக்கு நைசர்க்கிக நட்பு (மித்துரு), சமம், பகை (சத்துரு) இவைகளைக் காட்டும்

14-வது கட்டம்

வரிசை எண்	கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சுக்.	சனி
1	சூரியனுக்கு	—	ந	ந	ச	ந	ப	ப
2	சந்திரனுக்கு	ந	—	ச	ந	ச	ச	ச
3	செவ்வாய்க்கு	ந	ந	—	ப	ந	ச	ச
4	புதனுக்கு	ந	ப	ச	—	ச	ந	ச
5	குருவுக்கு	ந	ந	ந	ப	—	ப	ச
6	சுக்கிரனுக்கு	ப	ப	ச	ந	ச	—	ந
7	சனிக்கு	ப	ப	ப	ந	ச	ந	—

சுலபமாக அடிக்கடி பார்க்கவேண்டியதற்காக இந்த நைசர்க்கிக மித்துரு, சத்துரு, சமம் இவைகளைக் காட்டும் கட்டத்தை இங்கு எடுத்து கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் தற்கால மித்துரு, சத்துருவையும், நைசர்க்கிக மித்துரு, சத்துரு, சமம் ஆகிய இவ்வகைளையும் ஒன்றாய்ச் சேர்த்து 22-வது வாக்கியம் (4)-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள விதிப் பிரகாரம் பார்த்தால் இந்த ஜாதகருக்குக் கிரகங்கள் அடியிற்கண்ட பிரகாரம் அதிமித்துரு, மித்துரு, சமம், சத்துரு, அதிசத்துருவாகும் என்று அறியவும்.

இந்த ஜாதகத்தில் கிரகங்களின் அதிமித்துரு, மித்துரு, சமம், சத்துரு, அதிசத்துரு ஆகிய இவைகளைக் காட்டும்.

[1]15-வது கட்டம்

வரிசை எண்	கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சுக்.	சனி
1	சூ. க்கு	—	அ-மி	அ-மி	மி	சம	சம	சம
2	சந். ,,	அ-மி	—	மி	அ-மி	மி	மி	சத்
3	செ. ,,	அ-மி	அ-மி	—	அ-சத்	சம	சத்	மி
4	பு. ,,	அ-மி	சம	சத்	—	சத்	சம	மி
5	குரு ,,	சம	அ-மி	சம	அ-சத்	—	அ-சத்	சத்
6	சு. ,,	சம	சம	சத்	சம	சத்	—	அ-மி
7	சனி ,,	சம	அ-சத்	சம	அ-மி	சத்	அ-மி	—

குறிப்பு:—மி என்ருல் மித்துரு, அ-மி என்ருல் அதிமித்துரு, சத் என்ருல் சத்துரு, அ-சத் என்ருல் அதிசத்துரு, சம என்ருல் சமம் என்று அறியவும்.

1. இராசிச் சக்கிரத்திற்குக் கணித்து வரும் கட்டமே சப்த வர்க்கஜ பலத்திற்கும் உபயோகப்படும்.

மேல் கண்ட அதிமித்துரு, மித்துரு முதலியவைகளைக் காட்டும் கட்டத்தைப் போட்டுக் கொண்டால் சப்தவர்க்கஜ பலத்தை வெகு சுலபமாக 22-வது வாக்கியத்தின் கீழ் கொடுத்துள்ள (1)-வது அயிட்டத்தில் காட்டிய விதி பிரகாரம் கணிக்கலாம்.

இராசிவர்க்கஜ பலம் 16-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு	சனி
பலம்	25	50	6	13	13	50	13

(1) *இராசிவர்க்கஜ பலம் கணிக்க:* சூரியன் இராசிச் சக்கிரத்தில் கன்னியிலிருப்பதால், அந்த கன்னியா ராசிக்குடைய புதன் சூரியனுக்கு, மேல் கண்ட 15-வது கட்டத்தால் மித்துரு என்று ஏற்படுவதால் 22-வது வாக்கியத்தின் 1-வது அயிட்டத்தில் கண்ட விதி பிரகாரம் பலம் 25 அதாவது 100-ல் 25 பங்கு என்று ஏற்படுகின்றது. இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் போட 16-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

இங்கு சுக்கிரன் மூலத் திரிகோணத்திலில்லாமல் சுவ க்ஷேத்திரத்தில் இருப்பதால் சுக்கிரனுக்குப் பலம் 50.

நவாம்சவர்க்கஜ பலம் 17-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
நவாம்சவர்க்கஜ பலம்	25	25	6	25	50	50	50

2. *நவாம்சவர்க்கஜ பலம் கணிக்க :* சூரியன் நவாம்ச சக்கிரத்தில் மிதுனத்திலிருப்பதால் அந்த மிதுன ராசிக்குடைய புதன் சூரியனுக்கு மேல் கண்ட 15-வது கட்டத்தால் மித்துரு என்று ஏற்படுவதால், 22-வது வாக்கியத்தின் 1-வது அயிட்டத்தில் கண்ட விதி பிரகாரம் பலம் 25 அதாவது 100-ல் 25 பங்கு என்று ஏற்படுகின்றது. இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்குப் போட 17-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

திரேகாணவர்க்கஜ பலம் 18-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
திரேகாணவர்க்கஜ பலம்	13	25	3	25	50	13	3

(3) *திரேகாண வர்க்கஜ பலம் கணிக்க :* இதை நவாம்ச வர்க்கஜ பலம் கணித்ததுபோல் கணிக்க வேண்டியது. அப்படிக் கணிக்க இந்த 18-வது கட்டத்தில் கண்டதுபோல் திரேகாண வர்க்கஜ பலம் வரும்.

துவாதசாம்சவர்க்கஜ பலம் 19-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
துவாதசாம்சவர்க்கஜ பலம்	13	38	50	25	50	13	3

(4) *துவாதசாம்சவர்க்கஜ பலம் கணிக்க :* இதை நவாம்சவர்க்கஜ பலம் கணித்ததுபோல் கணிக்கவேண்டியது. அப்படிக் கணிக்க இந்த 19-வது கட்டத்தில் கண்டதுபோல் துவாதசாம்ச வர்க்கஜ பலம் வரும்.

சப்தமாம்சவர்க்கஜ பலம் 20-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
சப்தமாம்சவர்க்கஜ பலம	25	50	50	6	3	6	38

(5) *சப்தமாம்சவர்க்கஜ பலம் கணிக்க:* இதை நவாம்ச வர்க்கஜ பலம் கணித்ததுபோல கணிக்கவேண்டியது. அப்படிக் கணிக்க இந்த 20-வது கட்டத்தில் கண்டதுபோல் சப்தமாம்ச வர்க்கஜ பலம் வரும்.

ஓராவர்க்கஜ பலம் 21-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	அ	பு.	குரு	சு	சனி
ஓராவர்க்கஜ பலம்	50	38	38	38	38	13	13

(6) *ஓராவர்க்கஜ பலம் கணிக்க :* குருவிற்கு ஓரா பலம் கணிப்போம். குரு சந்திரனுடைய ஓரையில் இருப்பதாலும், அந்த சந்திரன் குருவிற்கு அதிமித்துரு என்று 15-வது கட்டத்தால் ஏற்படுவதாலும் 22-வது வாக்கியத்தின் கீழ் 1-வது அமிட்டத்தில் கொடுத்துள்ள விதி பிரகாரம் குருவிற்கு ஓராவர்க்கஜ பலம் 38 அதாவது 100-ல் 38 பங்கு என்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் கணிக்க 21-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

திரிம்சாம்சவர்க்கஜ பலம் 22-வது கட்டம்

கிரகங்கள்	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி
திரிம்சாம்சவர்க்கஜ பலம்	13	25	6	6	3	13	50

(7) *திரிம்சாம்சவர்க்கஜ பலம் கணிக்க:* இதை ஓராவர்க்கஜபலம் கணித்ததுபோல் கணிக்கவேண்டியது. அப்படிக் கணிக்க இந்த 22-வது கட்டத்தில் கண்டதுபோல் திரிம்சாம்சவர்க்கஜ பலம் வரும்.

இவ்விதமாக சப்தவர்க்கத்திற் சேர்ந்த ஒவ்வொரு வர்க்கத்திற்கும் கணிக்க வந்த பலத்தைக் கூட்ட வருகின்ற மொத்த பலம் சப்தவர்க்கஜ பலமாகும். இந்த சப்தவர்க்கஜ பலம் அடுத்த பக்கத்தில் கண்டபடி வரும்.

சப்தவர்க்கஜ பலம் 20-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	கு.	சு.	சனி	
இராசி வர்க்கம்	25	50	6	13	13	50	13	16-வது கட்டம் பார்க்கவும்
நவாம்சவர்க்கம்	25	25	6	25	50	50	50	17-வது கட்டம் பார்க்கவும்
திரேகாண வர்க்கம்	13	25	3	25	50	13	3	18-வது கட்டம் பார்க்கவும்
துவாதசாம்ச வர்க்கம்	13	38	50	25	50	13	3	19-வது கட்டம் பார்க்கவும்
சப்தமாம்ச வர்க்கம்	25	50	50	6	3	6	38	20-வது கட்டம் பார்க்கவும்
ஓராவர்க்கம்	50	38	38	38	38	13	13	21-வது கட்டம் பார்க்கவும்
திரிம்சாம்ச வர்க்கம்	13	25	6	6	3	13	50	22-வது கட்டம் பார்க்கவும்
கூட்ட வருகின்ற சப்த வர்க்கஜ பலம்	164	251	159	138	207	158	170	

மேலும் ஸ்தான பலம் அறிவதற்குத் தேவையான (1) கிரக உச்ச பலம் (2) கேந்திரபாதி பலம் (3) திரேகாண பலம் (4) யுக்மா யுக்ம பலம் (5) சப்தவர்க்கஜ பலம் ஆகிய இவ்வைந்து பலங்களையும் நாம் கணித்து வைத்திருப்பதால் இவைகளை ஒன்றுய்ச் சேர்த்துக் கூட்ட வருகின்ற பலம் ஸ்தான பலமாகும். இந்த ஸ்தான பலம் அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகங்களின் ஸ்தான பலம் 24-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி	
உச்சபலம்	13	53	49	85	63	15	83	9-வது கட்டம் பார்க்கவும்
கேந்திராதி பலம்	25	100	100	100	100	100	50	10-வது கட்டம் பார்க்கவும்
திரேகாண பலம்	0	25	0	25	0	25	0	11-வது கட்டம் பார்க்கவும்
யுக்மாயுக்ம பலம்	25	50	25	25	50	25	0	12-வது கட்டம் பார்க்கவும்
சப்தவர்க்கஜ பலம்	164	251	159	138	207	158	170	23-வது கட்டம் பார்க்கவும்
கூட்டவருகின்ற ஸ்தானபலம்	227	479	333	373	420	323	303	

(7) *காலபலம் கணிக்க* :- கால பலம் என்பது 7 அங்கங்களுடையது என்று 28-வது வாக்கியத்தைப் பார்க்கத் தெரியவரும். இந்த 7 அங்கங்களின் பெயர் (1) நத உன்னத பலம் (2) தினராத்திரி திரிபாக பலம் (3) வருஷபலம் (4) மாசபலம் (5) தினபலம் (6) ஓராதி பலம் (7) பட்சபலம் ஆகும். இந்த 7 வித பலங்களையும் கணிப்போம்.

(1) *நத உன்னதபலம் கணிக்க* : 28-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தை முதலில் இங்கு படிக்க வேண்டியது அவசியம், இந்த ஜாதகத்தின் ஜெனன நாழிகை 3 விநாடி 12½ ஆகும். ஜெனன தினத்தில் சூரியன் உச்சிக்குச் சூரிய உதயாதி 14 நாழிகை 45 விநாடிக்கு வந்தது. ஆகையால் 28-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தில் சொல்லிய உதாரணத்தைப் பார்க்கக் கிரகங்களின் நத உன்னதபலம் அடியிற்கண்டபடி ஆகும்.

நத உன்னத பலம் 25-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
நத உன்னத பலம்	60	40	40	100	60	60	40

தினராத்திரி திரிபாக பலம் 26-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
தினராத்திரி திரிபாகபலம்	0	0	0	100	100	0	0

(2) *தினராத்திரி திரிபாக பலம்* :-30-வது வாக்கியத்தையும், இந்த 30-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியையும் இங்கு ஒரு முறை படிக்கவும். இந்த ஜாதகத்தின் ஜெனன நாழிகை 3 விநாடி 12½ ஆகும். ஜெனன தினத்தில் அகசு 29 நாழிகை 30 விநாடி ஆகும். ஆகையால் 30-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்திற் சொல்லிய உதாரணத்தைப் பார்க்க கிரகங்களின் தினராத்திரி திரிபாகபலம் இங்கு கண்டபடி ஆகும்.

தினபலம் 27-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
தினபலம்	0	0	0	0	0	0	75

(3) *தினபலம் (அதாவது தினாதிபலம்) அறிய* :-32-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியை முதலில் இங்கு படிக்க வேண்டியது. இந்த ஜாதகருடைய ஜெனனம் 1869ஆம் அக்டோபர்மீ 2உ சனிக்கிழமை நேர்ந்தது. ஆகையால் இந்த 32-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தில் சொல்லிய உதாரணத்

தைப் பார்க்கச் சனி தினாதிபதி என்று ஏற்படும். தினாதிபதியாக வருகின்ற கிரகத்திற்கு தினபலம் 75 ஆனதாலும், மற்ற கிரகங்களுக்குத் தினபலம் பூஜ்ஜியமானதாலும் சனிக்குத் தினபலம் 75-ம் மற்ற கிரகங்களுக்கு பூஜ்ஜியமும் 27-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

மாதபலம் 28-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	அ	பு.	குரு	சு.	சனி
மாத பலம்	0	0	0	0	0	0	50

(4) *மாதபலம் (அதாவது மாதாதி பலம்) அறிய:* - 32-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியிற்சொல்லிய உதாரணத்தைப் பார்க்க இந்த ஜாதகர் ஜெனனமான தினத்திற்குச் சனி மாதாதிபதியாக வருவதால் மாதபலம் அந்த 28-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

வருஷபலம் 29-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
வருஷ பலம்	0	0	0	0	0	0	25

(5) *வருஷ பலம் (அதாவது வருஷாதி பலம்) அறிய :* 32-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியிற் சொல்லிய உதாரணத்தைப பார்க்க இந்த ஜாதகர் ஜெனனமான தினத்திற்குச் சனி வருஷாதிபதியாக வருவதால் வருஷபலம் இந்த 29-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

குறிப்பு :- இந்த ஜாதகத்திற்குச் சனி என்கிற ஒரு கிரகமே தினாதிபதியாகவும், மாதாதிபதியாகவும், வருஷாதிபதியாகவும் வருகின்றது. எல்லா ஜாதகத்திற்கும் ஒரே கிரகமே இவ்விதமாக வருஷாதிபதியாகவும், மாதாதிபதியாகவும், தினாதிபதியாகவும் வர வேண்டும் என்பது கிடையாது.

ஓராபலம் 30-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
ஓரா பலம்	0	0	0	0	100	0	0

(6) ஓராபலம் (அதாவது ஓராதிபலம்) அறிய :– 32 (4)-வது வாக்கியத்தையும், இந்த வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தையும் இங்கு ஒருமுறை படிக்கவும். இந்த ஜாதகர் சனிக்கிழமையில் சூரிய உதயாதி நாழிகை 3-12½ விநாடிக்கு ஜெனனமானதால் 32-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தில் ஓராதிபதி கணிக்கக் கொடுத்திருக்கும் உதாரணத்தைப் பார்க்கக் குரு ஓராதிபதியாக வருவார். ஓராதிபதியாக வருகின்ற கிரகத்திற்குப் பலம் 100-ம் மற்ற கிரகங்களுக்குப் பலம் பூஜ்ஜியமுமானபடியால் இந்த 30-வது கட்டத்தில் கண்டபடி ஓராபலம் வரும்.

பட்சபலம் 31-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
பட்ச பலம்	73	27	73	27	27	27	73

(7) பட்சபலம் அறிய : - 29-வது வாக்கியத்தில் சொல்லியதை இங்கு ஒரு முறை முதலில் படிக்கவேண்டியது. ஜெனன காலத்தில் சந்திரனுடைய ஸ்புடம் 118 பாகை 10 கலை என்றும், சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை 2 கலை என்றும் முன்னமே கணித்திருக்கின்றோம். சந்திரனுடைய ஸ்புடமாகிய 118 பாகை 10 கலையிலிருந்து சூரியனுடைய ஸ்புடமாகிய 167 பாகை 2 கலையைக் கழிக்க 311 பாகை 8 கலை வரும். (118-10 என்பது 167-2-யைவிட சிறியதாயிருப்பதால் 118-10-வுடன் 360-0 கூட்ட 478 பாகை 10 கலை வரும். இதில் இருந்து 167 பாகை 2 கலையைக் கழிக்க பாகை 311 கலை 8 மேற்கண்டபடி வரும்). 311 பாகை 2 கலையை முழு பாகையாக மாற்ற 311 பாகை வரும். பிறகு இந்த 29-வது வாக்கியத்தில் கொடுத்துள்ள உதாரணத்தைப் பார்க்க பட்சபலம் 30-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

மேலும் இப்போது கணிக்கப்பட்ட காலபலத்தின் 7 அங்கங்களையும் ஒன்றாய்க் கூட்ட காலபலம் அடியிற்கண்டபடி ஆகும்.

காலபலம் 32-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி	
நத உன்னத பலம்	60	40	40	100	60	60	40	25-வது கட்டம் பார்க்கவும்
தினராத்திரி திரிபாக பலம்	0	0	0	100	100	0	0	26-வது கட்டம் பார்க்கவும்
தினபலம்	0	0	0	0	0	0	75	27-வது கட்டம் பார்க்கவும்
மாத பலம்	0	0	0	0	0	0	50	28-வது கட்டம் பார்க்கவும்
வருஷ பலம்	0	0	0	0	0	0	25	29-வது கட்டம் பார்க்கவும்
ஒரா பலம்	0	0	0	0	100	0	0	30-வது கட்டம் பார்க்கவும்
பட்ச பலம்	73	27	73	27	27	27	73	31-வது கட்டம் பார்க்கவும்
கூட்ட வருகின்ற காலபலம்	133	67	113	227	287	87	263	

(8) அயனபலம் கனிக்க :- அயனபலம் கிரகங்களின் உத்திர அல்லது தட்சணகிராந்தியை அனுசரித்தது. ஆகையால் இந்த ஜாதகருக்கு ஜெனன காலத்தில் கிரகங்களின் கிராந்தி தெரிய வேண்டியது அவசியம். கிராந்தியைக் கணிப்பது கொஞ்சம் சிரம

மானதாலும், வானசாஸ்திரந் தெரிந்திருக்கவேண்டியது அவசிய மானதாலும், ''நாடிகல் ஆல்மநெக்'' Nautical Almanac என்ற புத்தகத்தில் ஒவ்வொரு தினத்திற்கும், ஒவ்வொரு கிரகத்திற்கும் கிராந்தியைக் கணித்து கொடுத்திருப்பதாலும் அல்லது என்னுடைய ''சித்தாந்த இராஜ சிரோன் மணி என்னும் இராஜ ஜோதிட கணிதத்தில்'' கிராந்தியை கணிக்கும் விதம் கொடுத்திருப்பதாலும் இந்த புத்தகத்திலிருந்து தேவையான ஜெனன காலத்திற்குக் கிரகங்களின் கிராந்தியை அறிய வேண்டியது. இந்த கிராந்தி கன்ணாம் என்னும் புத்தகம் 1883-ம் ஆண்டிலிருந்து 1945 வரையில் 63 வருடங்களுக்கு) எம்மிடம் கிடைக்கும்.

ஜெனன காலத்தில் கிரகங்களின் கிராந்தி

கிரகங்கள்	கிராந்து		
	பாகை—கலை		முழு பாகை
சூரியன்	3 - 32 தட்	(அல்லது)	4 தட்
சந்திரன்	13 - 4 உத்.	,,	13 உத்.
செவ்வாய்	17 - 50 தட்.	,,	18 தட்.
புதன்	15 - 54 தட்.	,,	16 தட்.
குரு	16 - 32 உத்	,,	17 உத்.
சுக்கிரன்	17 - 42 தட்.	,,	18 தட்.
சனி	20 - 55 தட்.	,,	21 தட்.

குறிப்பு :- உத் என்றல் உத்திரகிராந்தி என்றும், தட் என்றல் தட்சணகிர்ராந்தி என்றும் அர்த்தம்.

அயனபலம் 33-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	அ	பு	குரு	சு	சனி
அயனபலம்	42	23	12	83	85	12	94

அயன பலம் அறிய :- 31-வது வாக்கியத்தை உபயோகப் படுத்தும் வழியை இங்கு ஒரு முறை வாசிக்கவும். இந்த வழியிற் சொல்லிய உதாரணம் பிரகாரம் கணிக்க அயனபலம் இந்த 33-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

நைசர்க்கிக பலம் 34-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சுக்.	சனி
நைசர்க்கிக பலம்	100	86	29	43	57	71	14

(9) நைசர்க்கிக பலம் அறிய :- இது 27-வது வாக்கியத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது நிலையானதும் எல்லா ஜாதகங்களுக்கும் பொதுவானதுமானதால் இந்த வாக்கியத்தை அப்படியே இங்கு எடுத்து எழுத நைசர்க்கிக பலம் இந்த 34-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

திக்குப் பலம் 35-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சுக்.	சனி
திக் பலம்	60	13	38	96	13	60	26

(10) திக்குப் பலம் கணிக்க :- 26-வது வாக்கியத்தை இங்கு ஒரு முறை முதலில் வாசித்துவிட்டு அதில் கொடுத்துள்ள உதாரணம் பிரகாரம் திக்குப் பலம் கணிக்க இந்த ஜாதகருக்குத் திக்குப் பலம் இந்த 35-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

ஜேஷ்டா பலம் 36-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
ஜேஷ்டாபலம்	42	27	55	87	85	59	58

(11) **ஜேஷ்டா பலம் கணிக்க** :- சூரியனுடைய ஜேஷ்டாபலம் என்பது சூரியனுடைய அயனபலமேயானதால் 33-வது கட்டத்தைப் பார்க்க சூரியனுடைய ஜேஷ்டா பலம் 42 என்று ஏற்படும். சந்திரனுடைய ஜேஷ்டா பலம் சந்திரனுடைய பட்சபலமேயானதால் 31-வது கட்டத்தைப் பார்க்கச் சந்திரனுடைய ஜேஷ்டா பலம் 27 என்று ஏற்படும். மற்ற கிரகங்களின் ஜேஷ்டா பலத்தை 33-வது வாக்கியத்தில் சொல்லிய வழி பிரகாரம் கணிக்க வேண்டியது. செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்களின் ஜேஷ்டா பலத்தை முறையே 5-வது, 6-வது, 2-வது, 4-வது, 1-வது உதாரணங்களாக 33-வது வாக்கியத்தின் கீழ் கணித்துக் காட்டப் பட்டிருப்பதால் இவைகளின் ஜேஷ்டா பலம் இந்த 36-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

(12) **கிரக யுத்தபலம்** :- 41-வது வாக்கியத்திற்கும், 42-வது வாக்கியத்திற்கும் இடையில் கொடுத்துள்ள கிரக யுத்தபலம் கணிக்கும் விதம் பிரகாரம் கணிக்க வேண்டியது. இந்த உதாரண ஜாதகத்திற்குக் கிரகயுத்தம் நேரிடாததால் கிரகயுத்த பலம் பூஜ்ஜியமாகும்.

சட்பலம் கணிக்க :-சட்பலம் என்பது ஆறுவித பலன்கள் ஒன்ருய் சேர்ந்த பலம் என்பதாம். (1-ஏ) ஸ்தானபலம், (1-பி) சுப அசுப பலத்தில் 4ல் ஒரு பங்கு, (2) காலபலம், (3) அயனபலம், கிரகயுத்த பலம் (4) நைசர்க்கிகபலம், (5) திக்குப்பலம், (6) ஜேஷ்டாபலம் ஆகிய இந்த ஆறு பலன்களேயுங்கூட்ட வருவது சட்பலமாகும். இந்த சட்பலம் அடுத்த பக்கத்தில் 37வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

[குறிப்பு :- ஆயுளே மாத்திரம் கணிக்க வேண்டுமானுல், ஆயுள் கணிதத்தில் 38-வது கட்டம் முதல் 56வது கட்டம் வரையிலுமுள்ள வைகள் உபயோகப்படுத்தாமல் இருப்பதால், இவைகளைக் கணிப்பதை நிறுத்திவிட்டு ஆயுளைக் கணிக்க 42-வது வாக்கியத்தி லிருந்து ஆரம்பிக்க வேண்டியது.]

சட்பலம் 37-வது கட்டம்

வரிசை எண்		சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி	
(1எ)	ஸ்தான பலம்	227	479	333	373	420	323	303	24-வது கட்டம் பார்க்கவும்
2	காலபலம்	133	67	113	227	287	87	263	32-வது கட்டம் பார்க்கவும்
3	அயன பலம்	42	23	12	83	85	12	94	33-வது கட்டம் பார்க்கவும்
4	நைசர்க்கிக பலம்	100	86	29	43	57	71	14	34-வது கட்டம் பார்க்கவும்
5	திக்குப் பலம்	60	13	38	96	13	60	26	35-வது கட்டம் பார்க்கவும்
6	ஜேஷ்டா பலம்	42	27	55	87	85	59	58	36-வது கட்டம் பார்க்கவும்
7	கூட்ட	604	695	580	909	947	612	758	வரிசை எண் 1(எ)முதல் 6 வரை கூட்ட
(1பி)	சுபா அசுப பலத்தில் 4ல் 1பங்கு	+11	+6	+40	+24	+4	+37	+29	8-வது கட்டம் 11-வது வரிசை எண் பார்
8	கூட்ட	615	701	620	933	951	649	787	7-ம் (1பி) வரிசை எண்களைக் கூட்ட
9	கிரகயுத்த பலம்	0	0	10	0	0	0	0	
10	சட்பலம்	615	701	620	933	951	649	787	8-ம், 9-ம் சேர்க்க

இந்த 37-வது கட்டத்தில் 8-வது வரிசை எண்ணிக்கு நேராய் சூரியனுக்கு அடியில் 615 என்று போட்டிருப்பது சூரியனுக்கு சட்பலம் 615 பங்கு என்று அர்த்தமாகும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் சட்பலம் அறியவும்.

குறிப்பு :- துவாதச பாவங்களில் எந்த பாவத்திலாகிலும் பல கிரகங்கள் இருந்தால், எந்த கிரகத்திற்குச் சட்பலம் அதிகமாக விருக்கின்றதோ அந்த கிரகத்தின் சுபா அசுப பலம்தான் அந்த பாவத்திற்கு உண்டாகும். கிரகங்கள் முழு பலம், சமபலம், சம பலத்திற்குத் தாழ்ந்த பலம் உடையன என்பதை அடியிற்கண்ட எண்களால் ஜாதகபாரிஜாதம் 2-வது அத்தியாயம் 40-வது சுலோகத்தில் சொல்லியபடி அறியவும்.

கிரகங்கள்.		ருபம்.		நமது கணிதப்படி பங்கு
சூரியன்	...	6½	...	650
சந்திரன்	...	6	...	600
செவ்வாய்	...	5	...	500
புதன்	...	7	...	700
குரு	...	6½	...	650
சுக்கிரன்	...	5½	...	550
சனி	...	5		500

நமது கணிதப்படி 1 ருபம் என்பது 100 பங்கு ஆகும். சூரியனுக்குச் சட்பலம் 650 பங்கு வந்தால் சூரியன் சமபலம் உடையது. 650-க்கு மேற்பட்டால் பூர்ணபலம் உடையது. 650க்-குக் குறைந்தால் சமபலத்திற்குத் தாழ்ந்த பலம் உடையது. இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் அவைகளுக்கும் எதிரில் கொடுத்துள்ள எண்களைக் கொண்டு அக்கிரகங்கள் சமபல முடையனவா, பூர்ணபலம் உடையனவா, சமபலத்திற்குத் தாழ்ந்த பலமுடையனவாவென்று அறியவும்.

(12) பாவதிருக் பலம் கணிக்க :-19-வது, 20-வது வாக்கியங்களை உபயோகப்படுத்தும் விதத்தில் பாவதிருக்பலம் கணிக்க என்ற பாகத்தை இங்கு ஒரு முறை வாசிக்கவும். இந்த 19-வது, 20-வது வாக்கியங்களை உபயோகப்படுத்தும் விதத்தில் சொல்லிய உதாரணம் பிரகாரம் பாவதிருக் பலம் கணிக்க பாவதிருக் பலம் அடியிற் கண்டபடி ஆகும்.

பாவதிருக் பலம் 38-வது கட்டம்

வரிசை எண்	பார்க்குங் கிரகம்.	பார்க்கப்படும் பாவங்கள்.					
		1	2	3	4	5	6
1	குரு	23	94	81	82	19	0
2	சுக்கிரன்	0	0	9	43	66	33
3	புதன்	0	0	19	63	56	12
4	சந்திரன்	37	70	38	23	94	69
5	கூட்டசுப பலம்	60	164	147	211	235	114
6	சூரியன்	0	15	55	60	20	60
7	செவ்வாய்	0	0	7	47	84	37
8	சனி	0	0	0	50	88	62
9	கூட்ட பாபபலம்	0	15	62	157	192	159
10	நிகர சுபா அசுபபலம்	+60	+149	+85	+54	+43	–45
11	4-ம் ஒரு பங்கு	+15	+37	+21	+14	+11	–11

பாவதிருக் பலம் 38-வது கட்டம் தொடர்ச்சி

வரிசை எண்	பார்க்குங் கிரகம்	பார்க்கப்படும் பாவங்கள் 7	8	9	10	11	12
1	குரு	0	0	6	37	82	76
2	சுக்கிரன்	33	92	66	41	16	0
3	புதன்	77	81	56	31	6	0
4	சந்திரன்	14	19	0	0	0	6
5	கூட்ட சுப பலம்	154	192	128	109	104	82
6	சூரியன்	85	60	35	10	0	0
7	செவ்வாய்	27	100	84	42	17	0
8	சனி	27	50	87	62	75	50
9	கூட்ட பாப பலம்	139	210	206	114	92	50
10	நிகர சுபா அசுப பலம்	+15	—18	−78	−5	+12	+32
11	4-ல் ஒரு பங்கு	+4	−5	−20	−1	+3	+8

இந்த 38-வது கட்டத்தில் தலைப்பில் 1 முதல் 12 வரையிலும் போடப்பட்டிருக்கின்ற எண்கள் 12 பாவங்களைத் தெரிவிக்கும்.

1-வது வரிசை எண்ணிற்கு நேராய் குருவிற்கு எதிரில் 1-வது பாவத்திற்கு அடியில் 23 என்ற எண் போட்டிருப்பதால் குரு 1-வது பாவத்தை 23 அதாவது 100-ல் 23 பங்கு பலத்துடன் பார்க்கின்றது என்று அறியவேண்டியது. 5-வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்கள் 1, 2, 3, 4 என்ற வரிசை எண்களுக்கு நேராயுள்ள எண்களைக் கூட்ட வருகின்ற எண்களாகும். 9-வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்கள் 6, 7, 8 என்ற வரிசை எண்களுக்கு நேராயுள்ள எண்களைக் கூட்ட வருகின்ற எண்களாகும். மேலும் 5-வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்கள் அந்தந்த பாவத்தைச் சுபக் கிரகங்கள் பார்க்கின்ற பார்வையைக் கூட்ட வருகின்ற மொத்த சுப ''பாவ திருக் பலத்தைக்'' காட்டும் எண்களாகும். 9-வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்கள் அந்தந்த பாவத்தைப் பாபக் கிரகங்கள் பார்க்கின்ற பார்வையைக் கூட்ட வருகின்ற மொத்த அசுப ''பாவ திருக் பலத்தை''க் காட்டும் எண்களாகும். 10-வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்கள் 5-வது, 9-வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்களில் பெரிய எண்ணிலிருந்து சிறிய எண்ணைக் கழிக்க வருகின்ற எண்களாகும். இந்த எண்கள் பெரியதாயிருக்கின்ற சுப பல எண்ணிலிருந்து சிறியதாயிருக்கின்ற அசுப பல எண்ணைக் கழிக்க வருகின்ற நிகர சுப பலத்தை அல்லது பெரியதாயிருக்கின்ற அசுப பல எண்ணிலிருந்து சிறியதாயிருக்கின்ற சுப பல எண்ணைக் கழிக்க வருகின்ற நிகர அசுப பலத்தைக் காட்டும் எண்களாகும். நிகர பலம் சுப பலமானால் கூட்டல் குறியாகிய + என்ற இக் குறியையும், அசுப பலமானால் கழித்தல் குறியாகிய − என்ற இக்குறியையும் 10-வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்களுக்கு முந்தி போட்டிருக்கின்றது. 11-வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்கள் 10-வது வரிசை எண்ணிற்கு நேராயுள்ள எண்களில் நான்கில் ஒரு பாகமாகும்.

(13) பாவாதி பலம் கணிக்க :- பாவாதி பலத்தை 34-வது வாக்கியம் (1)வது அயிட்டத்தில் சொல்லிய பிரகாரம் கணிக்க வேண்டியது. 7-வது கட்டத்திற்குப் பிறகு கொடுத்துள்ள பாவச் சக்கிரத்தையும், 37-வது கட்டத்தில் கொடுத்துள்ள ஷட்பலத்தையும் அனுசரித்து பாவாதி பலம் கணிக்க வேண்டியது. (1)-வது பாவத்தின் பாவாதி பலத்தை 34-வது வாக்கியத்தின் (1)-வது அயிட்டத்தில் உதாரணமாகக் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

ஆகையால் (1)-வது பாவத்தின் பாவாதி பலம் அந்த உதாரணத்தில் கணித்த பிரகாரம் 747 பங்கு ஆகும். மற்ற பாவங்களுக்கு இந்த உதாரணம் பிரகாரம் கணிக்க இந்த 39-வது கட்டத்தில் காட்டிய படி பாவாதிபதி பலம் வரும்.

பாவாதி பலம் 39-வது கட்டம்

பாவம்	1	2	3	4	5	6	7	8	9	10	11	12
பாவாதிபதி பலம்	745	633	847	840	783	891	732	643	844	776	640	822

இந்த 39-வது கட்டத்தில் 1 என்ற எண்ணிற்கு அடியில் 745 என்ற எண்ணிருப்பது 1-வது பாவத்தின் பாவாதிபதி பலம் 745 பங்கு என்று தெரிவிக்கும். இப்படியே மற்றவைகளும் தெரிவிக்கும்.

(14) புதகுரு பாவபலம் அல்லது புதகுரு பாவதிருக் பலம் போட: முதலில் 34-வது வாக்கியத்தில் 3-வது அமிட்டத்தில் சொல்லியதைப் படிக்கவும். பிறகு புதனுடைய பாவதிருக் பலத்தையுங் குருவினுடைய பாவதிருக்பலத்தையும் முன்னமே கணித்து 38-வது கட்டத்தில் போட்டிருப்பதால் அவைகளை எடுத்து அடியிற்கண்ட படி போட்டு கூட்ட வருவது புதகுரு பாவபலமாகும்.

புதகுரு பாவ பலம் 40-வது கட்டம்

வரிசை எண்	பார்க்கும் கிரகம்	பார்க்கப்படும் பாவங்கள் 1	2	3	4	5	6
1	புதன்	0	0	19	63	56	12
2	குரு	23	94	81	82	19	0
3	புதகுரு பாவபலம்	23	94	100	145	75	12

புதகுரு பாவ பலம் 40-வது கட்டம் தொடர்ச்சி

வரிசை எண்	பார்க்குங் கிரகம்	பார்க்கப்படும் பாவங்கள்						
		7	8	9	10	11	12	
1	புதன்	77	81	56	31	6	0	38-வது கட்டம் 3-வது வரிசை எண் பார்க்க
2	குரு	0	0	6	37	82	76	38-வது கட்டம் 1-வது வரிசை எண் பார்க்க
3	புத குரு பாவ பலம்	77	81	62	68	88	76	1,2 வரிசை எண்களைக் கூட்ட

(15) பாவதிக்குப் பலம் கணிக்க :-முதலில் பாவதிக்குப் பலத்தைக் கணிக்கும் வழி 34-வது வாக்கியத்தில் 4-வது அயிட்டத்தில் சொல்லியிருப்பதால் இதை முதலில் படிக்கவும். இந்த ஜாதகத்திற்கு 1-வது, 2-வது, 3-வது பாவங்களின் திக்குப் பலத்தை 34-வது வாக்கியத்தின் 4-வது அயிட்டத்தில் உதாரணங்களாக கணித்துக் காட்டியிருக்கின்றது. இவ்விதமாகக் கணிக்க 12 பாவங்களின் திக்குப் பலம் அடியிற்கண்டபடி ஆகும்.

பாவ திக்குப் பலம் 41-வது கட்டம்

பாவம்	1	2	3	4	5	6	7	8	9	10	11	12
திக்குபலம்	100	17	67	0	33	67	50	67	33	0	83	83

(16) பாவபலம் கணிக்க :-பாவபலம் என்பது (1) பாவதிருக் பலம், (2) பாவாதிபதி பலம், (3) புதகுரு பாவதிருக் பலம், (4) பாவதிக்குப் பலம் ஆகிய இந்நான்கையுங் கூட்ட வரும் பாவபலம் அடுத்த பக்கத்தில் 42-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

பாவ பலம் 42-வது கட்டம்

வரிசை என்	பாவம்	1	2	3	4	5	6
1	பாவதிருக் பலம்	+15	+37	+21	+14	+11	−11
2	பாவாதி பதி பலம்	745	633	847	840	783	891
3	புதகுரு பாவ பலம்	23	94	100	145	75	12
4	பாவதிக்கு பலம்	100	17	67	0	33	67
5	பாவபலம்	883	781	1,035	999	902	959

பாவ பலம் 42-வது கட்டம் தொடர்ச்சி

வரிசை என்	பாவம்	7	8	9	10	11	12	
1	பாவ திருக் பலம்	+4	−5	−20	−1	+3	+8	38-வது கட்டம் பார்க்கவும்
2	பாவாதிபதி பலம்	732	643	844	776	640	822	39-வது கட்டம் பார்க்கவும்
3	புதகுரு பாவபலம்	77	81	62	68	88	76	40-வது கட்டம் பார்க்கவும்
4	பாவதிக்கு பலம்	50	67	33	0	83	83	41-வது கட்டம் பார்க்கவும்
5	பாவபலம்	863	786	919	843	814	989	கூட்ட

குறிப்பு:-1-வது வரிசை எண்ணுக்கு நேராய் சிலவிடங்களில் கூட்டல் குறியாகிய + என்ற குறியையும், சிலவிடங்களில் கழித்தல் குறியாகிய – என்ற குறியையும் போட்டிருக்கின்றது. கூட்டல் குறி சுப பலத்தையும், கழித்தல் குறி அசுப பலத்தையும் தெரிவிக்கும். மற்ற எண்களுக்கு ஒரு குறியும் போடாமல் இருக்கின்றது. இப்படி எண்களுக்கு முன் ஒரு குறியும் போடாமலிருந்தால் அத்த எண் களுக்கு முன்+என்ற கூட்டல் குறி இருப்பதாக எப்போதும் பாவிக்கவேண்டியது. ஆகையால் 1-வது வரிசை எண் முதல் 4-வது வரிசை எண் வரையிலுமுள்ள வரிசை எண்களுக்கு எதிரிலுள்ள எண்களைக் கூட்ட 5-வது வரிசை எண்ணுக்கு நேராயுள்ள எண்கள் வரும். கூட்டும்போது கூட்டல் குறியுள்ள எண்களையும், ஒரு குறி யும் இல்லாமல் இருக்கின்ற (அதாவது கூட்டல் குறியை முன்னே உடையதாக மேலே சொல்லப்பட்ட) எண்களையும் ஒன்றுக் கூட்ட வருகின்ற கூட்டல் எண்ணில் இருந்து கழித்தல் குறியையுடைய எண்ணைக் கழிக்கவேண்டியது. உதாரணமாக 6-வது பாவத்தின் கீழ் 1-வது வரிசை எண்ணுக்கு நேராய் 11-ம், 2-வது வரிசை எண்ணுக்கு நேராய் 891-ம், 3-வது வரிசை எண்ணுக்கு நேராய் 12-ம், 4-வது வரிசை எண்ணுக்கு நேராய் 67-ம் இருப்பதால், ஒரு குறியும் இல்லாமலிருக்கின்ற எண்களாகிய 891, 12, 67 இவைகளைக் கூட்ட 970 வரும். இந்த 970-ல் இருந்து கழித்தல் குறியையுடைய 11-யைக் கழிக்க 959 வரும். இந்த 959 தான் 6-வது பாவத்தின் கீழ் 5-வது வரிசை எண்ணுக்கு நேராய்ப் போடப்பட்டுள்ளது.

இஷ்ட பலம் 43 வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
இஷ்ட லாபம்	23	38	52	86	73	30	69

(17) இஷ்ட பலம் கணிக்க :-35-வது வாக்கியத்தை இங்கு வாசிக்கவும். சூரியனுடைய இஷ்டபலத்தை 35-வது வாக்கியத்தில் இஷ்டபலம் கணிக்கும் விதத்தில் உதாரணமாகக் கணித்து காட்டப்

பட்டிருக்கிறது. இவ்விதமாகவேஎல்லா கிரகங்களுக்கும் கணிக்க இஷ்டபலம் இந்த 43-வது கட்டத்தில் கண்டபடி ஆகும். (உச்ச பலமும், ஜேஷ்டா பலமும் 9-வது, 36-வது கட்டங்களில் கொடுக்கப் பட்டுள)

கஷ்டபலம் 44-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
கஷ்ட பலம்	71	59	48	41	24	59	27

(18) கஷ்டபலம் கணிக்க :-35-வது வாக்கியத்தை இங்கு வாசிக்கவும். சூரியனுடைய கஷ்டபலத்தை 35-வது வாக்கியத்தில் கஷ்டபலம் கணிக்கும் விதத்தில் உதாரணமாகக் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்விதமாகவே எல்லா கிரகங்களுக்கும் கணிக்க கஷ்டபலம் இந்த 44-வது கட்டத்தில் கண்டபடி ஆகும். (உச்சபலமும், ஜேஷ்டா பலமும் 9-வது 36-வது கட்டங்களில் கொடுக்கப்பட்டுள).

இஷ்டசட்பலம் 45-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	செ	பு.	குரு	சு.	சனி
இஷ்டசட் பலம்	141	266	322	802	694	195	543

(19) இஷ்ட சட்பலம் கணிக்க :-36வது வாக்கியத்தை இங்கு வாசிக்கவும். சூரியனுடைய இஷ்டசட்பலத்தை 36-வது வாக்கியதில் உதாரணமாகக் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்வித மாகவே எல்லா கிரகங்களுக்கும் கணிக்க இஷ்டசட்பலம் இந்த 45-வது கட்டத்தில் கண்டபடி ஆகும். (சட்பலமும், இஷ்டபலமும் 37-வது, 43-வது கட்டங்களில் கொடுக்கப்பட்டுள)

கஷ்டசட் பலம் 46-வது கட்டம்

கிரகம்	சூ.	சந்.	அ.	பு.	குரு	சு.	சனி
கஷ்டசட் பலம்	437	414	298	383	228	383	212

(20) கஷ்டசட்பலம் கணிக்க :-36-வது வாக்கியத்தை இங்கு வாசிக்கவும். சூரியனுடைய கஷ்டசட்பலத்தை 36-வது வாக்கியத்தில் உதாரணமாகக் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்விதமாகவே எல்லாகிரகங்களுக்குக் கணிக்க கஷ்டசட்பலம் இந்த 46-வது கட்டத்தில் கண்டபடி ஆகும். (சட்பலமும், கஷ்ட பலமும் 37-வது, 44-வது கட்டங்களில் கொடுக்கப்பட்டுள).

(21) இஷ்டகிரக திருக்பலம் கணிக்க :-இங்கு முதலில் 37-வது வாக்கியத்தில் சொல்லியதை வாசிக்கவும். கிரக திருக்பலத்தை முன்னமே கணித்து 8-வது கட்டத்தில் போட்டிருக்கின்றது. இஷ்ட பலத்தை 43-வது கட்டத்தில் கொடுத்திருக்கிறது. இந்த கட்டத்தின் உதவியால் 37-வது வாக்கியத்தில் 1-வது அமிட்டத்தில் சொல்லியது போல கணிக்க வேண்டியது. சூரியனுடைய இஷ்ட கிரக திருக் பலத்தை 37-வது வாக்கியத்தில் 1-வது அமிட்டத்தில் உதாரண மாகக் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் கணிக்க இஷ்டகிரக திருக்பலம் கீழே 47-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

இஷ்டகிரக திருக் பலம் 47-வது கட்டம்

வரிசை எண்	பார்க்கும் கிரகம்	பார்க்கப்படும் கிரகங்கள்.						
		சூ.	சந்.	செ.	புத.	குரு.	சு.	சனி
1	சூரியன்	0	0	2	0	15	2	7
2	சந்திரன்	6	0	27	18	10	26	22
3	செவ்வாய்	0	12	0	0	52	0	0
4	புதன்	0	10	0	0	75	0	6
5	குரு	26	55	68	34	0	64	60
6	சுக்கிரன்	0	7	0	0	29	0	0
7	சனி	7	43	0	0	19	0	0

(22) கஷ்டதிருக்பலம் கணிக்க :-இங்கு முதலில் 37-வது வாக்கியத்தில் சொல்லியதை வாசிக்கவும். கிரக திருக்பலத்தை முன்னமே கணித்து 8-வது கட்டத்தில் போட்டிருக்கின்றது. கஷ்ட பலத்தை 44-வது கட்டத்தில் கொடுத்திருக்கின்றது. இந்த கட்டத்தின் உதவியால் 37-வது வாக்கியத்தில் 2-வது அயிட்டத்தில் சொல்லியதுபோல கணிக்கவேண்டியது. சூரியனுடைய கஷ்ட திருக்பலத்தை 36-வது வாக்கியத்தில் 2-வது அயிட்டத்தில் உதாரணமாகக் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்வித மாகவே மற்ற கிரகங்களுக்கும் கணிக்க கஷ்டதிருக்பலம் கீழே 48-வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

கஷ்டதிருக் பலம் 48-வது கட்டம்

வரிசை எண்	பார்க்குங் கிரகம்	பார்க்கப்படும் கிரகங்கள்.						
		சூ.	சந்.	செ.	பு.	குரு	சுக்.	சனி
1	சூரியன்	0	0	5	0	47	5	21
2	சந்திரன்	9	0	42	28	15	40	34
3	செவ்வாய்	0	1	0	0	48	0	0
4	புதன்	0	2	0	0	12	0	1
5	குரு	9	18	22	11	0	21	20
6	சுக்கிரன்	0	13	0	0	57	0	0
7	சனி	3	17	0	0	7	0	0

(23) இஷ்ட கஷ்ட சப்தவர்க்கஜபலம் கணிக்க :-முதலில் 38-வது வாக்கியத்தில் சொல்லியதைப் படித்துவிட்டு அதில் சொல்லிய பிரகாரம் இஷ்ட கஷ்ட சப்தவர்க்கஜ பலத்தைக் கணிக்க வேண்டியது. இஷ்ட கஷ்ட இராசி வர்க்க பலத்தையும், இஷ்ட கஷ்ட நவாம்ச வர்க்க பலத்தையும் உதாரணமாக 38-வது வாக்கியத்தில் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்விதமாகவே மற்ற வர்க்கங்களுக்கும் கணிக்க அடியில் 49-வது, 50-வது கட்டங்களில் கண்டபடி இஷ்ட கஷ்ட சப்தவர்க்கஜ பலம் வரும்.

இஷ்ட சப்த வர்க்கஜ பலம் 49-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
இஷ்ட ராசி வர்க்கம்	25	50	6	13	13	50	13
இஷ்ட நவாம்ச வர்க்கம்	13	13	3	13	25	25	25
இஷ்ட திரேகாண வர்க்கம்	7	13	2	13	25	7	2
இஷ்ட துவாதசாம்ச வர்க்கம்	7	19	25	13	25	7	2
இஷ்ட சப்தமாம்ச வர்க்கம்	13	25	25	3	2	3	19
இஷ்ட ஓரா வர்க்கம்	25	19	19	.9	19	7	7
இஷ்ட திரிம்சாம்ச வர்க்கம்	7	13	3	3	2	7	25
கூட்ட மொத்தம்	97	152	83	77	111	106	93

கஷ்ட சப்த வர்க்கஜ பலம் 50-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
கஷ்டராசி வர்க்கம்	75	50	94	87	87	50	87
கஷ்டநவாம்ச வர்க்கம்	37	37	47	37	25	25	25
கஷ்டதிரேகாண வர்க்கம்	43	37	48	37	·25	43	48
கஷ்டதுவாதசாம்ச வர்க்கம்	43	31	25	37	25	43	48
கஷ்ட சப்த்தமாம்ச வர்க்கம்	37	25	25	47	48	47	31
கஷ்ட ஹோராவர்க்கம்	25	31	31	31	31	43	43
கஷ்ட திரிம்சாம்ச வர்க்கம்	43	37	47	47	48	43	25
கூட்ட மொத்தம்	303	248	317	323	289	294	307

(24) சுப அசுப பங்க்தீ கணிக்க :-சுப அசுப பங்க்தீ என்றால் என்னவென்பதை தெரிந்துகொள்ளவும், இவைகளைக் கணிக்கவும் 39-வது வாக்கியத்தைப் படிக்கவும். சுப அசுப பங்க்தீகளை 39-வது வாக்கியத்தில் உதாரணமாகக் கணித்துக் காட்டப் பட்டிருக்கின்றது. அவைகள் அடியில் 51-வது, 52-வது கட்டங்களில் கண்டபடி ஆகும்.

சுப பங்க்தி 51-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
இராசி வர்க்க சுப பங்க்தி	24	38	21	19	28	27	23
நவாம்ச வர்க்க சுப பங்க்தி	12	19	11	10	14	14	12
திரேகாண வர்க்க சுப பங்க்தி	12	19	11	10	14	14	12
துவாதசாம்ச வர்க்க சுப பங்க்தி	12	19	11	10	14	14	12
சப்தமாம்ச வர்க்க சுப பங்க்தி	12	19	11	10	14	14	12
ஓரா வர்க்க சுப பங்க்தி	12	19	11	10	14	14	12
திரிம்சாம்ச வர்க்க சுப பங்க்தி	12	19	11	10	14	14	12

அசுப பங்க்தீ 52-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
ராசி வர்க்க அசுப பங்க்தீ	76	62	79	81	72	74	77
நவாம்ச வர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39
திரேகாண வர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39
துவாதசாம்ச வர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39
சப்தமாம்ச வர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39
ஒராவர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39
திரிம்சாம்ச வர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39

(25) சுப அசுப மத்திய பலம் கணிக்க:— முதலில் 40-வது வாக்கியத்தை இங்கு படிக்க வேண்டியது. இந்த 40-வது வாக்கியத்தில் காட்டிய உதாரணங்கள் பிரகாரம் கணிக்க சுப அசுப மத்திய பலம் அடியில் 53-வது, 54-வது கட்டங்களில் கண்டபடி ஆகும்.

சுப மத்திய பலம் 53-வது கட்டம்.

கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
இராசிவர்க்க சுபமத்திய பலம்	18	53	22	20	23	29	19
நவாம்ச வர்க்க சுப மத்திய பலம்	9	21	12	9	16	15	11
திரேகாண வர்க்க சுப மத்திய பலம்	12	21	8	9	16	11	18
துவாதசாம்ச வர்க்க சுப மத்திய பலம்	13	15	11	9	16	21	18
சப்தமாம்ச வர்க்க சுப மத்திய பலம்	9	29	9	11	15	16	9
ஓராவர்க்க சுப மத்திய பலம்	12	18	17	10	21	21	12
திரிம்சாம்ச வர்க்க சுப மத்திய பலம்	13	16	12	11	15	11	11
மொத்த சுப மத்திய பலம்	86	178	91	79	122	124	98

அசுப மத்திய பலம் 54-வது கட்டம்.

கிரகங்கள்.	சூ.	சந்.	செ.	பு.	குரு	சுக்.	சனி
இராசி வர்க்க அசுப மத்திய பலம்	245	154	232	238	228	218	244
நவாம்ச வர்க்க அசுப மத்திய பலம்	123	90	118	126	104	109	120
திரேகாண வர்க்க அசுப மத்திய பலம்	117	90	129	126	104	120	97
துவாதசாம்ச வர்க்க அசுப மத்திய பலம்	110	100	121	126	104	92	97
சப்தமாம்ச வர்க்க அசுப மத்திய பலம்	128	77	127	118	106	107	126
ஓராவர்க்க அசுப மத்திய பலம்	115	94	99	124	89	92	118
திரிம்சாம்ச வர்க்க அசுப மத்திய பலம்	110	98	118	118	106	120	120
மொத்த அசுப மத்திய பலம்	948	703	944	976	841	858	922

(26) ஸ்பஷ்ட சுப பலம் கணிக்க:– முதலில் 41-வது வாக்கியத்தை இங்கு படிக்க வேண்டியது. இந்த 41-வது வாக்கியத்தில் கொடுத்துள்ள உதாரணங்கள் பிரகாரம் கணிக்க ஸ்பஷ்ட சுப அசுப பலம் அடியில் 55-வது, 56-வது கட்டங்களில் கண்டபடி ஆகும்.

ஸ்பஷ்ட சுப பலம் 55-வது கட்டம்

கிரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
இராசிவர்க்க ஸ்பஷ்ட சுப பலம்	60	154	55	79	109	57	79
நவரம்ச வர்க்க ஸ்பஷ்ட சுப பலம்	30	90	30	59	111	29	60
திரேகாணவர்க்க ஸ்பஷ்ட சுப பலம்	33	90	41	59	111	44	68
துவாதசாம்ச வர்க்க ஸ்பஷ்ட சுப பலம்	41	69	23	59	111	48	68
சப்தமாம்ச வர்க்க ஸ்பஷ்ட சுப பலம்	30	77	29	82	55	59	59
ஒரா வர்க்க ஸ்பஷ்ட சுப பலம்	17	35	50	34	90	48	33
திரிம்சரம்ச வர்க்க ஸ்பஷ்ட சுப பலம்	41	50	30	82	55	44	60
மொத்த ஸ்பஷ்ட சுப பலம்	252	565	258	454	642	329	427

ஸ்பஷ்ட அசுப பலம் 56-வது கட்டம்

க்ரகங்கள்	சூ.	சந்.	செ.	பு.	குரு	சு.	சனி
இராசிவர்க்க ஸ்பஷ்ட அசுப பலம்	1002	638	784	912	594	835	613
நவாம்ச வர்க்க ஸ்பஷ்ட அசுப பலம்	503	277	399	359	237	417	254
திரேகாண வர்க்க ஸ்பஷ்ட அசுப பலம்	356	277	436	359	237	460	287
துவாதசாம்ச வர்க்க ஸ்பஷ்ட அசுப பலம	347	398	437	359	237	376	295
சப்தமாம்ச வர்க்க ஸ்பஷ்ட அசுப பலம	503	319	378	349	313	316	359
ஒராவர்க்க ஸ்பஷ்ட அசுப பலம்	503	400	348	507	274	366	359
திரிம்சாம்ச வர்க்க ஸ்பஷ்ட அசுப பலம்	347	321	399	349	313	460	254
மொத்த ஸ்பஷ்ட அசுப பலம்	3561	2630	3181	3194	2205	3230	2421

2-வது அத்தியாயம்

இந்த புத்தகத்தின் மூன்ருவது அத்தியாயத்தில் கொடுத்துள்ள வாக்கியங்களை உபயோகப்படுத்தும் விதம்:-

1-வது, 2-வது, 3-வது, 4-வது வாக்கியங்கள்:-இந்த நான்கு வாக்கியங்களும் வாய்ப்பாடுகளானபடியாலும், இவைகள் தாமே நன்ருய் விளங்கக்கூடியானவாயிருப்பதாலும் இவைகளைப் பற்றி இங்கு விவ்ரிப்பது அவசியமில்லை.

5-வது வாக்கியம் (மணி நிமிஷமும், நாழிகை விநாடியும்):- இந்த வாக்கியத்தால் மணி நிமிஷத்தை நாழிகை விநாடியாகவும், நாழிகை விநாடிகளை மணி நிமிஷங்களாகவும் வெகு சுலபத்தில் மாற்றலாம்.

உதாரணம்:-உதாரணமாக ஒரு குழந்தை 1869ளு அக்டோபர்மீ 2உ காலை கெடியாரமணி 7 நிமிஷம் 13-க்கு ஜெனனமானதென்றும், அன்று சூரிய உதயம் காலை மணி 5 நிமிஷம் 56-க்கு நேர்ந்ததென்றும் வைத்துக்கொண்டால், சூரிய உதயத்திலிருந்து ஜெனன காலம் வரையிலும் செல்லான நாழிகை விநாடியை பின் வருமாறு இந்த 5-வது வாக்கியத்தால் அறிவோம்.

காலை மணி 7 நிமிஷம் 0-க்கு நாழிகை 2 விநாடி 30 ஆகும்.

மணி 0 நிமிஷம் 13-க்கு நாழிகை 0 விநாடி 32½ ஆகும்.

ஆகவே காலை மணி 7, நிமிஷம் 13-க்கு நாழிகை 3 விநாடி 2½

கூட்ட வரும். அதாவது காலை மணி 6 நிமிஷம் 0-த்திலிருந்து காலை மணி 7 நிமிஷம் 13 வரையிலும் கணக்கிட நாழிகை 3 விநாடி 2½ வரும். ஆனல் அன்று சூரியன் காலை மணி 6 நிமிஷம் 0-த்தில் உதயமாகாமல் முந்தியதாக காலை மணி 5 நிமிஷம் 56-க்கு உதயம். அதாவது சூரியன் (மணி 6 நிமிஷம் 0-த்திலிருந்து மணி 5 நிமிஷம் 56-யைக் கழிக்க வருகின்ற) 4 நிமிஷம் முந்தியாக உதயம். இந்த 5-வது வாக்கியத்தில் 4 நிமிஷத்திற்கு விநாடி 10 ஆவதால் சூரியன்

10 விநாடி முந்தியாக உதயம் என ஏற்படும். சூரிய உதயம் 6 மணிக்கு முந்தியாகவிருப்பதால்[1] இங்கு வந்த 10 விநாடியை முந்தி மேலே வந்த நாழிகை 3 விநாடி 2½-யுடன் கூட்ட வேண்டும். அப்படி கூட்ட நாழிகை 3 விநாடி 12½ வரும். ஆகையால் மேல் கண்ட தேதியில் ஜெனன காலமாகிய காலை மணி 7 நிமிஷம் 13-க்குச் சூரிய உதயத்திலிருந்து நாழிகை 3 விநாடி 12½ ஆகும், அதாவது ஜெனனம் காலை நாழிகை 3 விநாடி 12½-க்கு நேர்ந்தது என்று ஏற்படும்.

[1]குறிப்பு :-சூரிய உதயம் காலை 6 மணிக்கு முந்தி எவ்வளவு நிமிஷத்தில் நேரிடுகின்றதோ அவ்வளவு நிமிஷத்திற்குரிய நாழிகை விநாடியைக் கூட்டவேண்டும். சூரிய உதயம் 6 மணிக்கு பிந்தி எவ்வளவு நிமிஷத்தில் நேரிடுகின்றதோ அவ்வளவு நிமிஷத்திற்கு உரிய நாழிகை விநாடியைக் கழிக்க வேண்டும். உதாரணமாக சூரியனுடைய உதயம் காலை 6 மணி 4 நிமிஷத்திற்கு நேர்ந்தால் 4 நிமிஷத்திற்கு 10 விநாடியாவதால் இந்த 10 விநாடியை மேலே வந்த நாழிகை 3 விநாடி 2½-யிலிருந்து கழிக்கவேண்டும். அப்படி கழிக்க நாழிகை 2 விநாடி 52½ வரும். அதாவது சூரிய உதயம் காலை மணி 6 நிமிஷம் 4-க்கு நேரிடுகிற தினத்தில் காலை மணி 7 நிமிஷம் 13-க்கு சூரிய உதயத்திலிருந்து நாழிகை 2 விநாடி 52½ ஆகும் என்பதாம்.

உதாரணம் (2) ஒரு தினத்தில் சூரிய உதயம் காலை மணி 5 நிமிஷம் 56-க்கு நேர்ந்தது. அன்று ஒரு குழந்தை சூரிய உதயத்திலிருந்து நாழிகை 3 விநாடி 12½-க்கு ஜெனனமானல் அப்போது கெடியார ரீதியாய் மணியை அறிவோம். இந்த நாழிகை 3 விநாடி 12½-க்கு அடுத்த சிறிய நாழிகை விநாடியை 5-வது வாக்கியத்தில் கண்டெடுத்து அதற்குத் தகுந்தாற்போல் இந்த நாழிகை 3 விநாடி 12½-யை பிரித்துக் கொள்ளவேண்டியது. அதாவது இதற்கு அடுத்த சிறிய நாழிகையானது 2 விநாடி 30 ஆகும். ஆகவே நாழிகை 3 விநாடி 12½-யை அடியிற்கண்டபடி பிரித்துக்கொள்ளவும்.

(1) நாழிகை 2 விநாடி 30 இதற்கு மணி 7 நிமிஷம் 0 ஆகும்,

(2) நாழிகை 0 விநாடி 30 ஷ 0 நிமிஷம் 12 ,,

(3) நாழிகை 0 விநாடி 12½ ஷ 0 நிமிஷம் 5 ,,

ஆகவே கூட்ட, நாழி 3 விநாடி 12½, இதற்கு மணி 7 நிமி, 17 ஆகும்

ஆகையால் நாழிகை 3 விநாடி 12½-க்கு மணி 7 நிமிஷம் 17 என்று அறியவும்.

அன்று சூரிய உதயம் காலை மணி 5 நிமிஷம் 56-க்கு அதாவது 6 மணிக்கு [1] முந்தியே 4 நிமிஷத்தில் உதயமானதால் இந்த 4 நிமிஷத்தை மேலே வந்த மணி 7 நிமிஷம் 17-ல் இருந்து கழிக்க வேண்டும். அப்படி கழிக்க மணி 7 நிமிஷம் 13 வரும். ஆகையால் மேல் கண்ட தினத்தில் சூரிய உதயத்திலிருந்து நாழிகை 3 விநாடி 12½-க்குக் கெடியார ரீதியாய் காலை மணி 7 நிமிஷம் 13 என்று அறியவேண்டியது.

[1]குறிப்பு:-சூரிய உதயம் 6 மணிக்குப் பிந்தியானால் எவ்வளவு நிமிஷம் பிந்தியாகின்றதோ அவ்வளவு நிமிஷத்தை மணி 7 நிமிஷம் 17 உடன் கூட்ட வேண்டும்.

விசேஷ குறிப்பு:-ஜெனன கால மணியோ அல்லது நாழிகையோ அறியவேண்டுமானல் அநேக சோதிடர்கள் சூரிய உதயத்தைக் கவனிக்கிறதே கிடையாது. அதனல் லக்கின சந்தியான ஜாதகங்களில் லக்கினத்தைத் தவறுதலாய்க் கணித்துவிடுகின்ருர்கள். சூரிய உதயத்தைக் கவனியாமல் கணிக்கின்ற லக்கினங்களும், அம்சா லக்கினங்களும் பெரும்பான்மையும் தவறுதலாய் இருக்கும் என்பதற்குச் சந்தேகமே கிடையாது. மேலும் ஜெனனமான குழந்தை ஆணு பெண்ணு என்று அறிவதற்கு ஒரு தினத்தை 48 சம பாகமாகப் பங்கிடுகிருர்கள். அப்படி பங்கிட பாகம் ஒன்றுக்கு 1¼ நாழிகை வரும். ஞாயிற்றுக்கிழமையில் முதல் பாகமாகிய 1¼ நாழிகைக்குள் குழந்தை ஜெனனமானல் அந்த குழந்தை ஆண் என்றும், இரண்டாவது பாகத்தில் ஜெனனமானல் பெண் என்றும் இவ்விதமாகக் கிழமையையும், ஜெனன நாழிகையையும் அனுசரித்து பிறந்த குழந்தை ஆணு பெண்ணு என்று அறிய ஒரு வழி இருக்கின்றது. இந்த வழியை அனுசரிக்க வேண்டுமானல் சூரிய உதயத்தைக் கவனித்தல் மிகவும் அவசியமாகும். இல்லாவிட்டால் ஆண் பெண் என்று சொல்லுகின்ற வழி தவறிப்போகும் என்பதற்குச் சந்தேகமே கிடையாது.

6-வது வாக்கியம் திரை ராசிக் கணிதம்:-இதற்குத் திரை ராசிக் கணித வாக்கியம் என்று பெயர். கிரகங்களின் ஸ்புடஞ் செய்வதில் இது மிகவும் உபயோகமானது. உதாரணமாக அடியில்

கண்டபடி குரு, சுக்கிரன், சந்திரன் இவர்களுடைய ஸ்புடம் இருப்பதாக வைத்துக் கொள்வோம்.

	(1) 1869ஞ அக்டோபர்மீ 1உ பகல் 4 மணி 36 நிமிஷத்திற்கு கிரகஸ்புடம்.	(2) 1869ஞ அக்டோபர்மீ 2உ பகல் 4 மணி 36 நிமிஷத்திற்குக் கிரகஸ்புடம்.	(3) தினகதி
	பாகை - கலை	பாகை - கலை	பாகை - கலை
குருஸ்புடம்	28 - 19	28 - 15	வக் 0 - 4
சுக்கிரஸ்புடம்	203 - 47	205 - 0	1 - 13
சந்திரஸ்புடம்	109 - 24	123 - 47	14 - 23

இவ்விதமாக கிரகஸ்புடமிருந்தால், 1869ஞ அக்டோபர்மீ 2உ காலை மணி 7 நிமிஷம் 13க்குக் கிரகஸ்புடம் கணிப்போம்.

முதலில் மேலே கிரகஸ்புடங் கொடுத்துள்ள காலத்திலிருந்து ஜெனன காலம் வரையிலுமுள்ள காலத்தின் அளவை அறியவேண்டும். கிரகஸ்புடம் கொடுத்துள்ள காலமாகிய 1-ம் தேதி பகல் 4-மணி 36 நிமிஷத்திலிருந்து ஜெனனகாலமாகிய 2-ந் தேதி காலை மணி 7-நிமிடம் 13 வரையிலும் கணக்கிட 14 மணி 37 நிமிஷம் வரும். உதாரணமாக 1-ந் தேதி குருவின் ஸ்புடம் பாகை 28 - 19-ம், 2-ந்தேதி குருவின் ஸ்புடம் பாகை 28 - 15-ம், மேல் கண்டபடி ஆனால் 2-ந்தேதி காலை மணி 7 நிமிஷம் 13-க்குக் குருவின் ஸ்புடம் எவ்வளவு என்பதை கணிப்போம். 1-ந்தேதி குருவின் ஸ்புடம் பாகை 28 - 19 கலையும், 2-ந்தேதி பாகை 28 - 15 கலையுமாய் இருப்பதால் 24-மணி கொண்ட ஒரு தினத்தில் குரு பாகை 0 - 4 கலை தூரம் செல்லுகிறது. இந்த 4 கலைதான் குருவினுடைய தினகதி ஆகிறது. இந்த 4 கலை, பாகை 28 கலை 19-ல் இருந்து பாகை 28 கலை 15-யைக் கழிக்க வருகின்றது என்று அறியவும். இதற்கு மேல் குருவின் தினகதி பாகை 0 கலை 4 ஆனால் அதாவது குரு 24-மணி நேரத்தில் பாகை 0 கலை 4 செல்லுமானால் மேற்கண்ட 14-மணி 37 நிமிஷ நேரத்தில் எவ்வளவு தூரம் செல்லும் என்பதைக் கணிக்கவேண்டியது. இதை 6-வது வாக்கியத்தால் வெகு சுலபமாகக் கணிக்கலாம். இந்த வாக்கியத்தில் தலைப்பில் இடது புறமிருந்து வலது புறமாகப் பாகைகள் 0, 1, 2 3 என்று 14-வரையிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 1-வது கலத்தில் மேலிருந்து கீழ் நோக்கி கலைகள் 0, 1, 2, 3, 4 என்று 59 வரையிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த

பாகை கலைகள் நாம் கணிக்கவேண்டிய கிரகத்தின் தினகதியிலுள்ள பாகை கலைகள் என்று வைத்துக்கொள்ள வேண்டியது. மேலும், இந்த வாக்கியத்தில் தலைப்பில் மணியும், முதல் கலத்தில் நிமிஷமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை நாம் எத்தனை மணி, நிமிஷத்திற்கு ஸ்புடஞ் செய்ய வேண்டுமோ அத்தனை மணி நிமிஷம் என்று வைத்துக்கொள்ளவும். குருவினுடைய தினகதி பாகை 0 கலை 4 ஆனதால் பாகை 0 என்று குறிப்பித்துள்ள கலத்தில் கலை 4 என்று குறிப்பித்துள்ள வரிக்கு எதிரில் 2556 என்று இருக்கிறது. இந்த 2556-யை எடுத்து ஒரு இடத்தில் எழுதி வைக்கவும். பிறகு நமக்குத் தேவையான 14-மணி 37 நிமிஷம் ஆனதால் 14 மணி கலத்தில் 37 நிமிஷத்திற்கு எதிரில் 215 இருக்கிறது. இதை மேலே பிரத்தியேகமாக எழுதிவைத்த 2556 உடன் கூட்டவேண்டியது. அப்படிக் கூட்டினால் 2771 வரும். இந்த வாக்கியத்தில் 2771 அல்லது அதற்கு சமீபித்த எண் எங்கு இருக்கிறது என்று பார்க்கவும். அப்படிப்பட்ட சமீபித்த எண் 2857 இருக்கிறது அது 0 பாகை என்று குறிப்பிட்ட கலத்தில் 2 கலைக்கு நேரில் இருக்கின்றது. ஆகையால் இந்த பாகை 0 கலை 2 தான் குரு 14-மணி 37 நிமிஷ நேரத்தில் செல்லக்கூடிய தூரம் என்று ஏற்படுகின்றது. அதாவது குரு 24-மணி கொண்ட ஒரு தினத்தில் பாகை 0 கலை 4 செல்லுமானால் 14-மணி 37 நிமிஷத்தில் பாகை 0 கலை 2 செல்லும் என்று ஏற்படுகின்றது. குரு வக்கிரகதியில் இருப்பதால் இங்கு வந்த பாகை 0 கலை 2-யை 1-ந் தேதியின் ஸ்புடமாகிய பாகை 28 கலை 19-ல் இருந்து கழிக்க பாகை 28 கலை 17 வரும். இதுதான் 2-ந்தேதி காலை 7-மணி 13 நிமிஷத்திற்கு குருவின் ஸ்புடம் என்று ஏற்படுகின்றது.

இவ்விதமாகவே சுக்கிரனுடைய ஸ்புடம் கணிப்போம்:- அதாவது 1-ந் தேதி சுக்கிரனுடைய ஸ்புடம் பாகை 203 கலை 47ம், 2-ந்தேதி பாகை 205 கலை 0 மானால், 2-ந்தேதி காலை 7-மணி 13 நிமிஷத்திற்குச் சுக்கிரன் ஸ்புடம் என்ன? பாகை 205-0 கலையில் இருந்து பாகை 203-கலை 47-யைக் கழிக்கப் பாகை 1-கலை 13 வரும். ஆகையால் சுக்கிரன் தினகதி பாகை 1-கலை 13 ஆகும். முன்போல வாக்கியத்தில் பாகை 1, கலை 13-க்குப் பார்த்தால் பாகை 1 என்று குறிப்பிட்ட கலத்தில் கலை 13-க்கு நேராய் 1295 இருக்கிறது. மறுபடியும் 14 மணி 37 நிமிஷத்திற்கு முன்போல வாக்கியத்தில் பார்த்தால் 14 மணி கலத்தில் 37 நிமிஷத்திற்கு எதிரில் 215 இருக்கிறது. இந்த 215-யை 1295-யுடன் கூட்ட

1510 வரும். இந்த 1510 அல்லது இதற்குச் சமீபித்த எண் எங்கு இருக்கின்றது என்று வாக்கியத்தில் பார்க்க 1505 என்ற எண் ஒன்று 0 கலத்தில் 45 கலைக்கு நேரில் இருக்கிறது, ஆகையால் இந்த பாகை 0 கலை 45-தான் சுக்கிரன் 14 மணி 37 நிமிஷத்தில் செல்லக் கூடிய தூரம் என்று ஏற்படுகின்றது. சுக்கிரன் வக்கிர கதியில் இல்லாமல் நேர்கதியில் இருப்பதால் மேலே வந்த பாகை 0 கலை 45-யை 1வயில் சுக்கிரனுடைய ஸ்புடமாகிய பாகை 203 கலை 47-யுடன் கூட்ட வேண்டும். அப்படிக் கூட்ட வருகின்ற பாகை 204 கலை 32-தான், 2உ காலை 7 மணி 13 நிமிஷத்திற்குச் சுக்கிரனுடைய ஸ்புடம் என்று அறியவும்.

இப்பொழுது சந்திரனுடைய ஸ்புடம் கணிப்போம் :-மேற் சொல்லியபடி சந்திரனுடய தினகதி பாகை 14 கலை 23 வரும். இதற்கு வாக்கியத்தில் மேற்சொல்லியபடி 222 வரும். மேலும் 14 மணி 37 நிமிஷத்திற்கு வாக்கியத்தில் 215 வரும். ஆகையால் முன் போல 222-யையும், 215-யையும் கூட்ட 437 வரும், இந்த 437 அல்லது அதற்கு அருகிலுள்ள எண் எங்கே இருக்கின்றதென்று பார்க்க 8 பாகை என்ற கலத்தில் 46 கலைக்கு எதிரில் இருக்கின்றது ஆகையால் இந்த பாகை 8 கலை 46-தான் சந்திரன் 14 மணி 37 நிமிஷத்தில் செல்லக்கூடிய தூரம். சந்திரன் எப்போதும் நேர் கதியில் செல்வதால் இந்த பாகை 8 கலை 46-யை 1வயில் சந்திரனு டைய ஸ்புடமாகிய பாகை 100 கலை 24-உடன் கூட்டவேண்டியது. அப்படிக் கூட்ட வருகின்ற பாகை 118 கலை 10-தான் 2உ காலை 7 மணி 13 நிமிஷத்திற்குச் சந்திரனுடைய ஸ்புடம் என்று அறியவும். இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்திற்கும் அறியவும்.

குறிப்பு :-இந்த வாக்கியத்தில் 14 மணி 59 நிமிஷம் வரையிலுந் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நமக்குத் தேவையான மணி நிமிஷம் இதற்கு மேற்பட்டிருந்தால் அடியிற்கண்டபடி செய்யவும். உதாரணமாக, ஒரு கிரகத்தின் தினகதி பாகை 1 கலை 13 ஆனால் 18 மணி 10 நிமிஷத்தில் அந்த கிரகம் எவ்வளவு தூரம் செல்லும் என் பதைக் கணிப்போம். நமக்குத் தேவையான காலமாகிய 18 மணி 10 நிமிஷம் வாக்கியத்தில் கொடுத்துள்ள 14 மணி 59 நிமிஷத்திற்கு மேற்பட்டிருப்பதால் இந்த 18 மணி 10 நிமிஷத்தை இரண்டு பாக மகாப் பிரிக்கவும், ஒருபாகத்தை எப்பொழுதும் 12 மணியாகவும்

மற்றொரு பாகத்தை மிகுதியாகிய 6 மணி 10 நிமிஷமாகவும் பிரிக்கவும். ஒரு பாகமாகிய 12, 24 மணி நேரத்தில் பாதியானதால் அந்த 12 மணி நேரத்தில் அந்த கிரகம் பாகை 1 கலை 13-ல் பாதியாகிய பாகை 0 கலை 36½ செல்லும் என்று ஏற்படும். பிறகு மற்றொரு பாகமாகிய 6 மணி 10 நிமிஷ நேரத்தில் அந்த கிரகம் எவ்வளவு தூரம் செல்லும் என்பதைக் கணிக்கவும். அதாவது ஒரு கிரகத்தின் தினகதி பாகை 1 கலை 13 ஆனால் அந்த கிரகம் 6 மணி 10 நிமிஷத்தில் எவ்வளவு தூரம் செல்லும் என்று அறியவேண்டியது. முந்தி சொல்லியபடி தினகதி பாகை 1 கலை 13க்குப் பார்த்தால் பாகை 1 என்று குறிப்பிட்ட கலத்தில் 13-க்கு எதிரில் 1295 இருக்கிறது. மேலும் 6 மணி 10 நிமிஷத்திற்கு பார்த்தால் 6 மணி என்று குறிப்பிட்டுள்ள கலத்தில் 10 நிமிஷத்திற்கு எதிரில் 590 என்ற எண் இருக்கிறது. இந்த 590-யை முந்தி வந்த 1295 உடன் கூட்ட 1885 வரும். இந்த 1885 அல்லது இதற்குச் சமீபித்த எண் எங்கு இருக்கிறதென்று வாக்கியத்தில் பார்க்க 0 பாகை என்ற கலத்தில் 19 கலைக்கு எதிரில் 1880 இருக்கின்றது. ஆகையால் அந்த கிரகம் 6 மணி 10 நிமிஷத்தில் பாகை 0 கலை 19 செல்லும் என்று ஏற்படுகிறது, முன்னமே 12 மணி நேரத்தில் அந்த கிரகம் பாகை 0 கலை 36½ செல்லும் என்று கணித்திருக்கிறோம். ஆகையால் இந்த இரண்டையுங் கூட்ட 18 மணி 10 நிமிஷ நேரத்தில் பாகை 0 கலை 55½ வரும். அதாவது 18 மணி 10 நிமிஷ நேரத்தில் அந்த கிரகம பாகை 0 55½ கலை தூரம் செல்லும் என்று ஏற்படும். இன்னும் உதாரணமாக, நமக்கு வேண்டிய காலம் 22 மணி 48 நிமிஷமானால் அதை ஒரு பாகம் 12 மணியாகவும் மற்றொரு பாகம் 10 மணி 48 நிமிஷமாகவும் பிரித்துக்கொள்ளவேண்டியது. இவ்விதமாகவே நமக்கு வேண்டிய மணியைப் பிரித்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

மேலே சொல்லிய விதிகளைப் படிக்கப் படிக்க நன்றாய் விளங்கும். நன்றாய்த் தெரிந்துகொண்ட பிறகு அடியிற்கண்டபடி இன்னும் வெகு சுலபமாக நமக்கு வேண்டிய காலத்திற்குக் கிரக ஸ்புடங்களைக் கணிக்கலாம்.

கிரகங்களுடைய ஸ்புடங்கள் 1869 ஹ அக்டோபர் மீ 1உ பகல் மணி 4 நிமிஷம் 36-க்கும், மறு நாளாகிய 2உ பகல் மணி 4 நிமிஷம் 36-க்கும் கொடுக்கப்பட்டிருந்தால் 2-ந் தேதி காலை

மணி 7 நிமிஷம் 13-க்கு அவைகளினுடைய ஸ்புடம் என்ன என்பதை அடியிற்கண்டவாறு கணிப்போம்.

கிரகங்களின் பெயர்	1869௵ அக்டோபர் ௴ 1௳ பகல் 4 மணி 36 நிமிஷத்திற்கு கிரகஸ்புடம் பாகை-கலை	1869௵ அக்டோபர் ௴ 2௳ பகல் 4-மணி 36 நிமிஷத்திற்கு கிரகஸ்புடம் பாகை-கலை	தினசரி இது 2-ல் இருந்து 1-யை கழிக்க வருவது (ஏ) பாகை-கலை	லாக்கியத்தில் தின கதிக்குரிய எண்
	1	2	3	4
சூரியன்	166 - 26	167 - 25	+0 - 59	1388
சந்திரன்	109 - 24	123 - 47	+14 - 23	222
செவ்வாய்	206 - 4	206 - 46	+0 - 42	1535
புதன்	191 - 29	192 - 7	+0 - 38	1579
குரு	28 - 19	28 - 15	−0 - 4	2556
சுக்கிரன்	203 - 47	205 - 0	+1 - 13	1295
சனி	230 - 25	230 - 29	+0 - 4	2556
ராகு	102 - 19	102 - 16	−0 - 3	2681
கேது	282 - 19	282 - 16	−0 - 3	2681

தொடர்ச்சி

கிரகங்களின் பெயர் பெயர்	வாக்கியத்தில் 14 மணி 37 நிமிஷத் திற்குரிய எண் (சி)	4-வது 5-வது கலத்தி லுள்ள எண்களை கூட்ட வருவது	வாக்கியத்தில் இங்கு 6-வது கலத் திலுள்ள எண்ணிற் குரிய பாகை-கலை	1-வது கலத்தையும் 7-வது கலத்தையும் கூட்ட வருவது (பி) பாகை-கலை
	5	6	7	8
சூரியன்	215	1603	0 - 36	167 - 2
சந்திரன்	215	437	3 - 46	118 - 10
செவ்வாய்	215	1750	0 - 26	206 - 30
புதன்	215	1794	0 - 23	191 - 52
குரு	215	2771	0 - 2	28 - 17
சுக்கிரன்	215	1510	0 - 45	204 - 32
சனி	215	2771	0 - 2	230 - 27
ராகு	215	2896	0 - 2	102 - 17
கேது	215	2896	0 - 2	282 - 17

குறிப்பு (எ) 2-வது கலத்திலிருந்து 1-வது கலம் கழிக்கப்படு மானால் 3-வது கலத்தில் + என்ற இக்குறி போடவும். அப்படிக் கழிபடாமல் 1-வது கலத்தில் இருந்து 2-வது கலம் கழிபடுமானால் — என்ற குறிபோடவும். இவ்விதமாக கிரகம் வக்கிரமாக இருக்கும் போதுதான் சம்பவிக்கும்.

(பி) 3-வது கலத்தில் + என்ற கூட்டல் குறி இருந்தால், 1-வது கலத்தையும் 7-வது கலத்தையும் கூட்ட 8-வது கலம் வரும். 3-வது கலத்தில்—என்ற கழித்தல் குறி இருந்தால், 1-வது கலத்தில் இருந்து 7-வதுகலத்தைக் கழிக்க 8-வது கலம் வரும்.

(சி) 14-மணி 37 நிமிஷம் என்பது 1-வது கலத்திலுள்ள மணி நிமிஷத்திற்கும் 2-ந் தேதி 7-மணி 13 நிமிஷத்திற்கும் இடையிலுள்ள காலம்.

7-வது வாக்கியம் - நட்சத்திரங்கள்

இந்த வாக்கியத்தில் 27 நட்சத்திரங்களின் பெயர்களைக் கொடுத்திருப்பதால் இதைப்பற்றி இங்கு விவரித்து எழுதவேண்டியது அவசியமில்லை.

8-வது வாக்கியம் - திதிகள்

இந்த வாக்கியத்தில் திதிகளின் பெயரும் அவைகளின் ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திதி என்பது ஆகாயத்தில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரத்தை தெரியப்படுத்தும். சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரம் அதாவது சந்திரனுடைய ஸ்புடத்திலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற தூரம் பாகை 0 கலை 0 முதல் பாகை 12 கலை 0 வரையிலும் இருந்தால் பிரதமை திதி என்றும், பாகை 12 கலை 0-க்கு மேல் பாகை 24 கலை 0-க்குள் இருந்தால் துதியை என்றும், பாகை 24 கலை 0-க்கு மேல் பாகை 36 கலை 0-க்குள் இருந்தால் திரிதியை என்றும் இவ்வாறே அறியவேண்டியது.

உதாரணமாகச் சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118 கலை 10 என்றும் சூரியனுடைய ஸ்புடம் பாகை 167 கலை 2 என்றும் வைத்துக் கொள்வோம். எப்பொழுதும் சந்திரனுடைய ஸ்புடத்திலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தைக் கழிக்கவேண்டும். சிறிய ஸ்புடத்திலிருந்து பெரிய ஸ்புடத்தைக் கழிக்கவேண்டுமானால் சிறிய ஸ்புடத்துடன் 360 பாகையைக் கூட்ட வருகின்ற மொத்த பாகை கலையிலிருந்து பெரிய ஸ்புடத்தைக் கழிக்கவும். சந்திரனுடைய ஸ்புடமாகிய பாகை 118 கலை 10 சிறியதாயும், சூரியனுடைய ஸ்புடமாகிய பாகை 167 கலை 2 பெரியதாயும் இருக்கின்றது. ஆகையால் பாகை 118 கலை 10 உடன் 360 பாகையைக் கூட்ட மொத்தம் 478 பாகை 10 கலை வரும். இதில் இருந்து சூரியனுடைய பாகை 167 கலை 2யை கழிக்கப் பாகை 311 கலை 8 வரும். இந்த 311 பாகை 8 கலைதான் சந்திரனுக்தும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரம். இப்போது

வாக்கியத்தில் பார்ப்போமானால் இந்த பாகை 311 கலை 8 என்பது தேய்பிறை ஏகாதசிக்குக் கொடுத்துள்ள பாகை 300 கலை 0-க்கு மேல் பாகை 312 கலை 0-க்குள் இருப்பதால் இந்த பாகை 311 கலை 8-க்குத் தேய்பிறை ஏகாதசி திதி என்று ஏற்படுகின்றது. அதாவது அப்போது தேய்பிறை ஏகாதசி திதி என்று அறியவும்.

9-வது வாக்கியம் (10-வது பாவஸ்புட வாக்கியம்)

இந்த வாக்கியத்தால பாவச்சக்கிரம் போடலாம் பாவச்சக்கிரம் என்பது என்னவென்பதைப்பற்றி சற்று கவனிப்போம் ஒரு குறித்த காலத்தில் இராசி மண்டலத்தில் எந்த பாகம் கிழக்கில் உதயமாகுமோ அந்த பாகத்திற்கு லக்கினம் என்று சொல்லப்படும் என்று முன்னமே தெரிவித்திருக்கின்றோம். ஒரு குறித்த காலத்தில் இராசி மண்டலத்தில் மேற்கே அஸ்தமனமாகும் பாகத்திற்கு அஸ்தமன லக்கினம் அல்லது 7-வது பாவம் என்று பெயர். இராசி மண்டலம் முன்னமே சொல்லியதுபோல மேற்குத் திக்கிலிருந்து கிழக்குத் திக்காகச் செல்லுகின்ற ஒரு பெரிய வட்டம். இந்த வட்டத்தில் நமது உச்சிக்கு அருகிலுள்ள இடத்திற்குத் ''தசம மத்திய லக்கினம்'' அல்லது 10-வது பாவம் என்று பெயர். இந்த மத்திய லக்கினத்திற்த இராசி மண்டலமும், நமது உச்சியின் மூலமாய்ச் செல்லுகின்ற ரேகாம்சமும் (மெரிடியன்) ஆகாயத்தில் சந்திக்கின்ற இடம் என்று பெயர். தசம மத்திய லக்கினத்திற்கு நேராய் பாதாளத்தில் இராசி மண்டலத்தில் உள்ள இடத்திற்குச் சதுர்த்த மத்திய லக்கினம் அல்லது 4-வது பாவம் என்று பெயர். ஆகையால் இராசி மண்டலத்தில் உதய லக்கினம், தசம மத்திய லக்கினம், அஸ்தமன லக்கினம், சதுர்த்த மத்திய லக்கினம் என்று நான்கு இடங்கள் இருக்கின்றன. இந்த நான்கு இடங் ளைக் கணிப்போமானால் பாவச்சக்கிரம் கூடியமட்டும் துல்லியமாய்க் கணிக்கலாம் பாவச்சக்கிரம் கணிக்கும் விதம்:—முதலில் உதய லக்கினத்தை உதயலக்கினம் கணிக்கும் விதத்தில் கணிக்கவேண்டியது. பிறகு உதய லக்கின ஸ்புடத்துடன் 6 இராசி அல்லது 180 பாகை கூட்ட அஸ்தமன லக்கினம் வரும், பிறகு தசம மத்திய லக்கினம் கணிக்க வேண்டும். இந்த தசமலக்கினத்தை இந்த 10-வது வாக்கியத்தால் கணிக்க வேண்டியது. பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு தினத்திற்கும் பகல் 12 மணிக்கு நட்சத்திர ஹோராதியணி

மினிட் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதை அறுந்துகொள்ள வேண்டியது. பிறகு பகல் 12 மணியிலிருந்து ஜெனனமான மணி நிமிஷம் வரையிலும் உள்ள மொத்த மணி நிமிஷம் அறியவேண்டியது. இந்த மணி நிமிஷத்தை முந்தி வந்த நட்சத்திர ஹோராதி மணி நிமிஷத்துடன் கூட்டி மொத்த மணி நிமிஷம் அறியவும். இப்படி வரும் மணி நிமிஷத்திற்கு ஜெனன காலத்தில் உள்ள நட்சத்திர ஹோராதி மணி நிமிஷம் என்று பெயர். 9-வது வாக்கியத்தில் இந்த நட்சத்திர ஹோராதி மணிக்குக் கொடுத்திருக்கின்ற பாகை கலையே சாயன தசம மத்திம லக்கின ஸ்புடம் ஆகும் இதிலிருந்து பஞ்சாங்கத்தில் கிரக பாதசாரங்களுக்குத் தலைப்பில் அல்லது 43-வது வாக்கியத்தில் கொடுத்திருக்கும் அயனும்ச ஸ்புடத்தைக் கழிக்க நிரயண தசம மத்திம லக்கின ஸ்புடம் அல்லது தசம மத்திம லக்கின ஸ்புடம் வரும். இந்த தசம மத்திம லக்கின ஸ்புடத்துடன் 6 இராசி அல்லது 180 பாகை கூட்ட சதுர்த்த மத்திம லக்கின ஸ்புடம் வரும். இவ்வாறு நான்கு விதமான லக்கின ஸ்புடங்களைக் கணித்துக்கொண்டு பிறகு அடியிற் கண்ட உதாரணத்திற் காட்டியபடி பாவச்சக்கிரம் போடவேண்டியது.

உதாரணம் :—1869ஆு அக்டோபர்மீ 2உ காலை 7 மணி 13 நிமிஷத்திற்கு ஜெனனம். அன்று அயனும்சம் பாகை 21 கலை 54. அப்போது உதய லக்கினம் பாகை 184 கலை 48. 1869ஆு அக்டோபர்மீ 1உ பகல் 12 மணிக்கு நட்சத்திர ஹோராதி மணி 12 நிமிஷம் 41 என்று இவைகளைக் கொடுத்திருப்பதாக வைத்துக்கொண்டு 2உ காலை 7மணி 13 நிமிஷத்திற்கு பாவச்சக்கிரம் கணிப்போம்.

உதய லக்கின ஸ்புடம் பாகை 184 கலை 48. இது கொடுக்கப்பட்டிருக்கின்றது. இத்துடன் 180 பாகை கூட்ட பாகை 364 கலை 48 வரும். இது 360 பாகைக்கு மேற்பட்டிருப்பதால் இதில் இருந்து 360 பாகையைக் கழிக்க 4 பாகை 48 கலை வரும். ஆகையால் 4 பாகை 48 கலைதான் அஸ்தமன லக்கின ஸ்புடமாகும்.

ஜெனன காலம் காலை 7 மணி 13 நிமிஷமானதால் 1உ பகல் 12 மணியிலிருந்து 2உ 7 மணி 13 நிமிஷம் வரையிலும் கணக்கிட மொத்தம் 19 மணி 13 நிமிஷ நேரம் வரும். முந்தி கொடுத்துள்ள ஒராதி மணியாகிய 12 மணி 44 நிமிஷத்துடன் கூட்ட மொத்தம்

31 மணி 57 நிமிஷம் வரும். இது 24 மணிக்கு மேற்பட்டிருப்பதால் இதில் இருந்து 24 மணியைக் கழிக்க 7 மணி 57 நிமிஷம் வரும். இதுதான் ஜெனன காலத்தில் உள்ள நட்சத்திர ஹோராதி மணி என்று அறியவும். இந்த வாக்கியத்தில் ஒராதி மணி 7 நிமிஷம் 56-க்கு 116 பாகை 57 கலை என்றும், ஒராதி மணி 8 நிமிஷம் 0-க்கு 117 பாகை 55 கலை என்றும் கொடுத்திருப்பதால் நமக்குத் தேவையான ஒராதி மணி 7 நிமிஷம் 57-க்கு பாகை கலையைக் கணிப்போம். மணி 8 நிமிஷம் 0-ல் இருந்து மணி 7 நிமிஷம் 56-யைக் கழிக்க, 4 நிமிஷம் வரும். இந்த 4 நிமிஷத்திற்கு 117 பாகை 55 கலையிலிருந்து 116 பாகை 57 கலையைக் கழிக்க வருகின்ற 58 கலை ஆகும். ஆகையால் மணி 7 நிமிஷம் 57-ல் இருந்து மணி 7 நிமிஷம் 56-யைக் கழிக்க வருகின்ற 1 நிமிஷத்திற்கு, 4 நிமிஷத்திற்கு 58 கலை விகிதம் கணிப்போமானால் 14½ கலை வரும். இந்த 14½ கலையை 116 பாகை 57 கலையுடன் கூட்ட பாகை 117 கலை 11½ வரும். ஆகையால் 7 மணி 57 நிமிஷத்திற்கு 117 பாகை 11½ கலை ஆகும். இந்த 117 பாகை 11½ கலையில் இருந்து அயனும்ச ஸ்புடமாகிய பாகை 21 கலை 54-யைக் கழிக்கப் பாகை 95 கலை 17½ வரும் இந்த ½ கலையை ஒரு கலையாகப் பாவிக்க 95 பாகை 17½ கலை என்பது 95 பாகை 18 கலை ஆகும். இந்த 95 பாகை 18 கலைதான் தசம மத்திம லக்கின ஸ்புடமாகும். இத்துடன் 6 ராசி அல்லது 180 பாகை கூட்ட வருகின்ற 275 பாகை 18 கலைதான் சதுர்த்த மத்திம லக்கின ஸ்புடமாகும்.

இப்பொழுது நாம் கணித்த உதய லக்கின ஸ்புடம், சதுர்த்த மத்திம லக்கின ஸ்புடம், அஸ்தமன லக்கின ஸ்புடம், தசம மத்திம லக்கின ஸ்புடம் ஆகிய இவைகளிலிருந்து துவாதச பாவச்சக்கிரம் அடியிற்கண்டபடி கணிப்போம். உதய லக்கின ஸ்புடம் பாகை 184 கலை 48 அஸ்தமன லக்கின ஸ்புடம் பாகை 4 கலை 48. சதுர்த்த மத்திம லக்கின ஸ்புடம் பாகை 275 கலை 18. தசம மத்திம லக்கின ஸ்புடம் பாகை 95 கலை 18.

		பாகை - கலை	
(1)	சதுர்த்த மத்திம லக்கினஸ்புடம்	275 - 18	
	உதயலக்கினஸ்புடம்	184 - 48	
	வித்தியாசம்	90 - 30	
	மூன்றில் ஒரு பங்கு (1-வது)	30 - 10	(1)
(2)	அஸ்தமன லக்கினஸ்புடம்	4 - 48	
	சதுர்த்த மத்திமலக்கினஸ்புடம்	275 - 18	
	வித்தியாசம்	89 - 30	✲
	மூன்றில் ஒன்று (2-வது)	29 - 50	(2)
(3)	தசமமத்திம லக்கினஸ்புடம்	95 - 18	
	அஸ்தமன லக்கினஸ்புடம்	4 - 48	
	வித்தியாசம்	90 - 30	
	மூன்றில் ஒருபங்கு (3-வது)	30 - 10	(3)
(4)	உதயலக்கினஸ்புடம்	184 - 48	
	தசமமத்திம லக்கினஸ்புடம்	95 - 18	
	வித்தியாசம்	89 - 30	
	மூன்றில் ஒன்று (4-வது)	29 - 50	(4)

மேலே வந்த நான்கு வித்தியாசங்களில் வித்தியாசங்கள் (1) (3) ம், (2) ம் (4) ஒன்ருய் இருப்பதைக் கவனிக்கவும். இப்படி ஒன்ருய் இல்லாவிட்டால் நாம் கணித்த கணிதத்தில் பிழை இருக்கின்றதென்று அறிந்து அந்த பிழையைத் திருத்தவேண்டும்.

பிறகு உதயலக்கினஸ்புடத்துடன் 1-வது வித்தியாசத்தின் 3-ல் ஒருபங்கை அடியிற்கண்டபடி 3 தரம் கூட்டவும். சதுர்த்த மத்திம லக்கினஸ்புடத்துடன் 2-வது வித்தியாசத்தின் 3-ல் 1 பங்கை 3 தரம் கூட்டவும். அஸ்தமன லக்கின ஸ்புடத்துடன் 3-வது வித்தியாசத்தின் 3-ல் 1 பங்கை 3 தரம் கூட்டவும். தசமலக்கினஸ்புடத்துடன் 4-வது வித்தியாசத்தின் 3-ல் 1 பங்கை 3 தரம் அடியிற்கண்டபடி கூட்டவும் இப்படிக்கூட்ட வருகின்ற ஸ்புடங்கள் துவாதச பாவஸ்புடங்கள் ஆகும்.

✲ இது பாகை 4 கலை 48 உடன் 360 பாகை கூட்டி 275 பாகை 18 கலையைக் கழிக்க வரும்.

பாகை — கலை பாகை — கலை

(1) உதயலக்கின ஸ்புடம் 184 - 48 (அதாவது)
(1-வது பாவஸ்புடம் 184 - 48)
1-வது 3-ல் ஒரு பங்கு 30 - 10
கூட்ட 214 - 58 (2-வது பாவஸ்புடம் 214 - 58)

(2) 1-வது 3-ல் ஒரு பங்கு 30 - 10
கூட்ட 245 - 8 (3-வது பாவஸ்புடம் 245 - 8)

(3) 1-வது 3-ல் ஒரு பங்கு 30 - 10
கூட்ட 275 - 18 (4-வது பாவஸ்புடம் 275 - 18)

(4) சதுர்த்தமமத்திம
லக்கினஸ்புடம் 275 - 18 (4-வது பாவஸ்புடம் 275 - 18)
2-வது 3-ல் ஒரு பங்கு 29 - 50
கூட்ட 305 - 8 (5-வது பாவஸ்புடம் 305 - 8)

(5) 2-வது 3-ல் ஒரு பங்கு 29 - 50
கூட்ட 334 - 58 (6-வது பாவஸ்புடம் 334 - 58)

(6) 2-வது 3-ல் ஒரு பங்கு 29 - 50
கூட்ட 364 - 48
அல்லது 4 - 48 (7-வது பாவஸ்புடம் 4 - 48)

(7) அஸ்தமனலக்கினஸ்புடம் 4 - 48 (7-வது பாவஸ்புடம் 4 - 48)
3-வது 3-ல் ஒரு பங்கு 30 - 10
கூட்ட 34 - 58 (8-து பாவஸ்புடம் 34 - 58)

(8) 3-வது 3-ல் ஒரு பங்கு 30 - 10
கூட்ட 65 - 8 (9-வது பாவஸ்புடம் 65 - 8)

(9) 3-வது 3-ல் ஒரு பங்கு 30 - 10
கூட்ட 95 - 18 (10-வது பாவஸ்புடம் 95 - 18)

(10) தசமமத்திய லக்கின
ஸ்புடம் 95 - 18 (10-வது பாவஸ்புடம் 95 - 18)

(11) 4-வது 3-ல்ஒருபங்கு 29 - 50
கூட்ட 125 - 8 (11-வது பாவஸ்புடம் 125 - 8)
4-வது 3-ல் ஒரு பங்கு 29 - 50
கூட்ட 154 - 58 (12-வது பாவஸ்புடம் 154 - 58)

12) 4-வது 3-ல்ஒரு பங்கு 29 - 50
கூட்ட 184 - 48 (1-வது பாவஸ்புடம் 184 - 48)

இவ்விதமாகத்தான் துவாதச பாவஸ்புடங்கள் அல்லது 12 பாவ ஸ்புடங்கள் அல்லது பாவசக்கிரம் கணிக்கவேண்டியது.

10-வது வாக்கியம் - ஜெனனகாலதெசை கணிதம்

இந்த வாக்கியத்தால் ஜெனனகாலத்தில் ஜென்மதெசையில் கெற்பச் செல்லுபோய் இருப்பு நின்ற தெசையை சுலபமாகக் கணிக்கலாம். சந்திரனுடைய ஸ்புடத்தை முதலில் கணித்துக்கொள்ள வேண்டியது. பிறகு 11-வது வாக்கியத்தில் சந்திரன் எந்த நட்சத்திரத்திலிருக்கின்றது என்பதை அறியவும். பிறகு அந்நட்சத்திரத்தில், அந்த நட்சத்திரம் முடிய இன்னம் செல்லாக வேண்டிய பாகை கலையை அறியவும். பிறகு சந்திரன் இருக்கும் நட்சத்திரத்திற்குரிய தெசையை 10-வது வாக்கியத்தால் அறியவும். பிறகு அந்த நட்சத்திரத்தில் செல்லாக வேண்டிய பாகை கலைக்கு நேராய் 10-வது வாக்கியத்தில் அந்த தெசை கிரகத்தின் கலத்தில் கொடுத்துள்ள வருஷம் மாதம் நாள் நாழிகையே அந்த தெசையில் இன்னம் செல்லாகவேண்டியகாலம் என்று அறியவும். இந்த வழியை அடியிற் கண்ட உதாரணத்தால் விளக்கிக்காட்டுவோம்.

உதாரணம் :-குழந்தை ஜெனன காலத்தில் சந்திரஸ்புடம் பாகை 118 கலை 10 ஆக இருந்தால் ஜெனன தெசை என்னவென்பதையும் அந்த தெசையில் கெற்பச்செல்லுபோய் நின்ற வருஷம் மாதம் நாள் நாழிகையும் கணிப்போம். 11-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதம் பின்னால் சொல்லப்பட்டிருக்கிறது. அதை இங்கு ஒருதரம் முன்னமே படிக்கவேண்டியது. அதைப் படித்தால் சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118 கலை 10 ஆக இருந்தால் சந்திரன் அப்போது ஆயிலிய நட்சத்திரத்தில் இருப்பதாக ஏற்படும். ஆயிலிய நட்சத்திரம் பாகை 120 கலை 0-த்தில் முடிவு பெறுவதால் பாகை 120 கலை 0-த்திலிருந்து சந்திரனுடைய ஸ்புடமாகிய பாகை 118 கலை 10-யைக் கழிக்கப் பாகை 1 கலை 50 வரும். இந்த பாகை 1 கலை 50 தான் ஆயிலிய நட்சத்திரத்தில் இருப்பு 10-வது வாக்கியத்தில் ஆயிலிய நட்சத்திரத்திற்குப் புதன் தெசை என்று சொல்லி இருப்பதைக் கவனிக்கவும். ஆகையால் ஜெனனகாலத்தில் புதன் தெசை என்று ஏற்படும். ஆயிலிய நட்சத்திரத்தில் இருப்பு பாகை 1 கலை 50. இதற்குரிய அளவு புதன் தெசையில் எவ்வளவு என்பதை அடியிற்கண்டபடி கணிக்கவும்.

			ஷூ மீ' நாள் நாழி
பாகை 1 – 0 கலைக்கு	புதன் என்ற கலத்தில்		1—3 – 9— 0
பாகை 0 – 50	...		...1 – 0 – 22 – 30

கூட்டபாகை 1-50கலைக்கு மொத்தம் ஷூ 2 மீ' 4 நாள் 1 நாழிகை 30 வரும். ஆயிலியத்தில் பாகை 1 கலை 50 இருப்பு ஆன படியால் இதற்குறிய ஷூ 2 மீ' 4 நாள் 1 நாழிகை 30 தான் ஜெனன காலத்தில் புதன் தெசை இருப்பு என்று அறியவும். ஆகையால் ஜெனன காலத்தில் புதன் தெசையில் கெற்பச்செல்லுபோய் இருப்பு நின்ற ஷூ 2 மீ' 4 நாள் 1 நாழிகை 30 ஆகும்.

11-வது வாக்கியம் இராசி, நட்சத்திர, நாவம்ச திரேகாண ஸ்புடம்:-

முதலில் 1, 2, 3 என்ற கலங்களைப்பற்றி கவனிப்போம். மேஷ ராசி என்பது அசுவனி 1-வது பாதம் முதல் கிருத்திகை 1-வது பாதம் வரையிலும் உள்ளது என்று ஏற்படும் இவ்விதமே ரிஷப ராசி என்பது கிருத்திகை 2 முதல் மிருகசீரஷம் 2 வரையிலும் உள்ளது. என்று ஏற்படும் இவ்விதமே மற்ற எல்லா ராசிகளுக்கும் நட்சத்திர பாதம் அறியவும்.

மேலும் ஒரு ராசியினுடைய முடிவு அடுத்த ராசியின் ஆரம்பம் என்றும், ஒரு ராசியினுடைய ஆரம்பம் முந்தியுள்ள ராசியினுடைய முடிவு என்றும் எப்பொழுதும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டியது. இவ்விதமாகவே ஒரு நட்சத்திரத்தினுடைய முடிவு அடுத்த நட்சத்திரத்தினுடைய ஆரம்பம் என்றும், ஒரு நட்சத்திரத்தினுடைய ஆரம்பம் முந்தியுள்ள நட்சத்திரத்தினுடைய முடிவு என்றும் எப்பொழுதும் அறியவேண்டும். உதாரணமாக ரிஷப ராசியினுடைய முடிவு மிதுனராசியினுடைய ஆரம்பமாகும். ரிஷப ராசியினுடைய ஆரம்பம் மேஷராசியினுடைய முடிவாகும். (12-வது வாக்கியத்தைப்பார்க்கவும்) இவ்விதமே பரணியின் முடிவு கிருத்திகையின் ஆரம்பமாகும். பரணியின் ஆரம்பம் அசுவனியின் முடிவாகும். மேலும் மேஷத்திற்கு எதிரில் 4, 5, கலங்களில் பாகை 0 கலை 0 என்று போட்டிருக்கிறது. அதாவது மேஷராசி ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 0 கலை 0 என்பதாம். ரிஷபராசிக்கு எதிரில் 4, 5-வது கலங்களில் பாகை 30 கலை 0 என்று போடப்பட்டிருக்கின்றது. அதாவது ரிஷபராசி ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 30 கலை 0 என்பதாம், ரிஷபராசியினுடைய ஆரம்பம் அந்த ராசிக்கு

முந்தியுள்ள ராசியாகிய மேஷ ராசியின் முடிவு என்று மேலே சொல்லிய விதியால் ஏற்படுவதால் மேஷ ராசியின் முடிவின் ஸ்புடம் பாகை 30 கலை 0 என்று ஏற்படும். அதாவது மேஷ ராசியின் ஸ்புடம் பாகை 0 கலை 0 முதல் பாகை 30 கலை 0 வரையிலும் என்பதாம். இவ்விதமாகவே ரிஷப ராசியின் ஸ்புடம் பாகை 30 கலை 0 முதல் பாகை 60 கலை 0 வரையிலும் என்பதாம். மிதுன ராசியின் ஸ்புடம் பாகை 60 கலை 0 முதல் பாகை 90 கலை 0 வரையிலும் என்பதாம். இவ்விதமாகவே மற்ற ராசிகளுக்கும் ஸ்புடம் அறியவும்.

(2) மேலும் அசுவனிக்கு எதிரில் 4, 5-வது கலங்களில் பாகை 0 கலை 0 என்று போட்டிருக்கிறது. இதனால் அசுவனி ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 0 கலை 0 என்பதாம். பரணிக்கு எதிரில் பாகை 13 கலை 20 என்று போட்டிருப்பது பரணி ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 13 கலை 20 என்பதாம். பரணியின் ஆரம்பம் அசுவனியின் முடிவு என்று முந்தி சொல்லிய விதியால் ஏற்படுவதால் பரணியின் ஆரம்ப ஸ்புடமாகிய பாகை 13 கலை 20 அசுவனியின் முடிவின் ஸ்புடமாகும். அதாவது அசுவனியின் ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 0 கலை 0 என்றும் அசுவனியின் முடிவிற்கு ஸ்புடம் பாகை 13 கலை 20 என்றும் ஏற்படும். அதாவது அசுவனி நட்சத்திரத்தின் ஸ்புடம் பாகை 0 கலை 0 முதல் பாகை 13-20 வரையிலும் என்று ஏற்படும். இவ்விதமே பரணியின் ஸ்புடம் பாகை 13 கலை 20 முதல் பாகை 26 கலை 40 வரையிலும், கிருத்திகையின் ஸ்புடம் பாகை 26 கலை 40 முதல் பாகை 0 கலை 0 வரையிலும், ரோகிணியின் ஸ்புடம் பாகை 40 கலை 0 முதல் பாகை 53 கலை 20 வரையிலும் என்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற நட்சத்திரங்களின் ஸ்புடம் அறியவும்.

(3) ஒவ்வொரு நட்சத்திரத்தையும் நான்கு சம பாகமாகப் பங்கிட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு பாகத்திற்கும் நட்சத்திரப் பாதம் அல்லது பாதம் என்று பெயர். ஒரு பாதத்தினுடைய முடிவு அடுத்த பாதத்தினுடைய ஆரம்பமாகும். ஒரு பாதத்தினுடைய ஆரம்பம் அதற்கு முந்தியுள்ள பாதத்தின் முடிவாகும். அசுவனியின் 1-ம் பாதத்தின் ஸ்புடம் பாகை 0 கலை 0 முதல் பாகை 3 கலை 20 வரையிலும் என்பதாம். இவ்விதமாகவே அசுவனியின் 2-ம் பாதத்தின் ஸ்புடம் பாகை 3 கலை 20 முதல் பாகை 6 கலை 40

வரையிலும் என்பதாம். இவ்விதமாகவே ரோகிணியின் 4ம் பாதத்தின் ஸ்புடம் பாகை 50 கலை 0 முதல் பாகை 53 கலை 20 என்பதாம். ரேவதியின் 3-ம் பாதத்தின் ஸ்புடம் பாகை 353 கலை 20 முதல் பாகை 356 கலை 40 வரையிலும் என்பதாம்.

இந்த வாக்கியத்தின் உபயோகம் அடியிற்கண்ட உதாரணத்தால் அறியலாம்.

(4) ஒரு குழந்தையின் ஜெனன காலத்தில் சூரியனுடைய ஸ்புடம் பாகை 167 கலை 2-ம் குருவினுடைய ஸ்புடம் பாகை 28 கலை 17-ம் சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118 கலை 10-ம் ஆனால் இந்த கிரகங்கள் ஜெனன காலத்தில் எந்த ராசியில் எந்த நட்சத்திரத்தில் எந்த நட்சத்திரப் பாதத்தில் இருக்கின்றன என்பதை அறிவோம். முதலில் குருவை எடுத்துக் கொள்வோம். குருவினுடைய ஸ்புடம் பாகை 28 கலை 17. இந்த 11-வது வாக்கியத்தில் பார்ப்போமானால் மேஷ ராசிக்குரிய பாகை 0 கலை 0-க்கு மேல் பாகை 30 கலை 0-க்குள் குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28 கலை 17 இருப்பதால் குரு மேஷ ராசியில் இருக்கின்றது என்று ஏற்படுகிறது. மேலும் கிருத்திகை நட்சத்திரத்தின் 1-வது பாதத்தின் ஸ்புடமாகிய பாகை 26 கலை 40-க்கு மேல் பாகை 30 கலை 0-க்குள் குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28 கலை 17 இருப்பதால் குரு கிருத்திகை நட்சத்திரத்தின் 1-வது பாதத்தில் இருக்கிறதென்று ஏற்படுகின்றது. அதாவது குரு மேஷ ராசியில் கிருத்திகை நட்சத்திரத்தின் 1-ம் பாதத்தில் இருக்கிறதென்று ஏற்படுகின்றது,

(5) பிறகு சூரியனை எடுத்துக்கொள்வோம். சூரியனுடைய ஸ்புடம் பாகை 167 கலை 2. இந்த 11-வது வாக்கியத்தில் பார்ப்போமானால் சூரியன் கன்னியா ராசியில் அஸ்த நட்சத்திரத்தின் 3-ம் பாதத்தில் இருக்கிறதென்று ஏற்படும்.

(6) பிறகு சந்திரனை எடுத்துக்கொள்வோம். சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118 கலை 10. இந்த 11-வது வாக்கியத்தில் பார்ப்போமானால் கடக ராசியில் ஆயில்ய நட்சத்திரத்தின் 4-வது பாதத்தில் சந்திரன் இருப்பதாக ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்கள் இருக்கும் ராசி, நட்சத்திரப் பாதம் அறியவேண்டியது.

12-வது வாக்கியம் இராசிச் சக்கிரம்

இந்த வாக்கியதிதில் 12 இராசிகளின் பெயரும், அவைகளின் ஆரம்பத்தின் ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேஷ ராசியில் ஆரம்பம் பாகை 0 கலை 0. அதன் முடிவு பாகை 30 கலை 0. இவ் விதமாகவே ரிஷப ராசியின் ஆரம்பம் பாகை 30 கலை 0. அதன் முடிவு பாகை 60 கலை 0. இந்த வாக்கியத்தில் இராசி சக்கிரத்தில் நவக்கிரகங்களை வெகு சுலபமாகப் போடலாம். உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனன காலத்தில் குரு பாகை 28 கலை 17-ல் இருந்தால் அது ராசிச் சக்கிரத்தில் எந்த ராசியில் இருக்கின்றது என்பதை அறிவோம். குருவினுடைய ஸ்புடம் பாகை 28 கலை 17 ஆனதாலும் இது பாகை 0 கலை 0-க்கு மேற்பட்டு பாகை 30 கலை 0-க்குள் இருப்பதால் குரு மேஷ ராசியில் இருக்கிறது என்று ஏற்படு கின்றது. இந்த விதமாகவே சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118 கலை 10 ஆனுல் சந்திரன் கடக ராசியில் இருக்கின்றதென்று ஏற்படு கின்றது. இவ்விதமாகவே மற்ற கிரகங்கள் இருக்கும் ராசியை அறியவேண்டியது.

13-வது வாக்கியம் நவாம்ச சக்கிரம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களை நவாம்சை சக்கிரத்தில் வெகு சுலபமாய் போடலாம். நவாம்சை என்பது ஒரு ராசியை ஒன்பது சம பாகங்களாகப் பங்கிட வருகின்ற பாகமாகும். கிரகங்கள் இருக் கின்ற நவாம்சைகளைக் காட்டுகிற சக்கிரத்திற்கு நவாம்சை சக்கிரம் என்று பெயர். இந்த வாக்கியத்தில் நவாம்சைகளின் ஆரம்பத்தின் ஸ்புடமும் முடிவின் ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக 1-வது வரிசை எண்ணுக்கு நேராய் மேஷ நவாம்சை யின் ஆரம்பம் பாகை 0 கலை 0 என்றும், முடிவு பாகை 3 கலை 20 என்றும் போட்டிருக்கின்றது. அதாவது ஒரு கிரகத்தின் ஸ்புடம் பாகை 0 கலை 0-க்கு மேற்பட்டு பாகை 3 கலை 20-க்குள் இருந்தால் அந்த கிரக மேஷம் நவாம்சையில் இருக்கின்றதென்று ஏற்படும். உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனன காலத்தில் சூரியனுடைய ஸ்புடம் பாகை 167 கலை 2, சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118 கலை 10. குருவினுடைய ஸ்புடம் பாகை 28 கலை 17 என்று வைத்துக் கொண்டு இந்த கிரகங்கள் இருக்கும் நவாம்சை ராசியை அறிவோம். முதலில் குருவை எடுத்துக்கொள்வோம். குருவினுடைய ஸ்புட மாகிய பாகை 28 கலை 17 என்பது 9-வது எண்ணுக்கு நேரா

யுள்ள பாகை 26 கலை 40-க்கு மேற்பட்டு பாகை 30 கலை0-க்குள் பட்டு இருப்பதால் இந்த 9-வது எண்ணுக்கு நேராயுள்ள தனுசு நவாம்சையில் குரு இருக்கின்றதென்று ஏற்படுகிறது. இவ்விதமாக சூரியனுடைய ஸ்புடமாகிய பாகை 167-2 கலையானது 51-வது எண்ணுக்கு எதிரிலுள்ள பாகை 166-40 கலைக்கு மேற்பட்டு பாகை 170-0 கலைக்குள் இருப்பதால் இந்த 51-வது எண்ணுக்கு நேரா யுள்ள மிதுன நவாம்சையில் சூரியன் இருக்கின்றதென்று ஏற்படும். இவ்விதமாக சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118 கலை 10 ஆனதால் 36-வது எண்ணுக்கு நேராயுள்ள மீன நவாம்சையில் சந்திரன் இருக்கின்றதென்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் நவாம்சையையும், லக்கினத்தினுடைய நவாம்சையையும் அறியவும்

14-வாக்கியம் திரேகாணச்சக்கிரம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களைத் திரேகாணச் சக்கிரத்தில் வெகு சுலபமாகப் போடலாம். திரேகாணம் என்பது ஒரு ராசியை 3 சம பாகமாமப் பங்கிட வருகின்ற பாகமாகும் கிரகங்கள் இருக் கின்ற திரேகாணத்தைக் காட்டுகிற சக்கிரத்திற்குத் திரேகாணக் சக்கிரம் என்று பெயர். இந்த வாக்கியத்தில் திரேகாணங்களின் ஆரம்பத்தின் ஸ்புடமும் முடிவின் ஸ்புடமும், கொடுக்கப்பட்டிருக் கின்றன. உதாரணமாக ஒரு குழந்தையின் ஜனன காலத்தில் குரு வின் ஸ்புடம் பாகை 28 கலை 17 ஆனால் அதனுடைய திரேகாணம் என்ன என்பதை அறிவோம். குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28-17 கலை என்பது இந்த வாக்கியத்தில் 3-வது எண்ணுக்கு நேரா யுள்ள பாகை 20-0 கலைக்கு மேற்பட்டு பாகை 30-0 கலைக்குள் இருப்பதால் இந்த 3-வது எண்ணுக்கு நேராயுள்ள தனுசு திரே காணத்தில் குரு இருக்கின்றதென்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் திரேகாணம் அறியவும். மேலும் 5-வது கலத்தில் 1,2,3 என்று அடிக்கடி போடப்பட்டிருக்கிறதைக் கவனிக்கவும். இதனால் 1-வது, 2வது, 3-வது என்று சொல்லப்பட்ட பாகங்களில் எந்த பாகத்தில் அல்லது திரேகாணத்தில் கிரகங்கள் இருக்கின்றன வென்பதை அறியலாம். இந்த வாக்கியத்தில் வரிசை எண் 3-க்கு நேராய் 5-வது காலத்தில் 3 இருப்பதால் குரு 3-வது திரேகாணத் தில் அல்லது கடைசி திரேகாணத்தில் இருக்கின்றது என்று ஏற் படும். 1-வது, 2-வது, 3-வது திரேகாணத்தால் அறிய வேண்டிய பலம் 25-வாக்கியத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

15-வது வாக்கியம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களைத் துவாதசாம்ச சக்கிரத்தில் வெகு சுலபமாகப் போடலாம். துவாதசாம்சம் என்பது ஒரு ராசியை 12 சம பாகமாகப் பங்கிட வருகின்ற பாகமாகும். கிரகங்கள் இருக்கின்ற துவாதசாம்சத்தைக் காட்டுகின்ற சக்கிரத்திற்கு துவாதசாம்ச சக்கிரம் என்று பெயர். இந்த வாக்கியத்தில் துவாத சாம்சங்களின் ஆரம்பத்தின் ஸ்புடமும், முடிவின் ஸ்புடமும் கொடுக் கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனன காலத்தில் குருவினுடைய ஸ்புடம் பாகை 28 கலை 17 ஆனால் அதனுடைய துவாத சாம்சம் என்னவென்பதை அறிவோம். குரு வினுடைய ஸ்புடமாகிய பாகை 28 கலை 17 என்பது இந்த வாக்கி யத்தில் 12-வது எண்ணுக்கு நேராயுள்ள பாகை 27-30 கலைக்கு மேற்பட்டு பாகை 30-0 கலைக்குள் இருப்பதால் இந்த 12-வது எண்ணுக்கு நேராயுள்ள மீன துவாதசாம்சத்தில் குரு இருக்கின்ற தென்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் துவாத சாம்சம் அறியவும்.

16வது வாக்கியம் ஓரை வாக்கியம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் ஓரையை வெகு சுலபமாக அறியலாம். ஓரை என்பது ஒரு ராசியை இரண்டு சமபாகங்களாகப் பங்கிட வருகின்ற பாகமாகும். ஒற்றை ராசியாகிய ஆண் ராசியில் முதல் பாகத்திற்குச் சூரியனுடைய ஓரையென்றும், இரண்டாம் பாகத்திற்கு சந்திரனுடைய ஓரையென்றும், இரட்டை ராசியாகிய பெண் ராசியின் முதல் பாகத்திற்குச் சந்திரனுடைய ஓரையென்றும் இரண்டாவது பாகத்திற்குச் சூரியனுடைய ஓரையென்றுஞ் சொல் லப்படும். கிரகங்கள் இருக்கின்ற ஓரையைக் காட்டுகின்ற சக்கிரத் திற்கு ஓரைச் சக்கிரமென்று பெயர். இந்த வாக்கியத்தில் ஓரை களின் ஆரம்பத்தின் ஸ்புடமும், முடிவின் ஸ்புடமும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனன காலத்தில் குருவினுடைய ஸ்புடம் பாகை 28 கலை 17 ஆனால் அதனு டைய ஓரை யென்ன யென்பதை அறிவோம். குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28 கலை 17 யென்பது இந்த வாக்கியத்தில் 2-வது எண்ணுக்கு நேராயுள்ள பாகை 15-0 கலைக்கு மேற்பட்டு பாகை 30-0 கலைக்குள் இருப்பதால் இந்த 2-வது எண்ணுக்கு நேராயுள்ள சந்திரன் ஓரையில் குரு இருக்கின்றதென்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் ஓரையை அறியவும்.

17-வது வாக்கியம் திரிம்சாம்சாதிபதி கணிதம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் திரிம்சாதிபதியை வெகு சுலபமாக அறியலாம். திரிம்சாம்சம் என்பது ஒரு இராசியை 30 சம பாகமாகப் பங்கிட்டு அதிலிருந்து கிரகங்களின் நிலையை அறிவது என்பதாம். கிரகங்கள் இருக்கின்ற திரிம்சாம்சாதிபதியைக் காட்டுகின்றதற்கு திரிம்சாம்சம் என்று பெயர். உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனன காலத்தில் குருவினுடைய ஸ்புடம் பாகை 28 கலை 17 ஆனல் அதனுடைய திரிம்சாம்சாதிபதியை அறிவோம். குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28 கலை 17 என்பது இந்த வாக்கியத்தில் 5-வது எண்ணிக்கு நேராயுள்ள பாகை 25-0 கலைக்கு மேற்பட்டு பாகை 30-0 கலைக்குள் இருப்பதால் இந்த 5-வது எண்ணுக்கு நேரயுள்ள சுக்கிரன் தான் இந்த குருவின் திரிம்சாம் சாதிபதியாகின்றது என்று அறியவும். அதாவது குரு கிரகம் சுக்கிர திரிம்சாம்சையில் இருக்கின்றது என்பதாம். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் திரிம்சாம்சாதிபதியை அறியவும்.

18-வது வாக்கியம் சப்தமாம்ச சக்கிரம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் சப்தமாங்கிசம் வெகு சுலப மாக தெரிந்துகொள்ளலாம். சப்தமாங்கிசம் என்பது ஒரு ராசியை 7 சம பாகமாகப் பங்கிட வருகின்ற பாகமாகும். கிரகங்கள் இருக் கின்ற சப்தமாங்கிசத்தைக் காட்டுகின்ற சக்கிரத்திற்குச் சப்தமாம்ச சக்கிரம் என்று பெயர் உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனன காலத்தில் குருவின் ஸ்புடம் பாகை 28 கலை 17 ஆனல் அதனுடைய சப்தமாம்சம் என்னவென்பதை தெரிந்துகொள்ளுவோம். குருவினு டைய ஸ்புடமாகிய பாகை 28 கலை 17 என்பது இந்த வாக்கியத்தில் 7-வது எண்ணுக்கு நேரயுள்ள பாகை 25 கலை 43-க்கு மேற்பட்டு பாகை 30 கலை 0-க்குள் இருப்பதால் இந்த 7-வது எண்ணுக்கு நேரயுள்ள, துலா சப்தமாம்சத்தில் குரு இருக்கின்றதென்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் சப்தமாம்சம் அறியவும்.

19வது 20வது வாக்கியங்கள் கிரக திருக்பலம்

இந்த வாக்கியங்களுக்கு நவக்கிரக திருக்பலம் அல்லது கிரகங் களின் பார்வையின் அளவைத் தெரிவிக்கும் வாக்கியங்கள் என்று பெயர். எல்லா கிரகங்களும் தாங்கள் இருக்கின்ற ராசிக்கு 7-ஆம் ராசியைப் பார்க்கின்றனவென்றும், செவ்வாய் மேற்சொல்லிய

7-ஆம் வீட்டையும் 4, 8-ஆம் வீட்டையும், குரு 7, 5, 9-ஆம் வீட்டையும், சனி 7, 3, 10-ஆம் வீட்டையும் பார்க்கின்றனவென்றும், செவ்வாய், குரு, சனி இவர்கள் தவிர மற்ற கிரகங்களுக்கு 7-ஆம் வீடு தவிர மற்ற வீடுகளுக்குப் பார்வை இல்லை என்றும் அநேக புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இது தோராயமானது. உண்மையிலே எல்லா கிரகங்களும் 11, 12, 1-ஆம் வீடுகளில் தவிர மற்ற எல்லா வீடுகளையும் பார்க்கின்றனவென்றும் இந்த வீடுகளைக் கிரகங்கள் நோக்கும் பார்வையின் அளவு சில இடங்களில் அதிகப்பட்டுக்கொண்டும் மற்ற இடங்களில் குறைந்து கொண்டும் இருக்கின்றனவென்றும் பழைய நூல்களிலும், வானசாஸ்திரத்திலும் ஜோதிடசாஸ்திரத்திலும் வல்லவராயிருந்த இந்தியாதேசத்துகிரந்த கர்த்தர்கள் சொல்லி இருக்கின்றார்கள். இதை ஒவ்வொருவரும் நம்பித்தான் தீரவேண்டுமென்று இத்தவாக்கியங்களால் நன்றாய் ஏற்படும். மேலும் பிருஹத் ஜாதகம் 2-வது அத்தியாயம் 13-வது சுலோகத்தில் எல்லா கிரகங்களும் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து 3, 10 வீடுகளைக் கால் பார்வையுடனும், 5,9-வது வீடுகளை அரை பார்வையுடனும், 4, 8-வது வீடுகளை முக்காற்பார்வையுடனும் 7-வது வீட்டை முழு பார்வையுடனும் பார்க்கின்றனவென்றும், செவ்வாய் 4, 8-வது வீடுகளை முழுபார்வையுடனும், குரு 5, 9-வது வீடுகளை முழுபார்வையுடனும், சனி 3, 10-வது வீடுகளை முழு பார்வையுடனும், பார்க்கின்றனவென்றும் சொல்லி இருக்கின்றது. ஆகையால் ஒரு கிரகத்தின் பார்வையின் அளவு வீடுகளின் தூரத்திற்குத் தகுந்தாற்போல வித்தியாசப்படுகின்றது என்று ஏற்படுகின்றது. இந்த வித்தியாசத்துடனுள்ள எல்லாக்கிரகங்களினுடைய பார்வையின் அளவு இந்த 19-வது வாக்கியத்தில் ஸ்புடரீதியாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கிரகங்களின் பார்வை முதலிய எவ்வித பலன்களையும் ரூபம் என்று சொல்லப்பட்ட ஒரு அளவைக் கொண்டு அளப்பது வழக்கம். எல்லா பலங்களின் முழு பலம் இத்தனை ரூபம் என்று சொல்லப்படும். இந்தப் புத்தகத்தில் 1 ரூபத்தை 100 சமபாகமாகப் பங்கிட்டு 1 ரூபத்திற்கு 100 பங்கு என்று கணக்கிட்டு 100-ல் இத்தனை பங்கு என்பதைக் கொடுத்திருக்கின்றேன். பார்வையின் அளவு நூற்றில் இத்தனை பங்கு என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. எல்லாகிரகங்களும் 3,10-வதுவீடுகளைக்கால்பார்வையுடன் பார்க்கின்றன என்று மேலே சொல்லி இருக்கின்றது. 3,10-வது வீடு

என்பது 3-வது வீடு ஆரம்பிக்கும் இடம் என்றும், அர்த்தங் கொள்ள வேண்டியது. 3-வது வீட்டின் ஆரம்பத்தின் ஸ்புடம் பாகை 60-கலை 0 ஆகும். இந்த வாக்கியத்தில் 60-பாகைக்கு எதிரில் 25 என்ற எண் இருப்பதைக் கவனிக்கவும். 25 என்பது நூற்றில் 25 பங்கு என்று இங்கு அர்த்தமாகும். அதாவது 60-பாகைக்கு 100-ல் 25 பங்கு பார்வை என்பதாம். 100-ல் 25 பங்கு கால் பாகமான தால் 60 பாகையின் அளவு கால் பாகம் என்று ஏற்படும். இவ்வித மாகவே 10-வது வீட்டின் ஆரம்பத்தின் ஸ்புடம் பாகை 270 கலை 0 ஆகும். இந்த வாக்கியத்தில் 270-பாகைக்கு எதிரில் 25 இருப்ப தைப் பார்க்கவும். அதாவது 270-பாகைக்குப் பார்வையின் அளவு கால்பாகம் என்பதாம். மேலும் எல்லாக் கிரகங்களுக்கும் 5, 9-வது வீட்டில் அரை பார்வை என்று மேலே சொல்லி இருக்கின்றது; அதாவது பாகை 120, 240 இவைகளில் பார்வை அரைபாகம் என்று ஏற்படும் இந்த வாக்கியத்தில் 120-வது பாகை, 240-வது பாகை இவைகளுக்கு எதிரில் 50 என்ற எண் இருப்பதைக் கவனிக் கவும். 50 என்பது 100-ல் 50 பங்கு என்று தெரிவிக்கும். 100-ல் 50 பங்கு அரை பாகமானதால் பாகை 120, 240 இவைகளில் பார்வையின் அளவு அரைபாகம் என்று இந்த வாக்கியத்தால் ஏற்படும். இவ்விதமாகவே 4, 8-வது வீடுகளின் ஆரம்பமாகிய பாகை 90, 210 இவைகளுக்கு எதிரில் வாக்கியத்தில் 75, இருப்ப தால் பார்வையின் அளவு 100-ல் 75 அல்லது முக்கால் பங்கு என்று ஏற்படும். மேலும் 7-வது வீடு ஆரம்பமாகிய பாகை 180-க்கு எதிரில் வாக்கியத்தில் 100 இருப்பதால் பார்வையின் அளவு 100-ல் 100 பங்கு அல்லது முழுபாகம் என்று ஏற்படும், ஒவ்வொரு வீட்டிலும் 30-பாகைகள் அடங்கி இருப்பதால் மேற்கண்ட வீடு களின் ஆரம்ப பாகைகளுக்கு மாத்திரம் பார்வையின் அளவைக் கொடுக்காமல் 30-பாகைகளில் ஒவ்வொரு பாகைக்கும் பார்வையின் அளவு இந்த வாக்கியத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் எல்லா கிரகங்களுக்கும் 4, 8-வது வீட்டில் முக்கால் பார்வை என்று சொல்லிவிட்டு உடனே செவ்வாயிற்கு மாத்திரம் 4, 8-வது வீட்டில் முழுபார்வை என்று சொன்னதால் இந்த 4, 8-வது வீட்டில் செவ்வாயிற்கு மாத்திரம் கால் பார்வை அதிக மாக இருக்கின்றது என்று ஏற்படுகின்றது. இவ்விதமாகவே குருவிற்கு 5, 9-ல் அரைபார்வை எல்லா கிரகத்தை விட அதிகமாக

இருக்கின்றதென்றும், சனியிற்கு மாத்திரம் 3, 10-ல் எல்லா கிரகங்களை விட முக்கால் பார்வை அதிகமாக இருக்கின்ற தென்றும் ஏற்படுகின்றது. இந்த அதிகமான பார்வைக்குச் சேபம் அல்லது விசேஷ பார்வை என்று பெயர். முந்தி சொல்லிய எல்லா கிரகங் களினுடைய பார்வைக்குச் சாதாரணபார்வை என்று பெயர். இந்த ''சேபத்தின்'' அளவை இந்த 20-வது வாக்கியத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்றது. உதாரணமாக 75-வது பாகைக்கு எதிரில் செவ்வாய் என்ற கலத்தின் கீழ் 12ம், குரு என்ற கலத்தின் கீழ் 0-ம், சனி என்ற கலத்தின் கீழ் 38-ம் கொடுத்திருப்பதால், 75 பாகையில் செவ்வாயின் சேபம் 100-ல் 12 பாகம் என்றும், குருவின் சேபம் பூஜ்ஜியம் என்றும் சனியின் சேபம் 100-ல் 38 பாகம் ஏற்படும். செவ்வாயின் பார்வை அறிய வேண்டுமானால் அதனுடைய சாதாரண பார்வையையும் விசேஷ பார்வையையும் கூட்ட வேண்டி யது. அப்படிக் கூட்டவருகின்ற பார்வையின் அளவே செவ்வா யினுடைய மொத்த பார்வை யாகும். இவ்விதமாகவே குரு சனி இவர்களுக்கும் சாதாரண பார்வையையும் விசேஷ பார்வையையும் கூட்டி மொத்த பார்வையின் அளவை அறியவேண்டியது.

கிரகங்கள் தங்களுக்குள் ஒன்றுக்கொன்றைப் பார்த்துக் கொள்ளும். ஒரு கிரகம் மற்றொரு கிரகத்தைப் பார்ப்பதற்குக் கிரக திருக்பலம் என்று பெயர். கிரகங்கள் இராசிகளைப் பார்க்கும். ஒரு கிரகம் ஒரு ராசியைப் பார்ப்பதற்கு இராசி திருக்பலம் என்று பெயர். ஒரு கிரகம் மற்றொரு கிரகத்தை எவ்வளவு பார்வையுடன் பார்க் கின்றது என்று அறிய வேண்டுமானால் பார்க்கப்படும் கிரகத்தின் ஸ்புடத்திலிருந்து பார்க்கின்ற கிரகத்தின் ஸ்புடத்தைக்கழித்து வருகின்ற பாகைக்கு இந்த வாக்கியத்தில் அளவு அறிய வேண்டியது. உதாரணமாக சூரியனுடைய ஸ்புடம் பாகை 167-கலை 2 என்றும் குருவினுடைய ஸ்புடம் பாகை 28-கலை 17 என்றும் வைத்துக் கொண்டு (1) சூரியன் குருவைப் பார்க்கும் பார்வையின் அளவை யும், (2) குரு சூரியனைப் பார்க்கும் பார்வையின் அளவையும் கணிப்போம். (1) இங்கு சூரியன் பார்க்கின்ற கிரகமாகவும் குரு பார்க்கப்படும் கிரகமாகவும் இருப்பதால் குருவின் ஸ்புடமாகிய பாகை 28-கலை 17-ல் இருந்து சூரியனுடைய ஸ்புடமாகிய பாகை 167-கலை 2-யைக் கழிக்க வேண்டியது. பாகை 28-கலை 17-யை விட பாகை 167-கலை 2 பெரியதாக இருப்பதால் முந்தி பொது விதி

யாகச் சொன்ன பிரகாரம் ஒரு மண்டலத்திற்குரிய பாகையாகிய 360 பாகையை 28 பாகை 17-கலையுடன் கூட்ட 388 பாகை 17-கலை வரும். இதில் இருந்து பாகை 167-கலை 2-யைக் கழிக்க பாகை 221-15 கலை வரும். அதாவது குரு சூரியனை விட்டு 221 பாகை 15-கலை விலகி இருக்கின்றது. கணிதத்தில் அரையும் அரைக்கு மேற் பட்டதையும் ஒன்றாக பாவிப்பதும், அரைக்குக் குறைந்ததைத் தள்ளி விடுவதும் வழக்கம். இங்கு 15 கலை அரைபாகைக்குக் குறைந்த தால் இதைத் தள்ளிவிட மொத்தத்தில் 221 பாகை வரும். இந்த 19-வது வாக்கியத்தில் 221-வது பாகைக்கு எதிரில் 66 என்ற எண் இருக்கின்றது. ஆகையால் சூரியன் குருவை 100-ல் 66 பங்கு பார்வையுடன் பார்க்கின்றது என்று ஏற்படுகின்றது.

(2) இங்கு குரு பார்க்கின்ற கிரகமாகவும் சூரியன் பார்க்கப் படும் கிரகமாகவும் இருப்பதால் சூரியனுடைய ஸ்புடமாகிய பாகை 167 கலை 2-லிருந்து குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28-17 கலையைக் கழிக்க பாகை 138-45 கலை வரும். ஆகையால் சூரியன் குருவை விட்டு பாகை 138-45 கலை விலகி இருக்கின்றது என்று ஏற்படுகின்றது. கலை 45 என்பது அரை பாகைக்கு மேற்பட்டதால் அதை ஒரு பாகையாக ஆக்கிக் கொண்டு 138 பாகையுடன் கூட்ட மொத்தம் 139 பாகை வரும். இந்த 19-வது வாக்கியத்தில் 139-வது பாகைக்கு எதிரில் 18 இருக்கின்றது. ஆகையால் குருவின் சாதாரண பார்வையின் அளவு 100-ல் 18 பாகம் என்று ஏற்படும். மேலும் இந்த 20-வது வாக்கியத்தில் 139 பாகைக்கு எதிரில் குரு என்ற கலத்தில் 18 என்ற எண் இருக்கின்றது ஆகையால் குருவின் விசேஷ பார்வையின் அளவு 100-ல் 18 பாகம் என்று ஏற்படும். சாதாரண பார்வையாகிய 18-யையும் விசேஷ பார்வையாகிய 18 யையும் கூட்ட வருகின்ற 36 பாகந்தான் குருவின் மொத்த பார்வையின் அளவாகும். ஆதலால் சூரியனைக் குரு 100-ல் 36 பங்கு பார்வையுடன் பார்க்கின்றது என்று ஏற்படுகின்றது. இவ்விதமாகவே கிரகங்கள் தங்களுக்குள் ஒன்றுக் கொன்றைப் பார்க்கும் பார்வையின் அளவை அறிய வேண்டியது.

பாவதிருக்பலம் கணிக்க:- இந்த 19-வது, 20-வது வாக்கியங் களின் உதவியால் கிரகங்கள் பாவங்களைப் பார்க்கும் பார்வையின் அளவையும் அறியலாம். உதாரணமாக உதய லக்கின பாவத்தை அதாவது 1-வது பாவத்தைக் குரு பார்க்கும் பார்வையின் அளவை

அறிவோம். இங்கு குரு பார்க்குங் கிரகமாகும். உதயலக்கின பாவம் பார்க்கப்படும் பாவமாகும். முந்தி கிரகங்களுக்குச் சொல்லிய பிரகாரம் பார்க்கப்படும் பாவத்தின் ஸ்புடத்திலிருந்து பார்க்கின்ற கிரகத்தின் ஸ்புடத்தைக் கழிக்க வேண்டியது. குருவினுடைய ஸ்புடம் பாகை 28-17 கலை ஆனதாலும் உதயலக்கினத்தின் அல்லது 1-வது பாவத்தின் ஸ்புடம் பாகை 184-48 கலை ஆன தாலும் பாகை 184-48 கலையில் இருந்து பாகை 28-17 கலையைக் கழிக்கப் பாகை 156-31 கலை வரும். அதாவது உதயலக்கினம் குருவை விட்டு பாகை 156-31 கலை விலகி இருக்கின்றது. 31 கலை என்பது அரை பாகைக்கு மேற்பட்டதால் அதை ஒரு பாகை யாக பாவிக்க மொத்தத்தில் 157 பாகை வரும். இந்த 19-வது வாக்கியத்தில் 157 பாகைக்கு எதிரில் 23 என்ற எண் இருக்கின்றது. ஆகையால் குருவின் சாதாரண பார்வையின் அளவு 100-ல் 23 பங்கு என்று ஏற்படும். இந்த 20-வது வாக்கியத் தில் 157-வது பாகைக்கு எதிரில் குருவின் கலத்தில் 0 என்ற எண் இருக்கின்றது ஆகையால் குருவின் விசேஷ பார்வை பூஜ்ஜியம் என்று ஏற்படுகின்றது. சாதாரண பார்வையாகிய 23யையும் விசேஷ பார்வையாகிய 0 த்தையும் கூட்ட மொத்தம் 23 வரும். ஆகையால் குரு உதயலக்கின பாவத்தை 100ல் 23 பங்கு பார்வை யுடன் பார்க்கின்றது என்று ஏற்படுகின்றது. இவ்விதமாகவே ஒவ்வொரு பாவத்தையும் ஒவ்வொருகிரகமும் பார்க்கும் பார்வை யின் அளவை அறிய வேண்டியது.

21-வது வாக்கியம்—உச்சபலம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் உச்சபலத்தை அறியலாம். ''பிருஹத் ஜாதகம்'' 1-வது அத்தியாயம் 13-வது சுலோகத்தில் ஒவ்வொரு கிரகத்திற்குரிய உச்ச வீட்டையும், அந்த உச்ச விட்டில் எந்த பாகையில் அதிக உச்சம் நேரிடும் என்பதையுங் கொடுக்கப் பட்டிருக்கின்றது. உதாரணமாகக் குருவிற்கு கடகத்தில் உச்சம் என்றும் அந்த கடகத்தில் 5-வது பாகையில் அதி உச்சம் என்றும் சொல்லியிருக்கின்றது. இவ்விதமாகவே சந்திரனுக்கும் ரிஷபத்தில் உச்சம் என்றும் அந்த ரிஷபத்தில் 3-வது பாகையில் அதி உச்சம் என்றும் சொல்லி இருக்கின்றது. இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்திற்கும் சொல்லி இருக்கின்றது. மேலும் ஒவ்வொரு கிரகத்திற்கும் அதற்குரிய அதி உச்ச பாகையில் இருந்து

180-வது பாகை அதி நீச்சம் என்றும் சொல்லியிருக்கின்றது அதி உச்சத்திற்கு உச்சபலம் ஒன்று ஆகும். அதி நீசசத்தில் உச்சபலம் பூஜ்ஜியம் ஆகும். அதி உச்சத்திலிருந்து அதி நீச்சத்திற்கு வரவர உச்சபலம் குறைந்துகொண்டேவரும். அதி நீச்சத்திலிருந்து அதி உச்சத்திற்கு வரவர உச்சபலம் அதிகப்பட்டுக் கொண்டே வரும். இந்த வாக்கியத்தால் உச்சபலம் அதிக சுலபமாக அறியலாம். உதாரணமாக குரு சந்திரன் இவர்களுடைய உச்சபலத்தைக் கணிப்போம். குருவினுடைய ஸ்புடம் பாகை 28 - 17 கலை என்று வைத்துக்கொள்வோம். 17 கலை என்பது அரைபாகைக்குட்பட்டதால் இதைத் தள்ளிவிட குருவின் மொத்த ஸ்புடம் பாகை 28 ஆகும். இந்த வாக்கியத்தில் பாகை 28-க்கு எதிரில் குருவினுடைய கலத்தில் 63 என்ற எண் இருக்கின்றது. ஆகையால் குருவினுடைய உச்சபலம் 100-ல் 63 பங்கு ஆகும். சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118 - 10 கலை என்று வைத்துக்கொள்வோம். 10 கலை என்பது அரைபாகைக்குட்பட்டதால் இதைத்தள்ளிவிட சந்திரனுடைய மொத்த ஸ்புடம் பாகை 118 ஆகும். இந்த வாக்கியத்தில் பாகை 118-க்கு எதிரில் சந்திரனுடைய கலத்தில் 53 என்ற எண் இருக்கின்றது. ஆகையால் சந்திரனுடைய உச்சபலம் 100-ல் 53 பங்கு ஆகும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் உச்சபலம் அறியவும்.

22-வது வாக்கியம்—சப்தவர்கஜபலம்.

இந்த வாக்கியத்தில் கிரகங்களின் பலத்தை 100-ல் இத்தனை பங்கு என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த புத்தகத்தில் அடங்கியுள்ள வாக்கியங்கள் எல்லாவற்றிலும் கிரகங்களின் பார்வை முதலிய எவ்விதபலன்களையும் ஒரு ரூபத்தை 100 சமபங்காகப் பங்கிட்டு 100-ல் இத்தனை பங்கு என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதை நன்ருய்க் கவனிக்கவும். இந்த வாக்கியத்தை உபயோகப் படுத்தும் விதத்தைப்பற்றி இந்த வாக்கியத்தைக் கொடுத்துள்ள இடத்திலேயே விவரமாய்ச் சொல்லியிருப்பதால் இதைப்பற்றி இங்கு மறுபடியும் விவரமாய் எழுதவேண்டியது அவசியமில்லை.

உதாரணமாக :- குருவிற்கு ராசிச் சக்கிரபலம் (அதாவது இராசிச் சக்கிரவர்கஜபலம்) போடுவோம். இராசிச் சக்கிரத்தில் குரு மேஷராசியில் இருப்பதாகவும், மேஷத்திற்குரிய செவ்வாய் இராசிச் சக்கிரத்தில் துலாத்தில் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம்.

22-வது வாக்கியத்தின் கீழ் 3-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள நைசர்க்கிக நட்புபகை சமம் காட்டுங் கட்டத்தைப் பார்த்தால் குருவிற்கு செவ்வாய் நைசர்க்கிக நட்பு ஆகும். மேலும் இந்த 22-வது வாக்கியத்தின் கீழ் 2-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள தற்கால மித்துரு சத்துரு சமம் அறிய கொடுத்திருக்கும் விதி பிரகாரம் பார்த்தால் குருவிற்கு 7-ல் செவ்வாய் இராசிச் சக்கரத்தில் இருப்பதால் குருவிற்குச் செவ்வாய்த் தற்கால சத்துருவாகும். நைசர்க்கிக நட்பையும் தற்கால சத்துருவையும் ஒன்ருய்ச் சேர்த்தால் 22-வது வாக்கியத்தின் கீழ் 4-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள விதி பிரகாரம் குருவிற்குச் செவ்வாய் சமம் ஆகும். அதாவது இராசிச் சக்கிரத்தில் குரு தனக்குச் சமமாயிருக்கின்ற கிரகத்தின் ராசியில் இருக்கின்றது. ஆகையால் 22-வது வாக்கியத்தின் 1-வது அயிட்டத்தைப் பார்த்தால் குருவிற்கு இராசி வர்கஜ பலம் 13 அதாவது 100-ல் 13 பங்கு என்று ஏற்படும். மேலும், உதாரணமாகச் சூரியனுக்கு நவாம்சை சக்கிரபலம் (அதாவது நவாம்சை சக்கிரவர்கஜ பலம்) போடுவோம். நவாம்ச சக்கிரத்திற்குச் சூரியன் மிதுன ராசியில் இருப்பதாகவும், இந்த மிதுன ராசிக்குடைய புதன் இராசிச் சக்கிரத்தில் சூரியனுக்கு 2-ல் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். 22-வது வாக்கியத்தின்கீழ் 3-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள கட்டத்தைப் பார்த்தால் சூரியனுக்குப் புதன் நைசர்க்கிக சமம் ஆகும். மேலும் 22-வது வாக்கியத்தின்கீழ் 2-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள விதி பிரகாரம் பார்த்தால் சூரியனுக்கு 2-ல் புதன் இராசிச் சக்கிரத்தில் இருப்பதால் சூரியனுக்குப் புதன் தற்கால மித்துருவாகும். நைசர்க்கிக சமத்தையும் தற்கால மித்துருவையும் ஒன்ருய்ச் சேர்த்தால் 22-வது வாக்கியத்தின் கீழ் 4-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள விதி பிரகாரம் சூரியனுக்குப் புதன் மித்துரு ஆகும். அதாவது நவாம்சைச் சக்கிரத்தில் சூரியன் தனக்கு மித்துருவாயிருக்கின்ற கிரகத்தின் ராசியில் இருக்கின்றது. ஆகையால் 22-வது வாக்கியத்தின் 1-வது அயிட்டத்தைப் பார்த்தால் சூரியனுக்கு நவாம்சவர்கஜபலம் 25 அதாவது 100-ல் 25 பங்கு என்று ஏற்படும். இவ்விதமாகவே கிரகங்களுக்குத் திரேகாண, துவாதசாம்ச, சப்தமாம்ச வர்கஜபலம் அறியவும்.

மேலும் உதாரணமாகக் குருவிற்கு ஓராபலம் (அதாவது ஓரா வர்கஜபலம்) போடுவோம். குரு சந்திரனுடைய ஓரையில் இருப்ப

தாகவும், இராசிச் சக்கிரத்தில் குருவிற்கு 4-ல் சந்திரன் இருப்பதாக வும் வைத்துக் கொள்வோம். 22-வது வாக்கியத்தின் கீழ் 3-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள கட்டத்தைப் பார்த்தால் குருவிற்குச் சந்திரன் நைசர்க்கிக நட்பு ஆகும். மேலும் 22-வது வாக்கியத்தின் கீழ் 2-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள விதி பிரகாரம் பார்த்தால் குருவிற்கு 4-ல் சந்திரன் இராசிச் சக்கிரத்தில் இருப்பதால் குரு விற்குச் சந்திரன் தற்கால மித்துரு ஆகும். நைசர்க்கிக நட்பையும் தற்கால மித்துருவையும் ஒன்றாய்ச் சேர்த்தால் 22-வது வாக்கியத் தின் 4-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள விதி பிரகாரம் குருவிற்குச் சந்திரன் அதிமித்துருவாகும். அதாவது ஓரையில் குரு தனக்கு அதிமித்துருவாயிருக்கின்ற கிரகத்தின் ஓரையில் இருப்பதால் குருவின் ஓராவர்க்ஜபலம் 22-வது வாக்கியத்தின் கீழ் 2-வது அயிட்டத்தில் கொடுத்துள்ள பிரகாரம் 38 அதாவது 100-ல் 38 பங்கு என்று ஏற்படும். இவ்விதமாகவே திரிம்சாம்ச வர்கஜபலமும் அறிய வேண்டியது.

23-வது வாக்கியம்—யுக்மா யுக்ம பலம்

இது தானே விளங்கக்கூடியதாய் இருப்பதால் இதைப்பற்றி விசேஷமாய் எழுத வேண்டிய அவசியமில்லை. உதாரணமாக குரு இராசிச்சக்கிரத்தில் மேஷ ராசியில் இருந்தால் மேஷ ராசி ஒற்றை ராசியானதால் குருவின் இராசி யுக்மபலம் 25 ஆகும். அதாவது 100-ல் 25 பங்கு ஆகும். மறுபடியும் குரு தனுசு நவாம்சையில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். தனுசு ஒற்றை ராசியாகையால் குருவின் நவாம்சை யுக்ம பலம் 25 ஆகும். அதாவது 100-ல்25 பங்கு ஆகும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் அறியவும்.

24-வது வாக்கியம்—கேந்திர பலம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் கேந்திரபலம் வெகு சுலப மாய் அறியலாம். கேந்திர ஸ்தானங்களாகிய 1,4,7,10-ல் ஒரு கிர கம் இருந்தால் அதற்கு கேந்திரபலம் ஒன்று ஆகும். கேந்திரத்தை விட்டுச் செல்லச் செல்ல பலம் குறையும். உதாரணமாக குரு லக்கி னத்திற்கு 7-ல் இருப்பதாக வைத்துக் கொள்வோம். குரு 7-ல் இருப்பதால் இந்த வாக்கியத்தில் 7-க்கு எதிரில் 100 என்று போட் டிருப்பதால் குருவிற்குக் கேந்திரபலம் 100-ல் 100 பங்கு அதாவது 1 ஆகும் இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்குக் கேந்திர பலம் அறியவும்.

25-வது வாக்கியம்—திரேஷ்காணபலம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் திரேஷ்காண பலமென்ற திரேகாண பலத்தை அறியலாம். முதலில் கிரகங்கள் திரேகாணத்தில் எந்த பாகத்தில் இருக்கின்றனவென்று அறிந்து பிறகு இவைகளின் பலத்தை அறியவும். உதாரணமாகக் குருவின் ஸ்புடம் பாகை 28-17 கலையென்று வைத்துக் கொள்வோம். 14-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தை இங்கு படிக்கக் குரு 3-வது அல்லது கடைசி திரேகாணத்தில் இருப்பதாக ஏற்படும். இந்த 25-வது வாக்கியத்தில் குருவிற்கு எதிரில் 3-வது அல்லது கடைசி பாகத்தின் கலத்தில் 0 என்று போட்டிருக்கிறது. ஆகையால் குருவின் பலம் 100ல் 0 பங்கு ஆகும். அதாவது குருவின் பலம் பூஜ்ஜியமாகும். சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118-10 கலையென்று வைத்துக் கொள்வோம். 14-வது வாக்கியத்தால் சந்திரன் 3-வது திரேகாணத்தில் இருப்பதாக ஏற்படுகிறது. இதை 25-வது வாக்கியத்தில் சந்திரனுக்கு எதிரில் 3-வது அல்லது கடைசி பாகத்தின் கலத்தில் 25 என்று போட்டிருக்கின்றது. ஆகையால் சந்திரனுடைய திரேகாண பலம் 100-ல் 25 பங்கு ஆகும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் அறியவும்.

26-வது வாக்கியம் திக்குப்பலம்.

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் திக்குப் பலத்தை அறியலாம். இந்த வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதம் இந்த வாக்கியத்தின் கீழே சொல்லப்பட்டிருப்பதால் இங்கு மறுபடியும் சொல்ல வேண்டிய அவசியமில்லை அதை வாசிக்கவும்.

27-வது வாக்கியம் கிரக நைசர்க்கிக பலம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் நைசர்க்கிக பலத்தை அறியலாம். இது தானே விளங்கக்கூடியதாய் இருப்பதால் இதைப் பற்றி இங்கு விவரிக்க வேண்டிய அவசியமில்லை, உதாரணமாகக் குருவிற்கு எதிரில் 57 என்று இருக்கின்றது அதாவது குருவின் நைசர்க்கிக பலம் 100-ல் 57 பங்கு என்று ஆகும். இவ்விதமாகவே மற்றக் கிரகங்களுக்கும் அறியவும். இந்த பலம் நிலையானது, எல்லா ஜாதகங்களுக்கும் பொதுவானது. இது மாறுகிறதில்லை.

28-வது வாக்கியம் கிரகங்களின் நத உன்னத பலம்

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் நத உன்னத பலம் அறியலாம், நத என்பது பாதளம், உன்னத என்பது உச்சி. சூரியன்

ஆகாயத்தில் அல்லது பூமிக்குக் கீழ் இருக்கும் நிலையை அனுசரித்து கிரகங்களுக்குண்டாகும் பலத்தை இந்த வாக்கியத்தால் அறியலாம். இந்த வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதம் இந்த வாக்கியத்தின் கீழே சொல்லப்பட்டிருப்பதால் இங்கு விவரித்து சொல்ல வேண்டிய அவசியமில்லை. உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனனம் சூரிய உதயாதி நாழிகை 3 - 12½ விநாடிக்கு நேர்ந்ததென்றும், ஜெனன தினம் சூரிய உச்சம் சூரிய உதயாதி நாழிகை 14 - 45 விநாடிக்கு நேர்ந்ததென்றும் வைத்துக்கொள்வோம். ஜெனன நாழிகை 3 - 12½ விநாடியில் இருந்து சூரிய உச்ச நாழிகை 14 - 45 விநாடியைக் கழிக்கவேண்டியது. நாழிகை 3 - 12½ விநாடி சிறியதாய் இருப்பதால் இத்துடன் 60 நாழிகையைக் கூட்ட மொத்த நாழிகை 63 - 12½ விநாடி வரும். இதிலிருந்து நாழிகை 14 - 45 விநாடியைக் கழிக்க நாழிகை 48 - 27½ விநாடி வரும். இந்த 48 நாழிகை 27 விநாடியென்பது நாழிகை 30க்கு மேற்பட்டிருப்பதால் 60-ல் இருந்து கழிக்க நாழிகை 11 - 32½ விநாடி வரும். விநாடி 32½ என்பது அரை நாழிகைக்கு மேற்பட்டதால் இதை ஒரு முழு நாழிகையாக மாற்றிக் கொண்டால் நாழிகை 11 - 32 விநாடியென்பது நாழிகை 12 ஆகும். இந்த வாக்கியத்தில் நாழிகை 12-க்கு எதிரில் சூரியன், சுக்கிரன், குரு இவைகளின் கலத்தின் கீழ் 60 என்ற எண் இருக்கின்றது. ஆகையால் இந்த கிரகங்களுக்குப் பலம் 100-ல் 60 பங்கு என்பதாம், மேலும் நாழிகை 12-க்கு எதிரில் சந்திரன், செவ்வாய், சனி இவைகளின் கலத்தின் கீழ் 40 என்ற எண் இருக்கின்றது. ஆகையால் இந்த கிரகங்களுக்குப் பலம் 100-ல் 40 பங்கு ஆகும். புதனுக்குப் பலம் எந்தக் காலத்திலும் 100-ல் 100 பங்கு அதாவது ஒன்று ஆகும்.

29-வது வாக்கியம் பட்சபலம்

இதைப்பற்றி பிந்தி இந்த வாக்கியத்தின் கீழ் சொல்லப்பட்டிருக்கிறது. அதை வாசிக்கவும்.

30-வது வாக்கியம் தினராத்திரி திரிபாகப் பலம்

இதைப்பற்றி பிந்தி இந்த வாக்கியத்தின் கீழ் சொல்லப்பட்டிருக்கிறது. அதை இப்போது வாசிக்கவும். உதாரணமாக ஒரு குழந்தை ஜெனன தினத்தில் பகற்பொழுது அல்லது அகசு நாழிகை 29-30 விநாடியென்றும், ஜெனன நாழிகை 3 - 12½ விநாடி என்றும் வைத்துக்கொள்வோம், பகல் பொழுதாகிய நாழிகை

29 - 30 விநாடியை மூன்று சம பாகமாகப் பங்கிட பாகம் 1-க்கு நாழிகை 9 - 50 விநாடி ஆகும். ஜெனன காலம் நாழிகை 3 - 12½ விநாடி ஆனதால் இது முதல் பாகத்தைச் சேர்ந்தது. ஆகையால் புதனுக்குத் திரிபாகபலம் 100-ல் 100 பங்கு என்று அறியவும். குருவிற்கு எந்தக் காலத்திலும் திரிபாக பலம் 100-ல் 100 பங்கு ஆனதால் குருவிற்கு ஜெனன காலத்தில் திரிபாக பலம் 100-ல் 100 பங்கு என்று அறியவும். மற்ற கிரகங்களுக்கு ஜெனன காலத்தில் திரிபாக பலம் பூஜ்ஜியமாகிறது.

31-வது வாக்கியம் அயனபலம்

இந்த வாக்கியத்திற்கு அயனபலம் என்று பெயர். கிரகங்கள் ஆகாய நிரட்சர ரேகைக்கு வடக்கில் அல்லது தெற்கில் செல்லுந் தூரத்திற்குத் தகுந்தவாறு பலமுடையனவாகும். இவ்வித பலத் திற்கு அயன பலம் என்று பெயர். உதாரணமாக, ஜெனன காலத்தில் குரு வடக்கில் பாகை 16 - 32 கலையில் இருப்பதாக வைத்துக் கொண்டு அதனுடைய அயன பலத்தை அறிவோம். 32 கலையென்பது அரைபாகைக்கு மேற்பட்டதால் அதை ஒரு பாகையாக எண்ணிக்கொள்ள மொத்தம் பாகை 17 வரும். இந்த வாக்கியத்தில் 17-வது பாகைக்கு எதிரில் சூரியன், செவ்வாய், குரு, சுக்கிரன், புதன் என்ற கலத்தில் 85 என்று இருக்கின்றது. அதாவது குரு விற்கு அயனபலம் 100-ல் 85 பங்கு என்று அறியவும். இவ்வித மாகவே ஒவ்வொரு கிரகத்திற்கும் நிரட்சர ரேகைக்கு வடக்கு அல்லது தெற்கிலுள்ள தூரத்தை அறிந்து அதனுடைய அயனபலம் அறியவும். 31-வது வாக்கியத்தில் கிராந்தியை 24 பாகை வரை யிலும் கொடுத்திருக்கின்றது. ஒரு சமயம் கிரகத்தின் கிராந்தி 24 பாகைக்கு மேற்பட்டிருந்தால் அதை 24 பாகையாகப் பாவிக்க வேண்டியது.

32-வது வாக்கியம் வருஷபலம், மாதபலம், தினபலம், கால ஓராபலம்

இந்த 32-வது வாக்கியத்தை 32 (1), 32 (2), 32 (3), 32 (4) என்ற நான்கு வாக்கியங்களாகக் கொடுக்கப்பட்டிருக் கின்றது. இவைகளின் உபயோகத்தை பின் வருமாறு விளக்கிக் காட்டுவோம்.

ஒவ்வொரு ஜாதகத்திற்கும் வருஷாதிபதி, மாதாதிபதி, தினாதி பதி, கால ஓராதிபதி என்ற 4 அதிபதிகள் இருக்கின்றார்கள். வரு

ஷாதிபதியாக வருகின்ற கிரகத்திற்குக் கால் பலமும், அதாவது 100-ல் 25 பங்கும், மாதாதிபதியாக வருகினற கிரகத்திற்கு அரை பலமும், அதாவது 100-ல் 50 பங்கும், தினுதிபதியாக வருகின்ற கிரகத்திற்கு ¾ பலமும், அதாவது 100-ல் 75 பங்கும், கால ஒராதிபதியாக வருகின்ற கிரகத்திற்கு முழு பலமும் அதாவது 100-ல் 100 பங்கும் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஜெனன வேளைக்கு மேற்சொல்லிய அதிபதிகளை அறியவேண்டியது அவசியம்.

வருஷாதி பலம் 25	தினுதி பலம் 75
மாதாதி பலம் 50	ஒராதி பலம் 100

வருஷாதிபதி, மாதாதிபதி, தினுதிபதி, ஒராதிபதி இவர்களை அறியும் வழி சூரிய சித்தாந்தம் 1-வது அத்தியாயம் 45-வது முதல் 52-வது சுலோகங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது வருஷாதிபதி அறிய :-சிருஷ்டி முடிவான தினம் முதல் குழந்தை ஜெனனமான தினத்திற்கு முன் செல்லான மொத்த தினங்களை அறியவேண்டும். இந்த மொத்த தினத்திற்கு 'அஹர்கணம்' என்று பெயர். இந்த அஹர்கணத்தை, ஒரு வருஷத்தில் 360 சாவன தினங்கள் இருப்பதால், 360-ஆல் வகுக்க வருகின்ற மிச்சத்தைத் தள்ளிவிட்டு, வந்த ஈவை 3-ஆல் பெருக்க வேண்டியது. இப்படிப் பெருக்கி வந்த எண்ணுடன் ஒன்று கூட்டி வந்த எண்ணை 7-ஆல் வகுக்க வருகின்ற மிச்சத்தை வைத்துக்கொள்ள வேண்டியது. 7-ல் வகுக்க மிச்சம் இல்லாவிட்டால் அதாவது மிச்சம் பூஜ்ஜியமாக வந்தால் மிச்சம் 7 என்று வைத்துக்கொள்ளவேண்டியது. இப்படி 7-ல் வகுக்க வந்த மிச்சம் 1-க்கு சூரியன், 2-க்குச் சந்திரன், 3-க்குச் செவ்வாய், 4-க்குப் புதன், 5-க்கு குரு, 6-க்குச் சுக்கிரன், 7-க்குச் சனி வருஷாதிபதிகளாவார்கள்.

மாதாதிபதி அறிய :-மேற்சொல்லிய அஹர்கணத்தை, ஒரு மாதத்தில் 30 தினங்களிருப்பதால், 30-ஆல் வகுக்க வருகின்ற மிச்சத்தைத் தள்ளிவிட்டு வந்த ஈவை 2-ஆல் பெருக்கவேண்டியது. இப்படிப் பெருக்கி வந்த எண்ணுடன் ஒன்று கூட்டி வந்த எண்ணை 7-ஆல் வகுக்க வருகின்ற மிச்சம் 1-க்கு முன்போல் சூரியன், 2-க்கு சந்திரன், 3-க்குச் செவ்வாய், 4-க்குப் புதன், 5-க்குக் குரு, 6-க்குச் சுக்கிரன், 7 அல்லது பூஜ்ஜியத்திற்கு சனி மாதாதிபதிகளாவார்கள்.

தினுதிபதி அறிய :-மேற்சொல்லிய அஹர்கணத்துடன் ஒன்று கூட்டி வந்த எண்ணை 7-ஆல் வகுக்க வருகின்ற மிச்சம் 1-க்கு முன் போலச் சூரியன், 2-க்குச் சந்திரன், 3-க்கு செவ்வாய், 4-க்கு புதன், 5-க்கு குரு, 6-க்குச் சுக்கிரன், 7-க்கு அல்லது பூஜ்ஜியத்திற்குச் சனி தினுதிபதிகளாவார்கள். இது ஒருவழி. இன்னொரு சுலபமான வழி உண்டு. அதாவது ஜெனனமான வாராதிபதி யாரோ அவரே தினுதி பதியாவார். அதாவது ஜெனனமான தினம் ஞாயிற்றுக்கிழமை யானுல் சூரியனும், திங்கட்கிழமையானுல் சந்திரனும், செவ்வாய்க் கிழமையானுல் செவ்வாயும், புதன் கிழமையானுல் புதனும், வியாழக் கிழமையானுல் குருவும், வெள்ளிக்கிழமையானுல் சுக்கிரனும், சனிக் கிழமையானுல் சனியும் தினுதிபதிகளாவார்கள் என்பதாம்.

கால ஓராதிபதி அறிய :-32-வது வாக்கியத்தின் 3-வது பிரிவில் சொல்லிய பிரகாரம் அறியவும்.

மேலும் வருஷாதிபதி, மாசாதிபதி, தினுதிபதி இவர்களை அறி வதற்கு ஒவ்வொரு தடவையும் அஹர்கணம் கணிக்க வேண்டிய தாலும் இந்த அஹர்கணம் கணிப்பது மிகவும் சிரமமாயிருக்குமாத லாலும் இந்த அஹர்கண எண் மிகவும் பெரியதாய் இருக்குமாத லாலும், இந்த பெரிய எண்ணை ஒவ்வொரு தடவையும் வகுத்து ஈவைப் பெருக்குவது கொஞ்சம் சிரமமாயிருக்குமாதலாலும் அடியிற் கண்டபடி சிரமத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

சூரிய சித்தாந்தத்தில் சிருஷ்டி முடிவான தினத்தில் சூரியன் வருஷாதிபதியாயும், மாசாதிபதியாயும், தினுதிபதியாயும் இருந்த தாக சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விதமாகவே சூரியன் சில வருஷங்களுக்கு ஒரு முறை வருஷாதிபதி, மாசாதிபதி, தினுதிபதி யாக வரும். இவ்விதமாக 1798 ௵ செப்டம்பர் ௴ 30-ந்தேதியில் சூரியன் வருஷாதிபதி, மாசாதிபதி, தினுதிபதி ஆக வந்தது. அன்று அஹர்கணம் 7, 14, 40, 40, 86, 200 ஆகும் ஆகையால் இந்த 1798 ௵ செப்டம்பர் ௴ 30-ந் தேதியைக் கண்ட தினம் அல்லது ஆரம்ப தினமாக வைத்துக் கொண்டு இந்த தினம் முதற் கொண்டு நமக்குத்தேவையான ஜெனனதினம் வரையிலும் செல்லான தினங்களுக்கு ''உப அஹர்கணம்'' என்று பெயரிட்டு இந்த உப அஹர்கணத்தை அஹர்கணத்திற்குப் பதிலாக வைத்துக்கொண்டு முன்போல் கணிதம் செய்வோமானுல் வெகுசுலபமாக வருஷாதிபதி,

மாசாதிபதி, தினாதிபதி, இவர்களை அறியலாம். உப அஹர்கணம் கணிப்பதற்கு 32-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தவும்.

உதாரணமாக 1869 ஷு அக்டோபர் மீ 2வ சனிக்கிழமையில் ஜெனனமான ஒரு குழந்தைக்கு வருஷாதிபதி, மாசாதிபதி, தினாதிபதி, கால ஓராதிபதி இவர்களைக் கணிப்போம்.

(1) முதலில் உப அஹர்கணம் பின்வருமாறு கணிக்கவும். 1869 ஷுத்திற்கு உப அஹர்கணம் 32 (1)வது வாக்கியம்படி 25,660

அக்டோபர் மாதத்திற்கு	32 (2)	.. ..	273
2-ந் தேதிக்கு	32 (2)	.. ..	1
ஆக மொத்த உப அஹர்கணம் (கூட்ட		..	...25,934

தினாதிபதி அறிய:- முன் சொல்லியபடி உப அஹர்கணமாகிய 25,934 உடன் ஒன்று கூட்ட 25,935 வரும். இந்த எண்ணை 7-ஆல் வகுக்க மிச்சம் 7 ஆனதால் முன்சொல்லியபடி சனி தினாதிபதி ஆகின்றார். பிறந்த தினம் எந்த வாரமோ அந்த வாராதிபதியே தினாதிபதியாவார் என்று மற்றொரு வழியில் சொன்ன பிரகாரம் பிறந்ததினம் சனிக்கிழமையானதால் அன்று தினாதிபதி சனியாக வந்திருக்கின்றார் என்று அறியவும்.

மாசாதிபதி அறிய :-உப அஹர்கணமாகிய 25,934-யை முன் சொல்லியபடி 30-ஆல் வகுக்க ஈவு 864 வரும். இந்த 864-யை 2-ஆல் பெருக்க 1,728 வரும். இத்துடன் ஒன்றுகூட்ட 1,729 வரும். இந்த 1,729-யை 7-ஆல் வகுக்க மிச்சம் 0 அல்லது 7 வரும். மிச்சம் 7-க்குச் சனி மாசாதிபதியாக வருகின்றார்.

வருஷாதிபதி அறிய :-உப அஹர்கணமாகிய 25,934-யை முன் சொல்லியபடி 360-ஆல் வகுக்க ஈவு 72 வரும். இதை 3-ஆல் பெருக்க 216 வரும். இத்துடன் ஒன்று கூட்ட 217 வரும். இந்த 217-யை 7-ஆல் வகுக்க மிச்சம் 0 அதாவது 7 வரும். மிச்சம் 7-க்குச் சனி வருஷாதிபதியாக வருகின்றார்.

ஓராதிபதி அறிய :-ஒரு தினத்திற்குரிய 60 நாழிகையை 24 சமபாகங்களாகப் பங்கிட பாகம் 1-க்கு 2½ நாழிகை வரும். 2½ நாழிகை வரையிலும் ஒரு கிரகம் ஓராதிபதியாக வரும். அதாவது சூரிய உதயத்திலிருந்து 2½, 2½ நாழிகையாக ஒவ்வொரு கிரகமும் ஒரு வரிசைக் கிரமமாக ஓராதிபதிகளாக வருவார்கள். ஞாயிற்றுக் கிழமையில் சூரிய உதய முதல் 2½ நாழிகை வரையிலும் சூரியன்

ஓராதிபதியாகவும், அடுத்த 2½ நாழிகை காலமாகிய 2½ நாழிகை முதல் 5 நாழிகை வரையிலும் சுக்கிரன் ஓராதிப்பதியாகவும் இவ்விதமாக கிரகங்கள் ஓராதிபதிகளாக வருவார்கள். ஒவ்வொரு தினத்திலும் முதல் பாக காலமாகிய சூரிய உதய முதல் 2½ நாழிகை வரையிலும் அந்த வாராதிபதியே ஓராதிபதியாக வரும். பிறகு இதர கிரகங்கள் சனி, குரு, செவ்வாய், சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன் என்ற இந்த வரிசையாகத் தவறாமல் ஓராதிபதியாக வரும். உதாரணமாக வியாழக்கிழமையில் முதல் கால பாகத்தில் குரு ஓராதிபதியாயும், பிறகு குருவிற்கு அடுத்த கிரகமாகிய செவ்வாயும், அதற்கு அடுத்த கிரகமாகிய சூரியனும் இவ்விதமாக வரிசையாக கிரகங்கள் ஓராதிபதியாக வரும். 32 (4)-வது வாக்கியத்தால் ஓராதிபதியை வெகு சுலபமாக அறியலாம். இந்த வாக்கியத்தில் 10-வது வரிசை எண்ணிற்கு நேராய் 22½ நாழிகை முதல் 25 நாழிகை வரையிலும் என்றும், இதற்கு நேராய் ஞாயிற்றுக்கிழமை என்ற கலத்தில் பு என்றும் போட்டிருப்பதால் ஞாயிற்றுக்கிழமையில் சூரிய உதயாதி 22½ நாழிகை முதல் 25 நாழிகை வரையிலும் பு என்ற புதன் ஓராதிபதி ஆகின்றார் என்பதாம். இவ்விதமாகவே 24-வது வரிசை எண்ணிற்கு நேராய் 57½ நாழிகை முதல் 60 நாழிகை வரையிலும் என்றும், சனிக்கிழமை என்ற கலத்தில் இதற்கு நேராய் ''அ'' என்றும் போட்டிருப்பதால் சனிக்கிழமையில் சூரிய உதயாதி 57½ நாழிகை முதல் 60 நாழிகை வரையிலும் ''அ'' என்ற அங்காரகன் ஓராதிபதியாகின்றார் என்பதாம்.

உதாரணமாக 1869௵ அக்டோபர் மீ 2௳ சனிக்கிழமையில் சூரிய உதயாதி நாழிகை 3-12½ விநாடிக்கு ஓராதிபதியைக் கணிப்போம். 32(4)-வது வாக்கியத்தில் 2-வது வரிசை எண்ணிற்கு நேராய் 2½ நாழிகை முதல் 5 நாழிகை வரையிலும் என்றிருப்பதாலும் 3 நாழிகை 12½ விநாடி என்பது 2½ நாழிகைக்கு மேல் 5 நாழிகைக்குள் இருப்பதாலும் இந்த வரிசை எண் 2-க்கு நேராய் சனிக்கிழமை என்ற கலத்தில் குரு என்று போட்டிருப்பதால், 3 நாழிகை 12½ விநாடிக்கு குரு ஓராதிபதி என்று அறியவும்.

33-வது முதல் 43-வது வாக்கியம் வரையிலும்

33-வது முதல் 43-வது வரிசையிலுமுள்ள வாக்கியங்களை உபயோகப்படுத்தும் வழிகள் அந்தந்த வாக்கியத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றன.

மூன்றாவது அத்தியாயம்

—※—

1-வது வாக்கியம் இந்து தேசத்து கால வாய்ப்பாடு

60 தற்பரை	கொண்டது	1 விநா
60 விநாடி	,,	1 நாழி
60 நாழிகை	,,	1 நாள்
30 நாள்	,,	1 மாத
12 மாதம்	,,	1 வருஷ
7 நாள்	,,	1 வார
15 நாள்	,,	1 பட்ச
6 மாதம்	,,	1 அயன

2 அயளம் கொண்டது (1 வருஷம்

12 வருஷம்கொண்டது 1 குருவி (னுடைய வட்டம்

60 வருஷம் கொண்டது (1 பரிவிருத்தி

1 சாவன வருஷத்தில் 360 நாட்கள் இருக்கின்றன.

1 சௌரவமான வருஷத்தில் 365 நாள் 15 நாழிகை 23 விநாடிகள் இருக்கின்றன.

2-வது வாக்கியம் மேல் நாட்டு (அல்லது இங்கிலீஷ்) கால வாய்ப்பாடு

60 செக்கண்டு	கொண்டது	1 மினிட்	ஆகும்.
60 மினிட்	,,	1 மணி	,,
24 மணி	,,	1 நாள்	,,
7 நாள்	,,	1 வாரம்	,,
30 நாள்	,,	1 மாதம்	,,
12 மாதம்	,,	1 வருஷம்	,,

3-வது வாக்கியம் இந்து தேசத்து கோள வாய்ப்பாடு அல்லது வட்ட வாய்ப்பாடு

60 உபவிகலை	கொண்டது	1 விகலை
60 விகலை	,,	1 கலை
60 கலை	,,	1 பாகை
30 பாகை	,,	1 இராசி
12 இராசி	,,	1 மண்டலம் அல்லது வட்டம்

4-வது வாக்கியம

மேல் நாட்டு (அல்லது இங்கிலீஷ்) கோள வாய்ப்பாடு அல்லது வட்ட வாய்ப்பாடு

60 செக்கண்டு கொண்டது 1 மினிட் என்பது செக்கண்டின் குறிப்பு
60 மினிட் ,, 1 டிகிரி என்பது மினிட்டின் குறிப்பு
30 டிக்ரி ,, 1 இராசி 0 என்பது டிக்ரியின் குறிப்பு
12 இராசி ,, 1 மண்டலம அல்லது வட்டம்.

5-வது வாக்கியம்

கெடியார மணி நிமிஷத்திற்கு (காலே மணி 6-நிமிஷம் 0-த்திலிருத்து) நாழிகை விநாடி அறிய வாக்கியம்.

கெடியார மணிக்கு	நாழிகை	விநாடி	கெடியார மணிக்கு	நாழிகை	விநாடி
காலே 6 மணிக்கு	0	0	,, 6 ,,	30	0
,, 7 ,,	2	30	இரவு 7 ,,	32	30
,, 8 ,,	5	0	,, 8 ,,	35	0
,, 9 ,,	7	30	,, 9 ,,	37	30
பகல் 10 ,,	10	0	,, 10 ,,	40	0
,, 11 ,,	12	30	,, 11 ,,	42	30
,, 12 ,,	15	0	,, 12 ,,	45	0
,, 1 ,,	17	30	,, 1 ,,	47	30
,, 2 ,,	20	0	,, 2 ,,	50	0
,, 3 ,,	22	30	. 3 ,,	52	30
சாயந்திரம் 4 ,,	25	0	காலே 4 ,,	55	0
,, 5 ,,	27	30	,, 5 ,,	57	30

5-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நிமிஷம்	நாழிகை	விநாடி	நிமிஷம்	நாழிகை	விநாடி	நிமிஷம்	நாழிகை	விநாடி	நிமிஷம்	நாழிகை	விநாடி
1	0	2½	16	0	40	31	1	17½	46	1	55
2	0	5	17	0	42½	32	1	20	47	1	57½
3	0	7½	18	0	45	33	1	22½	48	2	0
4	0	10	19	0	47½	34	1	25	49	2	2½
5	0	12½	20	0	50	35	1	27½	50	2	5
6	0	15	21	0	52½	36	1	30	51	2	7½
7	0	17½	22	0	55	37	1	32½	52	2	10
8	0	20	23	0	57½	38	1	35	53	2	12½
9	0	22½	24	1	0	39	1	37½	54	2	15
10	0	25	25	1	2½	40	1	40	55	2	17½
11	0	27½	26	1	5	41	1	42½	56	2	20
12	0	30	27	1	7½	42	1	45	57	2	22½
13	0	32½	28	1	10	43	1	47½	58	2	25
14	0	35	29	1	12½	44	1	50	59	2	27½
15	0	37½	30	1	15	45	1	52½	60	2	30

6-வது வாக்கியம் திரை ராசி கணித வாக்கியம்

நிமிஷம் அல்லது கலை	மணி அல்லது பாகை 0	மணி அல்லது பாகை 1	மணி அல்லது பாகை 2	மணி அல்லது பாகை 3	மணி அல்லது பாகை 4	மணி அல்லது பாகை 5	மணி அல்லது பாகை 6	மணி அல்லது பாகை 7	மணி அல்லது பாகை 8	மணி அல்லது பாகை 9	மணி அல்லது பாகை 10	மணி அல்லது பாகை 11
0	...	1380	1079	903	778	681	602	535	477	426	380	339
1	3158	1373	1076	901	776	680	601	534	476	425	379½	338
2	2857	1366	1072	898	775	678	600	533	475	424	379	337½
3	2681	1359	1068	896	773	677	598	532	474	423½	378	337
4	2556	1352	1065	894	771	675	597	531	473	423	377	336
5	2459	1345	1061	891	769	674	596	530	472	422	376½	335½
6	2380	1339	1058	889	767	673	595	529	471	421	376	335
7	2313	1332	1055	887	766	671	594	528	470½	420	375	334
8	2255	1326	1052	884	764	670	593	527	470	419½	374	333½
9	2204	1320	1048	882	762	668	591	526	469	419	373½	333
10	2158	1313	1044	880	760	667	590	525	468	418	373	332
11	2117	1307	1041	877	759	666	589	524	467	417	372	331½
12	2079	1301	1038	875	757	664	588	523	466	416	371½	331
13	2044	1291	1035	873	755	663	587	522	465	415½	371	330

6-வது வாக்கியம் திரைராசி கணித வாக்கியம் (தொடர்ச்சி)

நிமிஷம் அல்லது கலை	மணி அல்லது பாகை 0	மணி அல்லது பாகை 1	மணி அல்லது பாகை 2	மணி அல்லது பாகை 3	மணி அல்லது பாகை 4	மணி அல்லது பாகை 5	மணி அல்லது பாகை 6	மணி அல்லது பாகை 7	மணி அல்லது பாகை 8	மணி அல்லது பாகை 9	மணி அல்லது பாகை 10	மணி அல்லது பாகை 11
14	2012	1289	1031	871	754	661	585	521	464	415	370	329½
15	1982	1283	1028	868	752	660	584	520	463	414	369	329
16	1954	1278	1025	866	750	659	583	519	462½	413	368½	328
17	1928	1272	1022	864	748	657	582	518	462	412½	368	327½
18	1903	1266	1018	862	747	656	581	517	461	412	367	327
19	1880	1261	1015	860	745	655	580	516	460	411	366½	326
20	1857	1255	1012	857	743	653	579	515	459	410	366	325½
21	1836	1250	1009	855	742	652	577	514	458	409	365	325
22	1816	1246	1007	853	740	651	576	513	457	408½	364½	324½
23	1797	1239	1003	851	738	649	575	512	456	408	364	324
24	1778	1234	1000	849	737	648	574	511	455½	407	363	323
25	1760	1229	997	847	735	646	573	510	455	406	362	322½
26	1743	1224	994	845	733	645	572	509	454	405½	361½	322
27	1727	1219	991	842	732	644	571	508	453	405	361	321

6-வது வாக்கியம் திரை ராசி கணித வாக்கியம் (தொடர்ச்சி):—

நிமிஷம் அல்லது கலை	மணி அல்லது பாகை 0	மணி அல்லது பாகை 1	மணி அல்லது பாகை 2	மணி அல்லது பாகை 3	மணி அல்லது பாகை 4	மணி அல்லது பாகை 5	மணி அல்லது பாகை 6	மணி அல்லது பாகை 7	மணி அல்லது பாகை 8	மணி அல்லது பாகை 9	மணி அல்லது பாகை 10	மணி அல்லது பாகை 11
28	1711	1214	988	840	730	642	570	507	452	404	360	320½
29	1696	1209	985	838	729	641	568	506	451	403	359½	320
30	1681	1204	982	836	727	640	567	505	450	402	359	319½
31	1667	1199	979	834	725	639	566	504	449½	401½	358	319
32	1653	1195	977	832	724	637	565	503	449	401	357½	318
33	1640	1190	974	830	722	636	564	502	448	400	357	317½
34	1627	1185	971	828	720	635	563	501	447	399	356	317
35	1614	1181	968	826	719	633	562	500	446	398	355½	316
36	1602	1176	965	824	717	632	561	499	445	397½	355	315½
37	1590	1172	962	822	716	631	560	498	444	397	354	315
38	1579	1167	960	820	714	629	558	497	444	396	353	314
39	1567	1163	957	818	713	628	557	496	443	395	352½	313½
40	1556	1158	954	816	711	627	556	495	442	394½	352	313
41	1546	1154	952	814	710	626	555	494	441	394	351	312½

6-வது வாக்கியம் - திரை ராசிக் கணித வாக்கியம் (தொடர்ச்சி): —

திரிஷ்டம் அல்லது கலை	மணி அல்லது பாகை 0	மணி அல்லது பாகை 1	மணி அல்லது பாகை 2	மணி அல்லது பாகை 3	மணி அல்லது பாகை 4	மணி அல்லது பாகை 5	மணி அல்லது பாகை 6	மணி அல்லது பாகை 7	மணி அல்லது பாகை 8	மணி அல்லது பாகை 9	மணி அல்லது பாகை 10	மணி அல்லது பாகை 11
42	1535	1150	949	812	708	624	554	493	440	393	350½	312
43	1525	1146	946	810	707	623	553	492	439½	392	350	311
44	1515	1141	944	808	705	622	552	491	439	391½	349	310½
45	1505	1137	941	806	704	621	551	490	438	391	348½	310
46	1496	1133	938	804	702	619	550	489½	437	390	348	309
47	1486	1129	936	802	700	618	549	489	436	389	347	308½
48	1477	1125	933	800	699	617	548	488	435	388½	346½	308
49	1468	1121	930	799	697	616	547	487	434½	388	346	307½
50	1459	1117	928	797	696	614	546	486	434	387	345	307
51	1451	1113	925	795	694	613	545	485	433	386½	344½	306
52	1442	1109	923	793	693	612	543	484	432	386	344	305½
53	1434	1105	920	791	692	611	542	483	431	385	343	305
54	1426	1101	918	789	690	609	541	482	430½	384	342½	304½
55	1418	1098	915	787	689	608	540	481	430	383½	342	304

6-வது வாக்கியம்-திரை ராசிக் கணித வாக்கியம் (தொடர்ச்சி):—

திமிஷேபம் அல்லது கலை	மணி அல்லது பாகை 0	மணி அல்லது பாகை 1	மணி அல்லது பாகை 2	மணி அல்லது பாகை 3	மணி அல்லது பாகை 4	மணி அல்லது பாகை 5	மணி அல்லது பாகை 6	மணி அல்லது பாகை 7	மணி அல்லது பாகை 8	மணி அல்லது பாகை 9	மணி அல்லது பாகை 10	மணி அல்லது பாகை 11
56	1410	1094	913	785	687	607	539	480	429	383	341	303
57	1402	1090	910	784	686	606	538	479	428	382	340½	302½
58	1395	1086	908	782	684	604	537	478½	427	381	340	302
59	1388	1083	906	780	683	603	536	478	426	380½	339½	301½

இந்த வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதம் :— இது மிகவும் உபயோகமான வாக்கியம். இதை உபயோகப்படுத்தும் படியான வழியைத் தெரிந்துகொண்ட ஒருவர் இதை உபயோகப்படுத் தாமல் இருக்கவேமாட்டார் என்பது திண்ணம். ஏனென்ருல் இது அதிக சிரமத்தை நீக்கி இலேசாகக் கணிக்கும்படியான முகாந் தரத்தைத் தெரிவிக்கும். ஆகையால், ஒவ்வொருவரும் இதை உபயோகப்படுத்தும் வழியை அறிந்துகொண்டு இதை பழக்கத் திற்குக் கொண்டுவர வேண்டியது அவசியமானது.

ஃ குறிப்பு: இங்கு 6-வது வாக்கியம் 0 மணி அல்லது பாகை முதல் 11-மணி அல்லது பாகை வரையிலுங் கொடுக்கப்பட்டிருக் கிறது. சந்திரனுடைய தினகதி சில சமயங்களில் 14 பாகை வரை யிலும் வருமாகையால் 6-வது வாக்கியத்தின் தொடர்ச்சியாகிய 12-மணி அல்லது பாகை முதல் 14-மணி அல்லது பாகை வரையிலு முள்ள பாகத்தை 100, 101-வது பக்கங்களில் கொடுத்திருக்கிறது.

6-வது வாக்கியம் - திரை ராசிக் கணித வாக்கியம் (தொடர்ச்சி): —

நிமிஷம் அல்லது கலை	மணி அல்லது பாகை 12	மணி அல்லது பாகை 13	மணி அல்லது பாகை 14	நிமிஷம் அல்லது கலை	மணி அல்லது பாகை 12	மணி அல்லது பாகை 13	மணி அல்லது பாகை 14	நிமிஷம் அல்லது கலை	மணி அல்லது பாகை 12	மணி அல்லது பாகை 13	மணி அல்லது பாகை 14
0	301	266	234	15	292	258	226½	30	283	249½	218½
1	300	265½	233½	16	291	257	226	31	282½	249	218
2	299½	265	233	17	290½	256½	225	32	282	248½	217½
3	299	264½	232½	18	290	256	224½	33	281½	248	217
4	298½	264	232	19	289½	255½	224	34	281	247½	216½
5	298	263	231½	20	289	255	223½	35	280	247	216
6	297	262½	231	21	288½	254½	223	36	279½	246½	215½
7	296½	262	230½	22	288	254	222½	37	279	246	215
8	296	261½	230	23	287	253½	222	38	278½	245½	214½
9	295½	261	229½	24	286½	253	221½	39	278	245	214
10	295	260½	229	25	286	552½	221	40	277½	244½	213½
11	294	260	228½	26	285½	252	220½	41	277	244	213
12	293½	259½	228	27	285	251	220	42	276	243	212½
13	293	259	227½	28	284	250½	219½	43	275½	242½	212
14	292½	258½	227	29	283½	250	219	44	275	242	211½

6-வது வாக்கியம் - திரை ராசிக் கணித வாக்கியம் (தொடர்ச்சி) :

நிமிஷம் அல்லது கலை	மணி அல்லது பாகை 12	மணி அல்லது பாகை 13	மணி அல்லது பாகை 14	நிமிஷம் அல்லது கலை	மணி அல்லது பாகை 12	மணி அல்லது பாகை 13	மணி அல்லது பாகை 14	நிமிஷம் அல்லது கலை	மணி அல்லது பாகை 12	மணி அல்லது பாகை 13	மணி அல்லது பாகை 14
45	274½	241½	211	50	271½	239	208½	55	269	236½	206
46	274	241	210½	51	271	238½	208	56	268½	236	205½
47	273½	240½	210	52	270½	238	207½	57	268	235½	205
48	273	240	209½	53	270	237½	207	58	267	235	204½
49	272	239½	209	54	269½	237	206½	59	266½	234½	204

7-வது வாக்கியம் - 27 நட்சத்திரங்களின் பெயர்கள்

1	அஸ்வினி	8	பூசம்	15	சுவாதி	22	திருவோணம்
2	பரணி	9	ஆயில்யம்	16	விசாகம்	23	அவிட்டம்
3	கிருத்திகை	10	மகம்	17	அனுஷம்	24	சதயம்
4	ரோகிணி	11	பூரம்	18	கேட்டை	25	பூரட்டாதி
5	மிருகசீருஷம்	12	உத்திரம்	19	மூலம்	26	உத்திரட்டா [தி
6	திருவாதிரை	13	அஸ்தம்	20	பூராடம்		
7	புனர்பூசம்	14	சித்திரை	21	உத்திராடம்	27	ரேவதி

ஒவ்வொரு நட்சத்திரங்களின் ஸ்புடம் 11-வது வாக்கியத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, அஸ்வினிக்கு ஸ்புடம் பாகை 0 - கலை 0. பரணிக்கு ஸ்புடம் பாகை 13 - 20 கலை ஆகும்.

8-வது வாக்கியம் - 30 திதிகளின் பெயர்களும் அவைகளின் ஸ்புடமும்.

வரிசை எண்	திதிகளின் பெயர்	ஸ்புடம்			
		முதற்கொண்டு		வரையிலும்	
	வளர் பிறை	பாகை	கலை	பாகை	கலை
1	பிரதமை	0	0	12	0
2	துதியை	12	0	24	0
3	திரிதியை	24	0	36	0
4	சதுர்த்தி	36	0	48	0
5	பஞ்சமி	48	0	60	0
6	சஷ்டி	60	0	72	0
7	சப்தமி	72	0	84	0
8	அஷ்டமி	84	0	96	0
9	நவமி	95	0	108	0
10	தசமி	108	0	120	0
11	ஏகாதசி	120	0	132	0
12	துவாதசி	132	0	144	0
13	திரியோதசி	144	0	156	0
14	சதுர்தசி	156	0	168	0
15	பௌர்ணமி	168	0	180	0

8-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

வரிசை எண்	திதிகளின் பெயர்	ஸ்புடம்				
		முதற்கொண்டு		வரையிலும்		
	தேய்பிறை	பாகை	கலை	பாகை	கலை	
16	பிரதமை	180	0	192	0	சந்திரனுடைய ஸ்புடத்திலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடம் திதியினுடைய ஸ்புடம் என்பதாம்.
17	துதியை	192	0	204	0	
18	திரிதியை	204	0	216	0	
19	சதுர்த்தி	216	0	228	0	
20	பஞ்சமி	228	0	240	0	
21	சஷ்டி	240	0	252	0	
22	சப்தமி	252	0	264	0	
23	அஷ்டமி	264	0	276	0	
24	நவமி	276	0	288	0	
25	தசமி	288	0	300	0	
26	ஏகாதசி	300	0	312	0	
27	துவாதசி	312	0	324	0	
28	திரியோதசி	324	0	336	0	
29	சதுர்தசி	336	0	348	0	
30	அமாவாசை	348	0	360	0	

9-வது வாக்கியம், தசமமத்திய லக்கினம் அல்லது 10வது பாவஸ்புடம்

நட்சத்திர ஒரை மணி-நிமிஷம்	பாகை-கலை	நட்சத்திர ஒரை மணி-நிமிஷம்	பாகை-கலை
0—0	0—0		
0—4	1—5	1—12	19—30
0—8	2—11	1—16	20—35
0—12	3—16	1—20	21—39
0—16	4—22	1—24	22—43
0—20	5—27	1—28	23—46
0—24	6—32	1—32	24—50
0—28	7—37	1—36	25—53
0—32	8—43	1—40	26—57
0—36	9—48	1—44	28—0
0—40	10—53	1—48	29—3
0—44	11—58	1—52	30—6
0—48	13—3	1—56	31—8
0—52	14—7	2—0	32—11
0—56	15—12	2—4	33—13
1—0	16—17	2—8	34—16
1—4	17—21	2—12	35—18
1—8	18—26	2—16	36—20

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை – கலை	நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை – கலை
2–20	37–21	3–28	54–22
2–24	38–23	3–32	55–21
2–28	39–24	3–36	56–19
2–32	40–25	3–40	57–17
2–36	41–26	3–44	58–15
2–40	42–27	3–48	59–13
2–44	43–28	3–52	60–11
2–48	44–28	3–56	61–8
2–52	45–28	4–0	62–5
2–56	46–28	4–4	63–3
3–0	47–28	4–8	64–0
3–4	48–28	4–12	64–57
3–8	49–27	4–16	65–54
3–12	50–27	4–20	66–50
3–16	51–26	4–24	67–47
3–20	52–25	4–28	68–43
3–24	53–23	4–32	69–40

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை-கலை	நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை-கலை
4 - 36	70 - 36	5 - 44	86 - 20
4 - 40	71 - 32	5 - 48	87 - 15
4 - 44	72 - 28	5 - 52	88 - 10
4 - 48	73 - 24	5 - 56	89 - 5
4 - 52	74 - 20	6 - 0	90 - 0
4 - 56	75 - 15	6 - 4	90 - 55
5 - 0	76 - 11	6 - 8	91 - 50
5 - 4	77 - 7	6 - 12	92 - 45
5 - 8	78 - 3	6 - 16	93 - 40
5 - 12	78 - 58	6 - 20	94 - 35
5 - 16	79 - 53	6 - 24	95 - 30
5 - 20	80 - 49	6 - 28	96 - 25
5 - 24	81 - 44	6 - 32	97 - 21
5 - 28	82 - 39	6 - 36	98 - 16
5 - 32	83 - 35	6 - 40	99 - 11
5 - 36	84 - 30	6 - 44	100 - 7
5 - 40	85 - 25	6 - 48	101 - 2

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை-கலை	நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை-கலை
6 - 52	101 - 57	8 - 0	117 - 55
6 - 56	102 - 53	8 - 4	118 - 52
7 - 0	103 - 49	8 - 8	119 - 49
7 - 4	104 - 45	8 - 12	120 - 47
7 - 8	105 - 40	8 - 16	121 - 45
7 - 12	106 - 36	8 - 20	122 - 43
7 - 16	107 - 32	8 - 24	123 - 41
7 - 20	108 - 28	8 - 28	124 - 39
7 - 24	109 - 24	8 - 32	125 - 38
7 - 28	110 - 20	8 - 36	126 - 37
7 - 32	111 - 17	8 - 40	127 - 35
7 - 36	112 - 13	8 - 44	128 - 34
7 - 40	113 - 10	8 - 48	129 - 33
7 - 44	114 - 6	8 - 52	130 - 33
7 - 48	115 - 3	8 - 56	131 - 32
7 - 52	116 - 0	9 - 0	132 - 32
7 - 56	116 - 57	9 - 4	133 - 32

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-திமிஷம்	பாகை – கலை	நட்சத்திர ஓரை மணி-திமிஷம்	பாகை – கலை
9— 8	134—32	10—16	152— 0
9—12	135—32	10—20	153— 3
9—16	136—32	10—24	154— 7
9—20	137—33	10—28	155—10
9—24	138—34	10—32	156—14
9—28	139—35	10—36	157—17
9—32	140—36	10—40	158—21
9—36	141—37	10—44	159—25
9—40	142—39	10—48	160—30
9—44	143—40	10—52	161—34
6 48	144—42	10—56	162—39
9—52	145—44	11— 0	163—43
9—56	146—47	11— 4	164 48
10— 0	147—49	11 8	165—53
10— 4	148—52	11—12	166—57
10— 8	149—54	11—16	168— 2
10 12	150—57	11—20	169— 7

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை-கலை	நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை-கலை
11—24	170—12	12—32	118—43
11—28	171—17	12—36	189—48
11—32	172—23	12—40	190—53
11—36	173—28	12—44	191—58
11—40	174—33	12—48	193—3
11—44	175—38	12—52	194—7
11—48	176—44	12—56	195—12
11—52	177—49	13—0	196—17
11—56	178—55	13—4	197—21
12—0	180—0	13—8	198—26
12—4	181—5	13—12	199—30
12—8	182—11	13—16	200—35
12—12	183—16	13—20	201—39
12—16	184—22	13—24	202—43
12—20	185—27	13—28	203—46
12—24	186—32	13—32	204—50
12—28	187—37	13—36	205—53

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை - கலை	நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை - கலை
13 - 40	206 - 57	14 - 48	224 - 28
13 - 44	208 - 0	14 - 52	225 - 28
13 - 48	209 - 3	14 - 56	226 - 28
13 - 52	210 - 6	14 - 0	227 - 28
13 - 56	211 - 8	15 - 4	228 - 28
14 - 0	212 - 11	15 - 8	229 - 27
14 - 4	213 - 13	15 - 12	230 - 27
14 - 8	214 - 16	15 - 16	231 - 26
14 - 12	215 - 18	15 - 20	232 - 25
14 - 16	216 - 20	15 - 24	233 - 23
14 - 20	217 - 21	15 - 28	234 - 22
14 - 24	218 - 23	15 - 32	235 - 21
14 - 28	219 - 24	15 - 36	236 - 19
14 - 32	220 - 25	15 - 40	237 - 17
14 - 36	221 - 26	15 - 44	238 - 15
14 - 40	222 - 27	15 - 48	239 - 13
14 - 44	223 - 28	15 - 52	240 - 11

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை - கலை	நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை - கலை
15 - 56	241 - 8	17 - 4	257 - 7
16 - 0	242 - 5	17 - 8	258 - 3
16 - 4	243 - 3	17 - 12	258 - 58
16 - 8	244 - 0	17 - 16	259 - 53
16 - 12	244 - 57	17 - 20	260 - 49
16 - 16	245 - 54	17 - 24	261 - 44
16 - 20	246 - 50	17 - 28	262 - 39
16 - 24	247 - 47	17 - 32	263 - 35
16 - 28	248 - 43	17 - 36	264 - 30
16 - 32	249 - 40	17 - 40	265 - 25
16 - 36	250 - 36	17 - 44	266 - 20
16 - 40	251 - 32	17 - 48	267 - 15
16 - 44	252 - 28	17 - 52	268 - 10
16 - 48	253 - 24	17 - 56	269 - 5
16 - 52	254 - 20	18 - 0	270 - 0
16 - 56	255 - 15	18 - 4	270 - 55
17 - 0	256 - 11	18 - 8	271 - 50

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை - கலை	நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை - கலை
18 - 12	272 - 45	19 - 20	288 - 28
18 - 16	273 - 40	19 - 24	289 - 24
18 - 20	274 - 35	19 - 28	290 - 20
18 - 24	275 - 30	19 - 32	291 - 17
18 - 28	276 - 25	19 - 36	292 - 13
18 - 32	277 - 21	19 - 40	293 - 10
18 - 36	278 - 16	19 - 44	294 - 6
18 - 40	279 - 11	19 - 48	295 - 3
18 - 44	280 - 7	19 - 52	296 - 0
18 - 48	281 - 2	19 - 56	296 - 57
18 - 52	281 - 57	20 - 0	297 - 55
18 - 56	282 - 53	20 - 4	298 - 52
19 - 0	283 - 49	20 - 8	299 - 49
19 - 4	284 - 45	20 - 12	300 - 47
19 - 8	285 - 40	20 - 16	301 - 45
19 - 12	286 - 36	20 - 20	302 - 43
19 - 16	287 - 32	20 - 24	303 - 41

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை – கலை	நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை – கலை
20—28	304—39	21—36	321—37
20—32	305—38	21—40	322—39
20—36	306—37	21—44	323—40
20—40	307—35	21—48	324—42
20—44	308—34	21—52	325—44
20—48	309—33	21—56	326—47
20—52	310—33	22— 0	327—49
20—56	311—32	22— 4	328—52
21— 0	312—32	22— 8	329—54
21— 4	313—32	22—12	330—57
21— 8	314—32	22—16	332— 0
21 12	315—32	22—20	333— 3
21 16	316—32	22—24	334— 7
21—20	317—33	22—28	335—10
21—24	318—34	22—32	336—14
21—28	319—35	22—36	337—17
21—32	320—36	22—40	338—21

9-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை-கலே	நட்சத்திர ஓரை மணி-நிமிஷம்	பாகை-கலே
22—44	339—25	23—24	350—12
22—48	340—30	23—28	351—17
22—52	341—34	23—32	352—23
22—56	342—39	23—36	353—28
23— 0	343—43	23—40	354—33
23— 4	344—48	23—44	355—38
23— 8	345—53	23—48	356—44
23—12	346—57	23—52	357—49
23—16	348— 2	23—56	358—55
23—20	349— 7	24— 0	360— 0

10-வது வாக்கியம்-ஜனன காலத்தில் கர்ப்பச் செல்லுபோக இருப்பு நின்ற கிரகதசை கணித வாக்கியம்

பாகை	சூரியன் கிருத்திகை, உத்திரம், உத்திராடம்			சந்திரன் ரோகிணி, அஸ்தம், திருவோணம்			அங்காரகன் மிருகசீரிஷம் சித்திரை, அவிட்டம், கேது. மகம், மூலம், அச்வினி			ராகு திருவாதிரை, சுவாதி, சதயம்		
	வ	மீ	நா	வ	மீ	நா	வ	மீ	நா	வ	மீ	நா
1	0	5	12	0	9	0	0	6	9	1	4	6
2	0	10	24	1	6	0	1	0	18	2	8	12
3	1	4	6	2	3	0	1	6	27	4	0	18
4	1	9	18	3	0	0	2	1	6	5	4	24
5	2	3	0	3	9	0	2	7	15	6	9	0
6	2	8	12	4	6	0	3	1	24	8	1	6
7	3	1	24	5	3	0	3	8	3	9	5	12
8	3	7	6	6	0	0	4	2	12	10	9	18
9	4	0	18	6	9	0	4	8	21	12	1	24
10	4	6	0	7	6	0	5	3	0	13	6	0
11	4	11	18	8	3	0	5	9	9	14	10	6
12	5	4	24	9	0	0	6	3	18	16	2	12
13	5	10	6	9	9	0	6	9	27	16	7	18

10-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

பாகை	குரு புனர்ப்பூசம், விசாகம், பூரட்டாதி			சனி பூசம், அனுஷம், உத்திரட் டாதி			புதன் ஆயில்யம், கேட்டை, ரேவதி			சுக்கிரன் பூரம், பூராடம், பரணி		
	வரு	மீ	நா	வரு	மீ	நா	வரு	மீ	நா	வரு	மீ	நா
1	1	2	12	1	5	3	1	3	9	1	6	0
2	2	4	24	2	10	6	2	6	18	3	0	0
3	3	7	6	4	3	9	3	9	27	4	6	0
4	4	9	18	5	8	12	5	1	6	6	0	0
5	6	0	0	7	1	15	6	4	15	7	6	0
6	7	2	12	8	6	18	7	7	24	9	0	0
7	8	4	24	9	11	21	8	11	3	10	6	0
8	9	7	6	11	4	24	10	2	12	12	0	0
9	10	9	18	12	9	27	11	5	21	13	6	0
10	12	0	0	14	3	0	12	9	0	15	0	0
11	13	2	12	15	8	3	14	0	9	16	6	0
12	14	4	24	17	1	6	15	3	18	18	0	0
13	15	7	6	18	6	9	16	6	27	19	6	0

10-வது வாக்கியத்தின் (தொடர்ச்சி)

கலை	சூரியன்				சந்திரன்				அங்காரகன் கேது				ராகு			
	ஓஹமீ		நா	நா	ஓஹமீ		நா	நா	ஓஹமீ		நா	நா	ஓஹமீ		நா	நா
1	0	0	2	42	0	0	4	30	0	0	3	9	0	0	8	6
2	0	0	5	24	0	0	9	0	0	0	6	18	0	0	16	12
3	0	0	8	6	0	0	13	30	0	0	9	27	0	0	24	18
4	0	0	10	48	0	0	18	0	0	0	12	36	0	1	2	24
5	0	0	13	30	0	0	22	30	0	0	15	45	0	1	10	30
6	0	0	16	12	0	0	27	0	0	0	18	54	0	1	18	36
7	0	0	18	54	0	1	1	30	0	0	22	3	0	1	26	42
8	0	0	21	30	0	1	6	0	0	0	25	12	0	2	4	48
9	0	0	24	18	0	1	10	30	0	0	28	21	0	2	12	54
10	0	0	27	0	0	1	15	0	0	1	1	30	0	2	21	0
20	0	1	24	0	0	3	0	0	0	2	3	0	0	5	12	0
30	0	2	21	0	0	4	15	0	0	3	4	30	0	8	3	0
40	0	3	18	0	0	6	0	0	0	4	6	0	0	10	24	0
50	0	4	15	0	0	7	15	0	0	5	7	30	1	1	15	0

கலை	குரு				சனி				புதன்				சுக்கிரன்			
	ஓஹமீ		நா	நா	ஓஹமீ		நா	நா	ஓஹமீ		நா	நா	ஓஹமீ		நா	நா
1	0	0	7	12	0	0	8	33	0	0	7	39	0	0	9	0
2	0	0	14	24	0	0	17	6	0	0	15	18	0	0	18	0
3	0	0	21	36	0	0	25	39	0	0	22	57	0	0	27	0
4	0	0	28	48	0	1	4	12	0	1	0	36	0	1	6	0
5	0	1	6	0	0	1	12	45	0	1	8	15	0	1	15	0
26-வது வாக்கியம் - கிரகம், பாவம் இவைகளின் திக்குப் பலத்தின் அளவும், பட்சபலத்தின் அளவும்.

பாகை	அளவு	பாகை	அளவு	பாகை	அளவு	பாகை	அளவு	பாகை	அளவு	பாகை	அளவு
0	100	33	82	66	63	99	45	132	27	165	8
1	99	34	81	67	63	100	44	133	26	166	8
2	99	35	81	68	62	101	44	134	26	167	7
3	98	36	80	69	62	102	43	135	25	168	7
4	98	37	79	70	61	103	43	136	24	169	6
5	97	38	79	71	61	104	42	137	24	170	6
6	97	39	78	72	60	105	42	138	23	171	5
7	96	40	78	73	59	106	41	139	23	172	4
8	96	41	77	74	59	107	41	140	22	173	4
9	95	42	77	75	58	108	40	141	22	174	3
10	94	43	76	76	58	109	39	142	21	175	3
11	94	44	76	77	57	110	39	143	21	176	2
12	93	45	75	78	57	111	38	144	20	177	2
13	93	46	74	79	56	112	38	145	19	178	1
14	92	47	74	80	56	113	37	146	19	179	1
15	92	48	73	81	55	114	37	147	18	180	0
16	91	49	73	82	54	115	36	148	18	181	1
17	91	50	72	83	54	116	36	149	17	182	1
18	90	51	72	84	53	117	35	150	17	183	2
19	89	52	71	85	53	118	34	151	16	184	2
20	89	53	71	86	52	119	34	152	16	185	3
21	88	54	70	87	52	120	33	153	15	186	3
22	88	55	69	88	51	121	33	154	14	187	4
23	87	56	69	89	51	122	32	155	14	188	4
24	87	57	68	90	50	123	32	156	13	189	5
25	86	58	68	91	49	124	31	157	13	190	6
26	86	59	67	92	49	125	31	158	12	191	6
27	85	60	67	93	48	126	30	159	12	192	7
28	84	61	66	94	48	127	29	160	11	193	7
29	84	62	66	95	47	128	29	161	11	194	8
30	83	63	65	96	47	129	28	162	10	195	8
31	83	64	64	97	46	130	28	163	9	196	9
32	82	65	64	98	46	131	27	164	9	197	9

26-வது வாக்கியம் - கிரகம், பாவம் இவைகளின் திக்குப்பலத்தின் அளவு பட்சபலத்தின் அளவும் - (தொடர்ச்சி)

பாகை	அளவு	பாகை	அளவு	பாகை	அளவு	பாகை	அளவு	பாகை	அளவு
198	10	231	28	264	47	297	65	330	83
199	10	232	29	265	47	298	66	331	84
200	11	233	29	266	48	299	66	332	84
201	12	234	30	267	48	300	67	333	85
202	12	235	31	268	49	301	67	334	86
203	13	236	31	269	49	302	68	335	86
204	13	237	32	270	50	303	68	336	87
205	14	238	32	271	51	304	69	337	87
206	14	239	33	272	51	305	69	338	88
207	15	240	33	273	52	306	70	339	88
208	16	241	34	274	52	307	71	340	89
209	16	242	34	275	53	308	71	341	89
210	17	243	35	276	53	309	72	342	90
211	17	244	36	277	54	310	72	343	91
212	18	245	36	278	54	311	73	344	91
213	18	246	37	279	55	312	73	345	92
214	19	247	37	280	56	313	74	346	92
215	19	248	38	281	56	314	74	347	93
216	20	249	38	282	57	315	75	348	93
217	21	250	39	283	57	316	76	349	94
218	21	251	39	284	58	317	76	350	94
219	22	252	40	285	58	318	77	351	95
220	22	253	41	286	59	319	77	352	96
221	23	254	41	287	59	320	78	353	96
222	23	255	42	288	60	321	78	354	97
223	24	256	42	289	61	322	79	355	97
224	24	257	43	290	61	323	79	356	98
225	25	258	43	291	62	324	80	357	98
226	26	259	44	292	62	325	81	358	99
227	26	260	44	293	63	326	81	359	99
228	27	261	45	294	63	327	82	360	100
229	27	262	46	295	64	328	82		
230	28	263	46	296	64	329	83		

27-வது வாக்கியம்—கிரகங்களின் நைசர்க்கிகபலம்

கிரகங்களின்	பலத்தின் அளவு	கிரகங்களின்	பலத்தின் அளவு
சூரியனுக்கு	100	குருவிற்கு	
சந்திரனுக்கு	86	சுக்கிரனுக்கு	57
செவ்வாய்க்கு	29	சனிக்கு	71
புதனுக்கு	43		14

கிரகங்களின் காலபலம்

கிரகங்களின் காலபலம் ஏழு விதமாகும், (1) நத உன்னதபலம், (2) பட்சபலம், (3) தினராத்திரி, திரிபாகபலம், (4) வருஷபலம், (5) மாதபலம். (6) தினபலம், (7) ஓராதிபலம், இத்த ஏழுவிதபலத்தையும் கூட்டி வருகின்ற மொத்த பலன்தான் காலபலமாகும்.

28-வது வாக்கியம்—கிரகங்களின் நத உன்னதபலம்

நாழிகை	சூரியன், குரு, சுக்கிரன் அளவு	சந்திரன் செவ்வாய் சனி அளவு	நாழிகை	சூரியன், குரு, சுக்கிரன் அளவு	சந்திரன், செவ்வாய் சனி அளவு
0	100	0	16	47	53
1	97	3	17	43	57
2	93	7	18	40	60
3	90	10	19	37	63
4	87	13	20	33	67
5	83	17	21	30	70
6	80	20	22	27	73
7	77	23	23	23	77
8	73	27	24	20	80
9	70	30	25	17	83
10	67	33.	26	13	87
11	63	37	27	10	90
12	60	40	28	7	93
13	57	43	29	3	97
14	53	47	30	0	100
15	50	50			

புதனுக்குப்பலம்:—எந்த நாழிகையில் ஜெனனமாயிருந்த போதிலும் புதனுக்கு நத உன்னதபலம் 100 என்று அறியவும். கிரகங்களின் நத உன்னத பலம் அறியும் விதம்:—முதலில் ஜெனன நாழிகை, சூரியன் அன்று உச்சிக்கு வந்த பிறகு, எத்தனை நாழிகை என்று அறியவும். அதாவது ஜெனன நாழிகையிலிருந்து சூரியன் உச்சிக்கு வரும் நாழிகையைக் கழிக்கவேண்டியது.[1] (1) இப்படிக்கழித்து வரும் எண் 30-க்குள்ளானால் அதே எண்ணை வைத்துக்கொண்டு அநத எண்ணிற்கு எதிரில் மேற்கண்ட வாக்கியத்தில் கொடுத்திருக்கும் பலத்தின் அளவே அந்தந்த கிரகத்தின் நத உன்னத பலமாகும். (2) இப்படிக் கழித்து வரும் எண் 30-க்கு மேலானால் அதை 60-ல் இருந்து கழிக்க வேண்டியது. இப்படிக்கழித்து வரும் எண்ணிற்கு எதிரில் மேற்கண்ட வாக்கியத்தில் கொடுத்திருக்கும் பலத்தின் அளவே அந்தந்தக் கிரகத்தின் காலபலமாகும்.

[1]குறிப்பு:—ஜெனன நாழிகையில் இருந்து சூரியன் உச்சிக்கு வரும் நாழிகையைக் கழிக்க முடியாமற்போனால் அதாவது ஜெனன நாழிகையைவிடச் சூரியன் உச்சிக்கு வரும் நாழிகை பெரியதானால் ஜெனன நாழிகையுடன் 60 கூட்டி வரும் தொகையிலிருந்து ஜெனன நாழிகையைக் கழிக்கவும். கழித்து வருவதை முழு நாழிகையாக மாற்றவும்.

சூரியன் உச்சிக்கு வரும் நாழிகையை அறியும் விதம்: — பஞ்சாங்கங்களில் சூரியனுடைய உதயம், உச்சம், அஸ்தமனம் ஆகிய இவைகள் கெடியாரமணி நிமிஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சூரியன் உச்சமாகும் அதாவது உச்சிக்கு வரும் மணி நிமிஷத்திலிருந்து சூரியன் உதயமாகும் மணி நிமிஷத்தைக் கழிக்க வருகின்ற மணி நிமிஷத்தை நாழிகை விநாடியாக மாற்ற வருகின்ற நாழிகை விநாடி தான் சூரியன் உதயத்திலிருந்து சூரியன் உச்சமாகும் காலம் ஆகும். உதாரணமாகச் சென்னையில் சித்திரைமீ 1வ யில் காலை மணி 6 நிமிஷம் 1-க்குச் சூரியன் உதயம் என்றும் பகல் மணி 12-நிமிஷம் 10-க்குச் சூரியன் உச்சம் என்றும் சி ஜி. ராஜன் பஞ்சாங்கத்தில் போட்டிருக்கின்றது. மணி 12-நிமிஷம் 10-ல் இருந்து மணி 6 நிமிஷம் 1-ஐக்கழிக்க மணி 6-நிமிஷம் 9ஆகும். இதை 1 மணிக்கு 2½-நாழிகையாகவும் 1 நிமிஷத்திற்கு 2½-விநாடியாகவும் மாற்ற 15 நாழிகை 22½-விநாடியாகும். ஆகையால், சூரியனுடைய

உச்சம் சூரியனுடைய உதயத்திலிருந்து 15-நாழிகை 22½-விநாடிக்கு நேரிடுகிறது என்பதாம். அதாவது, சூரிய உதயாதி நாழிகை 15-விநாடி 22½-க்கு சூரிய உச்சம் என்பதாம்.

பஞ்சாங்கங்களில் சூரிய உச்சம் கொடுக்காமல் சூரிய உதயம் அஸ்தமனம் கொடுத்திருந்தால் இவைகளிலிருந்து சூரிய உச்சத்தைக் கணிக்கலாம். சூரிய உதய மணி நிமிஷத்துடன் சூரிய அஸ்தமன மணி நிமிஷத்தைக் கூட்டி வரும் மணி நிமிஷத்தை இரண்டில் வகுக்க வேண்டியது. அப்படி வகுக்க வரும் மணி நிமிஷத்துடன் 6-மணி 0 நிமிஷம் சேர்க்க வருகின்ற மணி நிமிஷமே சூரிய உச்ச மணி நிமிஷமாகும் உதாரணமாக சி. ஜி. ராஜன் பஞ்சாங்கத்தில் சித்திரைமீ" 21-உ சென்னையில் சூரிய உதயம் காலை மணி 5 நிமிஷம் 51-க்கும் அஸ்தமனம் மாலை மணி 6 நிமிஷம் 21-க்கும் என்று கண்டிருக்கின்றது. மணி 5 நிமிஷம் 51 உடன் மணி 6 நிமிஷம் 21-யைக் கூட்டமணி 12 நிமிஷம் 12 ஆகும். இதை 2 ஆல் வகுக்க மணி 6 நிமிஷம் 6 ஆகும். இத்துடன் 6 மணி 0 நிமிஷத்தைக் கூட்ட மணி 12 நிமிஷம் 6 ஆகும். இந்த மணி 12 நிமிஷம் 6 தான் சூரிய உச்சமாகும் காலம். அதாவது அன்று பகல் 12 மணி 6 நிமிஷத்திற்குச் சூரியன் உச்சமாகும் என்பதாம் இதைத்தான் அப்பஞ்சாங்கத்தில் அன்று சூரியன் உச்சமாகும் காலம் என்று போட்டிருப்பதைக் கவனிக்கலாம்.

29-வது வாக்கியம்—பட்சபலம் அல்லது வளர் பிறை தேய் பிறை பலம்

சுபக்கிரகங்களின் பலம் அமாவசை முதல் பௌர்ணமி வரையிலும் அதிகப்பட்டுக் கொண்டும், பௌர்ணமி முதல் அமாவாசை வரையிலும் குறைந்து கொண்டும் இருக்கும். பாபக்கிரகங்களின் பலம் அமாவாசை முதற்கொண்டு பௌர்ணமிவரையிலும் குறைந்து கொண்டும் பௌர்ணமி முதல் அமாவாசை வரையிலும் அதிகப்பட்டுக்கொண்டும் இருக்கும். அமாவாசையில் சுபக்கிரகங்களுக்குப் பலம் பூஜ்ஜியம் என்றும் பாபக்கிரகங்களுக்குப் பூர்ணபலம் என்றும் பௌர்ணமியில் சுபக்கிரகங்களுக்குப் பூர்ணபலம் என்றும் பாபக்கிரகங்களுக்குப் பலம் பூஜ்ஜியம் என்றும் அறியவும். குரு, சுக்கிரன் புதன், சந்திரன் இவர்களைச் சுபக்கிரகங்களாகவும், சூரியன், செவ்வாய், சனி இவர்களைப் பாபக்கிரகங்களாகவும் பாவிக்கவேண்டியது.

கிரகங்களின் பட்சநலம் அறியும் விதம்:—சந்திரனுடைய ஸ்புடத்தின் பாகைக்கலையிலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தின் பாகைக்

கலையைக்கழிக்க வருகின்ற பாகைக்கலையை முழுபாகையாக மாற்றவும். இப்படி வருகின்ற பாகையின் எண்ணிற்கு நேராய் திக்குப் பலத்தின் வாக்கியத்தில் அதாவது 26-வது வாக்கியத்தில் கொடுத்துள்ள அளவே பாபக்கிரகத்தின் பட்சபலமாகும். இந்த அளவின் எண்ணை 100-ல் இருந்து கழிக்க வருகின்ற எண்ணே சுபக்கிரகத்தின் பட்சபலமாகும், உதாரணமாகச் சந்திரனுடைய ஸ்புடமாகிய பாகை 118—10 கலையிலிருந்து சூரியனுடைய ஸ்புடமாகிய பாகை 167-2 கலையைக் கழிக்க வருகின்ற முழுபாகை 311 என்று வைத்துக் கொள்வோம் திக்குப்பல அளவு வாக்கியத்தில் 311 பாகைக்கு நேரில் 73 இருக்கின்றது. ஆகையால், பாபக்கிரகத்தின் பட்சபலம் 100-ல் 73 பங்கு என்பதாம். இந்த 73-யை 100-ல் இருந்து கழிக்க 27 வரும் ஆகையால், சுபக்கிரகத்தின் பட்சபலம் 100-ல் 27 பங்கு என்பதாம்.

30-வது வாக்கியம்—தினராத்திரி திரிபாகப் பலம்:—பகற் பொழுதை மூன்று சமபாகமாகப் பங்கிடவும்- பகற் பொழுதிற்கு அகஸ் என்று பெயர். ஆகையால், அகஸை 3 சமபாகமாகப் பங்கிடவும். அகஸ் பஞ்சாங்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அகஸ் பஞ்சாங்கங்களில் கொடுக்கப்படாமலிருந்து சூரிய உதயமும் அஸ்தமனமும் கொடுக்கப்பட்டிருந்தால் இவைகளிலிருந்து அகஸைப்பின் வருமாறு கணிக்கலாம். சூரிய அஸ்தமன மணி நிமிஷத்துடன் மணி 12 நிமிஷம் 0 கூட்ட வருகின்ற மணி நிமிஷத்திலிருந்து சூரிய உதய மணி நிமிஷத்தைக் கழிக்க வருகின்ற மணி நிமிஷகாலமே பகற்பொழுது அல்லது அகஸச் ஆகும். இந்த மணி நிமிஷகாலத்தை நாழிகை விநாடியாக மாற்ற அகஸு நாழிகை விநாடியில் ஏற்படும். உதாரணமாக சி. ஜி. ராஜன் பஞ்சாங்கத்தில் சென்னையில் சித்திரைமீ 11-உ சூரிய உதயம் மணி 5 நிமிஷம் 56-க்கும், அஸ்தமனம் மணி 6 நிமிஷம் 19-க்கு நேரிடுவதாகப் போட்டிருக்கின்றது. இந்த மணி 6 நிமிஷம் 19-க்கு உடன் மணி 12 நிமிஷம் 0 கூட்டமணி 18 நிமிஷம் 19 வரும். இதிலிருந்து மணி 5 நிமிஷம் 56-ஐக் கழிக்க மணி 12 நிமிஷம் 23 வரும். இதுதான் அகஸு அல்லது பகற்

பொழுதின் அளவு. இதை நாழிகை விநாடியாக மாற்ற அகஸ_ு 30 நாழிகை 57½ விநாடி ஆகும். அநாவது அகஸ_ு நாழிகை 30விநாடி 58 ஆகும். அகஸை 3 சமபாகமாகப் பங்கிட வருகின்ற 1-வதுபாகம் புதனுடைய காலமாகும், 2-வது பாகம் சூரியனுடைய காலமாகும். 3-வது பாகம் சனியினுடைய காலமாகும். பகலும் இரவும்கொண்ட 60 நாழிகையில் பகலின் காலமாகிய 30 நாழிகை 58 விநாடியைக் கழிக்க வருகின்ற 29 நாழிகை 2 விநாடியே இரவின் மொத்தகால மாகும். இதை 3 சமபாகமாகப் பங்கிட வருகின்ற இரவின் முதற் பாகம் சந்திரனுடைய காலமாகும், 2-வது பாகம் சுக்கிரனுடைய காலமாகும், 3-வது பாகம் செவ்வாயினுடைய காலமாகும் ஜெனன காலம் எந்தக்கிரகத்தின் பாகத்தைச் சேர்ந்ததோ அந்தக்கிரகத்திற்கு இதனுல் திரிபாகபலம் 100 என்று அறியவும் ஜெனன நாழிகை எந்தப்பாகத்தில் இருந்த போதிலும் குருவிற்குத்திரிபாகப்பலம் 100 என்று அறியவும். ஜெனனகாலம் எந்தக்கிரகத்தைச் சேர்ந்ததோ அந்தக்கிரகமும், குருவும் நீங்கலாக நின்ற மற்றக்கிரகங்களுக்குத் திரிபாக பலம் பூஜ்ஜியமாகும். இங்கு சொல்லிய திரிபாக கால அதிபதிகள் அடிமிற்கண்டபடி ஆகும்:—

பகலில்		இரவில்	
1-வது பாகம்	புதனுடையது	1-வது பாகம்	சந்திரனுடையது
2 ,,	சூரியனுடையது	2 ,,	சுக்கிரனுடையது
3 ,,	சனியினுடையது	3	செவ்வாயினுடையது

குருவிற்கு எந்தப்பாகத்திலும் திரிபாகபாலம் 100

31-வது வாக்கியம் - அயன பலம்

உத்தர கிராந்தி பாகை	சூரியன், செவ்வாய், குரு, சுக் கிரன், புதன் அயனபலம்	சந்திரன், சனி அயன பலம்	தட்சிண கிராந்தி பாகை	சூரியன், செவ்வாய், குரு, சுக்கி ரன் அயன பலம்	சந்திரன், சனி, புதன் அயன பலம்
0	50	50	0	50	50
1	52	48	1	48	52
2	54	46	2	46	54
3	56	44	3	44	56
4	58	42	4	42	58
5	60	40	5	40	60
6	62	37	6	37	62
7	65	35	7	35	65
8	67	33	8	33	67
9	69	31	9	31	69
10	71	29	10	29	71
11	73	27	11	27	73
12	75	25	12	25	75
13	77	23	13	23	77
14	79	21	14	21	79
15	81	19	15	19	81
16	83	17	16	17	83
17	85	15	17	15	85
18	87	12	18	12	87
19	90	10	19	10	90
20	92	8	20	8	92
21	94	6	21	6	94
22	96	4	22	4	96
23	98	2	23	2	98
24	100	0	24	0	100

32 (1)-வது வாக்கியம்—உப அஹர்கண வாக்கியம்

1798-ஆ செப்டம்பர் மீ 30உ முதல் கீழ்க்கண்ட ஆ ஜனவரி மீ 1உ ஆரம்பம் வரையில் செல்லான தினங்கள்

வருஷம்	உப அஹர் கணம்	வருஷம்	உப அஹர் கணம்	வருஷம்	உப அஹர் கணம்	வருஷம்	உப அஹர் கணம்
1799	93	1829	11050	1859	22007	1889	32965
1800	458	1830	11415	1860	22372	1890	33330
1801	823	1831	11780	1861	22738	1891	33695
1802	1188	1832	12145	1862	23103	1892	34060
1803	1553	1833	12511	1863	23468	1893	34426
1804	1918	1834	12876	1864	23833	1894	34791
1805	2284	1835	13241	1865	24199	1895	35156
1806	2649	1836	13606	1866	24564	1896	35521
1807	3014	1837	13972	1867	24929	1897	35887
1808	3379	1838	14337	1868	25294	1898	36252
1809	3745	1839	14 02	1869	25660	1899	35617
1810	4110	1840	15067	1870	26025	1900	36982
1811	4475	1841	15433	1871	26390	1901	37347
1812	4840	1842	15798	1872	26755	1902	37712
1813	5206	1843	16163	1873	27121	1903	38077
1814	5571	1844	16528	1874	27486	1904	38442
1815	5936	1845	16894	1875	27851	1905	38808
1816	6301	1846	17259	1876	28216	1906	39173
1817	6667	1847	17624	1877	28582	1907	39538
1818	7032	1848	17989	1878	28947	1908	39903
1819	7397	1849	18355	1879	29312	1909	40269
1820	7762	1850	18720	1880	29677	1910	40634
1821	8128	1851	19085	1881	30043	1911	40999
1822	8493	1852	19450	1882	30408	1912	41364
1823	8858	1853	19816	1883	30773	1913	41730
1824	9223	1854	20181	1884	31138	1914	42095
1825	9589	1855	20546	1885	31504	1915	42460
1826	9954	1856	20911	1886	31869	1916	42825
1827	10319	1857	21277	1887	32234	1917	43191
1828	10684	1858	21642	1888	32599	1918	43556

32-வது வாக்கியம், உப அஹர்கண வாக்கியம்—(தொடர்ச்சி)

வருஷம்	உப அஹர் கணம்	வருஷம்	உப அஹர் கணம்	வருஷம்	உப அஹர் கணம்	வருஷம்	உப அஹர் கணம்
1919	43921	1940	51959	1961	59262	1982	66932
1920	44286	1941	51957	1962	59627	1983	67297
1921	44652	1942	52322	1963	59992	1984	67662
1922	45017	1943	52687	1964	60357	1985	68028
1923	45382	1944	53052	1965	60723	1986	68393
1924	45747	1945	53418	1966	61088	1987	68758
1925	46113	1946	53783	1967	61453	1 88	69123
1926	46478	1947	54148	1968	61818	1989	69489
1927	46843	1948	54513	1969	62184	1990	69854
1928	47208	1949	54879	1970	62549	1991	70219
1929	47574	1950	55244	1971	62914	1992	70584
1930	47939	1951	55609	1972	63279	1993	70950
1931	48304	1952	55974	1973	63645	1994	71315
1932	48669	1953	56340	1974	64010	1995	71680
1933	49035	1954	56705	1975	64375	1996	72045
1934	494[illegible]0	1955	57070	1976	64740	1997	72411
1935	49765	1956	57435	1977	65106	1998	72776
1936	50130	1957	57801	1978	65471	1999	73141
1937	50496	1958	58166	1979	65836	2000	73506
1938	50861	1959	58531	1980	66201		
1939	51226	1960	58896	1981	66567		

32-வது (2) வாக்கியம்—உப அஹர்கண வாக்கியம்

ஜனவரிமீ 1உ முதல் கீழ்கண்ட மாதத்திய 1உ

ஆரம்பம் வரையில் செல்லான தினங்கள்

மாதம்	சென்ற நாட்கள் சாதாரண ஷூ	சென்ற நாட்கள் லீப் ஷூ	மாதம்	சென்ற நாட்கள் சாதாரண ஷூ	சென்ற நாட்கள் லீப் ஷூ
பிப்ரவரி	31	31	ஆகஸ்டு	212	213
மார்ச்	59	60	செப்டம்பர்	243	244
ஏப்ரல்	90	91	அக்டோபர்	273	274
மே	120	121	நவம்பர்	204	305
ஜூன்	151	152	டிசம்பர்	334	335
ஜூலை	181	182			

32-(3)-வது வாக்கியம்—உப அஹர்கண வாக்கியம்

அந்தந்த மீ 1உ முதல் தேவையான தேதி ஆரம்பம்

வரையில் செல்லான தினங்கள்

தேதி	செல்லான தினம்	தேதி	செல்லான தினம்	தேதி	செல்லான தினம்	தேதி	செல்லான தினம்
1	0	9	8	17	16	25	24
2	1	10	9	18	17	26	25
3	2	11	10	19	18	27	26
4	3	12	11	20	19	28	27
5	4	13	12	21	20	29	28
6	5	14	13	22	21	30	29
7	6	15	14	23	22	31	30
8	7	16	15	24	23		

32—(4)வது- வாக்கியம்—ஓராதிபதி வாக்கியம்

வரிசை எண்.	முதற்கொண்டு நாழிகை	வரையிலும் நாழிகை	ஞாயிற்றுக் கிழமை	திங்கட்கிழமை	செவ்வாய்க் கிழமை	புதன்கிழமை	வியாழக் கிழமை	வெள்ளிக் கிழமை	சனிக்கிழமை
1	0	2½	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி
2	2½	5	சு	சனி	சூ	சந்	அ	பு	குரு
3	5	7½	பு	குரு	சு	சனி	சூ	சந்	அ
4	7½	10	சந்	அ	பு	குரு	சு	சனி	சூ
5	10	12½	சனி	சூ	சந்	அ	பு	குரு	சு
6	12½	15	குரு	சு	சனி	சூ	சந்	அ	பு
7	15	17½	அ	பு	குரு	சு	சனி	சூ	சந்
8	17½	20	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி
9	20	22½	சு	சனி	சூ	சந்	அ	பு	குரு
10	22½	25	பு	குரு	சு	சனி	சூ	சந்	அ
11	25	27½	சந்	அ	பு	குரு	சு	சனி	சூ
12	27½	30	சனி	சூ	சந்	அ	பு	குரு	சு
13	30	32½	குரு	சு	சனி	சூ	சந்	அ	பு
14	32½	35	அ	பு	குரு	சு	சனி	சூ	சந்
15	35	37½	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி
16	37½	40	சு	சனி	சூ	சந்	அ	பு	குரு
17	40	42½	பு	குரு	சு	சனி	சூ	சந்	அ
18	42½	45	சந்	அ	பு	குரு	சு	சனி	சூ
19	45	47½	சனி	சூ	சந்	அ	பு	குரு	சு
20	47½	50	குரு	சு	சனி	சூ	சந்	அ	பு
21	50	52½	அ	பு	குரு	சு	சனி	சூ	சந்
22	52½	55	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி
23	55	57½	சு	சனி	சூ	சந்	அ	பு	குரு
24	57½	60	பு	குரு	சு	சனி	சூ	சந்	அ

33-வது வாக்கியம்—சேஷ்டாபலம்

சேஷ்டாமென்பது கிரகங்களின் ஓட்டத்தால் உண்டாகும் பலமென்பதாம் சூரியனுக்குச் சேஷ்டாபலத்தின் அளவு சூரியனுடைய அயன பலத்தின் அளவே ஆகும். சந்திரனுக்குச் சேஷ்டா பலத்தின் அளவு சந்திரனுடைய பட்ச பலத்தின் அளவே ஆகும்.

மற்ற கிரகங்களின் சேஷ்டாபலம் அறியவேண்டுமானுல் அவைக ளின் ஜேஷ்டகேந்திரமென்று சொல்லப்பட்ட ஓர் அளவை முத லில் அறியவேண்டும். ஜேஷ்டகேந்திரமென்பதற்குச் சீக்கிரகேந் திரமென்ற மற்ருெரு பெயருமுண்டு. ஜேஷ்டகேந்திரம் அல்லது சீக்கிரகேந்திரம் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமானுல் வான சாஸ்திரந் தெரியவேண்டியது அவசியம். பூமியிலிருந்து பார்க்கும் போது சூரியனுடன் ஒரு கிரகஞ் சேர்ந்து இவ்விரண்டும் ஒரே இடத்திலிருந்தால் இவ்விடத்திற்கு சிக்கிரோச்சமென்று பெயர். அந்தக் கிரகத்தின் மத்திமஸ்புடத்தையுஞ் சுத்த ஸ்புடத்தையும் கூட்ட வருகின்றதை இரண்டால் வகுக்க வருகின்ற ஸ்புடத்தி லிருந்து சீக்கிரோச்சத்லதக் கழிக்க வருகின்றதற்குச் சிக்கிரகேந் திரமென்று பெயர். சீக்கிரகேந்திரம் பூஜ்ஜியமானுல் அந்தக் கிரகத் திற்குச் சேஷ்டாபலம் பூஜ்ஜியமென்றும், 180 பாகையானுல் சேஷ் டாபலம் முழு பலமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் சீக்கிரகேந்திரம் பூஜ்ஜியம் முதல் 180 பாகை வரையிலும் அதிகப் பட்டுக்கொண்டு வந்தால் சேஷ்டாபலம் பூஜ்ஜியம் முதல் முழு பலம் வரையிலும் அதிகப்பட்டுக்கொண்டு வருமென்றும், சீக்கிர கேந்திரம் 180 பாகை முதல் 360 பாகை வரையிலும் அதிகப்பட் டுக்கொண்டு வந்தால் சேஷ்டாபலம் முழு பலத்திலிருந்து பூஜ்ஜிய பலம் வரையிலுங் குறைந்து கொண்டே வருமென்றுஞ் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆகையால் சேஷ்டாபலம் அறியவேண்டுமானுல் சிக்கிரகேந்திரம் கிரகசுத்த ஸ்புடம், மத்திமஸ்புடமாகிய இவைகளை அறியவேண்டும். இவைகளை அறியவேண்டுமானுல் வானசாஸ்திரம் அதிகமாகத் தெரிந்திருக்கவேண்டும். வானசாஸ்திரம் அதிகமாகத் தெரிந்தவர்கள் அதிகமாக இருக்கமாட்டார்களாதலாலும் இந்தப் புத்தகம் வானசாஸ்திரந் தெரியாதவர்களுக்குங்கூட உபயோ கப்படும்படியாய் எழுதி இருப்பதாலும், சிக்கிரகேந்திரங் கணித்து அதிலிருந்து சேஷ்டாபலங் கணிப்பது சிரமமானதாலும் அடியிற் கண்டபடி ஒரு சுலபமான வழி கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த வழியால் சேஷ்டாபலத்தை வானசாஸ்திரந் தெரியாதவர்கள்கூட. வெகு சுலபமாக நமக்குத்தேவையான வரையில் சரியாக இருக்கும் படி கணிக்கலாம்.

ஒரு கிரகம் சூரியனுடன் சேர்ந்து ஸ்புடரீதியாய் ஒரே பாகை. கலேயில் இருப்பதற்கு "உவாந்தம்" என்றும், சூரியலே விட்டு 180 பாகை பிரிந்து இருப்பதற்கு "உவா" என்றுஞ் சொல்லுவோம்.

சந்திரன், செவ்வாய், குரு, சனி ஆகிய இந்த 4 கிரகங்களுஞ் சூரியனை விட்டு 180 பாகை பிரிந்து இருக்கக் கூடுமாதலால் இவைகளுக்கு ''உவா'' என்பது உண்டு. புதன், சுக்கிரன் ஆகிய இவ்விரண்டு கிரகங்களுஞ் சூரியனை விட்டு 180 பாகை வரையிலும் பிரிந்து இருக்க முடியாதாதலால் இவைகளுக்கு ''உவா'' என்பது கிடையாது. எல்லாக் கிரகங்களும் சூரியனுடன் சேர்ந்து இருக்கக் கூடுமாதலால் எல்லாக் கிரகங்களுக்கும் ''உவாந்தம்''என்பது உண்டு புதன் அல்லது சுக்கிரன் சூரியனுடன் சேர்ந்து இருக்கும்போது ஒரு சமயத்தில் பூமிக்கு அருகாமையும் மற்ருெரு சமயத்தில் தூரமாயுமிருக்கக் கூடுமாதலால் இந்த இரண்டு கிரகங்களுக்கு மாத்திரம் உவாந்தமென்பது இருவகைப்படும். இவைகளை ''சமீப உவாந்தம்'' என்றும், ''தூர உவாந்தம்'' என்றுஞ் சொல்லுவோம். ஒவ்வொரு கிரகத்தின் ''உவா''வும், ''உவாந்தமும்'' இப்புத்தகம் நிமித்தமாக நமது சி. ஜி. ராஜன் பஞ்சாங்கத்தில் கிரகங்களின் சாரத்தில் கொடுக்கப்பட்டு வரும். இப் பஞ்சாங்கத்தில் இவைகள் கொடுக்கப்படாவிட்டால், ''நாடிகல் ஆல்மனெக்கு'' என்ற புத்தகத்தில் இருந்து [தெரிந்துகொள்ளலாம். இந்த நாடிகல் ஆல்மனெக்கில் உவா என்பதற்கு ''ஆப்போஸிஷன்'' என்றும், உவாந்தத்திற்குக் ''கஞ்ஜெங்க்ஷன்'' என்றும், ''சமீப உவாந்த''த்திற்கு ''இம்பீரியர் கஞ்ஜெங்க்ஷன்'' என்றுஞ் சொல்லப்படும்.

செவ்வாய, குரு, சனி இவர்களின் சேஷ்டாபலம் கணிக்க:—

பகுதி (1):—ஜெனன காலத்திற்கு முந்தி ஒரு கிரகத்திற்கு உவாவும், ஜெனன காலத்திற்குப் பிந்தி அதே கிரகத்திற்கு உவாந்தமும் நேரிடும்போது சேஷ்டாபலங் கணிக்க:...உவா நேரிடும் வேளையிலும், உவாந்தம் நேரிடும் வேளையிலும் அந்தக் கிரகத்தின் ஸ்புடங் கணித்து வைத்துக்கொள்ளவும். சி. ஜி. ராஜன் பஞ்சாங்கத்தில் கிரகங்களின் ஸ்புடம் தினந்தோறுங் கொடுக்கப்பட்டிருப்பதால் நமக்குத் தேவையான காலத்திற்குக் கிரக ஸ்புடங் கணிக்கும் வழியை முன்னமே சொல்லியிப்பதால் அந்த வழிப் பிரகாரம் உவா காலத்திலும், உவாந்தகாலத்திலும் அந்தக் கிரகத்தின் ஸ்புடங் கணிக்கவேண்டியது. மேலும், உவா நேரிடுங் காலத்திற்கும் உவாந்தம் நேரிடுங் காலத்திற்கும் இடையில் அந்தக் கிரகத்திற்கு வக்கிர நிவர்த்தி நேரிடும். அந்த வக்கிர நிவர்த்தி காலம் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த வக்கிர நிவர்த்தி காலத்தை அறிந்து

அந்தக்காலத்தில் அந்தக்கிரகத்தினுடைய ஸ்புடத்தை முன் சொல்லி யதுபோல கணிக்க வேண்டியது. பிறகு உவா நேரிடுங் காலம் முதல் வக்கிர நிவர்த்தி நேரிடுங் காலம் வரையில் அந்தக் கிரகஞ் செல்லுந் தூரத்தை அறியவேண்டியது. இந்தத் தூரமானது உவா காலத்திய ஸ்புடத்திலிருந்து வக்கிர நிவர்த்தியாகும் காலத்திய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற தூரமாகும். பிறகு வக்கிர நிவர்த்தியாகுங்காலம் முதல் உவாந்தம் நேரிடுங் காலம் வரையில் அந்தக் கிரகஞ் செல்லுந் தூரத்தை அறியவேண்டியது. இந்தந் தூரமானது உவாந்த கால ஸ்புடத்திலிருந்து வக்கிர நிவர்த்தியாகுங் காலத்திய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற தூரமாகும். இந்த இரண்டு தூரங்களையுங் கூட்ட வருகின்ற மொத்த தூரத்தைப் பூர்ண சீக்கிர கேந்திரமென்று சொல்லுவோம். பிறகு உவா நேரிடுங் காலம் முதல் ஜெனனகாலம் வரையிலும் அந்தக் கிரகஞ் சென்றிருக்கும் மொத்த தூரத்தை முன் போல் அறியவேண்டியது. இந்த தூரத்திற்குப் ''பின்ன சீக்கிர கேந்திரம்'' என்று சொல்லுவோம். பூர்ண சீக்கிர கேந்திரத்திற்கும், பின்ன சீக்கிர கேந்திரத்திற்குமுள்ள வித்தியாசத்தைப் பூர்ண சீக்கிர கேந்திரத்தால வகுக்க அந்த கிரகத்திற்குச் சேஷ்டாபலம் வரும். ஜெனன காலத்திற்கு முந்தி உவாவும், ஜெனன காலத் திற்குப் பிந்தி உவாந்தமும் நேரிடும்போது மாத்திரம் இவ்விதமாகச் சேஷ்டாபலங் கணிக்கவேண்டியது.

1-வது உதாரணம்:-உதாரணமாக ஒரு குழந்தை 1869ஹு அக்டோபர் மீ 2வ. காலை 7 மணி—13 நிமிஷத்திற்கு ஜெனனமான தென்றும், சனி என்கிற கிரகத்திற்கு 1869ஹு ஜூன்மீ 4வ. மாலை 5 மணி 8 நிமிஷத்திற்கு உவா நேரிட்டதென்றும், 1869 ஹு ஆகஸ்டு மீ 14வ இரவு 4 மணி – 2 நிமிஷத்திற்கு வக்கிர நிவர்த்தி நேரிட்டதென்றும், 1869 ஹு டிஸம்பர் மீ 11 வ. மாலை 5 மணி 44 நிமிஷத்திற்கு உவாந்தமும் நேரிட்டதென்றும் வைத்துக்கொண் டால் சனிக்குச் சேஷ்டாபலங் கணிப்போம். இந்தக் காலங்களில் சனியினுடைய ஸ்புடத்தைக் கணிக்க அடியிற்கண்டபடி ஆகும்.

பாகை—கலை.

(1) 4—6--1869-ல் மாலை 5 மணி 8 நிமிஷத்தில்
உவா அப்போது ஸ்புடம் 231 – 59

(2) 14 – 8—1869-ல் இரவு 4 மணி 2 நிமிஷத்தில்
வக்கிர நிவர்த்தி அப்போது ஸ்புடம் 228--38

(3) 2-10-1869-ல் காலை 7 மணி - 13 நிமிஷத்தில்
ஜெனனம் அப்போது ஸ்புடம் 230 - 27

(4) 11-12-1869-ல் மாலை 5 மணி - 44 நிமிஷத்தில்
உவாந்தம் அப்போது ஸ்புடம் 237 - 42

இவ்விதமாக தேதி வரிசையாக எழுதிக்கொள்ள வேண்டியது உவாகாலத்திய ஸ்புடமாகிய 231 பாகை 59 கலையிலிருந்து வக்கிர நிவர்த்தியாகுங் காலத்திய ஸ்புடமாகிய 228 பாகை 38 கலையைக் கழிக்க 3 பாகை 21 கலை வரும். இந்த 3 பாகை 21 கலைதான் உவா நேரிடுங்காலம் முதல் வக்கிர நிவர்த்தியாகும் காலம் வரையிலும் சனி செல்லும் தூரமாகும். பிறகு உவாந்தகால ஸ்புடமாகிய 237 பாகை 42 கலையிலிருந்து வக்கிரம் நிவர்த்தியாகுங் காலத்திய ஸ்புடமாகிய 228 பாகை 38 கலையைக் கழிக்க 9 பாகை 4 கலை வரும். இந்த 9 பாகை 4 கலை தான் வக்கிர நிவர்த்தியாகுங் காலம் முதல் உவாந்தம் நேரிடுங்காலம் வரையில் சனி செல்லுந் தூரமாகும். இவ்விரண்டு தூரங்களையும் அதாவது 3 பாகை 21 கலையையும் 9 பாகை 4 கலையையுங் கூட்ட 12 பாகை 25 கலை வரும். இந்த 12 பாகை 25 கலைதான் சனியினுடைய பூர்ண சீக்கிர கேந்திரமாகும்.

பிறகு உவா நேரிடுங்காலம் முதல் ஜெனனகாலம் வரையிலும் சனி செல்லும் மொத்த தூரத்தைக் கணிப்போம். இந்த உதாரணத்தில் ஜெனன காலத்திற்கு முந்தி வக்கிர நிவர்த்தி நேரிடுவதைக் கவனிக்கவும். உவா காலத்திய ஸ்புடமாகிய 231 பாகை 59 கலையிலிருந்து வக்கிர நிவர்த்திகால ஸ்புடமாகிய 228 பாகை 38 கலையைக் கழிக்க 3 பாகை 21 கலை வரும். இந்த உவாகால முதல் வக்கிர நிவர்த்தி காலம் வரையில் கிரகம் செல்லுந்தூரமாகும். (ஜெனன காலத்திற்குப் பிந்தி வக்கிர நிவர்த்தி நேரிடுமானால் இந்தத்தூரத்தைக் கணித்து சேர்க்கக்கூடாது) பிறகு ஜெனனகால ஸ்புடமாகிய 230 பாகை 27 கலையிலிருந்து வக்கிர நிவர்த்திகால ஸ்புடமாகிய 228 பாகை 38 கலையைக் கழிக்க 1 பாகை 49 கலை வரும். இது வக்கிர நிவர்த்திகாலம் முதல் ஜெனனகாலம் வரையில் சனி செல்லுந் தூரமாகும். இவ்விரண்டு தூரங்களையும் அதாவது 3 பாகை 21 கலையையும் 1பாகை 49 கலையையுங் கூட்ட 5 பாகை 10 கலைவரும் இந்த 5பாகை 10 கலை தான் உவாகாலம் முதல் ஜெனனகாலம் வரையில்

சனி செல்லும் மொத்த தூரமாகும். இந்த 5 பாகை 10 கலை தான் சனியினுடைய ''பின்ன சீக்கிரகேந்திரம்'' ஆகும்.

பிறகு பூர்ண சீக்கிர கேந்திரமாகிய 12 பாகை 25 கலையிலிருந்து பின்ன சீக்கிரகேந்திரமாகிய 5 பாகை 10 கலையைக் கழிக்க 7 பாகை 15 கலை வரும். இந்த 7 பாகை 15 கலையை 12 பாகை 25 கலையால் வகுக்க சனியின் சேஷ்டாபலம் வரும். வகுத்தல் பின்வருமாறு செய்யவேண்டியது. 7 பாகை 15 கலையைக்கலையாக மாற்ற 435 கலைவரும். 12 பாகை 25 கலையைக் கலையாக மாற்ற 745 கலை வரும். 435ஐ 100 ஆல் பெருக்க 43,500 வரும். இந்த 43,500 ஐ 745ஆல் வகுக்க வருகின்ற ஈவு தான் சேஷ்டாபலம் 100ல் எத்தனை பங்கு என்பதைத் தெரிவிக்கும். 43,500யை 745 ஆல் வகுக்க ஈவு 58 வரும். ஆகையால், ஜெனனகாலத்தில் சனியினுடைய சேஷ்டாபலம் 100ல் 58 பங்கு என்று அறியவேண்டியது.

குறிப்பு :—ஜெனன காலத்திற்குப் பிந்தி வக்கிரம் நிவர்த்தி நேரிடுமானால் இரண்டுதூரங்கள் நேரிடாது. அதாவது, முதலில் சொன்னதூரம் நேரிடாது. இரண்டாவது சொன்ன ஒருதூரந் தான் நேரிடும். இந்த இரண்டாவது தூரந்தான் பின்ன சீக்கிர கேந்திரமாகும்.

பகுதி (2) :—ஜெனன காலத்திற்குமுந்தி ஒரு கிரகத்திற்கு உவாந்தமும் ஜெனன காலத்திற்குப் பிந்தி அதே கிரகத்திற்கு உவாவும் நேரிடும்போது சேஷ்டாபலம் கணிக்க :-

முந்தி சொல்லிய 1-வது பகுதியில் உவாவிற்கும் உவாந்தத்திற்கும் இடையில் வக்கிர நிவர்த்திநேரிடும் என்று சொன்னோம். இந்தப் பகுதியில் கண்ட உவாந்தத்திற்கும் உவாவிற்கும் இடையில் வக்கிர ஆரம்பம் நேரிடும். இதுதான் 1-வது பகுதியின் வழிக்கும் 2-வது பகுதியின் வழிக்கும் முக்கியமான வித்தியாசம். உவாந்தகாலம் உவரகாலம், வக்கிர ஆரம்பகாலம், ஜெனனகாலம் ஆகிய இக்காலங்களில் ஒரு கிரகத்தினுடைய ஸ்புடங்களை முன்போல கணித்துவைக்கவும். பிறகு உவாந்தகால முதல் உவா காலம் வரையிலும் அந்தக் கிரகம் வக்கிரகதியையுஞ் சேர்த்துக் கணக்கிட மொத்தம் எவ்வளவு தூரம் செல்லுகின்றதென்று பார்க்கவும். இந்த மொத்த தூரந்தான் பூர்ண சீக்கிரகேந்திரமாகும். உவாந்தகாலம் முதல் ஜெனனகாலம் வரையில் அந்தக்கிரகம் செல்லும் மொத்த தூரத்தைக் கணிக்கவும்.

இந்த மொத்த தூரந்தான் பின்ன சீக்கிரகேந்திரமாகும். பின்ன சீக்கிரகேந்திரத்தைப் பூர்ண சீக்கிரகேந்திரத்தால் வகுக்க அந்த கிரகத்திற்குச் சேஷ்டாபலம் வரும். (குறிப்பு 1-வது பகுதியில் பூர்ண சீக்கிர கேந்திரத்திற்கும் பின்ன சீக்கிர கேந்திரத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப் பூர்ணசீக்கிர கேந்திரத்தால் வகுக்கவேண்டியது என்று சொன்னேம். உவாவிற்கும், உவாந்தத்திற்கும் இடையில் ஜெனனம் நேரிட்டால் இவ்விதமாகச் செய்யவேண்டியது. 1-வது பகுதியின் வழிக்கும் 2-வது பகுதியின் வழிக்கும் உள்ள ஒரு சிறிய வித்தியாசம் இது. இதை நன்ருய் கவனிக்கவும்) இந்த வழியை அடியிற்கண்ட உதாரணத்தால் விளக்கிக் காட்டுவோம். (2-வது உதாரணம்) உதாரணமாக ஒரு குழந்தை 1869ஞு அக்டோபர்மீ 2ந்வ காலே 7-மணி 13 நிமிஷத்திற்கு ஜெனனமானதென்றும் குரு என்கிற கிரகத்திற்கு 1869ஞு ஏப்ரல்மீ 17ந்வ காலே 10 மணி 48 நிமிஷத்திற்கு உவாந்தம் நேரிட்டதென்றும் 1869ஞு செப்டம்பர்மீ 9ந்வ இரவு 1-மணி 56 நிமிஷத்திற்கு வக்கிர ஆரம்பம் நேரிட்டதென்றும், 1869ஞு நவம்பர்மீ 8ந்வ காலே 10 மணி 56 நிமிஷத்திற்கு உவா நேரிட்டதென்றும் வைத்துக்கொள்ளுவோம். இந்தக் காலங்களில் குருவினுடைய ஸ்புடத்தைக் கணிக்க அடியிற் கண்டபடி ஆகும்.

	பாகை—கலே
(1) 17—4—1869-ல் காலே 10 மணி 48 நிமிஷத்தில் உவாந்தம் அப்போது ஸ்புடம்	5—21
(2) 9—9—1869-ல் இரவு 1 மணி 56 நிமிஷத்தில் வக்கிர ஆரம்பம் அப்போது ஸ்புடம்	29— 6
(3) 2—10—1869-ல் 7 மணி 13 நிமிஷத்தில் ஜெனனம் அப்போது ஸ்புடம்	28—17
(4) 8—11—1869-ல் காலே 10 மணி 56 நிமிஷத்தில் உவா அப்போது ஸ்புடம்	24— 2

இவ்விதமாக முன்போலவே எப்போதும் தேதி வரிசையாக எழுதிக்கொள்ள வேண்டியது. வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய பாகை 29-6 கலேயிலிருந்து உவாந்தகால ஸ்புடமாகிய பாகை 5-21 கலேயைக் கழிக்க 23 பாகை 45 கலே வரும். இது உவாந்த காலம் முதல் வக்கிரகாலம் ஆரம்பம் வரையில் கிரகம் செல்லும் தூரமாகும்.

வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய பாகை 29—6 கலையிலிருந்து உவா கால ஸ்புடமாகிய பாகை 24 கலை 2ஐக் கழிக்க 5 பாகை 4 கலை வரும். இது வக்கிர ஆரம்பகாலம் முதல் உவாவரையிலும் கிரகம் செல்லும் மொத்ததூரம் ஆகும். இவ்விரண்டையும் அதாவது; பாகை 23—45 கலையையும் பாகை 5—4 கலையையும் கூட்டவரு கின்ற பாகை 28—49 கலைதான் குரு உவாந்தம் முதல் உவாவரை யிலும் செல்லுகின்ற மொத்த தூரம் அல்லது குருவினுடைய பூர்ண சீக்கிர கேந்திரம் ஆகும்.

மேலும் வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய 29 பாகை 6 கலையி லிருந்து உவாந்தகால ஸ்புடமாகிய பாகை 5—21 கலையைக் கழிக்க 23 பாகை 45 கலைவரும். இது உவாந்தம் முதல் வக்கிர ஆரம்ப காலம் வரையில் குரு செல்லும் மொத்ததூரம் ஆகும். வக்கிர ஆரம் பகால ஸ்புடமாகிய பாகை 29 — 6 கலையிலிருந்து ஜெனனகால ஸ்பு டமாகிய பாகை 28 — 17 கலையைக் கழிக்க பாகை 0— 49 கலைவரும். இது வக்கிரகால ஆரம்பம் முதல் ஜெனனகாலம் வரையில் குரு செல்லும் தூரம் ஆகும். இவ்விரண்டு தூரங்களாகிய 23 பாகை 45 கலையும் 0 பாகை 49 கலையும் கூட்ட வருகின்ற 24 பாகை 34 கலை தான் உவாந்தகாலம் முதல் ஜெனனகாலம் வரையில் குருசெல்லும் மொத்ததூரம் ஆகும். இந்த 24 பாகை 34 கலைதான் குருவினு டைய பின்ன சீக்கிரகேந்திரம் ஆகும். இந்த பின்ன சீக்கிர கேந்திர மாகிய 24 பாகை 34 கலையை மேலே வந்த பூர்ண சீக்கிரகேந்திர மாகிய 28 பாகை 49 கலையால் வகுக்க குருவின் சேஷ்டாபலம் வரும். வகுத்தல் பின்வருமாறு செய்யவும். 24 பாகை 34 கலையைக் கலையாக மாற்ற 1474 கலை வரும். 28 பாகை 49 கலையைக் கலை யாக மாற்ற 1729 கலைவரும். 1474 கலையை 100-ஆல் பெருக்க 1,47,400 வரும். இந்த 1,47,400யை 1729-ஆல் வகுக்க வரு கின்ற ஈவுதான் சேஷ்டாபலம் 100-ல் எத்தனை பங்கு என்பதைத் தெரிவிக்கும். 1,47,400யை 1729-ஆல் வகுக்க ஈவு 85 வரும். ஆகையால், ஜெனனகாலத்தில் குருவினுடைய சேஷ்டாபலம் 100-ல் 85 பங்கு என்று அறிய வேண்டியது.

புதன், சுக்கிரன் இவைகளின் சேஷ்டாபலம் கணிக்க: — புதன், சுக்கிரன் ஆகிய இந்த இரண்டு கிரகங்களுக்கு மாத்திரம் சமீப உவாந்தம், தூர உவாந்தம் என்று இருப்பதால், செவ்வாய், குரு,

சனி இவைகளுக்குச் சொல்லிய உவாவிற்குப் பதிலாக சமீப உவாந்தத்தையும், உவாந்தத்திற்குப் பதிலாகத் தூர உவாந்தத்தையும் வைத்துச் செவ்வாய், குரு, சனி இவர்களுக்கு 1-வது பகுதி, 2-வது பகுதிகளில் சொல்லிய வழிப் பிரகாரம் கணிக்க புதன், சுக்கிரன் இவர்களுக்கு சேஷ்டா பலம் வரும். அதாவது கீழ் கண்டபடி ஆகும்.

பகுதி (1) :—ஜெனன காலத்திற்கு முந்தி சமீப உவாந்தமும், ஜெனன காலத்திற்கு பிந்தி தூர உவாந்தமும் நேரிட்டால் சேஷ்டாபலம் கணிக்க:– சமீப உவாந்தகாலம் முதல் தூர உவாந்தகாலம் வரையில் கிரகம் செல்லும் மொத்த தூரத்தை முன் போலக் கணிக்க வேண்டியது. இந்தத் தூரம் பூர்ண சீக்கிர கேந்திரம் ஆகும். பிறகு சமீப உவாந்தகாலம் முதல் ஜெனன காலம் வரையில் கிரகம் செல்லும் மொத்த தூரத்தைக் கணிக்கவேண்டியது. இந்தத் தூரம் பின்ன சீக்கிர கேந்திரம் ஆகும். பூர்ண சீக்கிர கேந்திரத்திலிருந்து பின்ன சீக்கிர கேந்திரத்தைக் கழிக்க வருகின்றதைப் பூர்ண சீக்கிர கேந்திரத்தால் வகுக்க சேஷ்டா பலம் வரும்.

(3-வது உதாரணம்) உதாரணமாகப் புதனுக்கு

பாகை—கலை.

(1) 18-8-1927-ல் இரவு 8 மணி 30 நிமிஷத்தில்
சமீப உவாந்தம் அப்போது ஸ்புடம் 329—18

(2) 27-3-1927-ல் காலை 7 மணி 30 நிமிஷத்தில்
வக்கிர நிவர்த்தி அப்போது ஸ்புடம் 321 - 11

(3) 1-4-1927-ல் மாலை 5 மணி 30 நிமிஷத்தில்
ஜெனனம் அப்போது ஸ்புடம் 322 - 32

(4) 20-5-1927-ல் காலை 9 மணி 30 நிமிஷத்தில்
தூர உவாந்தம் அப்போது ஸ்புடம் 35 - 29

சமீப உவாந்தகால ஸ்புடமாகிய பாகை 329 - 18 கலையிலிருந்து வக்கிர நிவர்த்தி கால ஸ்புடமாகிய பாகை 321-11 கலையைக் கழிக்க பாகை 8 - 7 கலை வரும். மேலும் தூர உவாந்த கால ஸ்புடமாகிய பாகை 35-29 கலையிலிருந்து வக்கிர நிவர்த்தி ஸ்புடமாகிய 321 பாகை 11 கலையைக் கழிக்க பாகை 74 - 18 கலை வரும். (குறிப்பு) 35 பாகை 29 கலை சிறியதாயும், 321 பாகை 11 கலை பெரியதாயும் இருப்பதால் 35 பாகை 29 கலையுடன் ஒரு வட்டமாகிய 360 பாகையைக் கூட்ட வருகின்ற 395 பாகை 29 கலையி

விருந்து 321 பாகை 11 கலையைக் கழிக்க 74 பாகை 18 கலை வரும். பாகை 8—7 கலையையும், 74 பாகை 18 கலையையுங் கூட்ட வருகின்ற 82 பாகை 25 கலைதான் பூர்ண சீக்கிரகேந்திரம் ஆகும். பிறகு சமீப உவாந்த காலஸ்புடமாகிய பாகை 329 18 கலையிலிருந்து வக்கிர நிவர்த்தி கால ஸ்புடமாகிய பாகை 321—11 கலையைக் கழிக்க 8 பாகை 7 கலை வரும். ஜெனனகால ஸ்புடமாகிய 322 பாகை 32 கலையிலிருந்து வக்கிர நிவர்த்தி கால ஸ்புடமாகிய 321 பாகை 11 கலையைக் கழிக்க 1 பாகை 21 கலை வரும். 8 பாகை 7 கலையையும், 1 பாகை 21 கலையையுங் கூட்ட வருகின்ற 9 பாகை 28 கலைதான் பின்ன சீக்கிர கேந்திரமாகும். பூர்ண சீக்கிர கேந்திரமாகிய 82 பாகை 25 கலையிலிருந்து பின்ன சீக்கிர கேந்திரமாகிய பாகை 9-28 கலையைக் கழிக்க 72 பாகை 57 கலை வரும். இந்த 72 பாகை 57 கலையை 82 பாகை 25 கலையால் வகுக்க சேஷ்டா பலம் வரும். பின்வருமாறு வகுக்கவேண்டியது 72 பாகை 57 கலையைக் கலையாக மாற்ற 4, 377 கலை வரும். 82 பாகை 25 கலையைக் கலையாக மாற்ற 4,945 கலை வரும் இந்த 4, 377 கலையை 100-ஆல் பெருக்க 4,37,700 வரும். இந்த 4,37, 700-யை 4,945-ஆல் வகுக்கவு 89 வரும். ஆகையால் சேஷ்டா பலம் 100-ல் 89 பங்கு ஆகும்.

பகுதி (2) :– ஜெனன காலத்திற்கு முந்தி தூர உவாந்தமும், ஜெனனகாலத்திற்குப் பிந்தி சமீப உவாந்தமும் நேரிட்டால் ஜேஷ்டா பலம் கணிக்க :– தூர உவாந்த காலம் முதல் சமீப உவாந்தகாலம் வரையிலும் கிரகம் செல்லும் மொத்த தூரத்தைக் கணிக்கவும். இந்தத் தூரம் பூர்ண சீக்கிர கேந்திரம் ஆகும். பிறகு தூர உவாந்த காலம் முதல் ஜெனனகாலம் வரையில் கிரகம் செல்லும் மொத்த தூரத்தைக் கணிக்கவேண்டியது. இந்த மொத்த தூரம் பின்ன சீக்கிர கேந்திரம் ஆகும். பின்ன சீக்கிர கேந்திரத்தைப் பூர்ண சீக்கிர கேந்திரத்தால் வகுக்க சேஷ்டா பலம் வரும்.

(4-வது உதாரணம்) உதாரணமாகச் சுக்கிரனுக்கு,

பாகை—கலை.

9-5-1869-ல் பகல் 12 மணி 59 நிமிஷத்தில் தூர உவாந்தம்; அப்போது ஸ்புடம் 26—48

2-10-1869-ல் காலை 7 மணி 13 நிமிஷத்தில் ஜெனனம்; அப்போது ஸ்புடம் 204 – 39

பாகை—கலை

31-1-1870-ல் மாலை 4 மணி 42 நிமிஷத்தில் வக்கிர ஆரம்பம்; அப்போது ஸ்புடம் 320 - 56

23-2-1870-ல் இரவு 8 மணி 0 நிமிஷத்தில் சமீப உவாந்தம்; அப்போது ஸ்புடம் 312 - 58

வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய 320 பாகை 56 கலையிலிருந்து தூர உவாந்தகால ஸ்புடமாகிய26 பாகை 48 கலையைக் கழிக்க 294 பாகை 8 கலை வரும். சமீப உவாந்தகால ஸ்புடமாகிய 312 பாகை 58 கலையை வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய 320 பாகை 56 கலையிலிருந்து கழிக்க 7 பாகை 58 கலை வரும். 294 பாகை 8 கலையையும் 7 பாகை 58 கலையையுங் கூட்ட வருகின்ற 302 பாகை 6 கலைதான் பூர்ண சீக்கிரகேந்திரமாகும். ஜெனனகால ஸ்புடமாகிய 204பாகை 32 கலையிலிருந்து தூர உவாந்தகால ஸ்புடமாகிய 26 பாகை 48 கலையைக் கழிக்க வருகின்ற 177 பாகை 44 கலைதான் பின்ன சீக்கிர கேந்திரமாகும். 177 பாகை 44 கலையை 302 பாகை 6 கலையால் வகுக்க சேஷ்டாபலம் வரும். பின் வருமாறு வகுக்கவேண்டியது. 177 பாகை 44 கலையைக் கலையாக மாற்ற 10,664 கலைவரும். 308 பாகை 6 கலையைக் கலையாக மாற்ற 18,126 கலைவரும். 10,664யை 100ஆல் பெருக்க 10,66,400 வரும். இந்த 10,66,400-யை 18,126-ஆல் வகுக்க ஈவு 59 வரும். ஆகையால், சுக்கிரனுக்கு சேஷ்டாபலம் 100-ல் 59 பங்கு ஆகும்.

இவ்விதமாக 5 கிரகங்களின் சேஷ்டாபலம் சுலபமாகக் கணிக்க வேண்டியது. அடியிற்காட்டிய உதாரணங்களையும் படிக்கவும்.

(5-வது உதாரணம்) உதாரணமாகச் செவ்வாய்க்கு

பாகை—கலை

13-2-1869-ல் இரவு 9 மணி 15 நிமிஷத்தில் உவா அப்போது ஸ்புடம் 123 - 11

27-3-1869 ல் மாலை 3 மணி 48 நிமிஷத்தில் வக்கிர நிவர்த்தி அப்போது ஸ்புடம் 113 - 23

2-10-1869-ல் காலை 7 மணி 13 நிமிஷத்தில் ஜெனனம் அப்போது ஸ்புடம் 206 - 30

12-3-1870-ல் இரவு 11 மணி 6 நிமிஷத்தில் உவாந்தம் அப்போது ஸ்புடம் 330 - 6

123 பாகை 11 கலையிலிருந்து 113 பாகை 23 கலையைக் கழிக்க 9 பாகை 48 கலை வரும். 330 பாகை 6 கலையிலிருந்து 113 பாகை 23 கலையைக் கழிக்க 216 பாகை 43 கலை வரும். 9 பாகை 48 கலையையும், 216 பாகை 43 கலையையுங் கூட்ட 226 பாகை 31 கலை வரும். இந்த 226 பாகை 31 கலைதான் பூர்ண *சீக்கிர* கேந்திரமாகும். மேலும் 123 பாகை 1, கலையிலிருந்து 113 பாகை 23 கலையைக் கழிக்க 9 பாகை 48 கலை வரும். 206 பாகை 30 கலையிலிருந்து 113 பாகை 23 கலையைக் கழிக்க 93 பாகை 7 கலை வரும். இந்த 9 பாகை 48 கலையையும், 93 பாகை 7 கலையையுங் கூட்ட வருகின்ற 102 பாகை 55 கலை தான் பின்ன *சீக்கிர* கேந்திரம் ஆகும். 226 பாகை 31 கலையிலிருந்து 102 பாகை 55 கலையைக் கழிக்க வருகின்ற 123 பாகை 36 கலையை 226 பாகை 31 கலையால் முன்னே சொல்லியபடி வகுக்க செவ்வாய்க்கு, சேஷ்டா பலம் 100-ல் 55 பங்கு வரும்.

(6-வது உதாரணம்):- உதாரணமாகப் புதனுக்கு

		பாகை — கலை
12—8—1869-ல் காலை 9 மணி 17 நிமிஷத்தில்	தூர உவாந்தம் அப்போது ஸ்புடம்	117—33
2—10—1869-ல் காலை 7 மணி 13 நிமிஷத்தில்	ஜெனனம் அப்போது ஸ்புடம்	191—52
8—10—1869-ல் இரவு 7 மணி 31 நிமிஷத்தில்	வக்கிர ஆரம்பம் அப்போது ஸ்புடம்	193—59
20—10—1869-ல் பகல் 1 மணி 32 நிமிஷத்தில்	சமீப உவாந்தம் அப்போது ஸ்புடம்	185— 8

193 பாகை 59 கலையிலிருந்து 117 பாகை 33 கலையைக் கழிக்க 76 பாகை 26 கலை வரும். 193 பாகை 56 கலையிலிருந்து 185 பாகை 8 கலையைக் கழிக்க 8 பாகை 51 கலை வரும், 76 பாகை 26 கலையையும், 8 பாகை 51 கலையையுங் கூட்ட வருகின்ற 85 பாகை 17 கலைதான் பூர்ண சீக்கிர கேந்திரம் ஆகும். 191 பாகை 52 கலையிலிருந்து 117 பாகை 33 கலையைக் கழிக்க வருகின்ற 74 பாகை 19 கலைதான் பின்ன சீக்கிர கேந்திரம் ஆகும். இந்த 74 பாகை 19 கலையை 85 பாகை 17 கலையால் முன்னே சொல்லிய பிரகாரம் வகுக்க புதனுக்கு சேஷ்டா பலம் 100-ல் 87 பங்கு வரும்.

34-வது வாக்கியம் பாவ பலம்

பாவ பலம் என்பது நான்கு அம்சங்களுடையது. அவை (1) பாவாதி அல்லது பாவாதிபதி பலம், (2) பாவ திருக் பலத்தில் 4-ல் 1 பங்கு (3) புதகுரு திருக்பலம், (4) பாவ திக்குப் பலம் என்று நான்கு வகைப்படும். இவைகளைக் கணிக்கும் விதம் அடியிற்கண்டபடி ஆகும்.

(1)-வது அயிட்டம்-பாவாதி என்ற பாவாதிபதி பலம் கணிக்க: முதலில் பாவாதி அறியவும். ஒரு பாவம் எந்த ராசியில் அல்லது இராசிகளில் அடங்குகின்றதோ அந்த ராசிக்குடையவன் அல்லது அந்த இராசிக்குடையவர்கள் பாவாதி அல்லது பாவாதிபதிகள் ஆவார்கள். பாவாதிபதி தெரிந்த பிறகு அந்த பாவாதியின் சட்பலம் அறியவேண்டியது. இது முன்னமே கணித்து வைத்து இருக்கப்பட்டது. அந்த பாவாதியின் இராசியின் அளவாகிய 30 பாகைக்கு அந்தப் பாவாதிக்கு வந்த சட்பலம் உரியதானுல் அந்த ராசியில் எவ்வளவு பாகம், பாவத்தில் அடங்கியிருக்கின்றதோ; அவ்வளவு பாகத்திற்குச் சட்பலம் திரை ராசிகம் பிரகாரம் கணிக்கவேண்டியது. இப்படிக் கணித்து வருவதுதான் பாவாதிபலம் ஆகும். இந்த அடியிற் கண்ட உதாரணத்தால் விளக்குவோம். உதாரணமாக:- 1-வது பாவம் 169 பாகை 53 கலை முதல் 199 பாகை 53 வரையிலும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். 150 பாகை முதல் 180 பாகை வரையிலும் கன்னியா ராசியானதாலும், 180 பாகை முதல் 210 பாகை வரையிலும் துலா ராசியானதாலும், 1-வது பாவம் கன்னியாராசியிலும், துலாராசியிலும் அடங்கி இருக்கிறது. ஆகையால் இந்த கன்னி, துலா ராசியாதிபதிகளாகிய புதனும், சுக்கிரனும் 1-வது பாவத்திற்குப் பாவாதிபதிகளாவார்கள். முதலில் புதனை எடுத்துக்கொள்வோம். 37-வது கட்டத்தைப் பார்க்கப் புதனுக்கு சட்பலம் 933 பாகம் ஆகும். கன்னியாராசி முடிவாகிய 180 பாகை 0 கலையிலிருந்து 1-வது பாவ ஆரம்பமாகிய 169பாகை 53 கலையைக் கழிக்க வருகின்ற 10 பாகை 7 கலைதான் கன்னியாராசியில் அடங்கியுள்ள 1-வது பாவத்தின் அளவு ஆகும். கன்னியாராசியாகிய 30 பாகைக்கு 933பாகமானுல் கன்னியா ராசியின் பாகமாகிய 10பாகை 7 கலைக்கு எவ்வளவு பாகம் என்று அறியவேண்டியது. இதைப் பின்வருமாறு கணிக்கவும் 30 பாகையைக் கலையாக மாற்ற 1,800 கலை ஆகும். 10 பாகை 7 கலையைக் கலையாக மாற்ற 607 கலை ஆகும். ஒரு

ராசியின் பாகத்தால் வருகின்ற கலையாகிய 607-ஐச் சட்பலமாகிய 933-ஆல் பெருக்க வருகின்ற 5,66331-ஐ 1,800-ஆல் வகுக்க வேண்டியது. இப்படி வகுக்க ஈவு 315 வரும். இந்த 315 தான் புதனால் உண்டாகிற பாவாதிபலம் ஆகும். இப்போது சுக்கிரனை எடுத்துக் கொள்வோம். 37-வது கட்டத்தைப் பார்க்கச் சுக்கிரனுக்கு சட்பலம் 649 பாகம் ஆகும். துலாராசி ஆரம்பமாகிய 180 பாகை யை 1-வது பாவம் முடிவாகிய 199 பாகை 53 கலையிலிருந்து கழிக்க வருகின்ற 19 பாகை 53 கலைதான் துலாராசியில் அடங்கியுள்ள 1-வது பாவத்தின் அளவு ஆகும். துலாராசியாகிய 30 பாகைக்கு 649 பாகமானால் துலாராசியின் பாகமாகிய 19 பாகை 53 கலைக்கு எவ்வளவு பாகம் என்று முன்போல அறியவும். இதைப் பின் வருமாறு கணிக்கவும். 30 பாகையைக் கலையாக மாற்ற 1,800 கலை ஆகும். 19 பாகை 53 கலையைக் கலையாக மாற்ற 1,1·3 கலை வரும். ஒரு இராசியின் பாகத்தால் வருகின்ற கலையாகிய 1,193-ஐச் சட்பலமாகிய 649-ஆல் பெருக்க வருகின்ற 7,74,257-ஐ 1,800-ஆல் வகுக்கவேண்டியது. இப்படி வகுக்க ஈவு 430 வரும். இந்த 430 பாகந்தான் சுக்கிரனால் உண்டாகின்ற பாவாதி பலம் ஆகும்.

ஆகையால், புதனுடைய பாவாதி பலம்	315	ஆகும்.
சுக்கிரனுடைய பாவாதி பலம்	430	,,
இவ்விரண்டையுங் கூட்ட பாவாதிபதி பலம்	745	,,

மேலே சொல்லிய காரணத்தினால் 1-வது பாவத்திற்குப் புதனும், சுக்கிரனும் பாவாதிபதிகளானதால் இவர்களால் வருகின்ற 745 பாகந்தான் 1-வது பாவத்தின் பாவாதிபலம் ஆகும். இவ்விதமாக ஒவ்வொரு பாவத்திற்கும் பாவாதி பலம் அறியவேண்டியது. ஒரு பாவம் ஒரே இராசியில் அடங்கினால் அந்த ராசிக்குடைய ஒரே கிரகம் பாவாதிபதியாகவும், இரண்டு ராசிகளில் அடங்கினால் அந்த இரண்டு இராசிகளுக்குடைய கிரகங்கள் பாவாதிபதிகளாகவும் மூன்று ராசிகளில் அடங்கினால் அந்த மூன்று ராசிகளுக்குடைய கிரகங்கள் பாவாதிபதிகளாகவும் வருவார்கள். இதை நன்றாய்க் கவனிக்கவும்.

(2)-வது அயிட்டம்—பாவ திருக்பலம் கணிக்க:—இந்தப் பாவ திருக்பலத்தைக் கணிக்கும் வழி 19-வது, 20-வது வாக்கியங்களை உபயோகப்படுத்தும் விதத்தில் முன்னமே சொல்லப்பட்டிருக்கின்றது. அதை வாசிக்கவும். 38-வது கட்டத்தையும் பார்க்கவும்.

(3)-வது அயிட்டம்—புத, குரு பாவபலம் :—புத, குரு பாவ பலம் என்பது புதனும், குருவும் ஒவ்வொரு பாவத்தையும் பார்க்கும் பார்வையின் அளவைக் கூட்ட வருவது. உதாரணமாக 38-வது கட்டத்தைப் பார்க்க 4 வது பாவத்தைக் குரு .82 பங்குடனும், புதன் 63 பங்குடனும் பார்ப்பதால் இந்த 82ஐ யும், 63ஐ யுங் கூட்ட வருகின்ற 145 பங்குதான் 4 வது பாவத்தின் புத குரு பாவ பலம் ஆகும். இவ்விதமாகவே ஒவ்வொரு பாவத்திற்கும் அறியவும்.

(4) வது அயிட்டம் – பாவ திக்குப்பலம் கணிக்க: பாவ திக்குப் பலம் கணிப்பதற்கு முதலில் 12 பாவஸ்புடங்களும் இருக்கும் இராசிகள் இரு கால் ராசியா, அல்லது நாற்கால் ராசியா அல்லது ஜல ராசியா, அல்லது பல காவ் ரசியா என்று பார்க்கவேண்டியது; பிறகு ஒரு பாவஸ்புடம் இருக்கும் ராசி.

(1) இரு கால் ராசியானுல் அந்த பாவஸ்புடத்திலிருந்து 1வது பாவஸ்புடத்தைக் கழிக்கவும்.

(2) நாற்கால் ராசியானுல் அந்த பாவஸ்புடத்திலிருந்து 10வது பாவஸ்புடத்தைக் கழிக்கவும்.

(3) ஜல ராசியானுல் அந்த பாவஸ்புடத்திலிருந்து 4வது பாவ ஸ்புடத்தைக் கழிக்கவும்.

(4) பலகால் ராசியானுல் அந்த பாவஸ்புடத்திலிருந்து 7-வது பாவஸ்புடத்தைக் கழிக்கவும்.

(கழிக்கப்படும் ஸ்புடம், கழிக்கும் ஸ்புடத்தைவிடச் சிறியதானுல் கழிக்கப்படும் ஸ்புடத்துடன் 360 பாகையைக் கூட்ட வருகின்றதிலிருந்து கழிக்கும் ஸ்புடத்தைக் கழிக்க வேண்டியது. இப்படிக் கழிக்க வரும் பாகை-கலேயை முழுப்பாகையாக மாற்ற வேண்டியது. இப்படி முழு பாகையாக மாற்ற வந்த பாகைக்கு எதிரில் 26வது வாக்கியத்தில் கொடுத்துள்ள அளவே அந்தப் பாவத்தின் திக்குப் பலம் ஆகும்.)

இராசிகள் அடியிற்கண்டபடி இரு கால் ராசி, நாற்கால் ராசி, ஜலராசி, பல கால் ராசி ஆகும்.

மேஷம்—நாற்கால் ராசி.	மிதுனம்—இரு கால் ராசி.
ரிஷபம்—நாற்கால் ராசி.	கடகம்—ஜலராசி.[1]

1 கடகத்தைச் சிலர் பல கால் இராசி என்பர். இந்தப் புத்தகத்தில் ஜலராசியாகக் கருதப்பட்டிருக்கின்றது.

சிம்மம்—நாற்கால் ராசி.
கன்னி – இரு கால் ராசி.
துலாம்—இரு கால் ராசி.
விருச்சிகம் – பல கால் ராசி.
தனுசு முன் அரை – இருகால் ராசி.
,, பின் அரை – நாற்கால் ராசி.
மகரம் முன் அரை—நாற்கால் ராசி
,, பின் அரை-ஜலராசி.
கும்பம் – இரு கால் ராசி.
மீனம்—ஜலராசி

1-வது உதாரணம் :—உதாரணமாக ஜெனன காலத்தில் 1-வது பாவஸ்புடம் 184 பாகை 48 கலையானல் இந்த 1-வது பாவத்தின் திக்குப் பலம் கணிப்போம். இந்த 184 பாகை 48 கலை என்ற ஸ்புடம் 12-வது வாக்கியத்தைப் பார்க்கத் துலா ராசியில் இருக்கின்றது என்று ஏற்படும். இந்தத் துலாராசி மேலே சொல்லியபடி இரு கால் ராசியாகும். ஆகையால், 1-வது பாவஸ்புடம் இருக்கும் ராசி இரு கால் ராசியாகும். 1-வது பாவஸ்புடம் இருப்பது இரு கால் ராசியானதால் மேலே சொல்லியபடி அந்த 1-வது பாவஸ்புடத்திலிருந்து 1-வது பாவஸ்புடத்தையே கழிக்கவும். அதாவது 1-வது பாவ ஸ்புடமாகிய 184 பாகை 48 கலையிலிருந்து 1-வது பாவஸ்புடமாகிய 184 பாகை 48 கலையைக் கழிக்க பாகை 0 கலை 0 வரும். அதாவது; பாகை பூஜ்ஜியமாகும், ஆகையால் 26-வது வாக்கியத்தில் 0 பாகைக்கு எதிரில் 100 என்று இருப்பதால் 1-வது பாவத்தின் திக்குப் பலம் 100 பங்கு ஆகும்.

2-வது உதாரணம் :—உதாரணமாக ஜெனன காலத்தில் 2-வது பாவஸ்புடம் 214 பாகை 58 கலையும் 7-வது பாவத்தின் ஸ்புடம் 4 பாகை 48 கலையுமானல் இந்த 2-வது பாவத்தின் திக்குப் பலத்தை கணிப்போம். இந்த 214 பாகை 58 கலை என்ற ஸ்புடம் 12-வது வாக்கியத்தைப் பார்க்க விருச்சிக ராசியில் இருக்கின்றது என்று ஏற்படும். இந்த விருச்சிக ராசி மேலே சொல்லியபடி பல கால் இராசியாகும். ஆகையால், 2-வது பாவஸ்புடம் இருக்கும் ராசி பல கால் ராசியானதால் மேலே சொல்லியபடி அந்த 2-வது பாவஸ்புடத்திலிருந்து 7-வது பாவஸ்புடத்தைக் கழிக்கவேண்டியது. அதாவது; 2-வது பாவஸ்புடமாகிய 214 பாகை 58 கலையிலிருந்து 7-வது பாவஸ்புடமாகிய 4 பாகை 48 கலையைக் கழிக்க 210 பாகை 10 கலை வரும். இதை முழுப்பாகையாக மாற்ற 210 பாகை வரும். ஆகையால், 26-வது வாக்கியத்தில் 210 பாகைக்கு எதிரில் 17 என்ற எண் இருப்பதால் 2-வது பாவத்தின் திக்குப் பலம் 17 பங்கு ஆகும்.

3-வது உதாரணம்:—உதாரணமாக ஜெனன காலத்தில் 3-வது பாவஸ்புடம் 245 பாகை 8 கலையும், 1-வது பாவஸ்புடம் 184 பாகை 48 கலையுமானால் இந்த 3-வது பாவத்தின் திக்குப்பலம் கணிப் போம். இந்த 245 பாகை 8 கலை என்ற ஸ்புடம் 12-வது வாக்கி யத்தைப் பார்க்கத் தனுசு இராசியில் முன் அரைப்பாகத்தில் இருக் கின்றது என்று ஏற்படும், இந்தத் தனுசு ராசியின் முன்பாகம் மேலே சொல்லியபடி இருகால் ராசியாகும். ஆகையால், 3-வது பாவஸ்புடம் இருக்கும் ராசி இருகால் ராசியாகும். 3-வது பாவஸ் புடம் இருக்கும் ராசி இருகால் ராசியானதால் மேலே சொல்லிய படி அந்த 3-வது பாவஸ்புடத்திலிருந்து 1-வது பாவஸ்புடத்தைக் கழிக்க வேண்டியது. அதாவது 3-வது பாவஸ்புடமாகிய 245 பாகை 8 கலையிலிருந்து 1-வது பாவஸ்புடமாகிய 184 பாகை 48 கலையைக் கழிக்க 60 பாகை 20 கலை வரும். இதை முழுப் பாகை யாக மாற்ற 60 பாகை வரும். ஆகையால் 26-வது வாக்கியத்தில் 60 பாகைக்கு எதிரில் 67 என்ற எண் இருப்பதால் 3-வது பாவத் தின் திக்குப் பலம் 67 பங்கு ஆகும்.

35-வது வாக்கியம்—இஷ்ட கஷ்ட கணிதம்

என் என்று சொல்லப்படுவதற்கும், இலக்கம் என்று சொல் லப் படுவதற்கும், உள்ள வித்தியாசத்தை முதலில் இங்கு அறிய வேண்டியதாயிருக்கின்றது. 7 என்பது ஒரு எண் ஆகும். 78 என்பது ஒரு எண் ஆகும். 789 என்பது ஒரு எண் ஆகும். மேலும், 78 என்ற எண் 7-ம், 8-ம் சேர்ந்து உண்டாக்கப்பட்டது. இந்த 78-ல் உள்ள 8-க்கு முதல் இலக்கம் என்றும் 7-க்கு இரண்டாவது இலக்கம் என்றும் சொல்லப்படும். ஆகையால், 78 என்ற எண்ணில் இரண்டு இலக்கங்கள் இருக்கின்றன. ஆகையால், 78 என்ற எண் இரண்டு இலக்கங்களால் ஏற்பட்டது. இவ்விதமாகவே 789 என்ற எண் மூன்று இலக்கங்களால் ஏற்பட்டது. மேலே கொடுத் துள்ள 7 என்ற எண் ஒரே இலக்கத்தால் உண்டாக்கப்பட்டது ஆகும். ஆகையால், எண் என்பது இலக்கங்களால் உண்டாக்கப் பட்டது என்பதாகும். இலக்கம் என்பது எண்களை உண்டாக்கும் மூலக்கருவி ஆகும். ஓர் எண்ணை அதே எண்ணால் பெருக்க வரும் தொகைக்கு வர்க்கம் என்று பெயர். உதாரணமாக 8-ஐ 8-ஆல் பெருக்க வருகின்ற 64-யை வர்க்கம் என்று சொல்லவேண்டும். அதாவது 64 என்பது 8 என்பதன் வர்க்கம் என்று சொல்லப்படும். மேலும் 8 என்பது 64-ன் மூலம் என்று சொல்லப்படும். அதாவது;

எந்த எண்ணை அதே எண்ணால் பெருக்க வர்க்கம் வருமோ அந்த எண்ணிற்கு மூலம் என்று பெயர். உதாரணமாக 10-யை 10-ஆல் பெருக்க 100 வரும். ஆகையால், 10-க்கு வர்க்கம் 100-ம், 100-க்கு மூலம் 10-ம் ஆகும். மேலும் 25-யை 25-ஆல் பெருக்க 625 வரும் ஆகையால், 25-க்கு வர்க்கம் 625-ம் 625க்கு மூலம் 25-ம் ஆகும். இவ்விதமாக 2-க்கு வர்க்கம் 4-ம் 4க்கு வர்க்கம் 16-ம், 6க்கு வர்க்கம் 36-ம் ஆகும். 9-க்கு மூலம் 3-ம், 25-க்கு மூலம் 5-ம், 49-க்கு மூலம் 7-ம், 81க்கு மூலம் 9-ம் ஆகும். இவைகள் சிறிய எண்களாயிருப்பதால் இவைகளைக் கஷ்டப்பட்டுக்கணிக்காமலே மனக்கணக்கிலேயே போட்டுவிடலாம். எண்கள் பெரிய எண்களாயிருக்கும் போது கணிக்கவேண்டியது அவசியமாக நேரிடும்.

உதாரணம் (1) : - 345-க்கு வர்க்கம் கணிக்க :- ஒரு எண்ணிற்கு அந்த எண்ணை அதே எண்ணால் பெருக்க வருந்தொகை தான் வர்க்கம் என்று முன்னமே சொல்லியிருக்கின்றது. ஆகையால், 345-ஐ 345-ஆல் பெருக்க 1,19,025 வரும். ஆகையால், 1,19,025 என்பது 345-க்கு வர்க்கமாகும்.

உதாரணம் (2) 706-க்கு வர்க்கம் கணிக்க : - மேலே சொல்லிய பிரகாரம் 7 6-ஐ 706-ஆல் பெருக்க வருகின்ற 4,98,436 என்பது 706-க்கு வர்க்கமாகும்.

இவ்விதமாக நமக்குத் தேவையான எண்களுக்கு வர்க்கம் கணிக்கவேண்டியது.

உதாரணம் (3) :-5,19.841-க்கு மூலம் கணிக்க :-அதாவது எந்த எண்ணை அதே எண்ணால் பெருக்க 5,19,841 வரும் என்பதை அறியவேண்டியது. இதை அறிவதற்கு முதல் முதல் வர்க்கமாகிய 5,19,841-ஐ வலது பக்கமாகவிருந்து இடதுகைபக்கமாக இரண்டு இரண்டு இலக்கங்களையுடைய அணி அணியாகப் பிரித்து அப்படிப் பிரித்ததற்கு அடையாளமாக அணிகளுக்கு இடையில், எழுத வேண்டியது. இப்படி அணி அணியாகப் பிரித்து எழுதக் கீழே கண்டபடி 3 அணிகள் வரும்.

இடது கைப் பக்கம் 51, 98, 41 வலது கைப் பக்கம்
(3) (2) (1)

41 என்பது ஒராவது அணி, 98 என்பது இரண்டாவது அணி 51 என்பது 3-வது அல்லது கடைசி அணியாகும்.

குறிப்பு :—கடைசி அணி தவிர மற்ற அணிகளில் இரண்டு, இலக்கங்கள் எப்போதும் இருக்கவேண்டும். கடைசி அணியில் மாத்திரம் இரண்டு இலக்கங்களும் அல்லது ஓர் இலக்கமும் இருக்கலாம். இங்குக் கொடுத்த உதாரணத்தில் கடைசி அணியாகிய 3-வது அணியில் அதாவது 51 என்றதில் இரண்டு இலக்கங்களாகிய 5, 1, என்ற இலக்கங்கள் இருக்கின்றன. பிறகு வகுத்தல் செய்யும்போது எழுதிக்கொள்வதுபோல அடியிற்கண்டபடி எழுதி வகுத்தல் செய்யவும்.

1-வது வகுக்கும் எண் ஸ்தானம்	1-வது வகுக்கப்படும் எண் ஸ்தானம் 51, 98, 41 49 ———	7 (1)-வது ஈவு ஸ்தானம்.
2-வது வகுக்கும் எண் ஸ்தானம் 14, 2	2-வது வகுக்கப்படும் எண் ஸ்தானம் 2,98 2,84 ———	2 (2)-வது ஈவு ஸ்தானம்.
3-வது வகுக் கும் எண் 1,441 ஸ்தானம்	3-வது வகுக்கப்படும் எண் ஸ்தானம் 14,41 14,41 ——— 0	1 (3)-வது ஈவு ஸ்தானம்.

(N.B.) இந்த வழிக்கு ஆங்கிலத்தில் Square root கண்டு பிடிக்கும் Methcd என்று பெயர்.

பிறகு வகுத்தல் செய்யும் விதம் :—கடைசி அணியாகிய 51 என்பது எந்த முழுமூல எண்ணிற்கு வர்க்கமாகும் என்பதை மனதில் மனக்கணக்காகப் பார்க்க வேண்டியது. 7 என்ற மூல எண்ணிற்கு வர்க்கம் 49-ம், 8 என்ற மூல எண்ணிற்கு வர்க்கம் 64-ம் ஆவதாலும், 51 என்பது 49-க்கும், 64-க்கும் இடையில் இருப்பதால் 51 என்ற வர்க்கத்திற்குச் சரியான முழுமூல எண் கிடையாது. ஆகையால் 51-க்கு உடனே தாழ்ந்தவர்க்கமாகிய 49-க்கு உரிய மூலமாகிய 7-ஐ 1-வது ஈவுஸ்தானத்தில் எழுதவேண்டியது. பிறகு

இந்த 7-க்கு வர்க்கமாகிய 49ஐ 51-ன் கீழ் எழுதி 51-ல் இருந்து 49-யைக் கழிக்கவேண்டியது. இப்படிக் கழிக்க மிச்சம் 2 வரும். இந்த 2-க்கு அடுத்தாற்போல் 51-க்கு அடுத்த அணியாகிய 98 என்ற அணியை எடுத்து எழுதவும். இப்படி எடுத்து எழுத மிச்சஸ்தானத்தில் 2,98 வரும். பிறகு இந்த 298-ஐ மறுபடியும் வகுக்க வேண்டும். வகுப்பதற்கு வகுக்கும் எண் தேவையானதால் இந்த வகுக்கும் எண்ணைப் பின்வருமாறு கணிக்கவும். 1-வது ஈவுஸ்தானத்தில் வந்த 7-ஐ 2-ஆல் பெருக்க வருகின்ற 14-ஐ 2-வது வகுக்கும் எண் ஸ்தானத்தில் எழுதவும். பிறகு 2,98-ல் முதல் இலக்கமாகிய 8-ஐ விட்டுவிட நிற்கின்ற 29-ஐ 2-வது வகுக்கும் எண் ஸ்தானத்தில் வந்த எண்ணாகிய 14-ஆல் மனதில் வகுக்க ஈவு எவ்வளவு வரும் என்பதை மனக்கணக்காகப் பார்க்கவேண்டியது. இப்படி மனக்கணக்காக 2-ஐ 14-ஆல் வகுக்க ஈவு 2 வரும். இந்த ஈவாகிய 2-ஐ 2-வது ஈவு ஸ்தானத்தில் எழுதவேண்டியது. மறுபடியும் அதே 2-ஐ 2-வது வகுக்கும் எண் ஸ்தானத்தில் 14-க்கு அருகில் எழுதவும். இப்படி எழுத 2-வது வகுக்கும் எண் ஸ்தானத்தில் வருகின்ற 142 தான் வகுக்கும் எண் ஆகும். பிறகு 142-ஐ 2-வது ஈவு ஸ்தானத்தில் எழுதி வைத்த 2-ஆல் பெருக்க வருகின்ற 284-ஐ 298-ன் கீழ் எழுதி 298-ல் இருந்து 284,ஐக் கழிக்க வேண்டியது இப்படிக் கழிக்க மிச்சம் 14 வரும். இந்த 14 இரண்டாவது மிச்சமாகும்.

(குறிப்பு :—2-வது ஈவு ஸ்தானத்தில் கணித்து எழுதப்பட்ட எண்ணால் 2-வது வகுக்கும் எண் ஸ்தானத்திலுள்ள எண்ணைப் பெருக்க வருகின்ற எண், 2-வது வகுக்கப்படும் எண் ஸ்தானத்திலுள்ள எண்ணைவிடப் பெரியதானால் 2-வது ஈவு ஸ்தானத்தில் வந்த எண்ணில் 1 குறைக்க வருகின்ற எண்ணை 2-வது ஈவாக 2-வது ஈவு ஸ்தானத்திலும் 2-வது வகுக்கப்படும் எண் ஸ்தானத்தில் 14-க்கு அடுத்தாற் போல் எழுதவேண்டும்)

பிறகு 2-வது மிச்சமாகிய 14-க்கு அருகில் அடுத்த அணியாகிய 41 என்ற அணியை எடுத்து எழுதவும். இப்படி எடுத்து எழுத மிச்ச ஸ்தானத்தில் 14, 41 வரும் பிறகு இந்த 1,441-ஐ வகுக்க வேண்டும். வகுப்பதற்கு முன்னே 298-ஐ வகுப்பதற்குச் செய்தது போலவே செய்யவேண்டியது. அதாவது, இதுவரையிலும் வந்த இரண்டு ஈவுகளாகிய 7-யையும் 2-யையும் ஒன்றன் பின் ஒன்ருய் வரிசையாக ஒரே வரியில் எழுத 72 வரும். இந்த 72-ஐ முன்

போலவே 2-ஆல் பெருக்க வருகின்ற 144-யை 3-வது வகுக்கும் எண் ஸ்தானத்தில் எழுதவும். பிறகு 1,441-ல் முதல் இலக்கமாகிய 1-ஐ விட்டுவிட நிற்கின்ற 144-ஐ மேலே வந்த 144-ஆல் மனதில் வகுக்க ஈவு எவ்வளவு வரும் என்பதை மனக்கணக்காகப் பார்க்க வேண்டியது. இப்படி மனக்கணக்காக 144-ஐ 144-ல் வகுக்க ஈவு 1 வரும். இந்த ஈவாகிய 1-ஐ 3-வது ஈவு ஸ்தானத்தில் எழுத வேண்டியது. மறுபடியும் அதே 1-ஐ 3-வது வகுக்கும் எண் ஸ்தானத்தில் 144-க்கு அருகில் எழுத 3-வது வகுக்கும் எண் ஸ்தானத்தில் வருகின்ற 1,441 தான் வகுக்கும் எண் ஆகும். பிறகு 1,44-ஐ 3-வது ஈவு ஸ்தானத்தில் எழுதி வைத்த 1-ஆல் பெருக்க வருகின்ற 1,441-ஐ 3-வது வகுக்கப்படும் ஸ்தானத்திலுள்ள வகுக்கப்படும் எண்ணாகிய 1,441-ல் இருந்து கழிக்கவும். இப்படிக் கழித்த மிச்சம் பூஜ்ஜியமாகும். [1]நாம் எடுத்துக்கொண்ட எண்ணாகிய 5,19,841 உள்ள எல்லா அணிகளையும் உபயோகப்படுத்தி விட்டபடியால் இனிமேல் வகுத்தல் செய்யவேண்டிய அவசியமில்லை. அதாவது; கடைசி அணியைச்சேர்த்து எப்போது வகுத்தல் செய்கிறோமோ அந்த வகுத்தலே கடைசிவகுத்தல் என்றும் அதற்குமேல் இன்னும் வகுத்தல் செய்யவேண்டிய அவசியமில்லை என்றும் அறியவும். பிறகு மூன்று தடவை வகுத்தல் செய்வதால் வந்த மூன்று ஈவுகளாகிய 7, 2, 1 என்ற எண்களை ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக ஒரே வரியில் எழுதவேண்டியது. இப்படி எழுத 721 வரும். இந்த 721 தான் நாம் எடுத்துக்கொண்ட வர்க்கமாகிய 5,19,841-க்கு மூலம் ஆகும். இவ்விதமாக நமக்குத்தேவையான தொகைக்கு மூலம் கணிக்க வேண்டியது.

குறிப்பு:-ஓர் எண்ணில் 1-வது, 2-வது, 3-வது, 4-வது இலக்கம் அறியவேண்டுமானால் வலது கைப் பக்கமாகயிருந்து இடதுகைப் பக்கமாக இலக்கங்களை எண்ண வேண்டியது. உதாரணமாக 5,678ல் 8 என்பது முதல் அல்லது 1-வது இலக்கமாகும். 7 என்பது 2-வது இலக்கமாகும். 6 என்பது 3-வது இலக்கமாகும். 5 என்பது 4-வது அல்லது கடைசி இலக்கமாகும்.

---

1 கடைசியாக வருகின்ற மிச்சம் பூஜ்ஜியமாக இல்லாமல் ஏதோ ஒரு எண்ணாக வந்தால் அந்த எண் கடைசி வகுக்கும் எண்ணினுடைய பாதிக்கு மேற்பட்டால் கடைசியாக வந்த ஈவுடன்

ஒன்று கூட்டவும். பாதிக்குக் குறைந்து இருந்தால் கடைசியாக வந்த ஈவுடன் ஒன்று கூட்ட வேண்டியதில்லை.

உதாரணம் (4) :— 69964க்கு மூலம் கணிக்க :—
69964-ஐ அணி அணியாகப் பிரித்து எழுத மூன்று அணிகள் பின் வருமாறு வரும்.

6, 99, 64
(3) (2) (1)

இங்கு 3-வது அணி ஒரு இலக்கம் உடையது என்பதைக் கவனிக்கவும். பிறகு பின்வருமாறு வகுக்கவேண்டியது.

)6, 99, 64, (2
4

46) 2, 99 (6
2 76

524) 23, 64 (4
20 96
268

கடைசி மிச்சமாகிய 268 என்பது கடைசி வகுக்கும் எண்ணாகிய 524-ன் பாதிக்கு மேற்பட்டிருப்பதால் கடைசியாக வந்த ஈவாகிய 4 உடன் 1 சேர்க்க 5 வரும். ஆகையால், கடைசி ஈவு 5 என்று வைத்துக் கொள்ளவும். இப்படியாக வைத்துக்கொண்டு மூன்று ஈவுகளாகிய 2, 6, 5-ஐ வரிசையாக எழுத வருகின்ற 265 என்ற எண்தான் 69964-க்கு மூலம் ஆகும்.

உதாரணம் (5) :—502681-க்கு மூலம் கணிக்க :—
50, 26, 81 (7
49

140) 1, 26 (0
0 00

1409) 126, 81 (9
126 81

இங்கு இரண்டாவது வகுக்கப்படும் எண் ஸ்தானத்திலுள்ள 126-ன் முதல் இலக்கமாகிய 6-ஐ விட்டுவிட 12 வரும். இந்த 12ஐ 14-ஆல் வகுக்க முடியாது. ஆதலால், பூஜ்ஜியம் இரண்டாவது ஈவு

ஸ்தானத்தில் போடப்பட்டது. அதாவது; 12-யை 14 என்ற எண் பூஜ்ஜியம்தடவை வகுக்கும் என்பதாம். எந்த எண்ணேயும் பூஜ்ஜியத்தால் பெருக்க எப்போதும் பூஜ்ஜியம்வருமாதலால் 140ஐ 0த்தால் பெருக்க பூஜ்ஜியம் வரும். மூன்று ஈவுகளாகிய 7, 0, 9ஐ வரிசையாக எழுத வருகின்ற 709 தான் 502681க்கு மூலம் ஆகும்.

குறிப்பு: —மேலே சொல்லி வந்த வர்க்கம், மூலம் இவைகளைக் கணிக்கும் கணிதத்திற்கு வர்க்க மூலகணிதம் என்று பெயர். இந்த கணிதத்தைப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு 6-வது 7-வது வகுப்புகளிலேயே கற்றுக்கொடுப்பதால் இந்தக் கணிதத்தைக் கையாளும் போது ஏதாகிலும் சந்தேகம் நேரிட்டால் மேலே சொல்லிய வகுப்புகளிலும், அதற்குமேற்பட்ட வகுப்புகளிலும் வாசித்தவர்களின் உதவியால் அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டியது. மேலும், அநேக வர்க்க எண்களுக்கு மூலம் கணிக்க வேண்டியது அவசியமாய் இருக்கும்போது மேலே சொல்லிய விதத்தால் ஒவ்வொரு தடவையும் வர்க்கம் கணிப்பது மிகவும் சிரமமாய் இருக்கும். இந்தச் சிரமத்தை நீக்கும் பொருட்டு வர்க்க மூலங்கள் அடங்கிய ஒரு வர்க்கமூலப்புத்தகம்போடப்பட்டிருக்கின்றது. இந்தப் புத்தகத்தில் 1 முதல் 2475 வரையிலுமுள்ள எல்லா எண்களுக்கும் வர்க்கமும், 1 முதல் 6,125,625 வரையிலுமுள்ள எண்களுக்கு மூலமும், கணித்துப் போடப்பட்டிருக்கின்றது. இந்தப் புஸ்தகத்தின் பெயர் தமிழில் போடாமல் ஆங்கிலத்தில் போடப்பட்டிருக்கின்றது. ஆங்கிலத்தில் அதன்பெயர் "Extracts of the Pocket Book on Chain Survey Tables and Formulae" அதாவது "எக்ஸ்ட்ராக்ட்ஸ் ஆப் தி பாக்கெட் புக் ஆன் செயின் சர்வே டேபில்ஸ் அண்டு பார்முலே" என்பதாம். இந்தபுத்தகத்தின் பெயர்மாத்திரம் ஆங்கிலத்தில் இருந்த போதிலும்; இதில் அடங்கியுள்ள சங்கதிகள் யாவும் தமிழில் போட்டிருப்பதால் ஆங்கிலம் கொஞ்சங்கூடத் தெரியாதவர்கள்கூட இந்தப் புத்தகத்தை வெகுசுலபமாக உபயோகப்படுத்தலாம். இது ஒவ்வொரு தாலுக்கா ஆபீசிலும் விற்கப்படும். இது கிராம உத்தியோகஸ்தராகிய கிராம சர்க்கார் கணக்குப்பிள்ளையிடத்திலும் இருக்கும். மற்றவிடத்தில் கிடைப்பது அரிது. இது மிகவும் உபயோகமான புத்தகமானதால் இந்தப் புத்தகத்தை வாங்கி உபயோகித்தால் அதிக சிரமம் நீங்கும்.

என்று அறியவேண்டியது. இந்தப் புத்தகத்தை வாங்காதவர்கள் மேலே சொல்லிய வழியால் தான் மூலம் கணிக்க வேண்டுமே தவிர வேறொருவழியுங் கிடையாது என்று அறியவும். இந்த வர்க்க மூல புத்தகத்தில் 7-வது பக்கத்தில் மூலம் என்ற கலத்தில் 301க்கு எதிரில் வர்க்கம் என்ற கலத்தில் 90601 போட்டிருக்கின்றது. அதாவது, 301க்கு வர்க்கம் 90601 என்றும், 90601க்கு மூலம் 301 என்றும் ஏற்படும் இவ்விதமாகவே இந்தப் புத்தகத்தில் கொடுத்துள்ள மற்றவைகளையும் அறியவும்.

நாம் இனிமேல் இஷ்டபலம் என்ற சுபபலத்தையும் கஷ்டபலம் என்கிற அசுபபலத்தையுங் கணிக்க வேண்டியது அவசியமானதாலும், இவைகளைக் கணிப்பதற்கு மூலம் கணிக்கவேண்டிய வழியைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாலும் மேலே மூலம் கணிக்கும் வழியைச் சொல்லியிருக்கிறோம்.

இஷ்டபலம் கணிக்க:—ஒவ்வொரு கிரகத்தினுடைய உச்ச பலத்தை அதே கிரகத்தினுடைய சேஷ்டாபலத்தினால் பெருக்க வருகின்ற எண்ணினுடைய மூலம் அந்தக்கிரகத்தின் இஷ்டபலம் ஆகும். உதாரணமாகச் சூரியனுக்கு உச்சபலம் 13 என்றும் சூரியனுக்கு சேஷ்டாபலம் 42 என்றும் வைத்துக் கொண்டால் சூரியனுடைய இஷ்டபலத்தைக் கணிப்போம். உச்சபலமாகிய 13-ஐ சேஷ்டாபலமாகிய 42-ஆல் பெருக்க 546 வரும். இந்த 546க்கு மேலே சொல்லிய மூலம் என்பதைக் கணிக்கும் வழி பிரகாரம் கணிக்க மூலம் 23 வரும் (அல்லது மேலே சொல்லிய புத்தகத்தில் வர்க்கம் என்ற கலத்திலுள்ள எண்களில் எந்த எண் 546க்கு நெருங்கியிருக்கின்றதோ; அந்த எண்ணிற்கு எதிரில் மூலம் என்ற கலத்திலுள்ள எண்ணே 546க்கு வர்க்கம் ஆகும். இப்படிப் பார்க்க மூலம் 23 வரும்.) இந்த 23 தான் சூரியனுடைய இஷ்டபலம் ஆகும் இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தினுடைய இஷ்டபலத்தைக் கணிக்கவேண்டியது.

கஷ்டபலம் கணிக்க :-ஒவ்வொரு கிரகத்தினுடைய உச்ச பலத்தை 100-ல் இருந்து கழிக்க வருகின்ற எண்ணை அதேகிரகத்தினுடைய சேஷ்டாபலத்தை 100-ல் இருந்து கழிக்க வருகின்ற எண்ணால் பெருக்க வருகின்ற எண்ணினுடைய மூலம் அந்த கிரகத்தின் கஷ்டபலம் ஆகும். உதாரணமாகச் சூரியனுக்கு உச்சபலம் 13

என்றும், சூரியனுக்கு சேஷ்டாபலம் 42 என்றும் வைத்துக் கொண்டு சூரியனுடைய கஷ்டபலத்தைக் கணிப்போம். 100-ல் இருந்து உச்சபலமாகிய 13-யைக் கழிக்க 87 வரும். சேஷ்டா பலமாகிய 42-யை 100-ல் இருந்து கழிக்க 58 வரும். இந்த 87-யை 58ஆல் பெருக்க 5046 வரும். இந்த 5046-க்கு மூலம் கணிக்க 71 வரும். இந்த மூலமாகிய 71 தான் சூரியனுடைய கஷ்டபலம் ஆகும். இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தினுடைய கஷ்டபலத்தைக் கணிக்கவேண்டியது.

36-வது வாக்கியம் — இஷ்ட கஷ்ட ஷட்பலம்.

(1)-வது அயிட்டம் - இஷ்ட ஷட்பலம் கணிக்க:—ஒரு கிரகத்திற்கு வந்த ஷட்பலத்தை அதே கிரகத்திற்கு வந்த இஷ்டபலத்தால் பெருக்க வருகின்ற எண்ணிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட நிற்கின்றது இஷ்டஷட்பலமாகும்.

குறிப்பு:—(1) ஒரு எண்ணிலுள்ள இலக்கங்களை எண்ண வேண்டுமானால் முன்னே 35-வது வாக்கியத்தில் குறிப்பில் சொன்ன பிரகாரம் வலதுகைப் பக்கமிருந்து இடதுகைப் பக்கமாக எண்ண வேண்டும்.

குறிப்பு :—(2) ஷட்பலத்தையும் இஷ்ட பலத்தையும் பெருக்கி வந்த தொகையில் இரண்டிற்கு மேற்பட்ட இலக்கங்கள் இருந்தால் தள்ளிவிடப்பட்ட இரண்டு இலக்கங்களின் தொகை 50-ம் 50-க்கு மேற்பட்டால் மூன்ருவது இலக்கத்துடன் 1 கூட்டவும். உதாரணமாக பெருக்கிவந்த தொகை 76854 ஆக வந்தால், முதல் இரண்டு இலக்கங்களாகிய 4-யையும், 5-யையும் தள்ளிவிடவும். இப்படித் தள்ளிவிடப்பட்ட முதல் இரண்டு இலக்கங்களின் தொகையாகிய 54 என்பது 50-க்கு மேற்பட்டதால் மூன்ருவது இலக்கமாகிய 8 உடன் ஒன்று சேர்க்க மூன்ருவது இலக்கம் 9 ஆக மாறும். ஆகையால் பிறகு நின்ற இலக்கங்களின் தொகையாகிய 769தான் இஷ்ட ஷட்பலமாகும்.

குறிப்பு :—(3) ஷட்பலத்தையும் இஷ்டபலத்தையும் பெருக்க வந்த எண்ணில் ஒரே ஒரு இலக்கம் இருந்தால் இஷ்டஷட்பலம் பூஜ்ஜியம் என்று வைத்துக்கொள்ளவும்.

குறிப்பு :—(4) ஷட்பலத்தையும் இஷ்டபலத்தையும் பெருக்க வந்த எண்ணில் இரண்டு இலக்கங்கள் மாத்திரம் இருந்து பெருக்கி

வந்த எண் 50-ம் 50-க்கு மேற்பட்டால் இஷ்டஷட்பலம் ஒன்று என்றும் 50-க்குக் குறைந்தால் இஷ்டஷட்பலம் பூஜ்ஜியம் என்றும் வைத்துக்கொள்ளவும்.

உதாரணம்:— சூரியனுக்குச் ஷட்பலம் 615 என்றும், சூரியனுக்கு இஷ்டபலம் 23 என்றும் வைத்துக் கொள்வோம். ஷட்பலமாகிய 615-யை இஷ்டபலமாகிய 23 ஆல் பெருக்க 14145 வரும். முதல் இரண்டு இலக்கங்களாகிய 5யையும், 4யையும் தள்ளிவிட 141 நிற்கும். தள்ளிவிடப்பட்ட முதல் இரண்டு இலக்கங்களின் தொகையாகிய 45 என்பது 50-க்குள்பட்டதால் மூன்ருவது இலக்கத்துடன் ஒன்றும் சேர்க்கவேண்டியதில்லை. ஆகையால், இந்த 141-தான் சூரியனுடைய இஷ்டஷட்பலமாகும்.

(2)-வது அயிட்டம்—கஷ்ட ஷட்பலம் கணிக்க:— ஒரு கிரகத்திற்கு வந்த ஷட்பலத்தை அதே கிரகத்திற்கு வந்த கஷ்டபலத்தால் பெருக்க வருகின்ற எண்ணிலுள்ள இலக்கங்களில் முதல்[1] இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட நிற்கின்றது கஷ்ட ஷட்பலமாகும்.

[1]குறிப்பு :– இந்த வாக்கியத்தில் 1-வது அயிட்டத்தின் கீழ் 2-வது, 3-வது, 4-வது குறிப்புகளில் இஷ்டபலம் என்பது எவ்விடத்தில் வந்த போதிலும் அதற்குப் பதிலாகக் கஷ்டபலம் என்பதை வைத்து வாசித்து இந்த குறிப்புகளின் பிரகாரம் கிரிகை செய்யவும். 1-வது குறிப்பும் கஷ்ட ஷட்பல கணிதத்திற்குப் பொருந்தும்.

உதாரணம் :— சூரியனுக்குச் ஷட்பலம் 615 என்றும், சூரியனுக்கு கஷ்டபலம் 71 என்றும் வைத்துக் கொள்வோம். ஷட்பலமாகிய 615-யைக் கஷ்டபலமாகிய 71-ஆல் பெருக்க 43, 365 வரும். முதல் இரண்டு இலக்கங்களாகிய 5-யையும் 6-யையும் தள்ளிவிட 433 நிற்கும். தள்ளிவிடப்பட்ட முதல் இரண்டு இலக்கங்களின் தொகையாகிய 65 என்பது 50-க்கு மேற்பட்டதால் மூன்ருவது இலக்கத்துடன் ஒன்று சேர்க்க வேண்டியது. அப்படிச் சேர்ப்பதால் முன்னே நின்ற 433 என்பது 434 ஆகும். ஆகையால், இந்த 434 தான் சூரியனுடைய கஷ்ட ஷட்பலமாகும்.

37-வது வாக்கியம்—இஷ்ட கஷ்ட கிரக திருக்பலம்

1-வது அயிட்டம்: – இஷ்ட திருக்பலம் கணிக்க : – ஒரு கிரகம் மற்ற கிரகங்களைப் பார்க்கும் பார்வையின் அளவுகளை அந்தக் கிரகத்

தின் இஷ்டபலத்தால் பெருக்க[1] அந்தக் கிரகம் மற்ற கிரகங்களைப் பார்க்கும் இஷ்ட திருக்பலம் என்ற சுபபலம் வரும்.

[1]குறிப்பு:— பெருக்க வரும் எண்ணிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை 36-வது வாக்கியத்தில் 1-வது அயிட்டத்தின் கீழ் குறிப்புகளில் சொல்லிய பிரகாரம் தள்ளிவிட நின்றது இஷ்ட கிரக திருக்பலம் ஆகும்.

உதாரணம்:— சூரியன், குருவை 66 பங்கு பார்வையுடனும், சுக்கிரனை 7 பங்கு பார்வையுடனும், செவ்வாயை 7 பங்கு பார்வையுடனும், சனியை 30 பங்கு பார்வையுடனும் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். (8-வது கட்டம் பார்க்கவும்) சூரியனுடைய இஷ்ட பலம் 23 என்று வைத்துக்கொள்வோம். (1) 66-யை 23-ஆல் பெருக்க 1, 518 வரும். இந்த 1518-ல் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 15 நிற்கும். தள்ளிவிட்ட இலக்கங்களின் தொகையாகிய 18 என்பது 50-க்குள்பட்டதால் நின்ற எண்ணாகிய 15 உடன் ஒன்றுகூட்ட வேண்டிய அவசியமில்லை. ஆகையால், 15 தான் சூரியன் குருவைப்பார்க்கும் பார்வையின் சுபபலம் என்ற இஷ்ட திருக்பலமாகும். (2) 7-யை 23-ஆல் பெருக்க 161 வரும். இந்த 161-ல் இரண்டு இலக்கம் தள்ளிவிட 1 நிற்கும். தள்ளிவிட்ட இலக்கங்களின் தொகையாகிய 61 என்பது 50-க்கு மேற்பட்டதால் நின்ற எண்ணாகிய 1 உடன் 1 கூட்ட 2 வரும். இந்த 2 தான் சூரியன் சுக்கிரனைப் பார்க்கும் இஷ்ட திருக்பலம் (3) இவ்விதமாகவே கணிக்க சூரியன் செவ்வாயை இஷ்ட திருக்பலம் 2 பங்குடன் பார்க்கும். (4) இவ்விதமாகவே கணிக்க சூரியன் சனியை இஷ்ட திருக்பலம் 7 பங்குடன் பார்க்கும். சூரியனுக்குச் சொல்லியது போலவே மற்ற கிரகங்கள் பார்க்கும் இஷ்ட திருக்பலம் கணிக்கவும்.

2-வது அயிட்டம்:— கஷ்ட திருக்பலம் கணிக்க:— ஒரு கிரகம் மற்றக் கிரகங்களைப் பார்க்கும் பார்வையின் அளவுகளை அந்த கிரகத்தின் கஷ்ட பலத்தால் பெருக்க[1] அந்த கிரகம் மற்ற கிரகங்களைப் பார்க்கும் கஷ்ட திருக்பலம் என்ற அசுப பலம் வரும்.

[1]குறிப்பு:— பெருக்க வரும் எண்ணிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை 36-வது வாக்கியத்தில் 1-வது அயிட்டத்தின் கீழ்க் குறிப்புகளில் சொல்லிய பிரகாரம் தள்ளிவிட நின்றது கஷ்ட திருக்பலம் ஆகும்.

உதாரணம்:—சூரியன் குருவை 66 பங்கு பார்வையுடனும் சுக்கிரனை 7 பங்கு பார்வையுடனும், செவ்வாயை 7 பங்கு பார்வை யுடனும், சனியை 30 பங்கு பார்வையுடனும் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். சூரியனுடைய கஷ்ட பலம் 71 என்று வைத்துக் கொள்வோம். (1) 66-யை 71-ஆல் பெருக்க 4,686 வரும். இந்த 4686-ல் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 46 நிற்கும். தள்ளிவிட்ட இலக்கங்களின் தொகையாகிய 86 என்பது 50-க்கு மேற்பட்டதால் நின்ற எண்ணாகிய 46 உடன் 1 கூட்ட நின்ற எண் 47 ஆக மாறும். ஆகையால் 47 தான் சூரியன் குருவைப் பார்க்கும் பார்வையின் அசுபபலம் என்ற கஷ்ட திருக்பலமாகும் (2) 7யை 71 ஆல் பெருக்க 497 வரும். இந்த 497-ல் இரண்டு இலக்கம் தள்ளிவிட 4 நிற்கும். தள்ளிவிட்ட இலக்கங்களின் தொகையாகிய 97 என்பது 50-க்கு மேற்பட்டதால் நின்ற எண்ணாகிய 4 உடன் 1 கூட்ட 5 வரும். இந்த 5 தான் சூரியன் சுக்கிரனைப் பார்க்கும் கஷ்ட திருக்பலமாகும். (3) இவ்விதமாகவே கணிக்க சூரியன் செவ்வா யைக் கஷ்டதிருக் பலம் 5 பங்குடன் பார்க்கும். (4) இவ்விதமாகவே சூரியன் சனியை கஷ்ட திருக்பலம் 21 பங்குடன் பார்க்கும். சூரியனுக்குச் சொல்லியது போலவே மற்ற கிரகங்கள் பார்க்கும் கஷ்ட திருக்பலம் கணிக்கவும்.

38-வது வாக்கியம் — இஷ்ட கஷ்ட சப்த வர்க்கஜ பலம்

சப்தவர்க்கஜ பலம் கணிக்கும் முறை 22-வது வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சப்த வர்க்கஜ பலம் என்பது முன்னமே சொல்லிய பிரகாரம் 7 வித வர்க்க பலம் என்பது. அவை (1) இராசி என்ற இராசிச் சக்கிர வர்க்கம், (2) நவாம்ச வர்க்கம் (3) திரேஷ்காண வர்க்கம், (4) துவாதசாம்ச வர்க்கம், (5) ஓராவர்க் கம், (6) திரிம்சாம்ச வர்க்கம், (7) சப்தமாம்ச வர்க்கம் என ஏழு வகைப்படும் ஒவ்வொரு வர்க்கத்திற்கும் சுப பலம் என்ற இஷ்ட பலமும் அசுபபலம் என்ற கஷ்ட பலமும் உண்டு இராசிச் சக்கிர வர்க்கத்துக்கு மாத்திரம் இஷ்டபலமும் கஷ்டபலமும் ஒன்ருய்ச் சேர்க்க பலம் ஒரு ரூபம் அல்லது 100 பங்கு வரும். மற்ற ஆறு வர்க்கங்களுக்கும் தனித்தனியாய் இஷ்ட பலமும் கஷ்ட பலமும் ஒன்ருய்ச் சேர்க்க பலம் ½ ரூபம் அல்லது 50 பங்கு ஆகும். இதை நன்ருய்க் கவனிக்கவும்.

(1) இஷ்ட கஷ்ட இராசிவர்க்கம் கணிக்க:—முந்தி 22-வது வாக்கியத்தில் சொல்லிய விதி பிரகாரம் இராசிவர்க்கத்தைக் கணிக்க வருகின்ற பலமே இஷ்ட இராசி வர்க்க பலமாகும். இந்த இஷ்ட ராசி வர்க்கப்பலத்தை 100-ல் இருந்து கழிக்க வருவது கஷ்ட ராசி வர்க்க பலமாகும்.

உதாரணம்:—முந்தி 22-வது வாக்கியத்தில் சொல்லிய விதி பிரகாரம் இராசி வர்க்கம் கணிக்க இராசி வர்க்கப்பலம் சூரியனுக்கு 25-ம், சந்திரனுக்கு 50-ம் செவ்வாய்க்கு 6-ம், புதனுக்கு 13-ம், குருவுக்கு 13-ம், சுக்கிரனுக்கு 50-ம், சனிக்கு 13-ம் வந்ததென்று வைத்துக் கொள்வோம். சூரியனுக்கு ராசிவர்க்கம் 25 ஆகையால், சூரியனுக்கு இஷ்ட ராசிவர்க்கம் 25 ஆகும். இந்த 25-ஐ 100-ல் இருந்து கழிக்க வருகின்ற 75 சூரியனுக்குக் கஷ்ட ராசிவர்க்கம் ஆகும். குருவுக்கு இராசி வர்க்கம் 13 ஆகையால், குருவுக்கு இஷ்ட ராசி வர்க்கம் 13 ஆகும். இந்த 13-ஐ 100-ல் இருந்து கழிக்க வருகின்ற 87 குருவுக்கு கஷ்ட ராசி வர்க்கம் ஆகும். இவ்விதமாகவே கணிக்க சந்திரனுக்கு இஷ்ட ராசி வர்க்கம் 50-ம் கஷ்ட ராசிவர்க்கம் 50-ம், செவ்வாய்க்கு இஷ்ட ராசி வர்க்கம் 6-ம் கஷ்ட ராசிவர்க்கம் 94-ம், புதனுக்கு இஷ்ட ராசி வர்க்கம் 13-ம், கஷ்ட ராசி வர்க்கம் 87-ம், சுக்கிரனுக்கு இஷ்ட ராசிவர்க்கம் 50-ம் கஷ்ட ராசிவர்க்கம் 50-ம், சனிக்கு இஷ்ட ராசிவர்க்கம் 13-ம் கஷ்ட ராசி வர்க்கம் 87-ம் ஆகும்.

(2) இஷ்ட கஷ்ட நவாம்ச வர்க்கம் முதலிய இதர ஆறுவித வர்க்கங்கள் கணிக்க:—முந்தி 22-வது வாக்கியத்தில் சொல்லிய பிரகாரம் நவாம்ச வர்க்கம், திரேஷ்காண வர்க்கம் முதலிய (இராசி வர்க்கம் நீங்கலாயுள்ள) 6 வித வர்க்கங்களைக் கணிக்கவும். இப்படிக் கணித்துவரும் பலத்தில் பாதி பலந்தான் இஷ்ட வர்க்க பலம் ஆகும். இந்த இஷ்ட வர்க்க பலத்தை 50-ல் இருந்து கழிக்க வருவது கஷ்ட வர்க்க பலமாகும்.

உதாரணம்:—முந்தி 22-வது வாக்கியத்தில் சொல்லிய விதி பிரகாரம் (இராசிவர்க்கம் நீங்கலாயுள்ள) நவாம்ச முதலிய ஆறு வர்க்கங் கணிக்கும்போது நவாம்ச வர்க்கத்தில் பலம் சூரியனுக்கு 25ம் சந்திரனுக்கு 25ம், செவ்வாய்க்கு 6ம், புதனுக்கு 25ம், குருவிற்கு

50-ம், சுக்கிரனுக்கு 50-ம், சனிக்கு 50-ம், வந்தது என்று வைத்துக் கொள்வோம், சூரியனுக்கு நவாம்ச வர்க்கம் 25. இந்த 25-ல் பாதியாகிய 12½ அல்லது 13 தான் சூரியனுக்கு இஷ்டநவாம்ச வர்க்கம் ஆகும். இந்த 13 யை 50 ல் இருந்து கழிக்க வருகின்ற 37 தான் சூரியனுக்கு கஷ்ட நவாம்ச வர்க்கம் ஆகும். சந்திரனுக்கு நவாம்ச வர்க்கம் 25. இந்த 25யைப் பாதியாக்க 12½ வரும். இந்தப் புத்தகம் முழுவதிலும் பாதியையும் பாதிக்கு மேற்பட்டதையும் ஒன்ருகப் பாவிப்பதால் அதே மாதிரி 12½ஐயும் பாவிக்க 12½ என்பது 13 ஆகும். இந்த 13 தான் அதாவது 25-ல் பாதியாகிய 13 தான் சந்திரனுக்கு இஷ்டநவாம்ச வர்க்கம் ஆகும். இந்த 13ஐ 50 ல் இருந்து கழிக்க வருகின்ற 37 தான் சந்திரனுக்கு கஷ்ட நவாம்ச வர்க்கம் ஆகும். இவ்விதமாகவே கணிக்க செவ்வாய்க்கு இஷ்டநவாம்ச வர்க்கம் 3ம், கஷ்டநவாம்ச வர்க்கம் 47ம், குரு, சுக்கிரன், சனி இவர்களுக்குத் தனித்தனியாய் இஷ்டநவாம்ச வர்க்கம் 25 ம், கஷ்ட நவாம்சம் 25 ம் வரும். புதனுக்கு இஷ்ட நவாம்ச வர்க்கம் 13 ம் கஷ்டநவாம்ச வர்க்கம் 37ம் வரும்.

மேலும், நவாம்ச வர்க்கத்திற்குக் கணித்துக் காட்டியது போலவே, (இராசி வர்க்கம் நீங்கலாயுள்ள) மற்ற இதர 5 வர்க்கங்களுக்கும் அவைகளின் வர்க்க பலத்திலிருந்து அவைகளின் இஷ்ட கஷ்ட வர்க்கப்பலம் கணிக்க வேண்டியது.

39-வது வாக்கியம்—சுப அசுப பங்க்தி கணிதம்

சுப அசுப பங்க்தீ கணிக்க:—51-வது, 52 வது கட்டங்களைப் போல இரண்டு கட்டங்களைப் போட்டுக் கொள்ளவும். பிறகு ஒவ்வொரு கிரகத்திற்கும் கணித்து வந்த மொத்த இஷ்டசப்த வர்க்க பலத்தை 4 ஆல் வகுக்க வருகின்றதை அந்தந்த கிரகத்தின் கீழ் இராசி வர்க்கத்திற்கு எதிரில் போடவேண்டியது. பிறகு மற்ற 6 வர்க்கங்களுக்கு எதிரில் இராசி வர்க்கத்திற்கு இங்கு சொல்லிய படி கணித்து வந்ததில் பாதியைப் போடவேண்டியது. இப்படிச் செய்ய சுப பங்க்தீ வரும்.

மறுபடியும் ஒவ்வொரு கிரகத்திற்கும் கணித்து வந்த மொத்த கஷ்டசப்தவர்க்க பலத்தை 4 ஆல் வகுக்க வருகின்றதை அந்தந்த கிரகத்தின் கீழ் இராசிவர்க்கத்திற்கு எதிரில் போடவேண்டியது.

பிறகு மற்ற 5 வர்க்கங்களுக்கு எதிரில் இராசி வர்க்கத்திற்கு இங்கு சொல்லியபடி கணித்து வந்ததில் பாதியைப் போடவேண்டியது. இப்படிச் செய்ய அசுப பங்க்தீ வரும்.

உதாரணம்: —(1) உதாரணமாக ஒவ்வொரு கிரகத்திற்குக் கணித்து வந்த மொத்த இஷ்ட சப்தவர்க்கஜபலம் அடியிற் கண்ட படி என்று வைத்துக் கொள்வோம்.

கிரகம்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி	
மொத்த இஷ்டசப்த வர்க்கஜ பலம்	97	152	83	77	111	106	93	(1)
இதை 4ல் வகுக்க	24	38	21	19	28	27	23	வரும்(2)
ஆகையால், இராசி வர்க்க சுப பங்க்தீ	24	38	21	19	28	27	23	ஆகும்(3)
நவாம்சவர்க்க சுப பங்க்தீ	12	19	11	10	14	14	12	ஆகும்(4)
திரேஷ்காண வர்க்க சுப பங்க்தீ	12	19	11	10	14	14	12	ஆகும்(5)
துவாதசாம்ச வர்க்க சுப பங்க்தீ	12	19	11	10	14	14	12	ஆகும்(6)
சப்தமாம்ச வர்க்க சுப பங்க்தீ	12	19	11	10	14	14	12	ஆகும்(7)
ஹோரா வர்க்க சுப பங்க்தீ	12	19	11	10	14	14	12	ஆகும்(8)
திரிம்சாம்ச வர்க்க சுப பங்க்தீ	12	19	11	10	14	14	12	ஆகும்(9)

ஆகையால், சுபபங்க்தீ என்பது மேலே (2) முதல் (9) வரையிலும் கொடுத்துள்ளது போல ஆகும்.

குறிப்பு.—4-லும், 2-லும் வகுக்கும்போது ஈவு $\frac{1}{2}$யும். $\frac{1}{2}$க்கு மேற்பட்டும் வந்தால் ஒன்ருகப் பாவிக்கப்பட்டுள்ளது. (4) முதல் (9) வரையிலுமுள்ள எண்கள் (3) க்கு எதிரிலுள்ள எண்களின் பாதியாகும்.

உதாரணம்:—(2) உதாரணமாக ஒவ்வொரு கிரகத்திற்கும் கணித்து வந்த மொத்த கஷ்ட சப்தவர்க்கஜபலம் அடியிற் கண்ட படி என்று வைத்துக் கொள்வோம்.

கிரகம்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி	
மொத்த கஷ்ட சப்த வர்க்கஜ பலம்	303	248	317	323	289	293	307	ஆகும் (1)
இதை 4ல் வகுக்க	76	62	79	81	72	74	77	ஆகும் (2)
ஆகையால், ராசிவர்க்க அசுபபங்க்தீ	76	62	79	81	72	74	77	ஆகும் (3)
நவாம்ச வர்க்க அசுப்பங்க்தீ	38	31	40	41	36	37	39	ஆகும் (4)
திரேஷ்காண வர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39	ஆகும் (5)
துவாதசாம்ச வர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39	ஆகும் (6)
சப்த்தமாம்ச வர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39	ஆகும் (7)
ஓரா வர்க்க அசுப பங்க்தீ	38	31	40	41	36	37	39	ஆகும் (8)
திரிம்சாம்ச வர்க்க அசுபபங்க்தீ	38	31	40	41	36	37	39	ஆகும் (9)

ஆகையால், அசுப பங்க்தீ என்பது மேலே (3) முதல் (9) வரையிலுங் கொடுத்துள்ளது போல ஆகும்.

குறிப்பு :—4 லும், 2லும் வகுக்கும்போது ஈவு ½ யும் ½ க்கு மேற்பட்டு வந்தால் ஒன்ருகப் பாவிக்கப்பட்டுள்ளது. (4) முதல் (9) வரையிலுள்ள எண்கள் (3) க்கு எதிரிலுள்ள எண்களின் பாகியாகும்.

மொத்த இஷ்ட அல்லது கஷ்ட சப்தவர்க்கஜ பலத்தை முதலில் 4-ஆல் வகுத்து நவாம்ச முதலிய 6 வர்க்கங்களை அடைவதை விட மொத்த இஷ்ட அல்லது கஷ்ட சப்தவர்க்கஜ பலத்தை ஒரே தடவையில் (4 ஐ 2 ஆல் பெருக்க வருகின்ற) 8-ஆல் வகுத்து அடைவது துல்லிபமாகும்.

40-வது வாக்கியம் சுப அசுப மத்தியபலம் கணிதம்

சுப மத்தியபலம் கணிக்க :—ஒரு கிரகத்திற்கு வந்த இராசி வர்க்க சுப பங்க்தீ என்பதை அந்த கிரகம் இராசிச் சக்கிரத்தில் எந்த ராசியிலிருக்கின்றதோ, அந்த இராசிக்குடைய கிரகத்திற்கு வந்த மொத்த இஷ்ட சப்தவர்க்கஜ பலத்தால் பெருக்க வருகின்ற தொகையிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை முன்னே சொல்லிய பிரகாரம் தள்ளிவிட வருவது இராசிவர்க்கத்தில் அந்தக் கிரகத்திற்கு வரும் சுப மத்திய பலம் ஆகும். இவ்விதமாகவே ஒரு கிரகத்திற்கு வந்த நவாம்சவர்க்க சுப பங்க்தீ என்பதை அந்தக் கிரகம் நவாம்ச சக்கிரத்தில் எந்த ராசியிலிருக்கின்றதோ; அந்த ராசிக்குடைய கிரகத்திற்கு வந்த மொத்த இஷ்ட சப்தவர்க்கஜ பலத்தால் பெருக்க வருகின்ற தொகைக்கு அடியில் குறிப்பில் சொல்லியபடி கிரிகை செய்ய வருவது [1]நவாம்ச வர்க்கத்தில் அந்தக் கிரகத்திற்கு வரும் சுப மத்தியபலம் ஆகும். இவ்விதமாகவே ஒரு கிரகத்திற்கு திரேஷ்காண வர்க்கம், துவாதசாம்ச வர்க்கம், சப்தமாம்ச வர்க்கம் இவைகளில் வரும் சுப மத்திய பலத்தைக் கணிக்க வேண்டியது. மேலும் ஒரு கிரகத்திற்கு வந்த ஓராவர்க்க சுப பங்க்தீ என்பதை அந்த கிரகம் இருக்கும் ஓராதிபதியினுடைய மொத்த இஷ்ட சப்த வர்க்கஜ பலத்தால் பெருக்க வருகின்ற தொகைக்கு அடியில் குறிப்பில் சொல்லியபடி கிரிகை செய்ய வருவது. [1]ஓரா வர்க்கத்தில் அந்த கிரகத்திற்கு வரும் சுப மத்தியபலமாகும். ஒரு கிரகத்திற்கு வந்த திரிம்சாம்ச வர்க்க சுப பங்க்தீ என்பதை அந்த கிரகம் இருக்கும் திரிம்சாம்சாதிபதியினுடைய மொத்த இஷ்ட சப்தவர்க்கஜ பலத்தால் பெருக்க வருகின்ற தொகைக்கு அடியில்

குறிப்பில் சொல்லியபடி கிரிகை செய்ய வருவது[1] திரிம்சாம்ச வர்க்கத்தில் அந்த கிரகத்திற்கு வரும் சுப மத்திய பலமாகும்.

[1]குறிப்பு:— பெருக்கி வந்த தொகைக்கு 36-வது வாக்கியத்தின் கீழ் 1-வது முதல் 4-வது வரையிலுமுள்ள குறிப்புகளில் சொல்லியபடி கிரிகை செய்யவேண்டியது அவசியம்.

உதாரணம்:— சூரியனுக்கு இராசி வர்க்க சுப பங்க்தீ 24 என்றும் சூரியன் இராசிச் சக்கிரத்தில் கன்னியில் இருப்பதாகவும் அந்த கன்னியா ராசிக்குடைய கிரகமாகிய புதனுக்கு மொத்த இஷ்ட சப்தவர்க்கஜ பலம் 77 என்றும் வைத்துக்கொள்வோம். இந்த 24-ஐ 77-ஆல் பெருக்க 1,848 வரும். இந்த 1,848-ல் உள்ள முதல் இரண்டு வர்க்கங்களைத் தள்ளிவிட 18 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 48 என்பது 50-க்குள்பட்டதால் மூன்ருவது இலக்கமாகிய 4-க்கு 1 சேர்க்கவேண்டிய அவசியமில்லை. ஆகையால், தள்ளிவிடப்பட்ட பிறகு நின்ற 18-தான் சூரியனுக்கு இராசி வர்க்கத்தில் வந்த சுப மத்திய பலமாகும்.

உதாரணம்:— புதனுக்கு ஓராவர்க்கத்தில் சுப பங்க்தீ 10 என்றும் புதன் சூரியனுடைய ஓரையிலிருப்பதாக வைத்துக்கொண்டு அந்த சூரியனுக்கு மொத்த இஷ்ட சப்த வர்க்கஜபலம் 97 என்றும். வைத்துக்கொள்வோம். இந்த 10-யை 97-ல் பெருக்க 970 வரும், இந்த 970-ல் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 9 நிற்கின்றது. தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 70 என்பது 50-க்கு மேற்பட்டதால் மூன்ருவது இலக்கமாகிய 9-க்கு 1 சேர்க்க வேண்டியதவசியம். அப்படி சேர்க்க 10 வரும். ஆகையால் 10-தான் புதனுக்கு ஓராவர்க்கத்தில் வந்த சுப மத்திய பலமாகும்.

அசுப மத்திய பலம் கணிக்க:— சுப மத்திய பலம் கணிக்கச் சொல்லிய வழியில் சுப பங்க்தீ என்பதற்குப் பதிலாக அசுப பங்க்தீ என்பதையும், மொத்த இஷ்ட சப்த வர்க்கஜ பலத்திற்குப் பதிலாக மொத்த கஷ்ட சப்த வர்க்கஜ பலத்தையும் உபயோகப்படுத்திக் கணிக்க அசுப மத்திய பலம் வரும்.

உதாரணம்:— சூரியனுக்கு இராசி வர்க்க அசுப பங்க்தீ 76 என்றும் சூரியன் இராசிச் சக்கிரத்தில் கன்னியிலிருப்பதாகவும் அந்த கன்னியா ராசிக்குடைய கிரகமாகிய புதனுக்கு மொத்த கஷ்ட சப்த வர்க்கஜபலம் 323 என்றும் வைத்துக்கொள்வோம். இந்த

76ஐ 323 ஆல் பெருக்க 24, 548 வரும். இந்த 24, 548 ல் உள்ள முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 245 நிற்கும். தள்ளி விடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 48 என்பது 50-க்குள் பட்டதால் மூன்ருவது இலக்கமாகிய 5-க்கு 1 சேர்க்க வேண்டியதவ சியமில்லே. ஆகையால், தள்ளிவிடப்பட்ட பிறகு நின்ற 245-தான் சூரியனுக்கு இராசி வர்க்கத்தில் வந்த அசுப மத்திய பலமாகும்.

உதாரணம்; – புதனுக்கு ஓராவர்க்கத்தில் அசுப பங்க்தீ 41 என்றும் புதன் சூரியனுடைய ஓரையிலிருப்பதாக வைத்துக் கொண்டு அந்த சூரியனுக்கு மொத்த கஷ்ட சப்த வர்க்கஜ பலம் 303 என்று வைத்துக்கொள்வோம். இந்த 41-ஐ 303-ஆல் பெரு க்க 12,423 வரும். இந்த12,423-ல் முதல் இரண்டு இலக்கங்களை தள்ளிவிட 124 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகை யாகிய 23 என்பது 50-க்கு உள்பட்டிருப்பதால் மூன்ருவது இலக்கமாகிய 4-க்கு 1 சேர்க்கவேண்டியது அவசியமில்லே. ஆகை யால், தள்ளிவிடப்பட்ட பிறகு நின்றதாகிய 124 என்பதுதான் புத னுக்கு ஓராவர்க்கத்தில் வந்த அசுப மத்திய பலமாகும்.

41-வது வாக்கியம்—ஸ்பஷ்ட சுப அசுப பலம்

ஸ்பஷ்ட சுப பலம் கணிக்க:--- ஒரு கிரகத்திற்கு வந்த இஷ்ட ஷட்பலத்தை அந்தக் கிரகம் இராசிச் சக்கிரத்திலிருக்கின்ற ராசியாதிபதியினுடைய இஷ்ட ஷட்பலத்தால் பெருக்க வருகின்ற தொகையினுடைய மூலத்தை அந்தக் கிரகத்தினுடைய இராசிவர்க்க சுப மத்திய பலத்தால் பெருக்கவேண்டியது. பெருக்கி வந்த தொ கையிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை முன்னே சொல்லிய பிரகாரம் [1] தள்ளிவிட்டு கிரிகை செய்ய நின்றது அந்த கிரகத்திற்கு இராசி வர்க்கத்தில் ஸ்பஷ்ட சுப பலம் ஆகும்.

இவ்விதமாகவே ஒரு கிரகத்திற்கு வந்த இஷ்ட ஷட்பலத்தை அந்தக் கிரகம் நவாம்ச சக்கிரத்திலிருக்கின்ற ராசியாதிபதியினுடைய இஷ்ட ஷட்பலத்தால் பெருக்க வருகின்ற தொகையினுடைய மூல த்தை அந்த கிரகத்தினுடைய நவாம்ச வர்க்க சுப மத்திய பலத்தால் பெருக்கவேண்டியது. பெருக்கி வந்த தொகையிலுள்ள இலக்கங்க ளில் முதல் இரண்டு இலக்கங்களை முன்னே சொல்லிய பிரகாரம் [1] தள்ளிவிட்டுக் கிரிகை செய்ய நின்றது அந்தக் கிரகத்திற்கு

நவாம்ச வர்க்கத்தில் ஸ்பஷ்ட சுப பலம் ஆகும். இவ்விதமாகவே ஒரு கிரகத்திற்குத் திரேஷ்காண வர்க்கம், துவாதசாம்ச வர்க்கம், திரிம்சாம்ச வர்க்கம் இவைகளில் வரும் ஸ்பஷ்ட சுப பலத்தை அந் தந்த வர்க்கத்தை அனுசரித்துக் கணிக்க அந்த கிரகத்திற்கு அந் தந்த வர்க்கத்தினுடைய ஸ்பஷ்ட சுப பலம் வரும்.

மேலும்;ஒரு கிரகத்திற்கு வந்த இஷ்ட ஷட்பலத்தை அந்தக் கிர கம் இருக்கும் ஓராதிபதியினுடைய இஷ்ட ஷட்பலத்தால் பெருக்கி வருகின்ற தொகையினுடைய மூலத்தை அந்தக் கிரகத்தினுடைய ஓராவர்க்க சுப மத்திய பலத்தால் பெருக்கவேண்டியது. பெருக்கி வந்த தொகையிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங் களை முன்னே சொல்லிய பிரகாரம் [1]தள்ளிவிட்டு கிரிகை செய்ய நின்றது அந்த கிரகத்திற்கு ஓராவர்க்கத்தில் ஸ்பஷ்ட சுபபலமாகும்.

இவ்விதமாகவே ஒரு கிரகத்திற்கு வந்த இஷ்டபலத்தை அந்தக் கிரகம் இருக்கும் திரிம்சாம்சாதிபதியினுடைய இஷ்ட ஷட்பலத் தால் பெருக்க வருகின்ற தொகையினுடைய மூலத்தை அந்தக் கிர கத்தினுடைய திரிம்சாம்ச வர்க்க சுப மத்திய பலத்தால் பெருக்க வேண்டியது. பெருக்கி வந்த தொகையிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை முன்னே சொல்லிய பிரகாரம் [1]தள்ளிவிட்டுக் கிரிகை செய்ய நின்றது அந்தக் கிரகத்திற்கு திரிம் சாம்ச வர்க்கத்தில் ஸ்பஷ்ட சுப பலம் ஆகும்.

உதாரணம்:—சூரியன் இராசிச் சக்கிரத்தில் கன்னியில் இருப் பதாகவும், சூரியனுக்கு இஷ்ட ஷட்பலம் 141 என்றும், சூரியன் இருக்கும்படியான ராசியாதிபதியாகிய புதனுக்கு இஷ்ட ஷட்பலம் 802 என்றும், சூரியனுக்கு இராசி வர்க்கத்தில் சுப மத்திய பலம் 18 என்றும் வைத்துக்கொண்டு, சூரியனுக்கு இராசி வர்க்கத்தில் ஸ்பஷ்ட சுப பலம் கணிப்போம். 141-ஐ 802-ல் பெருக்க 1,13,082 வரும். இந்த 1,13,082-க்கு 35-வது வாக்கியத்தில் சொல் லிய பிரகாரம் மூலம் கணிக்க மூலம் 336 வரும். இந்த 336-ஐ சுப மத்தியபலமாகிய 18ஆல் பெருக்க 6,048 வரும். இதில் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 60 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்

1. குறிப்பு:- பெருக்கி வந்த தொகைக்கு 36-வது வாக்கி யத்தின் கீழ் 1-வது முதல் 4-வது வரையிலுள்ள குறிப்புகளில் சொல்லிய பிரகாரம் கிரிகை செய்ய வேண்டியது.

களின் தொகையாகிய 48 என்பது 50-க்குள்பட்டதால் மூன்ரு வது இலக்கத்துடன் 1 கூட்ட வேண்டியதில்லை. ஆகையால், தள்ளி விடப்பட்ட பிறகு நின்றதாகிய 60 என்பது தான் சூரியனுக்கு இராசி வர்க்கத்தில் வந்த ஸ்பஷ்ட சுப பலம் ஆகும்.

உதாரணம் :—சந்திரன் சூரியனுடைய ஓரையிலிருப்பதாகவும் சந்திரனுக்கு இஷ்ட ஷட்பலம் 266 என்றும், சந்திரன் இருக்கும் படியான ஓராதிபதியாகிய சூரியனுக்கு இஷ்ட ஷட்பலம் 141 என் றும் சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் சுப மத்திய பலம் 18 என்றும் வைத்துக்கொண்டு, சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் ஸ்பஷ்ட சுப பலம் கணிப்போம். 266-ஐ 141-ஆல் பெருக்க 37,506 வரும். இந்த 37,506-க்கு 35-வது வாக்கியத்தில் சொல்லிய பிரகாரம் மூலம் கணிக்க, மூலம் 193 வரும். இந்த 193-ஐ சுப மத்தியபல மாகிய 18-ஆல் பெருக்க 3,492 வரும். இதில் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 34 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங் களின் தொகையாகிய 92 என்பது 50-க்கு மேற்பட்டதால் மூன்ரு வது இலக்கத்துடன் 1 கூட்ட மூன்ருவது இலக்கமாகிய 4 என்பது 5-ஆக மாறும். ஆகையால், தள்ளிவிடப்பட்ட பிறகு நின்றதாகிய 34 என்பது 35-ஆக மாறும். ஆகையால், இந்த 35-தான் சந்திர னுக்கு ஓராவர்க்கத்தில் வந்த ஸ்பஷ்ட சுப பலம் ஆகும்.

ஸ்பஷ்ட அசுப பலம் கணிக்க:--ஸ்பஷ்ட சுப பலத்தைக் கணிக்க மேலே சொல்லிய வழிகளில் இஷ்ட ஷட்பலத்திற்குப் பதி லாகக் கஷ்ட ஷட்பலத்தையும், சுப மத்தியபலத்திற்குப் பதிலாக அசுப மத்தியபலத்தையும் உபயோகித்து கணிக் கஸ்பஷ்ட அசுப பலம் வரும்.

உதாரணம்:-- சூரியன் இராசிச் சக்கிரத்தில் கன்னியாராசியி லிருப்பதாகவும், சூரியனுக்குக் கஷ்ட ஷட்பலம் 437 என்றும், சூரிய னிருக்கும்படியான இராசியாதிபதியாகிய புதனுக்குக் கஷ்ட ஷட்பலம் 383 என்றும், சூரியனுக்கு இராசி வர்க்கத்தில் அசுப மத்திய பலம் 245 என்றும் வைத்துக் கொண்டு, சூரியனுக்கு இராசிவர்க்கத் தில் ஸ்பஷ்ட அசுப பலம் கணிப்போம், 437-ஐ 383-ஆல் பெருக்க 1,67,371 வரும். இந்த 1,67,371-க்கு 35-வது வாக்கியத்தில் சொல்லிய பிரகாரம் மூலம் கணிக்க, மூலம் 409 வரும். இந்த 409-ஐ அசுப மத்திய பலமாகிய 245-ஆல் பெருக்க 1,00,205

வரும். இதில் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 1,002 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 05 என்பது 50-க்குள்பட்டதால் மூன்ருவது இலக்கத்துடன் 1 கூட்ட வேண்டியது அவசியமில்லை. ஆகையால், தள்ளிவிடப்பட்ட பிறகு நின்றதாகிய 1,002-தான் சூரியனுக்கு இராசி வர்க்கத்தில் வந்த ஸ்பஷ்ட அசுப பலம் ஆகும்.

உதாரணம்: —சந்திரன், சூரியனுடைய ஓரையிலிருப்பதாகவும், சந்திரனுக்குக் கஷ்ட ஷட்பலம் 414 என்றும், சந்திரனிருக்கும்படியான ஓராதிபதியாகிய சூரியனுக்குக் கஷ்ட ஷட்பலம் 437 என்றும் சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் அசுப மத்திய பலம் 94 என்றும் வைத்துக்கொண்டு சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் ஸ்பஷ்ட அசுப பலம் கணிப்போம். 414-ஐ 437-ஆல் பெருக்க 1,80,918 வரும். இந்த 1,80,918-க்கு 35வது வாக்கியத்தில் சொல்லிய பிரகாரம் மூலம் கணிக்க, மூலம் 425 வரும். இந்த 425-ஐ அசுப மத்திய பலமாகிய 94-ஆல் பெருக்க 39,950 வரும். இதில் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 399 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகை 50 ஆனதால் மூன்ருவது இலக்கத்துடன் 1 கூட்ட வேண்டியதவசியம். ஆகையால், தள்ளிவிடப்பட்ட பிறகு நின்றதாகிய 399 என்பது 400 ஆகும். இந்த 400-தான் சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் வந்த ஸ்பஷ்ட அசுப பலம் ஆகும்.

இந்தப் புத்தகத்தில் 2-வது அத்தியாயத்தில் 19-வது, 20-வது வாக்கியங்களை உபயோகப்படுத்தும் விதத்தில் கிரகங்களின் பார்வை முதலிய எவ்விதப் பலன்களையும் ரூபம் என்று சொல்லப்பட்ட ஒரு அளவைக்கொண்டு அளப்பது வழக்கமென்று முன்னமே சொல்லியிருக்கின்ருேம். எல்லாக் கிரகங்களின் முழு பலம் இத்தனை ரூபம் என்று சொல்லப்படும். ஒரு ரூபத்தை 60 சமபாகங்களாகப் பங்கிட வருகின்ற ஒரு பாகத்திற்கு விரூபம் என்று பெயர். ஆகையால், 1 ரூபத்தில் 60 விரூபங்களுண்டு. 1 ரூபத்தை 60-ஆல் வகுப்பதைவிட 100-ஆல் வகுப்பது கணிதத்தில் சுலபமானதால் இந்தப் புத்தகத்தில் 1 ரூபத்தை 100 சமபாகமாகப் பங்கிட்டு கிரகங்களின் எவ்வித பலமும் 100-ல் இத்தனை பங்கு என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், இந்த புத்தகத்தில் கொடுத்துள்ள பங்குகளில் 100 பங்கு கொண்டது 1 ரூபமாகும். உதாரணமாக 55-வது கட்டத்தில் சூரியனுக்கு மொத்த ஸ்பஷ்ட சுப பலம் 252 என்று கணித்து போட்டிருக்கின்றது. அதாவது, சூரியனுடைய மொத்த

ஸ்பஷ்ட சுப பலம் என்பது 1 ரூபத்தை 100 சம பாகமாகப் பங்கிட வருகின்ற பாகத்தைப் போன்ற 252 பாகங்கள் உடையது என்பதாம். ஆகையால், 252 என்பது எத்தனை ரூபம் என்று பார்ப்போமானால் 2 ரூபமும், 100-ல் 52 பங்கு ரூபமும் ஆகும். இவ்விதமாகவே இந்த 55-வது கட்டத்தில் சந்திரனுக்கு மொத்த ஸ்பஷ்ட சுப பலம் 565 என்று போட்டிருப்பதால் சந்திரனுக்கு மொத்த ஸ்பஷ்ட சுப பலம் 5 ரூபமும், 100-ல் 65 பங்கு ரூபமும் ஆகும். மேலும் 37-வது கட்டத்தில் சூரியனுக்கு ஷட்பலம் 615 என்று கணித்து போட்டிருப்பதால் சூரியனுக்கு ஷட்பலம் எத்தனை ரூபம் என்று பார்ப்போமானால் 6 ரூபமும், 100-ல் 15 பங்கு ரூபமும் ஆகும். இவ்விதமாகவே சுக்கிரனுக்கு ஷட்பலம் 649 அல்லது 6 ரூபமும், 100-ல் 49 பங்கு ஆகும். 100 பங்கு கொண்டது 1 ரூபமானதால், 75 என்பது முக்கால் ரூபமும், 50 என்பது அரை ரூபமும், 25 என்பது கால் ரூபமும், 12½ என்பது அரைக்கால் ரூபமும், 6¼ என்பது 1 வீசம் ரூபமும் ஆகும். ஆகையால், மேலே சுக்கிரனுக்குச் சொல்லிய ஷட்பலமாகிய 649 பங்கு எனபது 6½ ரூபத்திற்கு கொஞ்சம் குறைவு என்பது ஏற்படும். இவ்விதமாகவே ரூப கணக்கு அறிய வேண்டியது.

கிரகங்களின் சுப அசுப பலத்தை இந்த புத்தகத்தில் சொல்லிய பிரகாரம் கணிதஞ்செய்து அறிவது மகரிஷிகளால் சொல்லப்பட்டது என்று அறிய வேண்டியது.

கிரகயுத்தபலம்

சூரியன், சந்திரன் ஆகிய இவ்விரண்டு கிரகங்களுக்கு ''யுத்த பலம்'' என்பது கிடையாது. இவை நீங்கலாக மற்ற குஜாதி பஞ்ச கிரகங்களுக்கும் கிரகயுத்தம் உண்டு. கிரகங்களின் யுத்த கணிதத்தைப்பற்றி நம் முன்னோர்கள் பலவித அபிப்பிராயமாகச் சொல்லியிருக்கிறார்கள். குஜாதி பஞ்ச கிரகங்களில் இரண்டு கிரகங்கள் ஸ்புட ரீதியாய் ஒரே ஸ்புடத்திலிருந்து (அதாவது இரண்டு கிரகங்களின் ஸ்புடங்கள் பாகை, கலை வரையிலும் ஒன்றாயிருந்து) இரண்டு கிரகங்களின் ''விக்ஷேபம்'' (Latitude) ஒரே திசையிலிருந்தால் இந்த இரண்டு கிரகங்களுக்கும் யுத்தம் உண்டென்றும், ஸ்புடங்களில் ஒரு கலையாகிலும் வித்தியாசமிருந்தால் கிரகங்களுக்கு யுத்தம் கிடையாது என்றும் சொல்வர் சிலர். இன்னும் சிலர் ஸ்புடங்களில் ஒரு கலை கூட வித்தியாசமில்லாமலிருந்து ஒரு கிரக பிம்பத்திற்கும்

மற்ருெரு கிரக பிம்பத்திற்கும் இடையிலுள்ள தூரம் ஒரு பாகைக்குள் இருந்தால்தான் அந்த இரண்டு கிரகங்களுக்கும் யுத்தம் உண்டென்பர். முன் சொன்ன வகுப்பார் கொள்கைப்படி யுத்தங்கள் ஜாதகங்களில் நேரிடுவது அருமையாக இருக்கும். பின் சொன்ன வகுப்பார் கொள்கைப்படி ஜாதகங்களில் கிரக யுத்தம் நேரிடுவது மிகவும் அருமையாக இருக்கும். (நாம் எடுத்துக்கொண்ட உதாரண ஜாதகத்தில் கிரக யுத்தம் நேரிடவில்லை என்பதைக் கவனிக்கவும்.) யுத்தத்தில் வடக்கிலுள்ள கிரகம் ஜெயிக்கின்றதென்றும் தெற்கிலுள்ள கிரகம் தோல்வியடைகிறதென்றும் சிலர் சொல்லுவார். பிம்பம் பெரியதாயும் பிரகாசம் அதிகமாயுமுள்ள கிரகம் தெற்கில் இருந்த போதிலும் ஜெயிக்கின்றது என்றும் சிலர் சொல்லுகிருர்கள். ஆனல் அயனபல ரீதியாய் வடக்கிலுள்ள கிரகம், தெற்கிலுள்ள கிரகத்தை விட வலிவுள்ளதால், வடக்கிலுள்ள கிரகம் பிம்பம் சிறியதாயுடையதாயினும் ஜெயிக்கின்றது என்பதைப் பலர் அங்கீகரிக்கின்றனர்.

யுத்த பலம் கணிக்க வேண்டுமானல் முதலில் யுத்த கிரகங்களின் பலத்தை அறிய வேண்டியது. ''பலம்'' என்பது (1) ஸ்தான பலம், (2) கால பலம், (3) திக்குப்பலம், (4) அயனபலம் ஆகிய இந்த நான்கு பலத்தையுங் கூட்ட வருகின்ற மொத்த பலம் ஆகும். யுத்தத்திலுள்ள இரண்டு கிரகங்களின் பலங்களுக்குமுள்ள வித்தியாசத்தை ஒரு சார்பார் இரண்டு கிரகங்களுக்கும் இடையிலுள்ள தூரத்தால் (அதாவது விக்ஷேப வித்தியாசத்தால் வகுக்க வேண்டுமென்றும், மற்ருெரு சார்பார் இரண்டு கிரகங்களின் பிம்பங்களுக்குமுள்ள வித்தியாசத்தால் வகுக்கவேண்டும் என்று சொல்வர்.) இப்படி வகுக்க வருகின்ற பலத்தை ஜெயிக்கின்ற கிரகமாகிய வடக்கிலிருக்கின்ற கிரகத்தின் பலத்துடன் கூட்டவேண்டும்; தெற்கிலிருக்கின்ற கிரகத்தின் பலத்திலிருந்து கழிக்கவேண்டும்.

கிரகங்களின் விக்ஷேபம் அறிதல் :— இராசி மண்டலமாகிய கிராந்தி மண்டலத்தை விட்டு அதற்கு வடக்கு அல்லது தெற்கில் கிரகங்கள் ஒதுங்கியிருக்குந் தூரத்திற்கு விக்ஷேபம் என்று பெயர். வடக்கே ஒதுங்கி இருந்தால் ''வடக்கு விக்ஷேபம்'' என்றும், தெற்கே ஒதுங்கியிருந்தால் ''தெற்கு விக்ஷேபம்'' என்றும் சொல்லப்படும். யுத்த நிர்ணய விதியில் கிரகங்களின் விக்ஷேபம் ஒரே திசையில் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கின்றது. அதாவது யுத்தத்திலிருக்கின்ற இரண்டு கிரகங்களின் விக்ஷேபம்

வடக்கு விக்ஷேபம் அல்லது தெற்கு விக்ஷேபமாக இருக்கவேண்டுமே தவிர ஒன்று வடக்கு விக்ஷேபமாகவும் மற்றொன்று தெற்கு விக்ஷேபமாகவும் இருக்கக்கூடாது என்பதாம். விக்ஷேபம் கணிக்க வேண்டுமானால் வானசாஸ்திரந்தெரியவேண்டும். வானசாஸ்திரந் தெரிந்தவர்கள் வான சாஸ்திரங்களில் சொல்லிய பிரகாரம் விக்ஷேபங்களைக் கணித்துக்கொள்ளவேண்டியது. வான சாஸ்திரந் தெரியாதவர்கள் இந்தப்புத்தகத்தில் 47-வது பக்கத்தில் சொல்லியுள்ள ''நாட்டிகல் ஆல்மநெக்'' அல்லது எனது சித்தாந்த இராஜ சிரோன்மணி என்ற ''இராஜ ஜோதிட கணிதம்'' என்ற புத்தகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

கிரகங்களின் பிம்ப அளவு அடியிற்கண்டபடி ஆகும்:—

கிரகங்கள்	பிம்பத்தின் அளவு				
செவ்வாய்	9.36	விகலை	அல்லது	9	விகலை
புதன்	6.68	,,	,,	7	,,
குரு	194 72	,,	,,	195	,,
சுக்கிரன்	16.80	,,	,,	17	,,
சனி	169.50	,,	,,	170	,, ஆகும்.

உதாரணம் :— 1925 ஹூ டிசம்பர் மீ 15உ இரவு 3 மணி 47 நிமிஷத்தில் செவ்வாய், சனி இவர்களின் ஸ்புடமும், விக்ஷேபமும், பலமும் அடியிற்கண்டபடி இருப்பதாக பாவித்துக்கொண்டு யுத்த பலம் கணிப்போம்.

கிரகங்கள்	ஸ்புடம்	விக்ஷேபம்		பலம்
	பாகை — கலை	பாகை-கலை		
செவ்வாய்	209 - 24	0 - 21	வடக்கு	708 பாகம்
சனி	209 - 24	2 - 5	,,	500 ,,
வித்தியாசம்	0 - 0	1 - 44	,,	208 ,,

(1) விக்ஷேப வித்தியாச தூரத்தால் வகுக்கவேண்டியது என்று சொல்பவர்களின் கொள்கைப்படி கணிக்க:- இரண்டு கிரகங்களின் பலத்தின் வித்தியாசம் 208. இந்த 208-ஐ விக்ஷேப வித்தியாசமாகிய 1 பாகை 44 கலையால் வகுக்கவேண்டியது 1 பாகை 44கலை என்பதைக் கலையாக மாற்ற 104 கலை வரும். கிரகபல வித்தியாசமாகிய 208-ஐ 104-ஆல் வகுக்க ஈவு 2 வரும். செவ்வாய், சனி

இவர்களில் சனி என்பது செவ்வாய்க்கு வடக்கில் இருப்பதால் யுத்தத்தில் சனி ஜெயித்த கிரகம். ஆகையால் மேலே வந்த 2-ஐ சனியின் பலமாகிய 500 உடன் கூட்டவேண்டியது. இப்படிச்செய்ய சனியின் பலம் 502 ஆகும். செவ்வாய் தோல்வியடைந்த கிரகமாத லால் செவ்வாயின் பலமாகிய 708-ல் இருந்து மேலே வந்த 2-ஐக் கழிக்க 706 வரும். ஆகையால் யுத்தபல கிரியையைச் செய்தபிறகு சனிக்குப் பலம் 502-ம் செவ்வாய்க்குப் பலம் 706-ம் ஆகும்.

குறிப்பு:—(1) யுத்த கிரியை செய்வதற்கு முந்தியுள்ள செவ்வாய், சனி பலத்தைக் கூட்ட அதாவது 708-ஐயும் 500-ஐயுங் கூட்ட 1,208 வரும். யுத்த பல கிரியை செய்தபிறகு இவர்களுக்கு வரும் பலங்களாகிய 706-ஐயும் 502-ஐயுங் கூட்ட 1,208 வரும். ஆகையால் யுத்தபல கிரியை செய்தலுக்கு முந்தியும் பிந்தியும் இவர்களின் பலத்தைக் கூட்ட வருந்தொகை ஒன்ருய் இருக்க வேண்டும் என்று அறியவும்.

குறிப்பு:—(2) ஈவு, கிரகபல வித்தியாச எண்ணிற்குமேல் அதிகமாக வருமானுல் ஈவிற்குப் பதிலாக கிரகபல வித்தியாச எண்ணேயே ஈவாக பாவிக்கவேண்டியது. அதாவது கிரகபல வித்தியாசத்தையே ஜெயித்த கிரக பலத்துடன் கூட்டவேண்டியது; தோற்றக் கிரகத்திலிருந்து கழிக்க வேண்டியது.

(2) பிம்ப வித்தியாசத்தால் வகுக்க வேண்டியது என்று சொல்பவர்களின் கொள்கைப்படி கணிக்க: மேலே எடுத்துக் கொண்ட உதாரணத்தில் இரண்டு கிரகங்களின் பலத்தின் வித்தியாசம் 208 ஆகும். சனியினுடைய பிம்ப அளவு 170 விகலே. செவ்வாயின் பிம்ப அளவு 9 விகலே. 170-க்கும் 9-க்கும் உள்ள வித்தியாசம் 161 விகலே ஆகும். பலத்தின் வித்தியாசமாகிய 2 8-ஐ பிம்ப வித்தியாசமாகிய 161-ஆல் வகுக்க ஈவு 1 வரும். இந்த 1ஐ ஜெயித்த கிரக பலமாகிய 500 உடன் கூட்ட சனிக்கு 501 வரும். இந்த 1-ஐத் தோல்வி அடைந்த கிரகமாகிய 708லிருந்து கழிக்க செவ்வாய்க்கு 707 வரும். ஆகையால் யுத்தபல கிரியை செய்த பிறகு செவ்வாய்க்குப் பலம் 707-ம் சனிக்குப் பலம் 501-ம் ஆகும்.

குறிப்பு:—ஈவு, கிரகபல வித்தியாச எண்ணிற்குமேல் அதிகமாய் வருமானுல் கிரகபல வித்தியாச எண்ணேயே முன்போல ஈவிற்குப் பதிலாக வைத்துக் கொள்ளவேண்டும்.

யுத்தபல கிரியை செய்த பிறகு மேலே வந்த ஈவை 37-வது கட்டத்தில் வரிசை எண் 8-ற்கு நேராய் ஜெயித்த கிரகத்தின் கீழ் கொடுத்துள்ள எண்ணுடன் கூட்ட வருவது ஜெயித்த கிரகத்தின் ஷட்பலமாகும்; இந்த ஈவை 37-வது கட்டத்தல் 8-வது வரிசை எண்ணிற்கு நேராய் தோல்வியடைந்த கிரகத்தின் கீழ் கொடுத்துள்ள எண்ணிலிருந்து கழிக்க வருவது தோல்வியடைந்த கிரகத்தின் ஷட்பலமாகும். நாம் எடுத்துக்கொண்ட உதாரண ஜாதகத்தில் கிரக யுத்தம் கிடையாது.

42-வது வாக்கியம்—ஆயுள் நிர்ணய கணிதம்

இங்கு இனிமேல் சொல்லப்படும்படியான ஆயுள் நிர்ணய கணிதம். ''வராஹ மிகிராச்சாரியார்'' அருளிச்செய்த ''பிருஹத் ஜாதகத்தின்'' 7-வது அத்தியாயத்திலும்; ''கல்யாணவர்மா'' அருளிச் செய்த ''ஜாதக பாரிஜாதத்தின்'' 5-வது அத்தியாயத்திலும் சொல்லியதாகும். ஆயுள் நிர்ணய கணிதத்திற்கு கிரகங்களின் பலம் தெரியவேண்டியது அவசியமானதால் ஆயுள் கணிதம் என்பது கிரகங்களின் ஷட்பல கணிதத்தை முதற் கருவியாக உடையது என்று சொல்லாமலே விளங்கும்.

ஆயுள் மிகவும் முக்கியமானபடியால் ஜோதிட சாஸ்திரத்தில் வல்லவர்கள் அனேகர் ஆயுளைக் கணித ரீதியாய் நிர்ணயஞ் செய்யும் வழியைப்பற்றி தங்கள் புத்திக்கு எட்டின வரையிலும் ஆராய்ச்சி செய்து தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகையால் ஆயுள் நிர்ணய கணிதங்களில் பலவித அபிப்பிராயங்களும், பலவிதமான வழிகளும், பலவிதச் சந்தேகங்களுடனுமிருக்கின்றன. இதனாலேதான் ''பிருஹத் ஜாதகத்தில்'' ஆயுள் நிர்ணய அத்தியாயம் மிகவுங் கஷ்டமான அத்தியாயம் என்று பலர் அபிப்பிராயப்படுகின்றார்கள் ஆயுள் நிர்ணயத்தைப் பற்றி 'பராசரர்' தன்னுடைய ''ஹோரா சாஸ்திரத்தில்'' 32 விதமான வழிகளைக் கொடுத்திருக்கின்றார். லக்கினம் ஒன்றும், சாயையையுடைய கிரகங்கள் ஏழும் ஆக 8 அம்சங்கள் ஒரு ஜாதகத்திலிருப்பதால் சிலர் 8 விதமான ''ஆயுள் கணித வழிகளைக்'' கொடுத்திருக்கின்றார்கள். அவைகள் அடியிற்கண்டபடி ஆகும்.

1. பிண்டஜ ஆயுர்தாயம் — சூரியன் வலிவாயிருக்கும்போதும்
2. நைசர்கஜ ஆயுர்தாயம் — சந்திரன் ,, ,,
3. பிண்டாஷ்டகவர்க்கஜஆயுர்தாயம் — செவ்வாய் ,, ,,
4. ரசிமஜ ஆயுர்தாயம் — புதன் ,, ,,
5. நக்ஷத்திர ஆயுர்தாயம் — குரு ,, ,,
6. காலச்சக்கிர ஆயுர்தாயம் — சுக்கிரன் ,, ,,
7. சாமுதாய ஆயுர்தாயம் — சனி ,, ,,
8. அம்சஜ ஆயுர்தாயம் — லக்கினம் ,, ,,

உபயோகப்படுத்த வேண்டும். இந்த 8 வித ஆயுர்தாய வழிகளில் ''வராஹ மிகிராச்சாரியார்'' பிண்டாயுர்தாயம் (என்ற பிண்டஜ ஆயுர் தாயம்) அம்சாயுர் தாயம் (என்ற அம்சஜ ஆயுர்தாயம்) ஆகிய இவ்விரண்டு ஆயுர்தாயங்களைப் ''பிருஹத் ஜாதகம்'' 7-வது அத்தியாயத்திலும். நைசர்க்கிக ஆயுர்தாயம் (என்ற நைசர்கஜ ஆயுர்தாய) த்தை ''பிருஹத் ஜாதகம்'' 8-வது அத்தியாயம், 1வது சுலோகத்திலுஞ் சொல்லி இருக்கின்றார்.

பிண்டாயுர்தாயம், அம்சாயுர்தாயம், நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய விசேஷமான இம்மூன்று வித ஆயுர்தாய கணிதங்களில் சூரியன், சந்திரன், லக்கினம் இம்மூன்றில் சூரியன் வலிவாயிருக்கும் போது பிண்டாயுர்தாய வழியையும், சந்திரன் வலிவாயிருக்கும் போது நைசர்க்கிக ஆயுர்தாய வழியையும், லக்கினம் வலிவாயிருக்கும்போது அல்லது லக்கினாபதி வலிவாயிருந்து சுபரால் பார்க்கப்படும்போது அம்சாயுர்தாய வழியையும் உபயோகப் படுத்தவேண்டும் என்று சிலர் சொல்லுகின்றார்கள். லக்கினம் வலிவுஎன்பதை சிலர் லக்கினாதிபதி மற்ற கிரகங்களைவிட வலிவாயிருத்தல் என்றும், சிலர் லக்கினபாவம் கிரகங்களைவிட வலிவாயிருத்தல் என்றுஞ் சொல்லுகிறார்கள். (லக்கினபாவம் பெரும்பாலும் எப்போதும் கிரகங்களைவிட வலிவாயிருக்குமாதலால், லக்கினம் என்றால் லக்கினாதிபதி என்றே அர்த்தம்கொள்வது உத்தமமாயிருக்குமே தவிர லக்கினபாவம் என்று அர்த்தங் கொள்வது உத்தமமாக இராது.) இன்னஞ்சிலர் அம்சாயுர்தாய வழியை எப்போதும் உபயோகப்படுத்த வேண்டும் என்றும். இன்னஞ்சிலர் எப்போதும் பிண்டாயுர்தாய வழியையும் அம்சாயுர்தாய வழியையும்ஆக இவ்விரண்டுவழிகளையும் ஏககாலத்தில்உபயோகப்படுத்தி இவ்விரண்டு வழியாகவும் ஆயுள் முதலிய பலாபலன்களைச் சொல்ல வேண்டும் என்றும், இன்னஞ்சிலர் பிண்டாயுர் தாயம்

அம்சாயுர்தாயம், நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய இம்மூன்று ஆயுர் தாயங்கள் ரீதியாய் ஒவ்வொரு கிரகங்களுக்கும் வருகின்ற வருஷங் களை ஒன்ருய்க் கூட்ட வருகின்றதை மூன்ருல் வகுக்க வருகின்றது தான் அந்தக்கிரகம் கொடுக்கின்ற ஆயுள் என்றும் சொல்லுகின்ருர் கள். ஆகையால் பின் வருமாறு ஆயுள் கணிதம் செய்வது உத்தமம் என்று தோன்றுகின்றது. ஆயுள் கணிதம் செய்து பார்க்கும் போது தாம் கணித்த கணிதத்தினுல் வருகின்ற ஆயுள் தவறுதலாயிருந் தால் இது ஆயுள் கணிக்கக் கொடுத்துள்ள பலவித மதபேதங்களா லும் அபிப்பிராய பேதங்களாலும் உண்டானது என்று கருத வேண் டுமேதவிர கிரக ஷட்பல கணிதத்தால் உண்டானதென்றும், கிரக ஷட்பல கணித வழி தவறுதலாயிருக்கும் என்றும் ஒருபோதுங் கருதவே கூடாது. மேலும் நல்ல வழியிலிருந்து சன்மார்க்கக் காரி யங்களில் ஈடுபட்டு கடவுளையும் பிரம்மக் கியானமுடையவர்களையும் தொழுது தேகத்திற்கு ஆரோக்கியத்தை உண்டு பண்ணக் கூடிய நல்ல போஜனம் உண்டு, தங்களுடைய பஞ்சேந்திரியங்களையும் அதி கமாய் உபயோகப்படுத்தாமல் சரிவர உபயோகப்படுத்தி தங்களு டைய குலாச்சாரத்திற்குத் தக்கவாறு நடந்து கொள்ளப்பட்டவர்க ளுக்குத்தான் ''பராசரர்'' முதலிய பலரும் சொல்லியுள்ள பலவித ஆயுர்தாய கணித முறைகளால் ஆயுள் நிர்ணயஞ் செய்ய முடியும் என்று ''வராஹமிகிராச்சாரியார்'' முதலிய பெரியோர்கள் சொல்லி யிருக்கின்ருர்கள். பாவத்தொழிலில் எப்போதும் ஈடுபட்டும், அல் லது பேராசையாலும், களவாலும் பிறருடைய சொத்தை அபகரிக் கும் எண்ணமுடையவராய் துர் கர்மங்களைச் செய்தும் அல்லது தெய்வ துவேஷம், பிரம்ம துவேஷ முடையவர்களாய்க் குலாச்சாரங் களை நழுவவிட்டும் அல்லது பெருந்திண்டி தின்றும் அல்லது எல் லோரும் கண்டால் அஞ்சும்படியாய்த் துன்மார்க்கச் செயல்களைச் செய்தும் வாழ்பவர்களுக்கு அகால மரணம் நேரிடும். ஆதலால் இதில் சொல்லிய ஆயுர் தாய கணித வழிப்பிரகாரம் அவர்களுக்கு ஆயுள் கணிக்கக் கூடாதென்றும் கணித்தால் அது தவறிப்போகும் என்றுஞ் சொல்லுகின்ருர்கள்.

இனிமேல் (1) பிண்டாயுர்தாயம் (2) அம்சாயுர்தாயம் (3) நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய இந்த மூன்று ஆயுர்தாயங்களைக் கணிக்கும் வழிகளைப்பற்றிக் கவனிப்போம்.

1-வது அமிட்டம் :— முதலில் கீழ்க்கண்ட உதாரணத்தில் காட் டிய பிரகாரம் ஒவ்வொரு கிரகத்திற்கும் ஆயுள் கணிக்கவேண்டியது.

2-வது அமிட்டம் :—பிறகு கீழ்க் கண்ட அரணங்களை 1-வது அமிட்டத்தில் கணித்து வந்த ஆயுளுக்குச் செய்யவேண்டியது.

(1) சத்துரு க்ஷேத்திர அரணம்:—ஒரு கிரகம் சத்துரு க்ஷேத்திரத்தில் இருந்தால் 1-வது அமிட்டத்தில் அந்தக் கிரகத்திற்குக் கணித்து வந்த ஆயுளில் மூன்றில் ஒரு பங்கு கழித்து விடவும். அந்தக் கிரகம் வக்கிர கெதியிலிருந்தால் சத்துரு க்ஷேத்திர அரணம் அந்தக் கிரகத்திற்குச் செய்யக் கூடாது. (குறிப்பு:— சிலர் சத்துரு க்ஷேத்திரத்தில் இருக்கும் கிரகம் செவ்வாயானால் மாத்திரம்தான் இந்த அரணம் செவ்வாய்க்கு மாத்திரம் செய்யக் கூடாதென்றும் கிரகங்கள் வக்கிர கெதியில் இருந்தால் அந்த கிரகங்களுக்குகூட அரணம் செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றார்கள் இது அநேகரால் அங்கீகரிக்கப்படவில்லை.) சத்துரு க்ஷேத்திரத்தில் இருக்கும் கிரகம் வக்கிர கெதியில் இருந்தால் இந்த அரணம் அந்தக் கிரகத்திற்குச் செய்யவேண்டியதில்லை என்பது அநேகருடைய கொள்கையாதலால் அதை இங்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(2) அஸ்தங்கத அரணம் :—அஸ்தங்கதமாய் இருக்கின்ற ஒரு கிரகத்திற்கு 1-வது அமிட்டத்தில் அந்தக் கிரகத்திற்கு வந்த ஆயுளில் பாதி கழித்துவிட வேண்டியது. சுக்கிரனுக்கும் சனிக்கும் மாத்திரம் இந்த அரணம் செய்யக் கூடாது (குறிப்பு :—ஒரே கிரகத்திற்குச் சத்துரு க்ஷேத்திர அரணமும் அஸ்தங்கத அரணமும் ஆகிய இவ்விரண்டு அரணங்களும் செய்யும்படி நேரிடும்போதுமாத்திரம் பெரிய அரணமாகிய அஸ்தங்கத அரணம் செய்யவேண்டுமே தவிர சத்துரு க்ஷேத்திர அரணமும் செய்யக்கூடாது.)

(3) சக்கிரபாத அரணம் செய்ய :—1-வது அமிட்டத்தில் சொல்லியபடி ஒரு பாபக் கிரகத்திற்குக் கணித்து வந்த ஆயுளில் அந்தக் கிரகம் லக்கினத்திற்கு.

(1) 12-வது	பாவத்தில் இருந்தால்	முழுதும்	கழித்து	விடவும்.
(2) 11-வது	,,	பாதி	கழித்து	விடவும்.
(3) 10-வது	,,	மூன்றில் ஒரு பங்கு	கழித்து	விடவும்.
(4) 9-வது	,,	நான்கில்	,,	,,
(5) 8-வது	,,	ஐந்தில்	,,	,,
(6) 7-வது	,,	ஆறில்	,,	,,

இங்கு பாபக் கிரகம் என்பது சூரியன், செவ்வாய், சனி என்பனவாம்.

1-வது அயிட்டத்தில் சொல்லியபடி ஒரு சுபக் கிரகத்திற்குக் கணித்து வந்த ஆயுளில் அந்தக் கிரகம் லக்கினத்திற்கு,

(1) 12-வது பாவத்தில் இருந்தால்		பாதி கழித்துவிடவும்.		
(2) 11-வது	,,	நான்கில் ஒரு பங்கு	கழித்து	விடவும்
(3) 10-வது	,,	ஆறில்	,,	,,
(4) 9-வது	,,	எட்டில்	,,	,,
(5) 8-வது	,,	பத்தில்	,,	,,
(6) 7-வது	,,	பன்னிரண்டில்	,,	,,

இங்கு சுபக் கிரகம் என்பது குரு, சுக்கிரன், புதன், சந்திரன் என்பனவாம். இந்த சக்கிரபாத அரணம் பாவச்சக்கிரத்தைக் கொண்டு செய்யவேண்டுமேதவிர இராசிச் சக்கிரத்தைக் கொண்டு செய்யக்கூடாது அதாவது லக்கினத்திற்கு 12-வது பாவம் என்றால் பாவச் சக்கிரத்தில் லக்கினத்திற்கு 12-வது பாவம் என்பதாம். இப்படியே மற்ற பாவங்களையும் அறியவும். மேலும் ஒரே பாவத்தில் ஒன்றுக்கு மேல்பட்ட பல கிரகங்கள் கூட்டமாயிருந்தால் அந்தப் பல கிரகங்களில் மிகவும் வலிவாயுள்ள ஒரு கிரகத்திற்கு மாத்திரம் சக்கிரபாத அரணம் செய்யவேண்டுமே தவிர கூட்டக் கிரகங்களில் இதர கிரகங்களுக்குச் செய்யவேண்டியது அவசியமில்லை. கிரக ஷட்பலத்தைப் பார்த்து மிகவும் வலிவான கிரகம் எது என்பதை அறியவும்.

குறிப்பு:—இதுவரையிலுஞ் சொல்லிவந்த சத்துரு க்ஷேத்திர அரணம், அஸ்தங்கத அரணம், சக்கிரபாத அரணம் ஆகிய இம்மூன்று அரணங்களும் பிண்டாயுர்தாயம், அம்சாயுர்தாயம், நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய இம்மூன்று ஆயுர்தாய வழிகளுக்கும் பொதுவானது.

குரூரோதய அரணம்:—(இது பிண்டாயுர் தாயம், நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய இவ்விரண்டிற்கு மாத்திரம் செய்ய வேண்டுமே தவிர அம்சாயுர் தாயத்திற்கு செய்யக்கூடாது.) லக்கினத்தில் பாபக் கிரகமிருந்தால் இந்த அரணம் செய்யவேண்டும். சுபக்கிரகம் இருந்தால் இந்த அரணம் செய்யவேண்டியதில்லை. சுபக்கிரகமும் பாபக் கிரகமும் லக்கினத்தில் இருந்தால் லக்கினத்திற்கு அருகில் எது

இருக்கின்றதோ அதை அனுசரித்துச் செய்யவேண்டியது). அதாவது சுபக் கிரகத்தைவிட பாபக் கிரகம் லக்கினத்திற்கு அருகில் இருந்தால் அரணஞ் செய்யவேண்டும். பாபக்கிரகத்தைவிட சுபக் கிரகம் லக்கினத்திற்கு அருகில் இருந்தால் அரணஞ் செய்யவேண்டியதில்லை. அரணம் கீழ்க்கண்டபடி செய்யவும்.

லக்கின ஸ்புடத்தில் வந்த முழு ராசிகளைத் தள்ளிவிடவேண்டியது. தள்ளிவிட்ட பிறகு நின்ற பாகை கலையைக் கலையாக மாற்றவேண்டியது. இப்படிக் கலையாக மாற்ற வந்த எண்ணால் ஒவ்வொரு கிரகத்திற்கும் 1-வது அயிட்டத்தில் சொல்லிய பிரகாரம் கணித்து வந்த ஆயுளைப் பெருக்கி 21,600-ஆல் வகுக்க வருகின்ற ஈவு வருஷமாகும். மிச்சத்தை 12-ஆல் பெருக்கி 21,600-ஆல் வகுக்க வருகின்ற ஈவு மாதமாகும். 12-ஆல் பெருக்கி வகுத்த பிறகு வந்த மிச்சத்தை 30-ஆல் பெருக்கி 21,600-ஆல் வகுக்க வருகின்ற ஈவு நாள்களாகும். 30-ஆல் பெருக்கி வகுத்து வந்த மிச்சத்தை 60-ஆல் பெருக்கி 21,600-ஆல் வகுக்க வருகின்ற ஈவு நாழிகையாகும். 60-ஆல் பெருக்கி வகுத்து வந்த மிச்சம் 10,800-ம் 10,800-க்கு மேற்பட்டுமிருந்தால் அர்த்தாதிகமாகையால் கணித்து வந்த நாழிகையுடன் ஒரு நாழிகை சேர்க்கவும். இப்படிச் செய்ய வந்த வருஷம், மாதம், நாள், நாழிகையைக் குரூரோதய அரணத்திற்காக 1-வது அயிட்டம் பிரகாரம் கணித்து வந்த ஆயுளிலிருந்து கழித்து விடவேண்டியது. லக்கினத்தில் இருக்கும் பாபக் கிரகத்தை ஒரு சுபக் கிரகம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சுபக் கிரகங்கள் பார்த்தால் மேலே சொல்லியபடி 21,600-ஆல் வகுத்து வந்த வருஷம், மாதம், நாள், நாழிகையில் பாதிதான் கழித்துவிடவேண்டியது. (இங்கு சுபக் கிரகங்கள் பார்ப்பது என்பதை புதன், சுக்கிரன், சந்திரன் இவர்களுக்கு 7-வது பார்வையும், குருவிற்கு 5, 7, 9, வது பார்வையும் கவனிக்க வேண்டுமேதவிர மற்றபடி கிரகத் திருக்பலம் கணிக்கும் போது கிரகங்கள் பொதுவாய் 12, 1, 2-ஆம் வீடுகள் தவிர மற்ற வீடுகளைப் பார்க்கின்றன என்ற கொள்கையை எடுத்துக் கொள்ளக் கூடாது) கிரகங்களுக்குக் குரூரோதயம் செய்வது போலவே லக்கிணயுர்தாயத்திற்கும் குரூரோதய அரணம் செய்யவேண்டியது.

லக்கிணயுர்தாயம் கணிக்க :—லக்கிணயுர்தாயத்தைக் கணிக்கும் வழியைப்பற்றி பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஆயினும் சூரியன் வலிவாயிருக்கும்போது பிண்டாயுர்தாயம் ரீதியாய் (அதாவது

கிரகங்கள் ராசியிலிருக்கும் நிலையை அனுசரித்து) கணிக்கவேண்டும் என்றும், லக்கினம் வலிவாயிருக்கும்போது அம்சாயுர்தாய ரீதியாய்க் கணிக்கவேண்டுமென்றும் முன்னமே சொல்லியிருப்பதால் அதற்கு இணங்க பிண்டாயுர்தாயத்தில் லக்கினஸ்புடத்தில் மேஷம் முதல் செல்லான ராசிகளைக் கொண்டு லக்கிஞயுர்தாயமும், அம்சாயுர்தாயத்தில் லக்கின ஸ்புடத்தில் மேஷம் முதல் செல்லான நவாம்சை எத்தனை (அதாவது நவாம்சைச் சக்கிரத்தில் நவாம்சை லக்கினமிருக்கும் ராசி மேஷம் முதல் எத்தனையாவது ராசி) என்பதையும் அனுசரித்து லக்கிஞயுர்தாயமும் கணிக்கவேண்டும். அதாவது பின் வருமாறு கணிக்கவேண்டியது.

(1) பிண்டாயுர்தாயத்தில் லக்கிஞயுர்தாயம் கணிக்க :—லக்கினஸ்புடத்திலுள்ள ராசி, பாகை, கலைகளுக்கு ராசி ஒன்றுக்கு ஒரு வருஷமாகக் கணக்கிட்டு உதாரத்தில் கண்டபடி கணிக்கவும்.

(2) அம்சாயுர்தாயத்தில் லக்கிஞயுர்தாயகம் கணிக்க:—அம்சாயுர்தாயத்தில் கிரகங்களுக்கு 1-வது அயிட்டத்தில் சொல்லியபடி ஆயுள் கணித்தது போலவே லக்கிஞயுர்தாயம் கணிக்கவேண்டியது; உதாரணம் பார்க்கவும்.

(3) நைசர்க்கிக ஆயுர்தாயத்தில் லக்கிஞயுர்தாயம் கணிக்க:—பிண்டாயுர்தாயத்தில் லக்கிஞயுர்தாயம் கணித்தது போலவே கணிக்கவேண்டியது. உதாரணம் பார்க்கவும்.

பிண்டாயுர்தாயமும், நைசர்க்கிக ஆயுர்தாயமும்:—பிறகு (1) சத்துரு க்ஷேத்திர அரணம் செய்யவேண்டியதாயிருந்து அஸ்தங்கத அரணம் செய்யவேண்டியது அவசியமில்லாதபோது சத்துரு க்ஷேத்திர அரணமும் அல்லது சத்துரு க்ஷேத்திர அரணம் செய்யவேண்டியது அவசியமில்லாமலிருந்து அஸ்தங்கத அரணம் செய்யவேண்டியதாயிருக்கும்போதும், சத்துரு க்ஷேத்திர அரணமும், அஸ்தங்கத அரணமும் ஆகிய இவ்விரண்டு அரணங்களும் செய்யவேண்டியதாயிருக்கும்போதும், (1)அஸ்தங்கதஅரணமும், (2)சக்கிரபாத அரணமும், (3) குருரோதய அரணமும் ஆகிய இம்மூன்று அரணங்களில் ஒவ்வொரு கிரகத்திற்கும், கழிக்கவேண்டியதாய் வந்த மூன்று தொகைகளையும் கூட்டவேண்டியது. இப்படிக் கூட்ட வந்த தொகையை அந்தந்த கிரகத்திற்கு 1-வது அயிட்டத்தில் சொல்லியபடி கணித்து வந்த ஆயுளில் கழிக்கவேண்டியது. இப்ப

டிக் கழித்து வந்ததுதான் அந்தக்கிரகங்கொடுக்கும் நிகர ஆயுளாகும் இவ்விதமாக 7 கிரகங்களும் லக்கினமுங் கொடுக்கும் நிகர ஆயுளை ஒன்ருய்க் கூட்ட வருகின்ற தொகைதான் ஜாதகனுடைய நிகர பரம ஆயுளாகும்.

அம்சாயுர்தாயம் :— பிறகு (1) சத்துரு க்ஷேத்திர அரணம் செய்யவேண்டியதாயிருந்து அஸ்தங்கத அரணம் செய்யவேண்டிய அவசியமில்லாதபோது சத்துரு க்ஷேத்திர அரணமும், அல்லது சத்துரு க்ஷேத்திர அரணம் செய்யவேண்டியது அவசியமில்லாம லிருந்து அஸ்தங்கத அரணம் செய்யவேண்டியதாயிருக்கும்பொ தும், சத்துரு க்ஷேத்திர அரணமும் அஸ்தங்கத அரணமும் ஆகிய இவ்விரண்டு அரணங்களும் செய்ய வேண்டியதாயிருக்கும்போதும் அஸ்தங்கத அரணமும், (2) சக்கிரபாத அரணமும் எடுத்துக்கொள் ளவும். இவ்விரண்டு அரணங்களில் ஒவ்வொரு கிரகத்திற்கும் கழி க்கவேண்டியதாய் வந்த இரண்டு தொகைகளையும் கூட்டவேண்டி யது. இப்படிக் கூட்டி வந்த தொகையை அந்தக்கிரகத்திற்கு 1-வது அயிட்டத்தில் சொல்லியபடி கணித்து வந்த ஆயுளில் கழிக்க வேண்டியது. இப்படிக் கழித்து வந்த தொகையை அந்தக்கிரகம்,

(1) உச்சராசியிலிருந்தால் 3-ஆல் பெருக்கவேண்டியது.

(2) வக்கிரமாயிருந்தால் 3-ஆல் பெருக்கவேண்டியது.

(3) சுயக்ஷேத்திரத்தில் அல்லது சுய நவாம்சையில் அல்லது சுய திரேகாணத்தில் அல்லது தன்னுடைய வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் 2-ஆல் பெருக்கவேண்டியது.

(குறிப்பு):—தன்னுடைய வர்க்கோத்தமம் என்பது இராசிச் சக்கிரத்தில் ஒரு கிரகம் எந்த ராசியில் இருக்கின்றதோ அதே ராசியில் நவாம்சை சக்கிரத்தில் இருப்பது என்பதாம்.

ஒரு கிரகத்திற்கு முதலில் மூன்றிலும், பிறகு இரண்டிலும் பெருக்க வேண்டியதாய் நேரிட்டால் பெரிய எண்ணுல் அதாவது மூன்ருல் மாத்திரம் பெருக்க வேண்டுமே தவிர இரண்டிலுங்கூட பெருக்கவேண்டிய அவசியமில்லை இதை முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

சத்துரு க்ஷேத்திர அரணம் அல்லது அஸ்தங்கத அரணம், சக்கிரபாத அரணம் இவைகளைச் செய்த பிறகு வருகின்ற தொகை யை இரண்டிலோ அல்லது மூன்றிலோ மேற்சொல்லிய பிரகாரம் பெருக்க வேண்டியதாயிருந்தால் பெருக்கின பிறகு ஒவ்வொரு கிர

கத்திற்கும் வந்த தொகையை ஒன்ருய்க் கூட்டவேண்டியது. இப்ப டிக்கூட்டவருந்தொகையுடன் லக்கிணுயுர்தாயத்திற்கு வந்ததொகை யைக் கூட்ட வருகின்ற தொகைதான் ஜாதகனுக்கு நிகர பரம ஆயுளாகும்.

மேலும் பிண்டாயுர்தாயம், அம்சாயுர்தாயம், நைசர்க்கிக ஆயுர் தாயம் ஆகிய இம்மூன்று வழிகளால் ஆயுளைச் சுலபமாய்க் கணிப்ப தற்காக அடியில் வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை களை உபயோகப்படுத்தும் விதம் உதாரணத்தில் சொல்லப்பட் டிருக்கின்றது.

பிண்டாயுர்தாயம் (எ)—சூரியன் வலிவாயிருக்கும்போது

பாகை	சூரியன் 19 ஹ			சந்திரன் 25 ஹ			செவ்வாய் 15 ஹ குரு 15 ஹ			புதன் 12 ஹ			சுக்கிரன் 21 ஹ			சனி 20 ஹ		
	ஹ	மீ	நா	ஹ	மீ	நா	ஹ	மீ	நா	ஹ	மீ	நா	ஹ	மீ	நா	ஹ	மீ	நா
1	0	0	19	0	0	25	0	0	15	0	0	12	0	0	21	0	0	20
2	0	1	8	0	1	20	0	1	0	0	0	24	0	1	12	0	1	10
3	0	1	27	0	2	15	0	1	15	0	1	6	0	2	3	0	2	0
4	0	2	16	0	3	10	0	2	0	0	1	18	0	2	24	0	2	20
5	0	3	5	0	4	5	0	2	15	0	2	0	0	3	15	0	3	10
6	0	3	24	0	5	0	0	3	0	0	2	12	0	4	6	0	4	0
7	0	4	13	0	5	25	0	3	15	0	2	24	0	4	27	0	4	20
8	0	5	2	0	6	20	0	4	0	0	3	6	0	5	18	0	5	10
9	0	5	21	0	7	15	0	4	15	0	3	18	0	6	9	0	6	0
10	0	6	10	0	8	10	0	5	0	0	4	0	0	7	0	0	6	20
20	1	0	20	1	4	20	0	10	0	0	8	0	1	2	0	1	1	10
30	1	7	0	2	1	0	1	3	0	1	0	0	1	9	0	1	8	0
40	2	1	10	2	9	10	1	8	0	1	4	0	2	4	0	2	2	20
50	2	7	20	3	5	20	2	1	0	1	8	0	2	11	0	2	9	10
60	3	2	0	4	2	0	2	6	0	2	0	0	3	6	0	3	4	0
70	3	8	10	4	10	10	2	11	0	2	4	0	4	1	0	3	10	20
80	4	2	20	5	6	20	3	4	0	2	8	0	4	8	0	4	5	10
90	4	9	0	6	3	0	3	9	0	3	0	0	5	3	0	5	0	0
100	5	3	10	6	11	11	4	2	0	3	4	0	5	10	0	5	6	20
200	10	6	20	13	10	20	8	4	0	6	8	0	11	8	0	11	1	10
300	15	10	0	20	10	0	12	6	0	10	0	0	17	6	0	16	8	0

பிண்டாயுர்தாயம்(பி)—(சூரியன் வலிவாயிருக்கும் போது)

கலே	சூரியன்	சந்திரன்	செவ்வாய், குரு	புதன்	சுக்கிரன்	சனி
	நா. நாழி	நர். நாழி	நா. நாழி	நா. நாழி	நாள் நாழி	நா. நாழி
1	0—19	0—25	0—15	0—12	0—21	0—20
2	0—38	0—50	0—30	0—24	0—42	0—40
3	0—57	1—15	0—45	0—36	1— 3	1— 0
4	1—16	1—40	1— 0	0—48	1—24	1—20
5	1—35	2— 5	1—15	1— 0	1—45	1—40
6	1—54	2—30	1—30	1—12	2— 6	2— 0
7	2—13	2—55	1—45	1—24	2—27	2—20
8	2—32	3—20	2— 0	1—36	2—48	2—40
9	2—51	3—45	2—15	1—48	3— 9	3— 0
10	3—10	4—10	2—30	2— 0	3—30	3—20
20	6—20	8—20	5— 0	4— 0	7— 0	6—40
30	9—30	12—30	7—30	6— 0	10—30	10— 0
40	12—40	16—40	10— 0	8— 0	14— 0	13—20
50	15—50	20—50	12—30	10— 0	17—30	16—40

அம்சாயுர்தாயம்(எ) - (லக்கினுதிபதி வலிவாயிருக்கும்போது)

பாகை கலே	ஸ்ரு	பாகை கலே	ஸ்ரு	பாகை கலே	ஸ்ரு	பாகை கலே	ஸ்ரு
3 - 20	1	53 - 20	4	103 - 20	7	153 - 20	10
6 - 40	2	56 - 40	5	106 - 40	8	156 - 40	11
10 - 0	3	60 - 0	6	110 - 0	9	160 - 0	12
13 - 20	4	63 - 20	7	113 - 20	10	163 - 20	1
16 - 40	5	66 - 40	8	116 - 40	11	166 - 40	2
20 - 0	6	70 - 0	9	120 - 0	12	170 - 0	3
23 - 20	7	73 - 20	10	123 - 20	1	173 - 20	4
26 - 40	8	76 - 40	11	126 - 40	2	176 - 40	5
30 - 0	9	80 - 0	12	130 - 0	3	180 - 0	6
33 - 20	10	83 - 20	1	133 - 20	4	183 - 20	7
36 - 40	11	86 - 40	2	136 - 40	5	186 - 40	8
40 - 0	12	90 - 0	3	140 - 0	6	190 - 0	9
43 - 20	1	93 - 20	4	143 - 20	7	193 - 20	10
46 - 40	2	96 - 40	5	146 - 40	8	196 - 40	11
50 - 0	3	100 - 0	6	150 - 0	9	200 - 0	12

அம்சாயுர்தாயம் (எ) (லக்கிஞதிபதி வலிவாயிருக்கும்போது)

தொடர்ச்சி

பாகை	கலை	ஹூஸ	பாகை	கலை	ஹூஸ	பாகை	கலை	ஹூஸ	பாகை	கலை	ஹூஸ
203	20	1	243	20	1	283	20	1	323	20	1
206	40	2	246	40	2	286	40	2	326	40	2
210	0	3	250	0	3	290	0	3	330	0	3
213	20	4	253	20	4	293	20	4	333	20	4
216	40	5	256	40	5	296	40	5	336	40	5
220	0	6	260	0	6	300	0	6	340	0	6
223	20	7	263	20	7	303	20	7	343	20	7
226	40	8	266	40	8	306	40	8	346	40	8
230	0	9	270	0	9	310	0	9	350	0	9
233	20	10	273	20	10	313	20	10	353	20	10
236	40	11	276	40	11	316	40	11	356	40	11
240	0	12	280	0	12	320	0	12	360	0	12

அம்சாயுர்தாயம் (பி), அம்சாயுர்தாயம் (சி) லக்கிஞதிபதி வலிவாயிருக்கும்போது

அம்சாயுர்தாயம் (பி) (லக்கிஞதி பதி வலிவாயிருக்கும்போது)		(அம்சாயுர்தாயம் சி) (லக்கிஞதிபதி வலிவாயிருக்கும்போது)			
பாகை	மீ" நாள்	கலை	மீ" நாள் நாழி	கலை	மீ" நாள் நாழி
1	3 - 18	1	0 - 1 - 48	8	0 - 14 - 24
2	7 - 6	2	0 - 3 - 36	9	0 - 16 - 12
3	10 - 24	3	0 - 5 - 24	10	0 - 18 - 0
		4	0 - 7 - 12	20	1 - 6 - 0
		5	0 - 9 - 0	30	1 - 24 - 0
		6	0 - 10 - 48	40	2 - 12 - 0
		7	0 - 12 - 36	50	3 - 0 - 0

நைசர்க்கிக ஆயுர்தாயம் (எ) சந்திரன் வலிவாயிருக்கும்போது

பாகை	சூரியன், சுக்கிரன் 20 வரு			சந்திரன் 1 வரு			செவ்வாய் 2 வரு			புதன் 9 வரு			குரு 18 வரு			சனி 50 வரு		
	வ	மா	நா	வ	மா	நா	வ	மா	நா	வ	மா	நா	வ	மா	நா	வ	மா	நா
1	0	0	20	0	0	1	0	0	2	0	0	9	0	0	18	0	1	20
2	0	1	10	0	0	2	0	0	4	0	0	18	0	1	6	0	3	10
3	0	2	0	0	0	3	0	0	6	0	0	27	0	1	24	0	5	0
4	0	2	20	0	0	4	0	0	8	0	1	6	0	2	12	0	6	20
5	0	3	10	0	0	5	0	0	10	0	1	15	0	3	0	0	8	10
6	0	4	0	0	0	6	0	0	12	0	1	24	0	3	18	0	10	0
7	0	4	20	0	0	7	0	0	14	0	2	3	0	4	6	0	11	20
8	0	5	10	0	0	8	0	0	16	0	2	12	0	4	24	1	1	10
9	0	6	0	0	0	9	0	0	18	0	2	21	0	5	12	1	3	0
10	0	6	20	0	0	10	0	0	20	0	3	0	0	6	0	1	4	20
20	1	1	10	0	0	20	0	1	10	0	6	0	1	0	0	2	9	10
30	1	8	0	0	1	0	0	2	0	0	9	0	1	6	0	4	2	0
40	2	2	20	0	1	10	0	2	20	1	0	0	2	0	0	5	6	20
50	2	9	10	0	1	20	0	3	10	1	3	0	2	6	0	6	11	10
60	3	4	0	0	2	0	0	4	0	1	6	0	3	0	0	8	4	0
70	3	10	20	0	2	10	0	4	20	1	9	0	3	6	0	9	8	20
80	4	5	10	0	2	20	0	5	10	2	0	0	4	0	0	11	1	10
90	5	0	0	0	3	0	0	6	0	2	3	0	4	6	0	12	6	0
100	5	6	20	0	3	10	0	6	20	2	6	0	5	0	0	13	10	20
200	11	1	10	0	6	20	1	1	10	5	0	0	10	0	0	27	9	10
300	16	8	0	0	10	0	1	8	0	7	6	0	15	0	0	41	8	0

நைசர்க்கிக ஆயுர்தாயம் (பி) (சந்திரன் வலிவாயிருக்கும்போது)

கலை	சூரியன் சுக்கிரன்		சந்திரன்		செவ்வா		புதன்		குரு		சனி		
	நா.	நாழி	நா.	நாழி	நா.	நாழி	நா.	நாழி	நா.	நாழி	மீ"	நா	நா
1	0	20	0	1	0	2	0	9	0	18	0	0	50
2	0	40	0	2	0	4	0	18	0	36	0	1	40
3	1	0	0	3	0	6	0	27	0	54	0	2	30
4	1	20	0	4	0	8	0	36	1	12	0	3	20
5	1	40	0	5	3	10	0	45	1	30	0	4	10
6	2	0	0	6	0	12	0	54	1	48	0	5	0
7	2	20	0	7	0	14	1	3	2	6	0	5	50
8	2	40	0	8	0	16	1	12	2	24	0	6	40
9	3	0	0	9	0	18	1	21	2	42	0	7	30
10	3	20	0	10	0	20	1	30	3	0	0	8	20
20	6	40	0	20	0	40	3	0	6	0	0	16	40
30	10	0	0	30	1	0	4	30	9	0	0	25	0
40	13	20	0	40	1	20	6	0	12	0	1	3	20
50	16	40	0	50	1	40	7	30	15	0	1	11	40

லக்கிஞயுர்தாயம் (எ)

பாகை	மீ"	நாள்	பாகை	மீ"	நாள்	பாகை	மீ"	நாள்
1	0	12	11	4	12	21	8	12
2	0	24	12	4	24	22	8	24
3	1	6	13	5	6	23	9	6
4	1	18	14	5	18	24	9	18
5	2	0	15	6	0	25	10	0
6	2	12	16	6	12	26	10	12
7	2	24	17	6	24	27	10	24
8	3	6	18	7	6	28	11	6
9	3	18	19	7	18	29	11	18
10	4	0	20	8	0	30	12	0

லக்கிஞயுர்தாயம் (பி)

கலை	நா	நாழி	கலை	நாள்	நாழி
1	0	12	20	4	0
2	0	24	30	6	0
3	0	36	40	8	0
4	0	48	50	10	0
5	1	0			
6	1	12			
7	1	24			
8	1	36			
9	1	48			
10	2	0			

உதாரணம்:— ஒரு குழந்தை வர்த்தமான சாலிவாகன சகாப்தம் 1792-வது ஸூ, கலியுகாதி 4971-வது வருஷமாகிய சுக்கில ஸூ புரட்டாசிமீ 18வக்குச் சரியான இங்கிலீஷ் 1869-வது ஸூ அக்டோபர்மீ 2வ சனிக்கிழமை பம்பாய் இராஜதானியிலுள்ள கத்தியவாருக்கு அடுத்த போர்பந்தர் என்ற ஊரில் காலே சூரிய உதையாதி நாழிகை 3 விநாடி 11½-க்கு ஜெனனமானல் அந்தக் குழந்தைக்கு ஆயுள் கணிக்க.

ஜெனனகாலத்தில் கிரகங்களின் ஸ்புடமும் லக்கினஸ்புடமும் அடியிற்கண்டபடி ஆகும்.

	பாகை	கலே		பாகை	கலே
சூரியன்	167	2	சுக்கிரன்	204	32
சந்திரன்	118	10	சனி	230	27
செவ்வாய்	206	30	ராகு	102	17
புதன்	191	52	கேது	282	17
குரு	28	17 (வக்ரி)	லக்கினம்	184	48

ஜெனன காலத்தில் கிரகங்களின் ஷட்பலம் அடியிற்கண்டபடி ஆகும்.

சூரியன்	615	பங்கு	குரு	651	பங்கு
சந்திரன்	701	,,	சுக்கிரன்	649	,,
செவ்வாய்	632	,,	சனி	787	,,
புதன்	933	,,	லக்கினுதிபதி பலம்	649	,,

ஆகையால் சூரியன், சந்திரன், லக்கினுதிபதி இவர்களில் சந்திரன்தான் வலிவாயிருக்கின்றது. ஆகையால் இந்த ஜாதகத்திற்கு நைசர்க்கிக ஆயுர்தாயம் கணிக்கவேண்டும் என்று ஏற்படுகின்றது.

நைசர்க்கிக ஆயுர்தாயம் கணிக்க:— ஒரு கிரகம் கொடுக்கும் ஆயுளைக் கணிக்க வேண்டுமானுல் முதலில் அந்தக்கிரகத்தினுடைய ஸ்புடத்தை அந்தக் கிரகத்தினுடைய உச்ச ஸ்புடத்திலிருந்து கழிக்க வேண்டியது. இப்படிக் கழிக்க வந்தது 180 பாகையும், 180 பாகைக்கும் மேலானுல் அதை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டியது. 180 பாகைக்குக் குறைந்தால் அதை 360 பாகையிலிருந்து கழிக்க வருவதை வைத்துக்கொள்ளவேண்டியது. இப்படிக் கழிக்க வந்ததை வைத்துக் கொண்டு நைசர்க்கிக வாக்கியங்களை உபயோகித்து ஆயுளைக் கணிக்க வேண்டியது. எல்லா கிரகங்களினுடைய உச்சஸ்புடம் அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகம்	உச்சஸ்புடம். பாகை கலை	கிரகம்	உச்சஸ்புடம். பாகை கலை
சூர்யன்	10 0	குரு	95 0
சந்திரன்	33 0	சுக்கிரன்	357 0
செவ்வாய்	298 0	சனி	200 0
புதன்	165 0		

உதாரணம் (1):—சூரியன் கொடுக்கும் ஆயுளை உதாரணமாகக் கணிப்போம்: – சூரியனுடைய ஸ்புடமாகிய 167 பாகை 2 கலையை சூரியனுடைய உச்சஸ்புடமாகிய பாகை 10—0 கலையிலிருந்து கழிக்க வேண்டியது. பாகை 10 கலை 0 என்பது சிறியதாயிருப்ப தால் இத்துடன் ஒரு வட்டமாகிய 360 பாகையைக் கூட்ட 370 பாகை 0 கலை வரும். இந்த 370 பாகை 0 கலையிலிருந்து சூரிய னுடைய ஸ்புடமாகிய 167 பாகை 2 கலையைக் கழிக்க 202 பாகை 58 கலை வரும். இது 180 பாகைக்கு மேற்பட்டதால் இதை அப் படியே வைத்துக்கொள்ளவேண்டியது. பிறகு நைசர்க்கிக ஆயுர் தாய வாக்கியங்களைச் சுலபமாக உபயோகப்படுத்துவதற்காக இங்கு வந்த 202 பாகையை 200 பாகை, 2 பாகையாகவும், 58 கலையை 50 கலை, 8 கலையாகவும் பிரித்துக் கொள்ளவும். பிறகு நைசர்க்கிக "எ" என்ற வாக்கியங்களைப் பார்க்க.

	வருஷம்	மீ	நாள்	நாழி
200 பாகை 0 கலைக்குச் சூரியன் கொடுக்கும் ஆயுள்	11	1	1	0
2 ,, 0 ,, ,,	0	1	10	0
0 ,, 50 ,, ,,	0	0	16	40
0 ,, 8 ,, ,,	0	0	2	40
ஆகையால் கூட்ட 202 பாகை 58 கலைக்குச் சூரியன் கொடுக்கும் ஆயுள்	11	3	9	20 ஆகும்.

உதாரணம் (2):— குரு கொடுக்கும் ஆயுளை உதாரணமாகக் கணிப்போம் குருவினுடைய ஸ்புடமாகிய 28 பாகை 17 கலையை குருவினுடைய உச்சஸ்புடமாகிய 95 பாகை 0 கலையிலிருந்து கழிக்க

66 பாகை 43 கலை வரும். இந்த 66 பாகை 43 கலை என்பது 180 பாகைக்குட்பட்டதால் இந்த 66 பாகை 43 கலையை 360 பாகை 0 கலையிலிருந்து கழிக்கவேண்டியது. கழிக்க 293 பாகை 17 கலை வரும். பிறகு நைசர்க்கிக ஆயுர்தாய வாக்கியங்களைச் சுலபமாக உபயோகப்படுவதற்காக இங்கு வந்த 293 பாகையை 200 பாகையாகவும், 90 பாகையாகவும் 3 பாகையாகவும்: 17 கலையை 10 கலையாகவும், 7 கலையாகவும் பிரித்துக் கொள்ளவும்; பிறகு நைசர்க்கிக ஆயுர்தாய ''எ'' ''பி'' என்ற வாக்கியங்களைப் பார்க்க.

	வரு	மீ	நாள்	நாழி
200 பாகை 0 கலைக்குக் குரு கொடுக்கும் ஆயுள்	10	0	0	0
90 ,, ,, ,,	4	6	0	0
3 ,, ,, ,,	0	1	24	0
0 ,, 10 ,,	0	0	3	0
0 ,, 7 ,,	0	0	2	6
ஆகையால் கூட்ட 293 பாகை 17 கலைக்குக் குரு கொடுக்கும் ஆயுள்	14	7	29	6 ஆகும்

இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் கணிக்கவும். இவ்விதமாக எல்லா கிரகங்களுக்கும் கணிக்க அடியிற்கண்டபடி கிரகங்கள் ஆயுளைக் கொடுக்கும்.

கிரகங்கள்	ஆயுள் வரு.	மா.	நா.	நாழி	கிரகங்கள்	ஆயுள் வரு.	மா.	நாள்.	நாழி.
சூரியன்	11	3	9	20 (1)	குரு	14	7	29	6(5)
சந்திரன்	0	9	4	50 (2)	சுக்கிரன்	11	6	10	40(6)
செவ்வாய்	1	5	27	0 (3)	சனி	45	9	7	30(7)
புதன்	8	3	28	12 (4)					ஆகும்.

சத்துரு க்ஷேத்திர அரணம் செய்தல்:—ராசிச் சக்கிரத்தில் ஒரு கிரகமிருக்கும் ராசி அந்த கிரகத்திற்குச் சத்துரு ராசியா அல்லவா என்பதை 22-வது வாக்கியத்தில் 3-வது அபிட்டத்தில் கிரகங்களுக்கு நைசர்க்கிக அல்லது நிலையான நட்பு, சமம், பகையைக்

காட்டும் கட்டத்தைப் பார்த்து அறியவேண்டியது. இந்த ஜாதகத்திற்குக் கிரகங்கள் இருக்கும் ராசி அடியிற்கண்டபடி ஆகும்.

சூரியன்	சமம்	குரு	நட்பு
சந்திரன்	ஆட்சி	சுக்கிரன்	ஆட்சி
செவ்வாய்	சமம்	சனி	பாகை
புதன்	நட்பு		

ஆகையால் சத்துரு க்ஷேத்திர அரணம் செய்வதில் கழிக்கவேண்டிய வருஷம் அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகம்	கழிக்கவேண்டிய				கிரகம்	கழிக்கவேண்டிய			
	வரு.	மா.	நா.	நாழி		வரு.	மா.	நா.	நாழி
சூரியன்	0	0	0	0 (8)	குரு	0	0	0	0(12)
சந்திரன்	0	0	0	0 (9)	சுக்கிரன்	0	0	0	0(13)
செவ்வாய்	0	0	0	0 (10)	சனி	15	3	2	30(14)
புதன்	0	0	0	0 (11)					ஆகும்.

அஸ்தங்கத அரணம் :—ஜெனனகாலத்தில் கிரகங்கள் அஸ்தமனத்திலிருப்பதும், இல்லாததும் அடியிற்கண்டபடி அறியவும். கிரகங்கள் சூரியனிருக்குமிடத்திலிருந்து கீழ்க் கண்ட பாகைக்குள் இருந்தால் அஸ்தமனமாகும்; மேற்பட்டால் அஸ்தமனமில்லை.

சந்திரன்	12	பாகைக்குள்	குரு	11 பாகைக்குள்
செவ்வாய்	17	,,	சுக்கிரன் (ருச்சுவி)	10 ,,
புதன் (ருச்சுவி)	14	,,	சுக்கிரன் (வக்ரம்)	8 ,,
புதன் (வக்ரம்)	12	,,	சனி	15 ,,

இருந்தால் அஸ்தமனமாகும்.

இந்த ஜாதகத்தில் ஒரு கிரகமும் அஸ்தமனத்திலில்லாததால் அஸ்தங்கத அரணம் செய்யவேண்டியது அவசியமில்லை. அதாவது கழிக்கவேண்டியது பூஜ்ஜியமாகும்.

சக்கிரபாத அரணம் செய்தல்:—மேலே சொல்லியபடி சக்கிரபாத அரணம் செய்வதில் கழிக்கவேண்டிய வருஷம் அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகம்	கழிக்கவேண்டிய				கிரகம்	கழிக்கவேண்டிய			
	ஞு	மீ"	நாள்	நாழி		ஞு	மீ"	நாள்	நாழி
சூரியன்	11	3	9	20(15)	குரு	1	5	17	55(19)
சந்திரன்	0	2	8	43(16)	சுக்கிரன்	0	0	0	0(20)
செவ்வாய்	0	0	0	0(17)	சனி	0	0	0	0(21)
புதன்	0	0	0	0(18)		ஆகும்.			

குருரோதய அரணம் :—7-வது கட்டத்திற்குப் பின்னுல் கொடுத்துள்ள பரவச் சக்கிரத்தைப் பார்த்தால் லக்கினத்தில் பாபக் கிரகம் இல்லே என்று ஏற்படும். (லக்கினத்திலிருக்கின்ற புதன் பாபக் கிரகமல்ல) ஆகையால் இந்த ஜாதகத்திற்குக் குருரோதய அரணம் செய்யவேண்டிய அவசியமில்லே. அதாவது கழிக்க வேண்டியது பூஜ்ஜியமாகும்.

லக்கிஞயுர்தாயம் கணிக்க :—லக்கினஸ்புடம் 184 பாகை 48 கலே ஆகின்றது. ஒரு ராசிக்கு 30 பாகையானதால், 184 பாகை 48 கலே என்பது 6 இராசி 4 பாகை 48 கலே ஆகும். ஒரு ராசிக்கு 1 ஞு என்று முன்னமே சொல்லியிருப்பதைக் கவனிக்கவும். லக்கி ஞயுர்தாயம் ''எ'', ''பி'' என்ற வாக்கியங்களேப் பார்க்க.

	ஞு	மீ"	நாள்	நாழி
6 இராசி 0 பாகை 0 கலேக்கு லக்கினம் கொடுக்கும் ஆயுள்	6	0	0	0
0 ,, 4 ,, 0 ,,	0	1	18	0
0 ,, 0 ,, 40 ,,	0	0	8	0
0 ,, 0 ,, 8 ,,	0	0	1	36
ஆகையால் கூட்ட 6 இராசி 4 பாகை 48 கலேக்கு லக்கினம் கொடுக்கும் ஆயுள் ...	6	1	27	36(22)

ஆகும்.

([1] குறிப்பு :—ஒரு ராசிக்கு 1 வருஷமாக, 6 ராசிக்கு 6 வருஷம் வரும்.)

மேலும் ஒவ்வொரு கிரகத்திற்கும் கழிக்கவேண்டிய வருஷத் தைக் கூட்ட அடியிற்கண்டபடி ஆகும்.

	சூரியன்				சந்திரன்				செவ்வாய்				புதன்			
	ஞூ	மீ"	நாள்	நாழி	ஞூ	மீ"	நாள்	நாழி	ஞூ	மீ"	நாள்	நாழி	ஞூ	மீ"	நாள்	நாழி
1. சத்துரு க்ஷேத்திர அரணம்.	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
அஸ்தங்கத அரணம்	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
2. சக்கிரபாத அரணம் ..	11	3	9	20	0	2	8	43	0	0	0	0	0	0	0	0
3. குரூரோதய அரணம்...	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
கூட்ட, மொத்தம் அரணம்	11	3	9	20	0	2	8	43	0	0	0	0	0	0	0	0
மேலே வந்த(1) முதல்(7) வரை இங்கு எடுத்து எழுத	11	3	9	20	0	9	4	50	1	5	27	0	8	3	28	12
(24) லிருந்து (23) யைக் கழிக்க நிகர ஆயுள் வரும்.	0	0	0	0	0	6	26	7	1	5	27	0	8	3	28	12

	குரு				சுக்கிரன்				சனி				
	ஞ	மீ	நாள்	நாழி	ஞ	மீ	நாள்	நாழி	ஞ	மீ	நாள்	நாழி	
1. சத்துருக்ஷேத்திர அரணம்	0	0	0	0	0	0	0	0	15	3	2	30	(8) முதல் (14) ஆகும்
அஸ்தங்கத அரணம்	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	
2. சக்கிரபாத அரணம்	1	5	17	55	0	0	0	0	0	0	0	0	(15) முதல் (21) ஆகும்
3. குருரோதய அரணம்..	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	
கூட்ட,மொத்தம் அரணம்...	1	5	17	55	0	0	0	0	15	3	2	30	வரும் (23)
மேலேவந்த (1)முதல் (7) வரை இங்கு எடுத்துஎழுத	14	7	29	6	11	6	10	40	45	9	7	30	வரும் (24)
(24) லிருந்து (23) யைக் கழிக்க நிகர ஆயுள் வரும்	13	2	11	11	11	6	10	40	30	6	5	0	வரும் (25)

ஆகையால் 7 கிரகங்களும், லக்கினமும் கொடுக்கின்ற நிகர ஆயுள் அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகம்	நிகர ஆயுள்.			
	வரு.	மா.	நா.	நாழி.
சூரியன்	0	0	0	0
சந்திரன்	0	6	26	7
செவ்வாய்	1	5	27	0
புதன்	8	3	28	12
குரு	13	2	11	11
சுக்கிரன்	11	6	10	40
சனி	30	6	5	0
லக்கினம்	6	1	27	36
கூட்ட...	71	9	15	46 வரும்

ஆகையால் இந்த ஜாதகருக்கு நைசர்க்கிக ஆயுர்தாய வழி பிரகாரம் நிகர பரம ஆயுள் 71 வருஷம், 9 மாதம், 15 நாள், 46 நாழிகை ஆகும். [1]

மேலும் சிலர் அம்சாயுர்தாய வழியை எப்போதும் உபயோகப் படுத்தவேண்டும் என்றும், சிலர் எப்போதும் பிண்டாயுர்தாய வழியையும், அம்சாயுர்தாய வழியையும், ஆக இவ்விரண்டு வழிகளையும் ஏக காலத்தில் உபயோகப்படுத்தி இவ்விரண்டு வழியாகவும் ஆயுள் முதலிய பலாபலன்களைச் சொல்லவேண்டும் என்றும், இன்னும் சிலர் பிண்டாயுர்தாயம், அம்சாயுர்தாயம், நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய இம்மூன்று ஆயுர்தாயங்கள் ரீதியாய் ஒவ்வொரு கிரகங்களுக்கும் வருகின்ற வருஷங்களை ஒன்றுய்க் கூட்ட வருகின்றதை மூன்ருல் வகுக்க வருகின்றதுதான் அந்தக் கிர்கம் கொடுக்கின்ற ஆயுள்

---

[1] குறிப்பு:— ஷட்பல கணித ரீதியாய் வரும் நைசர்க்கிக ஆயுர்தாயமாகிய வருஷம் 71, மாதம் 9, நாள் 15 நாழிகை 46-தான் பெரும்பாலும் இந்த ஜாதகத்திற்குரிய ஆயுளாகும். இந்த சாவன ஆயுளை சௌரமான ஆயுளாக மாற்ற வயது 70 வருஷம், 9 மாதம் 3 நாளாகும். அதாவது 1940-ம் வருஷம் ஜூலை மாதம் 5-ம் தேதி வரையிலும் ஜாதகருக்கு ஆயுள் உண்டென்பதாம்.

என்றும் சொல்லுகிறுர்கள் என்று முன்னமே சொல்லி இருக்கின்ரேம். ஆகையால் பிண்டாயுர்தாய வழிப் பிரகாரமும், அம்சாயுர் தாய வழிப் பிரகாரமும் ஆயுளைக் கணித்துப் பார்ப்போம்.

பிண்டாயுர் தாயம் கணிக்க :—நைசர்க்கிக ஆயுர்தாய 'எ', 'பி' வாக்கியங்களுக்குப் பதிலாக பிண்டாயுர்தாய 'எ', 'பி' வாக்கியங் களை உபயோகப்படுத்தி, நைசர்க்கிக ஆயுர்தாயம் கணித்தது போலவே கணிக்கவேண்டியது என்று அறியவும்.

உதாரணம் (1) சூரியன் கொடுக்கும் ஆயுளைக் கணிக்க :— சூரியனுடைய உச்ச ஸ்புடத்திலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தைக் கழிக்க முந்தி வந்த 202 பாகை 58 கலைக்குப் பிண்டாயுர்தாய "எ" "பி" வாக்கியங்களைப் பார்க்க.

	வரு.	மா.	நாள்	நாழி
200 பாகை 0 கலைக்கு சூரியன் கொடுக்கும் ஆயுள்	10	6	20	0
2 ,, 0 ,, ,,	0	1	8	0
0 ,, 50 ,, ,,	0	0	15	50
0 ,, 8 ,, ,,	0	0	2	32
ஆகையால் கூட்ட 202 பாகை 58 கலைக்கு சூரியன் கொடுக்கும் ஆயுள் ...	10	8	16	22

ஆகும்.

உதாரணம் (2) குரு கொடுக்கும் ஆயுளை உதாரணமாகக் கணிப் போம் :—குருவினுடைய உச்ச ஸ்புடத்திலிருந்து குருவினுடைய ஸ்புடத்தைக் கழிக்க 66 பாகை 43 கலை வரும். இது 180 பாகைக் குட்பட்டதால் இதை 360 பாகையிலிருந்து கழிக்க 293 பாகை 17 கலை முன்னே நைசர்க்கிக ஆயுர்தாயத்தில் கணித்ததுபோல வரும். பிண்டாயுர்தாய "எ", "பி" வாக்கியங்களைப் பார்க்க.

	வரு.	மா.	நாள்	நாழி
200 பாகை 0 கலைக்குக் குரு கொடுக்கும் ஆயுள்	8	4	0	0
90 ,, 0 ,, ,,	3	9	0	0
3 ,, 0 ,, ,,	0	1	15	0
0 ,, 10 ,, ,,	0	0	2	30
0 ,, 7 ,, ,,	0	0	1	45
ஆகையால், கூட்ட 293 பாகை 17 கலைக்குக் குரு கொடுக்கும் ஆயுள்	12	2	19	15

இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் கணிக்கவும். இவ்வித மாக எல்லா கிரகங்களுக்கும் கணிக்க அடியிற்கண்டபடி கிரகங்கள் ஆயுளைக்கொடுக்கும்.

கிரகங்கள்	ஆயுள் ஹூ-மீ"-நாள்-நாழி				கிரகங்கள்	ஆயுள் ஹூ-மீ"-நாவ-நாழி			
சூரியன்	10	8	16	22(1)	குரு	12	2	19	15(5)
சந்திரன்	19	1	0	50(2)	சுக்கிரன்	12	1	8	12(6)
செவ்வாய்	11	2	7	30(3)	சனி	18	3	21	0(7)
புதன்	11	1	7	36(4)					ஆகும்.

சத்துரு க்ஷேத்திர அரணம் செய்ய :—நைசர்க்கிக ஆயுர்தாயத் திற்கு வந்தது போலவே செய்ய, கழிக்க வேண்டிய வருஷம் அடியிற் கண்டபடி ஆகும்.

கிரகங்கள்	கழிக்க வேண்டிய ஹூ-மீ"-நாள்-நாழி				கிரகங்கள்	கழிக்க வேண்டிய ஹூ-மீ"-நாள்-நாழி			
சூரியன்	0	0	0	0 (8)	குரு	0	0	0	0 (12)
சந்திரன்	0	0	0	0 (9)	சுக்கிரன்	0	0	0	0 (13)
செவ்வாய்	0	0	0	0 (10)	சனி	6	1	7	0 (14)
புதன்	0	0	0	0 (11)					ஆகும்.

அஸ்தங்கத அரணம் :—நைசர்க்கிக ஆயுர்தாயத்திற்கு வந்தது போலவே இந்த ஆயுர்தாயத்திற்கும் அரணஞ் செய்யவேண்டிய அவசியமில்லை. அதாவது கழிக்கவேண்டியது பூஜ்ஜியமாகும்.

சக்கிரபாத அரணஞ் செய்தல் :—சக்கிரபாத அரணஞ் செய்வ தில் கழிக்கவேண்டிய வருஷம் அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகம்	கழிக்கவேண்டிய ஹூ-மீ"-நாள்-நாழி				கிரகம்	கழிக்க வேண்டிய ஹூ-மீ"-நாள்-நாழி			
சூரியன்	10	8	16	22(15)	குரு	1	2	19	56 (19)
சந்திரன்	4	9	7	43(16)	சுக்கிரன்	0	0	0	0 (20)
செவ்வாய்	0	0	0	0(17)	சனி	0	0	0	0 (21)
புதன்	0	0	0	0(18)					ஆகும்.

குருரோதய அரணம்:— பாவச்சக்கிர லக்கினத்தில் பாபக்கிரக மில்லாததால் குருரோதய அரணம் செய்யவேண்டிய அவசிய மில்லை. அதாவது கழிக்கவேண்டியது பூஜ்ஜியமாகும்.

லக்கிஞயுர்தாயம் கணிக்க :— நைசர்க்கிக ஆயுர்தாயத்திற்கும் பிண்டாயுர்தாயத்திற்கும் லக்கிஞயுர்தாயம் கணிப்பது ஒரே வழி யானதால் நைசர்க்கிக லக்கிஞயுர்தாயத்திற்கு வந்த ஸூ 6 மீ" 1 நாள் 27 நாழி 36 தான் பிண்டாயுர்தாயத்தில் லக்கிஞயுர்தாயமாக வரும். ஆகையால் லக்கிஞயுர்தாயம் ஸூ 6, மீ" 1, நாள் 27, நாழிகை 36 ஆகும்.

மேலும் ஒவ்வொரு கிரகத்திற்கும் கழிக்கவேண்டிய வருஷத் தைக் கூட்ட அடியிற் கண்டபடி ஆகும்.

	சூரியன்				சந்திரன்				செவ்வாய்				புதன்			
	ஆ	மீ	நாள்	நாழி	ஆ	மீ	நாள்	நாழி	ஆ	மீ	நாள்	நாழி	ஆ	மீ	நாள்	நாழி
1. சத்துருக்ஷேத்திர அரணம்,	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
அஸ்தங்கத அரணம்	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
2 சக்கிரபாத அரணம் ...	10	8	16	22	4	9	7	43	0	0	0	0	0	0	0	0
3. குரூரோதய அரணம் ...	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
கூட்ட, மொத்தம் அரணம்	10	8	16	22	4	9	7	43	0	0	0	0	0	0	0	0.
மேலே வந்த(1) முதல்(7) வரை இங்கு எடுத்து எழுத	10	8	16	22	19	1	0	50	11	2	7	30	11	1	7	36
(24) லிருந்து (23) யைக் கழிக்க நிகர ஆயுள் வரும்.	0	0	0	0	14	3	23	7	11	2	7	30	11	1	7	36

	குரு				சுக்கிரன்				சனி				
	ஞ	மீ	நாள்	நாழி	ஞ	மீ	நாள்	நாழி	ஞ	மீ	நாள்	நாழி	
1. சத்துருக்ஷேத்திர அரணம்	0	0	0	0	0	0	0	0	6	1	7	0	(8) முதல் (14) ஆகும்
அஸ்தங்கத அரணம்	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	
2. சக்கிரபாத அரணம்	1	2	19	56	0	0	0	0	0	0	0	0	(15) முதல் (21) ஆகும்
3. குருரோதய அரணம்...	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	
கூட்ட, மொத்தம் அரணம்...	1	2	19	56	0	0	0	0	6	1	7	0	வரும் (23)
மேலேவந்த (1) முதல் (7) வரை இங்கு எடுத்துஎழுத	12	2	19	15	12	1	8	12	18	3	21	0	வரும் (24)
(24) லிருந்து (23) யைக் கழிக்க நிகர ஆயுள் வரும்	10	11	23	19	12	1	8	12	12	2	14	0	வரும் (25)

ஆகையால் 7 கிரகங்களும், லக்னமும் கொடுக்கின்ற நிகர ஆயுள் அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகங்கள்	நிகர ஆயுள்			
	வரு	மீ	நாள்	நாழி
சூரியன்	0	0	0	0
சந்திரன்	14	3	23	7
செவ்வாய்	11	2	7	30
புதன்	11	1	7	36
குரு	10	11	29	19
சுக்கிரன்	12	1	8	12
சனி	12	2	14	0
லக்கினம்	6	1	27	36
கூட்ட ...	78	0	27	20 வரும்.

ஆகையால் இந்த ஜாதகருக்குப் பிண்டாயுர்தாய வழிப்பிரகாரம் நிகரபரம ஆயுள் 78 வருஷம் 0 மாதம் 27 நாள் 20 நாழிகை ஆகும்.

அம்சாயுர்தாயம் கணிக்க:—உதாரணம் (1), சூரியன் கொடுக்கும் ஆயுளைக் கணிப்போம். சூரியனுடைய ஸ்புடம் 167 பாகை 2 கலை ஆகும். அம்சாயுர்தாய வாக்கியங்களை உபயோகப்படுத்துவதற்காக இந்த 167 பாகை 2 கலையை அடியிற்கண்ட பிரகாரம் தகுந்தபடி பிரித்துக்கொண்டு ஆயுளைக் கணிக்கவும்.

	வரு	மீ	நாள்	நாழி
166 பாகை 40 கலைக்குச் சூரியன் கொடுக்கும் ஆயுள்	2	0	0	0
0 ,, 20 ,, ,,	0	1	6	0
0 ,, 2 ,, ,,	0	0	3	36
கூட்ட 167 பாகை 2 கலைக்குச் சூரியன் கொடுக்கும் ஆயுள்	2	1	9	36 ஆகும்.

உதாரணம் (2)---குரு கொடுக்கும் ஆயுளைக் கணிப்போம். குருவினுடைய ஸ்புடம் 28 பாகை 17 கலை ஆகும். அம்சாயுர்தாய வாக்கியங்களை உபயோகப்படுத்துவதற்காக இந்த 28 பாகை 17 கலையை அடியிற்கண்ட பிரகாரம் தகுந்தபடி பிரித்துக்கொண்டு ஆயுளைக் கணிக்கவும்.

	வரு-மா-நாள்-நாழி			
26 பாகை 40 கலைக்கு குரு கொடுக்கும் ஆயுள்	8	0	0	0
1 ,, 0 ,,	0	3	18	0
0 ,, 30 ,,	0	1	24	0
0 ,, 7 ,,	0	0	12	36
கூட்ட 28 பாகை 17 கலைக்குக் குரு கொடுக்கும் ஆயுள்	8	5	24	36 ஆகும்.

இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் கணிக்கவும். இவ்விதமாக எல்லா கிரகங்களுக்கும் கணிக்க அடியிற்கண்டபடி கிரகங்கள் ஆயுளைக் கொடுக்கும்.

கிரகங்கள்	ஆயுள் வரு	மா	நாள்	நாழி		கிரகங்கள்	ஆயுள் வரு	மா	நாள்	நாழி	
சூரியன்	2	1	9	36	[1]	குரு	8	5	24	36	[5]
சந்திரன்	11	5	12	0	[2]	சுக்கிரன்	1	4	9	36	[6]
செவ்வாய்	1	11	12	0	[3]	சனி	9	1	18	36	[7]
புதன்	9	6	21	36	[4]						

ஆகும்.

சத்துரு க்ஷேத்திர அரணம் :--- முன் போலவே சத்துருக்ஷேத்திர அரணஞ் செய்ய கழிக்க வேண்டிய வருஷம் அடியிற் கண்டபடி ஆகும்.

கிரகங்கள்	கழிக்கவேண்டிய வரு	மா	நாள்	நாழி		கிரகங்கள்	கழிக்கவேண்டிய வரு	மா	நாள்	நாழி	
சூரியன்	0	0	0	0	[8]	குரு	0	0	0	0	[12]
சந்திரன்	0	0	0	0	[9]	சுக்கிரன்	0	0	0	0	[13]
செவ்வாய்	0	0	0	0	[10]	சனி	3	0	16	12	[14]
புதன்	0	0	0	0	[11]						

ஆகும்.

அஸதங்கத அரணம்:—ஒரு கிரகங்கூட அஸ்தங்கதமாயில்லாததால் அஸ்தங்கத அரணஞ் செய்யவேண்டிய அவ்சியமில்லை. அதாவது கழிக்கவேண்டியது பூஜ்ஜியமாகும்.

சக்கிரபாத அரணஞ் செய்தல்:—சக்கிரபாத அரணஞ் செய்வதில் கழிக்க வேண்டிய வருஷம் அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகங்கள்	கழிக்கவேண்டிய வரு-மா-நாள்-நாழி				கிரகங்கள்	கழிக்கவேண்டிய வரு-மா-நாள்-நாழி			
சூரியன்	2	1	9	36(15)	குரு	0	10	5	28 (19)
சந்திரன்	2	10	10	30(16)	சுக்கிரன்	0	0	0	0 (20)
செவ்வாய்	0	0	0	0(17)	சனி	0	0	0	0 (21)
புதன்	0	0	0	0(18)					ஆகும்.

குறிப்பு :— குருரோதய அரணம் என்பது அம்சாயுர்தாயத்திற்குக் கிடையாது.

லக்கிஞயுர்தாயம் கணிக்க:—கிரகங்களுக்குக் கணித்தது போலவே கணிக்கவேண்டியது. லக்கின ஸ்புடம் 184 பாகை 48 கலை ஆகும். அம்சாயுர்தாய வாக்கியங்களை உபயோகப்படுத்துவதற்காக இந்த 184 பாகை 48 கலையை அடியிற்கண்ட பிரகாரம் தகுந்தபடி பிரித்துக் கொண்டு ஆயுளைக் கணிக்கவும்.

	வரு	மா	நாள்	நாழி
183 பாகை 20 கலைக்கு லக்கினம் கொடுக்கும் ஆயுள்	7	0	0	0
1 ,, 0 ,, ,, ...	0	3	18	0
0 ,, 20 ,, ,, ...	0	1	6	0
0 ,, 8 ,, ,, ...	0	0	14	24
கூட்ட, 184 பாகை 48 கலைக்கு லக்கினம் கொடுக்கும் ஆயுள்	7	5	8	24 ஆகும்(22)

மேலும் ஒவ்வொரு கிரகத்திற்கும் கழிக்க வேண்டிய வருஷத்தைக் கூட்ட அடியிற்கண்டபடி ஆகும்.

	சூரியன்				சந்திரன்				செவ்வாய்				புதன்			
	ஸ	மீ	நாள்	நாழி	ஸ	மீ	நாள்	நாழி	ஸ	மீ	நாள்	நாழி	ஸ	மீ	நாள்	நாழி
1. சத்துரு க்ஷேத்திர அரணம்.	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
அஸ்தங்கத அரணம்	0	0	0	0	0	0	0	0	0	0	6	0	0	0	0	0
2. சக்கிரபாத அரணம் ..	2	1	9	36	2	10	10	30	0	6	0	0	0	0	0	0
கூட்ட, மொத்தம் அரணம்	2	1	9	36	2	10	10	30	0	0	0	0	0	0	0	0
மேலே வந்த(1) முதல்(7) வரை இங்கு எடுத்து எழுத	2	1	9	36	11	5	12	0	1	11	12	0	9	6	21	36
(24) லிருந்து (23) யைக் கழிக்க.	7	7	19	8	8	7	1	30	1	11	12	0	9	6	21	36

	குரு				சுக்கிரன்				சனி				
	ஞா	மீ"	நாள்	நாழி	ஞா	மீ"	நாள்	நாழி	ஞா	மீ"	நாள்	நாழி	
1. சத்துருக்ஷேத்திர அரணம்	0	0	0	0	0	0	0	0	3	0	16	12	(8) முதல் (14) ஆகும்
அஸ்தங்கத அரணம்	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	
2. சக்கிரபாத அரணம்	0	10	5	28	0	0	0	0	0	0	0	0	(15) முதல் (21) ஆகும்
கூட்ட, மொத்தம் அரணம்...	0	10	5	28	0	0	0	0	3	0	16	12	வரும் (23)
மேலேவந்த (1)முதல் (7) வரை இங்கு எடுத்துஎழுத	8	5	24	36	1	4	9	36	9	1	18	36	வரும் (24)
(24) லிருந்து (23) யைக் கழிக்க.	7	7	19	8	1	4	9	36	6	1	2	24	வரும் (25)

சூரியன் :—வர்க்கோத்தமத்திலிருப்பதால் சூரியனுக்கு வந்த ஓூ 0, மீ 0, நாள் 0, நாழிகை 0-ஐ 2ஆல் பெருக்க வருகின்ற ஓூ 0, மீ 0, நாள் 0, நாழிகை 0, சூரியன் கொடுக்கும் நிகர ஆயுளாகும்.

சந்திரன் :—ஆட்சியாயிருப்பதால் சந்திரனுக்கு வந்த ஓூ 8, மீ 7, நாள் 1, நாழிகை 30-ஐ 2-ஆல் பெருக்க வருகின்ற ஓூ 17 மீ 2, நாள் 3, நாழிகை 0 சந்திரன் கொடுக்கும் நிகர ஆயுளாகும்.

செவ்வாய்:—கொடுக்கும் நிகர ஆயுள் ஓூ 1, மீ 11, நாள் 12, நாழிகை 0.

புதன் :—கொடுக்கும் நிகர ஆயுள் ஓூ 9, மீ 6, நாள் 21, நாழிகை 36.

குரு :—குரு வக்கிரமாயிருப்பதால் குருவிற்கு வந்த ஓூ 7, மீ 7, நாள் 19, நாழிகை 8 ஐ 3 ஆல் பெருக்க வருகின்ற ஓூ 22, மீ 10, நாள் 27, நாழிகை 24 குரு கொடுக்கும் நிகர ஆயுளாகும்.

சுக்கிரன் :—ஆட்சியாயிருப்பதால் சுக்கிரனுக்கு வந்த ஓூ மீ 4, நாள் 9, நாழிகை 36 ஐ 2 ஆல் பெருக்க வருகின்ற ஓூ 2, மீ 8, நாள் 19, நாழிகை 12 சுக்கிரன் கொடுக்கும் நிகரஆயுளாகும்.

சனி :—சுய நவாம்சையிலிருப்பதால் சனிக்கு வந்த ஓூ 6, மீ 1, நாள் 2, நாழிகை 24 ஐ 2 ஆல் பெருக்க வருகின்ற ஓூ 12, மீ 2, நாள் 4, நாழிகை 48 சனி கொடுக்கும் நிகர ஆயுளாகும்.

ஆகையால் 7 கிரகங்களும் லக்கினமும் கொடுக்கும் நிகர ஆயுள் அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகங்கள்			நிகர ஆயுள்			
			ஓூ	மீ	நாள்	நாழி
சூரியன்	...	...	0	0	0	0
சந்திரன்	...	...	17	2	3	0
செவ்வாய்	...	...	1	11	12	0
புதன்	...	...	9	6	21	36
குரு	...	...	22	10	27	24
சுக்கிரன்	...	...	2	8	19	12
சனி	...	...	12	2	4	48
லக்கினம்	...	...	7	5	8	24
	கூட்ட	...	73	11	6	24 வரும்.

ஆகையால் இந்த ஜாதகருக்கு அம்சாயுர்தாய வழிப் பிரகாரம் நிகர பரம ஆயுள் 73ஹூ 11மீ 6 நாள் 24 நாழிகை ஆகும்.

மேலும் ஹூ-மீ-நாள்-நாழி

(1) பிண்டாயுர்தாய வழிப் பிரகாரம்
நிகர பரம ஆயுள் ... 78 0 27 20 ஆகும்.
(2) அம்சாயுர்தாய வழி ... 73 11 6 24 ,,
(3) நைசர்க்கிக ஆயுர்தாய வழி ... 71 9 15 46 ,,

மூன்றையும் கூட்ட வருவது ... 223 9 19 30 ,,
இதை 3-ஆல் வகுக்க வருவது ... 74 7 6 30 ,,

ஆகையால் மூன்று வழிப் பிரகாரம் தனித்தனி கணித்து கடைசியில் ஒன்ருய்ச் சேர்த்து பார்க்க ஜாதகருக்கு (சாவன) நிகர பரம ஆயுள் ஹூ 74, மீ 7, நாள் 6, நாழிகை 30 ஆகும் என்பதாகும்.

இங்கு ஆயுளைக் கணிப்பதில் ஹூ ஒன்றிற்கு 360 நாளாகப் பாவித்திருக்கின்றது. ஆனல் சாதாரணமாய் ஆயுளைக் கணக்கிடுவதில் 365 நாள் 15 நாழிகை 23 விநாடியுள்ள சௌரமான வருஷத்தை அனுஷ்டித்து வருகின்ருர்கள். ஆகையால் 360 நாள் கொண்ட சாவன வருஷ ரீதியாய்க் கணித்து வருகின்ற வருஷம், மீ நாள், நாழிகையிலிருந்து கீழ்க்கண்ட வாக்கியத்தில் கொடுத்துள்ள வருஷம், மீ, நாள், நாழிகையை கழிக்க வேண்டியது. இப்படிக் கழிக்க வருகின்றதே சௌரமான ஆயுளாகும்.

வருஷ எண்	கழிக்கப் படுவது நாள்	நாழி	வருஷ எண்	கழிக்கப் படுவது நாள்	நாழி	வருஷ எண்	கழிக்கப் படுவது நாள்	நாழி
1	5	15	9	47	18	17	89	21
2	10	31	10	52	34	18	94	36
3	15	46	11	57	49	19	99	51
4	21	2	12	63	4	20	105	87
5	26	17	13	68	19	21	110	22
6	31	32	14	73	36	22	115	38
7	36	48	15	78	51	23	120	53
8	42	3	16	84	6	24	126	8

வருஷ எண்	கழிக்கப் படுவது நாள்	நாழி	வருஷ எண்	கழிக்கப் படுவது நாள்	நாழி	வருஷ எண்	கழிக்கப் படுவது நாள்	நாழி
25	131	23	57	299	37	89	467	49
26	136	38	58	304	52	90	473	5
27	141	53	59	310	7	91	478	20
28	147	11	60	315	23	92	483	36
29	152	26	61	320	38	93	488	51
30	157	42	62	325	54	94	494	7
31	162	57	63	331	9	95	499	22
32	168	13	64	336	25	96	504	37
33	173	28	65	341	40	97	509	53
34	178	44	66	446	55	98	515	8
35	183	59	67	352	11	99	520	23
36	189	15	68	357	26	100	525	39
37	194	30	69	362	41	101	530	54
38	199	45	70	366	57	102	536	10
39	205	0	71	373	12	103	541	25
40	210	15	72	378	28	104	546	41
41	215	30	73	383	43	105	551	56
42	220	46	74	388	59	106	557	11
43	226	1	75	394	14	107	562	27
44	231	17	76	399	29	108	567	42
45	236	32	77	404	45	109	572	57
46	241	47	78	410	0	110	578	13
47	247	3	79	415	15	111	583	28
48	252	18	80	420	31	112	588	44
49	257	33	81	425	46	113	593	59
50	262	49	82	431	2	114	599	15
51	268	4	83	436	17	115	604	30
52	273	20	84	441	33	116	609	45
53	278	35	85	446	48	117	615	1
54	283	51	86	452	3	118	620	16
55	289	6	87	457	19	119	625	31
56	294	21	88	462	34	120	630	47

நாம் ஆயுளைக் கணித்ததில் மேலே 74 வருஷம் 7 மீ 6 நாள் 30நாழிகை வந்திருக்கின்றது. இந்த 74 வருஷத்திற்கு இங்கு மேலே

கொடுத்துள்ள வாக்கியத்தில் 74 என்ற வருஷ எண்ணிற்கு நேராய் 388 நாள் 59 நாழிகை போட்டிருக்கிறது. இந்த 388 நாள் 59 நாழிகையை நமக்கு வந்த 74 வருஷம் 7 மாதம் 6 நாள் 30 நாழிகையிலிருந்து கழிக்கவேண்டியது. இப்படிக் கழித்து வருவது சௌரமான கணக்குப்படி ஆயுளாகும். 388 நாளை 30-ஆல் வகுக்க 12 மாதம் 28 நாள் வரும். அதாவது 388 நாள் 59 நாழிகை என்பது 1 வருஷம் 28 நாள் 59 நாழிகையாகும். இந்த 1 வருஷம் 0 மாதம் 28 நாள் 59 நாழிகையை முந்தி வந்த 74 வருஷம் 7 மாதம் 6 நாள் 30 நாழிகையிலிருந்து கழிக்க 73 வருஷம் 6 மாதம் 7 நாள் 31 நாழிகை வரும். ஆகையால் இந்த ஜாதகருக்கு நிகரபரம ஆயுள் 73 வருஷம் 6மீ 7 நாள் 31 நாழிகையாகுமென்றறியவும்.[1]

43-வது வாக்கியம் அயனாம்சஸ்புடம் அல்லது அயனாம்சம்:—

ஆகாயத்தில் பூமி செல்லுகின்ற பாட்டையும், ஆகாயத்தின் நிரட்சரேகையும் சந்திக்கின்ற இரண்டு இடங்களுக்கு மேஷாயனம், துலாயனம் என்று பெயர். இந்த இரண்டு அயனங்களும் வருஷந்தோறும் தற்காலத்தில் 50¼ விகலை ரீதியாய்ச் செல்லுகின்றன. இப்படிச் செல்லும் 50¼ விகலைக்கு அயனகதி என்று பெயர். மேஷாயனம் என்பது கிழக்குத் திக்கிலிருந்து மேற்குத் திக்காகச் செல்லுகிறது. மேஷயானம் என்பதும் மேஷராசி ஆரம்பஸ்தானம் என்பதும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது. மேஷாயனம் என்பது தற்காலத்தில் மேஷராசி ஆரம்ப ஸ்தானத்திற்கு மேற்கில் இருக்கின்றது. மேஷாயனமுதல் மேஷராசி ஆரம்பஸ்தானத்திற்கு இடையிலுள்ள தூரத்திற்கு அயனாம்சம் அல்லது அயனஸ்புடம் என்று பெயர். மேஷாயனமும், மேஷராசி ஆரம்ப ஸ்தானமும் ஒரு காலத்தில் ஆகாயத்தில் ஒரே இடத்திலிருந்தன. அக்காலத்தில் அயனாம்சம் அல்லது அயனஸ்புடம் பூஜ்ஜியமாக இருந்தது. மேஷாயனம் எப்போதும் அசைந்துகொண்டே இருப்பதால் அயனாம்சம் நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றது. மேஷாயனம் என்று சொல்லப்பட்ட இடத்திலிருந்து கணக்கிடப்படும் கிரகாதி லக்கின ஸ்புடங்களுக்கு சாயனஸ்புடம் என்றும், மேஷராசி ஆரம்பஸ்தானத்திலிருந்து கணக்கிடப்படும் கிரகாதி லக்கின ஸ்புடங்களுக்கு நிராயனஸ்புடம் என்றும் பெயர். சாயனமென்றால் அயனாம்சம் அல்லது

1 இந்த ஜாதகருக்கு 1943ஹு ஏப்ரல் மீ 10உ வரையிலும் ஆயுள் உண்டென்பதாம்.

அயனும்ச ஸ்புடம் சேர்த்து கணக்கிடுவது என்பதாம். நிராயனம் என்ருல் அயனும்சம் இல்லாமல் அதாவது அயனும்சத்தைக் கழித்துக் கணக்கிடுவது என்பதாம். கணிதமுறையில் சாயனம் பிரகாரம் கணித்து பிறகு அதிலிருந்து அயனும்சத்தைக் கழித்து நிராயன ஸ்புடங்களை அடைவது விசேஷமென்றும், துல்லிபம் என்றும் அனேகருடைய கொள்கை. அயனும்சத்தின் அளவு அல்லது அயன ஸ்புடம் பலரால் பலவிதமாகக் கணிக்கப்பட்டு வித்தியாசத்துடன் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆதலாலும் தற்காலம் இந்தியாவில் பலவிதமான சித்தாந்தங்களையும், கரண கிரந்தங்களையும் அநுசரித்துப் பலவிதமான பஞ்சாங்கங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசத்துடன் புழங்கிக்கொண்டு வருவதாலும் மேற்சொல்லிய கிரந்தங்களும், கணிதங்களும் முன்னமே முன்னுரையில் சொல்லியபடி துல்லிபமாய் இல்லாமல் பலவிதத்தால் தவறுதலாயும், ஒன்றுக்கொன்று வித்தியாசமாயும் இருப்பதால் விரதாதி விசேஷ பண்டிகைகளில் ஒரே பண்டிகையாவது அல்லது விரதமாவது ஒரே ஊரில் பலதினத்திலும், ஒரே தேசமாகிய இந்து தேசத்தில் பல தினத்திலும் அனுஷ்டானம் செய்து வருகின்ருர்கள். இதைச் சீர்திருத்தம் செய்து ஒரே பண்டிகை அல்லது விரதத்தை இந்தியா தேச முழுவதிலும் ஒரே தினத்தில் கொண்டாட வேண்டும் என்று எண்ணம் கொண்டு பலவிதமான பஞ்சாங்கங்களை வித்தியாசமின்றி ஒற்றுமைப்படுத்த ஏற்பட்டிருக்கும் பஞ்சாங்க ஐக்கிய மகாசபையார் 1925ஹு அநேக ஆயிரக்கணக்கான திரவியம் செலவு செய்து பல நாட்டிலிருந்து வானசாஸ்திரம், ஜோதிடம் இவைகளில் வல்லவராயுள்ள இந்தியர்களை வரவழைத்து புனு நகரத்தில் ஒரு சபை கூட்டுவித்து மேற்சொல்லிய சித்தாந்தங்கள், கரணங்கள், வாக்கிய கணிதங்கள் இவைகளை நன்ருய் ஆராய்ச்சி செய்து அயனும்ச ஸ்புடம் தீர்மானம் செய்திருக்கின்ருர்கள். அந்த அயனும்ச ஸ்புடம் 1927 ஹு பிரபவஹு சித்திரைமீ 1வயில் பாகை 22—42 கலை ஆகின்றது. இந்த அயனும்சம் மேற்சொல்லிய சபை கூடுவதற்கு முன்னமே ஆனந்த போதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கத்தில் கணித்து உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்சொல்லிய சபையில் தீர்மானம் செய்த கொள்கை பிரகாரம் இங்கிலீஷ் 1840ஹு முதல் 2000 ஹு வரையில் ஒவ்வொரு வருஷத்திற்கும் அயனும்சஸ்புடம் கணித்து பின்னுல் வருகின்ற வாக்கியத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

சாயன ரீதியாய் கணிதஞ் செய்வது துல்லிபமானதென்று முன்னமே சொல்லி இருக்கிறோம். சாயன ரீதியாய்க் கிரகங்களின் சாயன ஸ்புடங்களைக் கணித்து பிறகு அயனும்ச ஸ்புடத்தைக் கழித்து நிராயன-ஸ்புடங்களை அடைவது விசேஷமாகும். உதாரணமாக 1869-ம் வருஷம், அக்டோபர் மீ", 1வ பகல், 4 மணி 36 நிமிஷத்திற்குச் சூரியனுடைய சாயன ஸ்புடம் 166 பாகை 26 கலை என்றால், அப்போது நிராயன ஸ்புடங் கணிப்போம். இங்குக் கொடுத்துள்ள அயனும்ச ஸ்புட வாக்கியத்தைப் பார்த்தால் 1869 ஆம் வருஷத்திற்கு அயனும்சம் 21 பாகை 54 கலை ஆகும். இந்த அயனும்சமாகிய 21 பாகை 54 கலையைச் சாயன சூரிய ஸ்புடமாகிய 166 பாகை 26 கலையிலிருந்து கழிக்க வருகின்ற 144 பாகை 32 கலையே சூரியனுடைய நிராயன ஸ்புடமாகும்.

மேலும் அயனும்சஸ்புடம் பலரால் பலவிதமாகக் கணிக்கப்பட்டு வித்தியாசத்துடன் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்று மேலே சொல்லியிருக்கின்றோம். சாயன ஸ்புடத்திலிருந்து ஒருவித அயனும்சத்தைக் கழித்து வரும் நிராயன ஸ்புடம் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த நிராயன ஸ்புடத்திலிருந்து மற்றொருவித அயனும்ச ரீதியாய் நிராயன ஸ்புடம் கீழ்க்கண்டபடி அறியலாம். உதாரணமாக ஒருவர் கொள்கைப் பிரகாரம் 1869-ம் வருஷம், அக்டோபர் மீ", 1வ பகல் 4 மணி 36 நிமிஷத்திற்கு சூரியனுடைய நிராயன ஸ்புடம் 144 பாகை 32 கலையும், அய்னும்சம் 21 பாகை 54 கலையுமானால், அப்போது அயனும்சம் 22 பாகை 1 கலையாக இருக்க வேண்டுமென்று கருதுகிற மற்றொருவருடைய கொள்கைப் பிரகாரம் நிராயன சூரியஸ்புடம் கணிப்போம், சாயன ஸ்புடத்திலிருந்து அயனும்சத்தைக் கழித்தால் நிராயன ஸ்புடம் வரும் என்று மேலே சொன்னோம். ஆகையால் நிராயன ஸ்புடத்துடன் அயனும்சத்தைக் கூட்டினால் சாயன ஸ்புடம் வரும். கொள்கைப் பிரகாரம் வருகின்ற நிராயன ஸ்புடத்துடன் அந்தக் கொள்கைப் பிரகாரம் உள்ள அயனும்சத்தைக் கூட்டினால் சாயன ஸ்புடம் வரும்.

(சாயன ஸ்புடத்தில் பலவிதக் கொள்கைகள் இல்லை ஆதலால் பலவித அயனும்சக் கொள்கையுடையவர்கள் எல்லோருக்கும் சாயன ஸ்புடம் ஒன்றேயாகும் என்று இங்கு கவனிக்க வேண்டியது அவசியம்).

இப்படி வருகின்ற சாயன ஸ்புடத்திலிருந்து மற்றொரு கொள்கைப் பிரகாரமுள்ள அயனும்சத்தைக் கழிக்க அந்த மற்றொரு கொள்கைப் பிரகாரம் நிராயன ஸ்புடம் வரும். இவ்விதமாக அந்தந்த அயனும்சக் கொள்கைக்குத்தகுந்தாற்போல் நிராயன ஸ்புடம் கணித்துக் கொள்ளலாம். நாம் மேலே எடுத்துக் கொண்ட உதாரணத்தில் ஒரு கொள்கைப் பிரகாரம் அயனும்சம் 21 .பாகை 54 கலையும், சூரியனுடைய நிராயன ஸ்புடம் 144 பாகை 32 கலையானதால், இந்த 144 பாகை 32 கலையுடன் 21 பாகை 54 கலையைக் கூட்ட வருகின்ற 166 பர்கை 26 கலையே சாயன ஸ்புடமாகும். இந்த சாயன சூரிய ஸ்புடமாகிய 166 பரகை 26 கலையிலிருந்து மற்றொரு கொள்கைப் பிரகாரமுள்ள அயனும்சமாகிய 22 பாகை 1 கலையைக் கழிக்க வருகின்ற 144பாகை 25கலையே அந்த மற்றொரு அயனும்சக் கொள்கைப் பிரகாரம் நிராயன ஸ்புடமாகும். ஒரு அயனும்சக் கொள்கை ரீதியாய் வருகின்ற நிராயன ஸ்புடத்திலிருந்து மற்றொரு அயனும்சக் கொள்கை ரீதியாய் நிராயன ஸ்புடம் சுலபமாக அறிய முடியுமாதலால் இந்தப்புத்தகம் எவ்வித அயனும்சக் கொள்கையுடையவர்களுக்கும் உபயோகப்படும் என்பதை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும்.

சித்திரை மீ 1௳ அயன ஸ்புடம் அல்லது அயனும்சம்.

இங்கிலீஷ் வருஷம்	அயன ஸ்புடம் பாகை—கலை	இங்கிலீஷ் வருஷம்	அயன ஸ்புடம் பாகை—கலை	இங்கிலீஷ் வருஷம்	அயன ஸ்புடம் பாகை—கலை
1840	21 - 29	1851	21 - 39	1862	21 - 48
1841	21 - 30	1852	21 - 40	1863	21 - 49
1842	21 - 31	1853	21 - 40	1864	21 - 50
1843	21 - 32	1854	21 - 41	1865	21 - 50
1844	21 - 33	1855	21 - 42	1866	21 - 51
1845	21 - 34	1856	21 - 43	1867	21 - 52
1846	21 - 35	1857	21 - 44	1868	21 - 53
1847	21 - 35	1858	21 - 45	1869	21 - 54
1948	21 - 36	1859	21 - 45	1870	21 - 55
1849	21 - 37	1860	21 - 46	1871	21 - 55
1850	21 - 38	1861	21 - 47	1872	21 - 56

சித்திரை மீ 1௨ அயன ஸபுடம் அல்லது அயனாம்சம்—

(தொடர்ச்சி)

இங்கிலீஷ் வருஷம்	அயன ஸ்புடம் பாகை—கலை	இங்கிலீஷ் வருஷம்	அயன ஸ்புடம் பாகை—கலை	இங்கிலீஷ் வருஷம்	அயன ஸ்புடம் பாகை—கலை
1873	21 - 57	1905	22 - 24	1937	22 - 51
1874	21 - 58	1906	22 - 25	1938	22 - 52
1875	21 - 59	1907	22 - 26	1939	22 - 52
1876	22 - 0	1908	22 - 26	1940	22 - 53
1877	22 - 0	1909	22 - 27	1941	22 - 54
1878	22 - 1	1910	22 - 28	1942	22 - 55
1879	22 - 2	1911	22 - 29	1943	22 - 58
1880	22 - 3	1912	22 - 30	1944	22 - 56
1881	22 - 4	1913	22 - 31	1945	22 - 57
1882	22 - 5	1914	22 - 31	1946	22 - 57
1883	22 - 6	1915	22 - 32	1947	22 - 59
1884	22 - 6	1916	22 - 33	1948	23 - 0
1885	22 - 7	1917	22 - 34	1949	23 - 1
1886	22 - 8	1918	22 - 35	1950	23 - 2
1887	22 - 9	1919	22 - 36	1951	23 - 2
1888	22 - 10	1920	22 - 37	1952	23 - 3
1889	22 - 11	1921	22 - 37	1953	23 - 4
1890	22 - 11	1922	22 - 38	1954	23 - 5
1891	22 - 12	1923	22 - 39	1955	23 - 6
1892	22 - 13	1924	22 - 40	1956	23 - 7
1893	22 - 14	1925	22 - 41	1957	23 - 8
1894	22 - 15	1926	22 - 42	1958	23 - 8
1895	22 - 16	1927	22 - 42	1959	23 - 9
1896	22 - 16	1928	22 - 43	1960	23 - 10
1897	22 - 17	1929	22 - 44	1961	23 - 11
1898	22 - 18	1930	22 - 45	1962	23 - 12
1899	22 - 19	1931	22 - 46	1963	23 - 13
1900	22 - 20	1932	22 - 47	1964	23 - 13
1901	22 - 21	1933	22 - 47	1965	23 - 14
1902	22 - 21	1934	22 - 48	1966	23 - 15
1903	22 - 22	1935	22 - 49	1967	23 - 16
1904	22 - 23	1936	22 - 50	1968	23 - 17

சித்திரை மீ" 1உ அயன ஸ்புடம் அல்லது அயனாம்சம்.
(தொடர்ச்சி)

இங்கிலீஷ் வருஷம்	அயன ஸ்புடம் பாகை—கலை	இங்கிலீஷ் வருஷம்	அயன ஸ்புடம் பாகை—கலை	இங்கிலீஷ் வருஷம்	அயன ஸ்புடம் பாகை—கலை
1969	23 - 18	1980	23 - 27	1991	23 - 36
1970	23 - 18	1981	23 - 28	1992	23 - 37
1971	23 - 19	1982	23 - 28	1993	23 - 38
1972	23 - 20	1983	23 - 29	1994	23 - 39
1973	23 - 21	1984	23 - 30	1995	23 - 39
1974	23 - 22	1985	23 - 31	1996	23 - 40
1975	23 - 23	1986	23 - 32	1997	23 - 41
1976	23 - 23	1987	23 - 33	1998	23 - 42
1977	23 - 24	1988	23 - 33	1999	23 - 43
1978	23 - 25	1989	23 - 34	2000	23 - 44
1979	23 - 26	1990	23 - 35		

அனுபந்தம் 1 - வாக்கியம் நெ. 1.

சுதேச உத்திர அக்ஷாம்சத்திற்குரிய (சாயன) இராசிமான சங்கியை							
உத்தர அக்ஷாம்சம்	மேஷம் மீனம்	ரிஷபம் கும்பம்	மிதுனம் மகரம்	கடகம் தநுசு	சிம்மம் விருச்சிகம்	கன்னி துலாம்	உத்தர அக்ஷாம்சம்
0	4—39	4—57	5—21	5—22	4—56	4—40	0
1	37	56	20	23	57	42	1
2	35	54	20	24	59	43	2
3	34	51	19	24	5— 2	45	3
4	31	49	19	25	4	47	4
5	29	48	16	27	5	50	5
6	27	47	16	27	7	51	6
7	25	47	16	27	9	51	7
8	23	45	15	28	11	53	8
9	20	43	15	29	12	56	9
10	18	42	14	29	14	58	10
11	15	39	14	30	17	5— 0	11
12	13	38	13	30	19	2	12
13	11	36	13	32	20	3	13
14	9	35	13	33	21	4	14
15	7	32	13	34	23	6	15
16	5	31	12	34	24	9	16
17	3	29	11	35	25	12	17
18	0	26	10	35	28	16	18
19	3—57	24	9	36	31	18	19
20	54	21	8	37	34	21	20
21½	50	18	7	39	37	24	21½
30	29	1	4—58	46	56	45	30
தக்ஷிண அக்ஷாம்சம்	துலாம் கன்னி	விருச்சிகம் சிம்மம்	தநுசு கடகம்	மகரம் மிதுனம்	கும்பம் ரிஷபம்	மீனம் மேஷம்	தக்ஷிண அக்ஷாம்சம்
சுதேச தக்ஷிண அக்ஷாம்சத்திற்குரிய (சாயன) இராசிமான சங்கியை							

அனுபந்தம்—1, வாக்கியம் நெ. 2

